ஹக்கீம். அப்துல்லா சாயபு

அவர்கள் எழுதிய

சிராவக நிவாரண போதினி

என்னும்

பாலியல் பிணி மருத்துவம்

தாமரை நூலகம், சென்னை - 600 026.

சிராவக நிவாரண போதினி

என்னும்

பாலியல் பிணி மருத்துவம்

ஹகீம் ப.மு. அப்துல்லா சாஹிப்

தாமரை நூலகம்
7, என். ஜி. ஓ. காலனி 3வது தெரு
வடபழனி, சென்னை - 600 026
தொலைபேசி எண் - 044 - 23620249

தாமரை வெளியீடு எண் : 212
முதல் பதிப்பு : மே 1998
இரண்டாம் பதிப்பு : ஜூலை 2013
மூன்றாம் பதிப்பு ஆகஸ்ட் 2021

நூலைப்பற்றி

நூலின் பெயர்	: சிராவக நிவாரண போதினி என்னும் பாலியல் பிணி மருத்துவம்
பதிப்பாசிரியர்	: ஆர். சி. மோகன்
வெளியிட்டோர்	: தாமரை நூலகம் 7, என். ஜி. ஓ. காலனி வடபழனி, சென்னை - 26.
பதிப்பு ஆண்டு	: 2021
உரிமை	: பதிப்பகத்திற்கு
நூல் வடிவம்	: டெமி
அச்சுத்தாள்	: 16 கி. வெள்ளைத்தாள்
எழுத்துக்கள்	: 11 புள்ளி
மொத்த பக்கங்கள்	: 128
பிரதிகள்	: 1000
நூல் விலை	: ரூ. 70
அச்சிட்டோர்	: கிரியேட்டிவ் ஆப்செட் நுங்கம்பாக்கம், சென்னை -34

பதிப்புரை

இந்த நூல் 1909ம் ஆண்டில் அப்துல்லா சாயபு அவர்களால் வெளியிடப்பட்டது. அதன்பிறகு வெளியிடப் படவில்லை. இதேபோல் மேகரோக நிவாரணி என்னும் நீரிழிவு மருத்துவம் என்ற நூலும் அப்துல்லா அவர்களால் வெளியிடப்பட்ட பிறகு வேறு யாராலும் வெளியிடப் படவில்லை.

அப்துல்லா சாயபு அவர்களின் நூல்களை எல்லாம் தேவஸ்தானம் மூலம் அரசாங்கம் வெளியிட ஏற்பாடு செய்த போது இந்த நூல்கள் அவர்களிடம் அகப்படவில்லை.

நைந்துபோய் உதிர்ந்து அழிந்துவிடக் கூடிய நிலையில் இருந்த நூல்களை திரு. ஏ.என்.அனுமந்தன் அவர்களிடமிருந்து வாங்கிய போது அந்தத் தொகுப்பில் மேற்கண்ட இரு நூல்களும் இருந்தன. அனுபோக வைத்திய நவனீதம் பத்து பாகங்களை வெளியிட்ட பிறகு மற்ற நூல்களைக் கவனிக்க நேரம் வாய்க்கவில்லை.

நீண்ட நாட்களுக்குப் பிறகு இந்த நூல்களைப் படித்துப் பார்த்த போது இளைய சமுதாயத்திற்கு இன்றியமையாத பல விஷயங்கள் இந்நூல்களில் இருக்கக் கண்டோம்.

சிராவக நிவாரண போதினி என்னும் இந்நூல் இளமைக் காலத்தில் புதிதாக ஏற்படும் உணர்ச்சிகள், நிர்ப்பந்தங்களின் சுமையால்-

வெளியே சொல்ல வெட்கம், பிறரிடம் கேட்க பயம் - அதனால் ஏற்படும் குழப்பங்களால் - இளம் உள்ளங்களில் ஏற்படும் தவிப்பு -

சுலபமான தவறான வழிகளில் அவர்கள் இழுத்தும் செல்லப் படுவதால் உண்டாகும் பாதகங்கள் -

சிலர் தீராத நோய்களுக்கு ஆளாக நேரிடும் அவலநிலை - இவை போன்ற வற்றையெல்லாம் இந்த நூல்கள் தவிர்க்க உதவும் என்று தோன்றியது.

அபூர்வமான மருத்துவ முறைகளை அப்துல்லா அவர்கள் கூறியுள்ளார். யுனானி வைத்திய முறைகளையும் ஆயுர்வேத சித்த மருத்துவ முறைகளையும் கூறியுள்ளார்.

இவை எல்லோருக்கும் பயன்படக் கூடியவை. சமுதாயத்திற்கு நல்ல பயனை அளிக்கக் கூடியவை. அப்துல்லா அவர்களின் பழங்காலத் தமிழ் நடையும் - வேற்றுமொழிச் சொற்கள் மிகுதியாகக் கலந்திருப்பதும் சற்று கடினமாக இருந்த போதிலும் நாட்டிற்கு நன்மை பயக்கக் கூடிய இந்த நல்ல நூல் அழிந்து போகக் கூடாது என்ற எண்ணத்தாலேயே இதை வெளியிடுகிறோம்.

பதிப்பாசிரியர்
எஸ்.பி. ராமச்சந்திரன்

பொருளடக்கம்

அரபு வாக்கியம்	13
பீடிகை	"
இந்திரிய சிராவக ரோக நாமங்கள்	14
இந்திரிய சிராவக ரோக பூர்வம்	"
புறநடை	15
எச்சரிக்கை	16
சிராவக ரோக காரணம்	"
இந்திரிய சிராவக ரோக லட்சணம்	22
இந்திரிய சிராவக காரணங்களும் லட்சணங்களும் (யுநாநி முறை)	25
இந்திரிய சிராவக காரணங்களும் லட்சணங்களும் (ஆயுர்வேத முறை)	26
வாத இந்திரிய ஒழுக்கு	26
பித்த இந்திரிய ஒழுக்கு	27
சிலேட்டும இந்திரிய ஒழுக்கு	"
இந்திரிய சிராவக ரோக முடிவு	"
இந்திரிய சிராவக ரோகப் பரீட்சை	29
இந்திரிய ஒழுக்கின் சாத்தியா சாத்தியங்கள்	32
இந்திரிய சிராவக ரோகியை மரணத்திற்குப் பின் பரிசோதித்த லட்சணங்கள்	33
இந்திரிய சிராவக பொதுச் சிகிச்சை	34
இந்திரிய சிராவக ரோகச் சிகிச்சை	35
இந்திரிய விர்த்தியினா லுண்டான சிராவகச் சிகிச்சை	36
மலபந்தம்	"
மலபந்தம் (இங்கிலீஷ் முறை)	37
மலபந்தம் (யூநாநி முறை)	41
வரட்சியதிகரிப்பதினாலும் மலபந்தப்படும்	43
மலபந்தம் சிகிச்சை	"
மலபந்தம் நிவாரண தனிச்சரக்குப் பிரயோகங்கள்	"
சுகுமார திரிபலாதி	44
ஆரோக்கிய மாஜூன்	48
மேக நிவாரண எண்ணெய்	49
தேகா ரோக்கிய எண்ணெய்	"
மலபந்தம் (ஆயுர்வேத முறை)	50
அரிதகி லேகியம்	52
கடுக்காய் தித்திப்பு	.

பொருள்	பக்கம்
பாவன கடுக்காய்	53
மூலரோகம்	55
மூலரோகப் பொதுச் சிகிச்சை	56
கிச்சிலி ததிமஸ்து	"
துத்திவேர்க் கியாழம்	57
வேதனா சாந்தக் களிம்பு	59
மூலரோகம் (யூநாநி)	60
பொதுச் சிகிச்சை	61
மூலத்தைச் சுருக்கி வெளிப்படுத்தும் முறைகள்	62
முளையை உடைத்து அதினுள் உள்ள அசுத்தங்களை வெளிப்படுத்தும் முறைகள்	63
மூலத்தில் இரத்தம் போவதைப் பந்தப்படுத்தும் முறைகள் மூலக் குடோரி	64
கஹறுரபா சூரணம்	65
ரத்தமூலம் குடாரம்	"
மகா சாட்சி பந்த மாத்திரை	66
இலகு சாட்சி பந்த மாத்திரை	"
ஆசன பந்தன வர்த்தி	"
சிறு திரிபலாதி	67
குக்குலாதித் திரிபலாதி	"
மூலவாயு	68
மூலவாயுச் சிகிச்சை	"
அப்திமூன் கியாழம்	"
அப்திமூன் மாத்திரை	69
மூலரோகம் (ஆயுர்வேத முறை)	70
வாதமூலம்	"
பித்த மூலம்	72
பித்த மூலச் சிகிச்சை	"
சிலேட்டும மூலரோகம்	73
சிலேட்டும மூலச் சிகிச்சை	"
அயசாரம்	74
மண்டூரம்	"
ரத்தமூலப் பொது லக்ஷணம்	75
வாதரத்த மூலம்	"
வாதரத்த மூலச் சிகிச்சை	76
வங்க பஸ்பம்	"

பொருள்	பக்கம்
பித்த ரத்த மூலம்	77
கப்ரத்த மூலம்	"
சக்ஜ மூலம்	"
தினவு ரோகம்	"
கெந்தி யெண்ணெய்	80
சுகிர்தாதி மாத்திரை	"
ஹஸ்மரி ரோகம்	83
கல்லடைப்பு நிவாரணி	86
ஹஸ்மரி ரோக நிவாரணி	87
யூதாதி சூரணம்	"
காஜர் மிட்டாய்	88
ஆளி விதை ஷர்பத்	89
விருச்சிகாதி மாஜுன்	"
தேள் பஸ்பம்	"
ஆஷ்மரி ரோக பூர்வம்	90
பொது லக்ஷணம்	"
வாதாஷ்மரி ரோக லக்ஷணம்	"
சிலேஷ் மாஷ்மரி ரோக லக்ஷணம்	
சுக்கிலாஷ்மரி ரோக லக்ஷணம்	91
சர்க்கராஷ்மரி ரோகம்	"
ஆஷ்மரி ரோகச் சிகிச்சை (ஆயுர்வேத முறை)	
சொண்டியாதிக் கியாழம்	"
ஏலாதிக் கியாழம்	"
பிர்நாத யாத்திரை	92
குல்தியாக் கிருதம்	93
சீரச் சுண்ணம்	"
சாரப் பஸ்பம்	"
புராதனப் பிரமேகம், நீர்ப்பை வியாதிகள்	94
முளைத் தினவு	"
தீக்ஷணிய மூத்திரம்	95
சிறுநீர் சிவத்தல்	"
காரமான அல்லது உறைப்பான மூத்திரம்	"
அக்கிரம சருமம் நீளல்	"
அக்கிரம சரும அழுக்கு	"
சுக்கிலச்சூடு	96
இந்திரிய கமல நரம்பு மரத்தல்	"

பொருள்	பக்கம்
ரத்தக்ஷீணம்	97
பால் பாகம்	"
மண்டூர ஹல்வா	"
அற்புதாயச் சிந்தூரம்	98
இரத்தக்கட்டு, நரம்பு மந்தத்தொழில்	"
கேவல தீவிர உணர்ச்சி	101
நெருஞ்சிப் பிரயோகம்	103
லிங்கமணி அசுபாவ உணர்ச்சி	104
புரஸ்தகோள கேவல உணர்ச்சி	"
வேதனை விம்மல்	105
பீஜத்தளர்ச்சி, இந்திரிய நாளத் தளர்ச்சி	106
புரஸ்தகோள வகையரா ரத்தக்கட்டு	"
கொம்பு வைத்தல்	"
புரஸ்தகோள வீக்கம்	"
மூளைக்கொடி யிரத்தாதிக்கம்	107
அரை யிரத்தாதிக்கம்	"
அரை யிரத்த க்ஷீணம்	108
டாக்டர் டுயின்ட் துரையவர்கள் அநுபவமாவது	113
இந்திரிய சிராவகச் சிகிச்சை (யூநாநி)	117
இந்திரிய சிராவகத்திற்காம் பொது யோக முறைகள் பாயசங்கள்	119
சூரணங்கள்	120
மாஜூன்கள்	121
ஹல்வாக்கள்	123
மாத்திரைகள்	124
பஸ்பங்கள்	126
திராவகம்	128
எண்ணெய்	"

❄❄❄❄❄

கடவுள் துணை

சிராவக நிவாரண போதினி

இஃது
யூநாநி வைத்திய

தாருட்ய விர்த்திபோதினி முதலிய பல
வைத்திய கிரந்த கர்த்தாவாகிய
அக்கீம்,

பா. முஹம்மது அப்துல்லா சாஹிபு
அவர்களால் இயற்றப்பட்டு,

சென்னை
முஸ்லிம் அபிமானி அச்சியந்திர சாலையில்
அச்சிடலுற்றது.

1909

விலை ரூ.

பிஸ்மில்லா ஹிர்றகுமா நிர்றகீம்.

முதல் பதிப்பின் முகவுரை.
PREFACE.

நண்பர்களே! இச்சிறிய நூலினை இயற்றும்படி நேரிட்ட காரணம் இன்னதெனப் பிற் கூறப்படும் விஷயங்களால் மயலறவே சுயமாய் விளங்கும்.

கடவுளினது கிருபா கடாக்ஷத்தினாலும் பெரியோர்களின் ஆசீர்வாத பாசுபதத்தினாலும், பற்பலபண்டித சிரோமணிகளின் அநுக்கிரக சகாயத்தினாலும் அடியேனா லியற்றப்பட்ட யூநாநி வைத்திய தாருட்யவிர்த்தி போதினி கிரந்தமும், பிரமேக நிவாரண போதினி முதலிய பல கிரந்தங்களும் வெளிப்பட்டு அவை யவராலும் அங்கீகரிக்கப்பட்டு, அவற்றில் சொல்லி இருக்கப்பட்ட விதிவிலக்குகளையும், சிகிச்சாக்கிரமங்களையும், அநுஷ்டித்தும், நமது ராஜ அவுஷத சாலையில். விற்கப்படும், பற்பல அவுடதங்களை உபயோகித்தும் அநேகர் அளவிறந்த பிரயோசனங்களை அடைந்து ஆனந்தித்து வருவதைக் கடிதமுகத்தாலும் பிறவாற்றாலும் அன்னோர் எமக்கறிவித்து, நம்மைப் பலவிதத்தாலும் ஆதரித்துவரும் சுதேசாபிமானிகளாகிய பலதன கனவான்கள் லோகோபகாரார்த்தமாய் இக்கால நடைக்குத் தகுந்தபடியாயும், யாவரும் எளிதில் அறியத் தக்க விதமாகவும் பற்பல நூதன வைத்திய நூல்களை யாம் பிரசுரிக்க வேண்டுமென வற்புறுத்துகின்றனர். ஏனெனில், இகபர சாதகங்களைப் பெற மானிடர்களுக்கு நோயற்ற வாழ்வே அதிக ஆவசியகமானது என்பதே.

மேலும் நாம் வைத்தியஞ் செய்ய வெளிவந்திந்த விருபத்தைந்து வருஷகாலமாக பெரும்பான்மையும் ஸ்திரீ புருஷ ஜனன இந்திரியங்களின் ரோகச் சிகிச்சையிலேயே அதிகக் கவனத்தைச் செலுத்தி வந்தோம். இன்னும் நமது யூநாநி வைத்திய தாருட்யவிர்த்தி போதினி யென்னும் கிரந்தம் வெளிட்பட்டது முதல் அவ்வித வியாதியஸ்தர்களின் தொகையும் நாளுக்கு நாள் அதிகரித்தே வருகின்றது. அவர்களுள் பலர், பொல்லா வியாதியான இந்திரிய சிராவக ரோகவலையிற் சிக்குண்டே இருக்கின்றார்கள். ஏனெனில், இந்தக் கஷ்ட வியாதியானது பிரமேகம், துரித ஸ்கலிதம், சொப்பனஸ்கலிதம், முஷ்டிப் பிரயோகம் முதலிய பல வியாதிகளின் தீர்மானமான முடிவானபடியால், அவ்வியாதிகளை ஆரம்பத்திலேயே கவனித்து அவற்றிற்குத் தகுந்த சிகிச்சை செய்யாமல் விட்டு விடுவதும் வேறு சில அஜாக்கிரதையுமே காரணம். மேலும் இந்த வியாதி உண்டாவதிலும் இதன் சிகிச்சையிலும் சில பிரத்தியேக விசேஷங்கள் இருக்கின்றன அவை, பின்வருகிற விதமாம். இவ்வியாதியானது, தனக்குட்படும் ஒருவனுடைய கவனத்திற் கெட்டா வண்ணமே கிரமேணுவாய் நாளடைவில் பற்றி முளைத்துண்டாகி சற்று ஸ்திரப் பட்டு விட்ட பின்பே துரிதஸ்கலிதம், தாது நஷ்டம், சங்கமசக்திக் குறைவு முதலியவைகளுண்டாகும்.

அப்போதுதான் ஏதோ ஒரு வியாதியில் சம்பந்தப்பட்டிருப்பதாகத் தனக்குத் தோன்றும். அது வரையில் தான் அதிகங் கவனிக்க வேண்டிய விசேஷ லக்ஷணங்களிரா. இந்த வியாதியானது ஒரு கள்ளனைப் போல நாளடைவில் சோரத்தனமாகச் சிறுகச் சிறுக இடங்கொண்டு தேகத்தில் ஆழ்ந்து நிலைத்துப் பின்பு பலத்துப் பல அபாயங்களுக்கு ஏதுவாகும். இந்த வியாதியை நீக்கவென்றாலோ, ரோகி, சிகிச்சகன் ஆகிய இருவருடைய முயற்சியும் ஒருமிக்க வேண்டியதாய் இருக்கிறது. இந்த வியாதியின் சிகிச்சையில் அதற்குத் தகுந்த எவ்வளவு சிரேஷ்டமான மருந்தாயினும் ரோகியின் சொந்த முயற்சியுமின்றி யொருபோதும் அதுபற்றறக் குணப்படாது.

இவை முதலிய பல காரணங்களினால் இவ்வியாதியின் உற்பத்திக் கிரமம், இதன் சம்பந்த இதர ரோகங்கள், அவ்வவற்றின் சிகிச்சாக் கிரமங்கள் முதலிய எல்லா விபரங்களும் அடங்கிய ஒரு நூலிருக்க வேண்டுமென்பது மிகவும் ஆவசியகம். ஆகையால், மேற்கண்டபடி இவற்றின் உற்பத்தி பூர்வரூபம், காரணம் முதலியவைகளும் இன்னின்ன சிகிச்சை செய்யப்பட வேண்டு மென்பதும் இவ்வியாதிக்கும் இதன் சம்பந்தமான ரோகங்களுக்கும் உரிய உட்பிரயோகங்களில் நானா வித முறைகளும் இந்நூலில் விபரமாய்ச் சொல்லப்பட்டிருக்கின்றன. மேலும் இக்காலத்தில் இங்கிலீஷ் பாஷையும் அதைப் பின்பற்றிய இங்கிலீஷ் நாகரீகமும் அபிவிர்த்தியாகி வருகின்றபடியாலும் நமது யூநாநி வைத்திய தாருட்யவிர்த்தி போதினியில் இந்திரிய ஒழுக்கைப்பற்றி யூநாநி சிகிச்சைகளும் இந்து சிகிச்சைகளும் அனேகமாய் எழுதப்பட்டிருக்கின்ற படியாலும் இந்நூலில் இங்கிலீஷ் சாஸ்திர முறை சிகிச்சைகள் பெரும்பான்மையாய் எழுதப்பட்டிருக்கின்றன. யூநாநி, இந்து வைத்திய சாஸ்திர ஆராய்ச்சியைப் பார்க்கிலும் இங்கிலீஷ் வைத்திய சாஸ்திர ஆராய்ச்சிக் குறைவாயிருந்தது. ஆனால் நமது நண்பர்களில் அனேகர் ஆங்கிலேய வைத்தியத்தில் சிறந்த பாண்டித்துவமும் அநேக நாள் அநுபவமும் உள்ளவர்களானபடியால் அவர்களின் அநுக்கிரகமும் அவர்களால் இயற்றப்பட்ட நூல்களும் பேருதவியா நின்று அக்குறையானது நிவர்த்திக்கப்பட்டது. அம் மகான்களாறெனின்.

டாக்டர் ஸையத் குலாம் உசேன் சாயபு, டாக்டர் அப்பாஸ் அலிசாகிப், டாக்டர் சித்தின்ஷா சாயபு, ரகீம்கான் கான் பஹாதுர், ஆனரரி ஜர்ஜின், டாக்டர் குலாம் நபிசாயபு, டாக்டர் ராபெர்ட்தாமஸ், எம்.டி. டாக்டர் மாரிஸ் துரைகள் முதலானவர்களே.

மேற்படி இங்கிலீஷ் பாகங்களும் நமது இந்து யூநாநி பண்டிதர்களுக்கும் உதவியாயிருக்கு மென்பதிற் சந்தேகமில்லை. இங்கிலீஷ் சிகிச்சையைச் செய்து பிரயோசனப்படாமற் போனபோது இந்து, யூநாநி முறைகளையும், இந்து யூநாநி முறைகளைச் செய்து வெற்றி அடையாதபோது இங்கிலீஷ் முறைகளைச் செய்து கொள்ளவும், இவ்விதம் ஒன்று தவறின் மற்றொன்றைச் செய்து கொள்ளவும் கூடும்.

இத்தியாதி விஷயங்களெல்லாம் இவ்வளவு விவரமாய் விவரிக்கப்பட்ட நூல் இதுவரையில் தமிழில் அச்சிடப் பட்டதாய்த் தெரியவரவில்லை. இந்நூலில் சொல்லப் பட்டிருக்கிற ஒவ்வொரு முறைகளும், பலதடவை அநுபோகப்பட்டுக் கைகண்டவைகளே. இந் நூலில் சொல்லப்பட்ட பிரயோகங்களில் அனேகம் மிகவும் அருமையான முறைகள். அவையெல்லாம் அதிக கஷ்டத்தோடும், அதிகபணச் செலவு செய்தும் சம்பாதிக்கப்பட்டவைகள். அவ்வகை அருமையான பாகங்களை வெளிப்படுத்தினது ஜீவகாருண்யச் சிந்தையுடனன்றி, மற்றப்படியன்று, அடியேனுடைய சத்தியானுசாரம் இப்பத்து வருஷங்களாய்ப் பலவகை முயற்சிசெய்து பற்பலவித அனுபவத்துடன் இந்நூலைவெளியிட முன் வந்தேன். சுதேசாபிமானமுள்ள கனவான்களும், அடியேனாலியற்றப்பட்ட யூநாநி வைத்திய தாருட்யவிர்த்தி போதினி, பிரமேக நிவாரண போதினி முதலிய கிரந்தங்களை அங்கீகரித்து அடியேனைப் பல விதத்திலும் கனப்படுத்தி வருவதுபோல் இந்நூலையும் அங்கீகரித்து, ஆதரித்துவரும்படியாய்க் கேட்டுக் கொள்ளுகிறேன்.

இச்சிறிய நூலினால் யாவரும் அடையும் பயனாவது:- இந்திரிய சிராவகத்தை மாத்திரம் பற்றிச் சொல்லிய பல சாஸ்திர பழக்கமும், மேற்படி சிராவக வைத்தியமே செய்து பல்லாண்டு அநுபவமுடைய ஆயுள்வேத பண்டிதர்கள், யூநாநி அக்கீம்கள், இங்கிலீஷ் டாக்டர்கள் ஆகிய மூவகை வைத்தியர்களும் சமீபத்திலிருந்து முறையே தத்தம் சிகிச்சைகளைச் செய்து உதவி செய்வதைப் பார்க்கிலும் அதிகமாய், இந்நூலினைக் கவனித்து முறையே நடப்பவர்களுக்கு சிராவக முதலிய வியாதிகளினின்று தப்பித்துக் கொள்ளவும், ஒருவேளை அதில் சிக்கிக் கொண்டால் எவ்விதம் தப்பித்துக் கொள்ளலாம் என்னும் மார்க்கம் இன்னதெனவும் அதாவது சிராவகம் உண்டாகும் காரணம், லக்ஷண முதலியவைகளையும் மேற்படி மூவகை வைத்திய சிகிச்சாக் கிரமங்களையும், உற்ற சமயத்தில் உதவி புரிவதுபோல் தெற்றன தெரிவிப்பதேயாம்.

ஆகையால் நோயற்ற வாழ்வை விரும்பும் ஒவ்வொரு அறிவாளிகளும், தங்களுக்கும், தங்கள் மனைவி, மக்கள் முதலிய யாவருக்கும் பிரயோசனப்படும்படி இதனை ஆதியோடந்தமாய்க் கவனித்து நடந்து கொள்ள வேண்டும் என்பதே அடியேன் கோரிக்கை.

ஆகையால், இச்சிறு நூலில் சொல்லப்பட்டிருக்கிற காரணம், லக்ஷணம், சிகிச்சை முதலியவைகளைக் கவனித்து நடந்து கொள்பவர்கள் இந்த வியாதியினின்று முற்றும் நீக்கப்பட்டு, தாதுவிர்த்தி, போகசக்தி, சந்தானவிர்த்தி முதலிய இம்மைக்குரிய பயன்களை அடைந்து நீடூழி வாழ்வார்கள். ஆமீன்.

♦♦♦♦♦♦

பிஸ்மில்லா ஹிர்றகுமா நிர்றகீம்.

சிராவக நிவாரண போதினி
என்னும்
பாலியல் பிணி மருத்துவம்

கடவுள் வணக்கம்.

அரபு வாக்கியம்.

அல்ஹம்து லில்லாஹி றப்பில் ஆலமீன்: அஸ்ஸலாது வஸ்ஸலாமு அலா ஸய்யிதில் முர்ஸலீன்: வ ஆலிஹி, வ அஸ்காபிஹி அஜ்ம ஈன்.

பீடிகை

கடவுளினது கிருபையாலும், பெரியோர்களின் ஆசீர்வாதத்தினாலும், பற்பல பண்டித சிரோமணிகளின் அனுக்கிரகத்தினாலும், நமது யூநாநி வைத்திய தாதுவிர்த்தி போதினி முதற்பாகமும், அதன் இரண்டாம் பாகமும், மேற்படி தாதுவிர்த்தி போதினி திறவுகோலும், பிரமேக நிவாரண போதினியும், தமிழ், தெலுங்கு முதலிய பாஷைகளில் வெளிப்பட்டு, அவை பற்பல தேசவாசிகளாகிய யாவராலும் அங்கீகரிக்கப்பட்டு, அவற்றால் நானா வித பிரயோஜனங்களை அடைநதுவரும் சுதேசாபிமானமுள்ள பல கனதனவான்கள் இந்திரிய சிராவக ரோகத்தின் காரணம், அதன் லக்ஷண முதலியவைகளையும், அதற்கான ஹிந்து யூநாநி, இங்கிலீஷ் முதலிய முறைகளையும் விவரிக்கும் நூல் ஒன்று தனியே இருக்கின், அநேகருக்கு வெகு பிரயோசனமாய் இருக்குமென விருப்புற்றபடியாலும், இவ்வியாதிக்குள் சிக்கி இதன் சிகிச்சாக்கிரம முறைகள் தெரியாமல் அநேகர் அவதிப்படுவது நமது அநுபவத்தில் அனுதினமும் காணப்பட்டு வருகிற படியாலும், இவ்வியாதியானது, பிரமேகம், முஷ்டிப்பிரயோகம், துரிதஸ்கலிதம், சொப்பனஸ்கலிதம் முதலிய பல வியாதிகளின் தீர்மானமான முடிவாகையினால் இதனால் நேரிடும் கெடுதிகள் எண்ணிறந்தவைகளான படியினாலும், இந்த வியாதி கண்ட க்ஷணமே, இதைக் கவனித்துச் சிகிச்சை செய்ய வேண்டியது மகா முக்கியமாகையினாலும், அப்படிச் செய்யாவிட்டால், இந்த வியாதியானது நீடித்துப் பிரபலப்பட்டு உள்ளாழ்ந்து ஊடுருவிச் சென்று பலவித அபாயத்திற்கு ஏதுவாகின்ற படியினாலும், இதன் சிகிச்சையில் வியாதியஸ்தர், சிகிச்சகர் ஆகிய இருதரத்தாரும் கவனிக்க வேண்டிய விஷயங்கள் அநேகம் இருக்கின்றபடியினாலும், இவ்வித நூல் ஒன்று

இருக்கவேண்டியது ஆவசியகமென, அடியேனால் கூடியவரையில் முயற்சிசெய்து அநுபவயுக்தானுசாரமாய் மேற்படி ரோகத்தின் காரணம், லக்ஷணம் முதலியவைகளையும், அதனைப் பற்றறத் தீர்க்கும் ஹிந்து, யூநாநி, இங்கிலீஷ் முதலிய நானாவித முறைகளையும், விதிவிலக்குகளையும் ஒழுங்குறச் சேர்த்து 'சிராவக ரோக நிவராண போதினி' எனப் பெயரிட்டு வெளிப்படுத்தி இருக்கின்றேன். ஆகையால், இவ்வியாதிக்குட்படாமல் எச்சரிக்கையாயிருந்து கொள்ளவும், ஒருவேளை வியாதிக்குட்பட்டுவிட்டால் அதினின்று தப்பித்துக் கொள்ளவும் இந்நூல் ஏதுவாகும். இவ்விதம் இது எல்லோருக்கும் பிரயோசனப்படுமென்பது சத்தியமாகையால், ஒவ்வொருவரும் இதனை ஆதியோடந்தமாய்க் கவனித்து இதில் சொல்லப்படும் விதிவிலக்குகளை அறிந்து நடந்து கொள்வார்களென நம்புகின்றேன்.

இந்திரிய சிராவக ரோக நாமங்கள்.

இதற்கு அரபியில், ஸீலானுமநி, வறூதுமநி, ஜறூறுமநி, ஜிர்யானுமநி யென்றும், ஸமஸ்கிருதத்தில் ஷுக்ல பிரமேகம் என்றும், தமிழில் இந்திரிய ஒழுக்கு என்றும், இங்கிலீஷில் ஸ்பெரமடோரியா என்றும் பெயர்.

இந்திரிய சிராவக ரோக பூர்வம்.

இந்த ரோகத்தைப்பற்றித் தெரிந்து கொள்ளு முன், தாதுவைப் பற்றியும், வெட்டைநீர், சுகநீர் முதலியவைகளைப் பற்றியும், நாம் முன்னம் தெரிந்து கொள்ளாவிட்டால் அவைகளைப் பற்றிய ரோக நிதானமும், அதன் பரிகாரமும், நமக்குச் செவ்விதாய் விளங்கமாட்டா. ஆகையால், அவைகளைப் பற்றிச் கிஞ்சித்து கியானம் உண்டாகும்படி சில முக்கிய விஷயங்களைக் குறிப்பாய் இவ்விடம் கூறுகிறோம்.

தாது:- சுகஸ்திதியிலுள்ளவர்களின் புதிய சுக்கிலமானது அரைப் பிரகாசமுள்ளதாகவும், தடிப்பாகிய திரவரூபமுடையதாகவும், மணிபோலக் கட்டிகள் உள்ளதாகவுமிருக்கும். வருணத்தில் வெண்சாயலாக அல்லது, பாலைப்போலவும், பாகத்தில் சளியைப் போலவும் இருக்கும், அதற்குரிய ஓர்வித வாசனையுமுண்டு.

(இதன் சுபாவ லக்ஷண முதலியவைகளெல்லாம் நமது யூநாநி வைத்திய தாருட்யவிர்த்தி போதினியில் விளக்கமாய்க் காணப்படும்.)

சுக்கிலமானது போகத்தினாலும், போகத்தைப் போன்றதினாலும் வெளிப்படும். இதுவே சுபாவ ஸ்கலிதமாம்.

சுகநீர்:- இது வழவழப்புள்ளதும், தடித்ததும், வெள்ளையுமான ஓர்வித நீர். காமத்தைப் பற்றிய விஷய முதலியவைகளினால் ஆண் ஜெனன இந்திரியக்

கருவி விம்மினபோது நீர்த்தாரையின் வாயில் கசிவுண்டாகும். இப்படி உண்டாவதற்குச் சுகநீர் சுபாவ ஸ்கலித மென்று பெயர்.

வெட்டைநீர்:- இது அநேகமாய்ச் சுக்கிலதாது போன்றதாயும், பிசுபிசுப்புள்ளதாயும் இருக்கும். இது வெளிப்படும் வழியும், சுகநீர் வெளிப்படும் வழியும் ஒன்றே.

இப்போது நாம் சுக்கிலதாது, சுகநீர், வெட்டை நீர், ஆகியவைகளின் சுபாவலக்ஷணங்கள் முதலியவைகளைச் சுருக்கமாய்த் தெரிந்து கொண்டோம். ஆகையால், இனி இந்திரிய சிராவக ரோக பூர்வத்தைக் கவனிப்போமாக.

(1) நித்திரையில் அல்லது விழித்திருக்கும்போது, (2) நீர் விசர்க்கத்திற்கு முன் அல்லது அதற்குப் பின், (3) மலவிசர்க்க முக்கலுடன், (4) பூரண விம்மலுடன் அல்லது அரை குறையான விம்மலுடன் அல்லது விம்மலில்லாதபோது (5) ஸ்திரீ சஞ்சாரத்திற்கு முன் அல்லது அந்தக்ஷணமே ஆகிய இச்சமயங்களில் காமச்சிந்தனை, காமக்குறி ஆகியவைகளின்றி இந்திரியமானது அளவில் அதிகமாய்த் தானே வெளிப்படுவதே இந்திரிய சிராவக ரோக பூர்வமாம். சுருக்கிச் சொல்லில் எந்த விதமாயினும், எவ்வளவாயினும் எப்போதாயினும் சுக்கில தாதுவானது சுபாவ ஸ்கலிதமின்றி, வேறு விதமாய் வெளிப்படுவதெல்லாம் சுக்கில பிரமேகமே.

இன்னும் அதிக அளவான சுகநீர், அல்லது வெட்டைநீர் வெளிப்படுவதும், இந்திரிய சிராவக ரோக பூர்வமென சில ஆங்கிலேய டாக்டர்களினால் நம்பப்பட்டிருக்கிறது. ஆனால் ஹிந்து யூநாநி சாஸ்திர பண்டிதர்கள் இதை வேறு வகை வியாதியெனப் பிரித்துச் சொல்லுகின்றார்கள். ஆனால் இது முன் சொல்லப்பட்ட இந்திரிய சிராவக ரோகமாகவே முடியுமெனத் தெரிந்திருத்தல் வேண்டும்.

புறநடை.

சத்துள்ள சுத்த ஆகாரத்தை அதிகமாய்ப் புசிக்கும் கனதனவான்களுக்குப் பத்து பதினைந்தில் சொற்பன ஸ்கலிதம் உண்டாவது இந்திரிய சிராவக ரோகமாகாது. அப்படி நேரிடுவது ஒருவிதம் தேக சுகத்திற்கு ஆதாரமாகும்.

விம்மலுடன் சுகநீர் கசிவது மேற்படி வியாதியாகாது. கசிவென்பது அங்குலிப்பரிசத்திற்குப் புலப்படுவதே. விம்மலுக்குப்பின் மேற்படி சுகநீர் கசியாமை பலஹீனத்தின் அறிகுறியாம்.

ஜல விசர்க்கத்துடனே கொஞ்சம் வெட்டைநீர் நீர்த்தாரையின் வாயில் எப்போதாயினும் ஒருவேளை வெளிப்படுவது மேற்படி வியாதியாகாது.

மலபந்தத்தி னிமித்தம் மல விசர்க்கத்தின் போது அதிகமாய் முக்க நேரிடுமாகையால் அக்காலங்களில் அசாதாரணமாய்ச் சில நேரங்களில் இரண்டொரு துளி சுக்கில தாது வெளிப்படுவதுண்டு. ஆனால் அந்த மலச் சிக்கல் தீர்ந்தபின் அப்படி வெளிப்படுவது நின்றுவிட்டால் மேற்படி வியாதியாகாது.

விம்மலுக்குப்பின் நீருக்கிருக்கும்போது தடிப்பாகிய வெள்ளை நீர் கொஞ்சம் வெளிப்படுவதும், மூத்திரத்தின் வேகத்தினால்-2-3-துளி சுக்கில தாது சில சமயங்களில் அசாதாரணமாய் வெளிப்படுவதும் மேற்படி வியாதியில் கடினமானதில் கணக்கிடலாகாது.

எச்சரிக்கை.

மேற்கண்ட லக்ஷணங்கள் எல்லாம் அடுத்தடுத்து அடிக்கடியும், அளவில் அதிகமாயும், காணுமாயின் மேற்படி வியாதியென்றே தீர்மானித்தல் வேண்டும் மேற்கண்ட திரவங்கள் அடுத்தடுத்து அடிக்கடி கொஞ்சமாய்க் கண்டாலும் அதனால் பின்னிற்கு நேரிடும் கெடுதியின் அறிகுறி யென்றே நிதானித்துக் கொள்ளல் வேண்டும்.

யூநாநி வைத்திய சாஸ்திர பண்டிதர்களின் தீர்மானமாவது சுகநீர், வெட்டைநீர் ஆகியவைகள் அளவில் அதிகமாய் வெளிப்படுதல், இந்திரியக் கசிவுகாணல் ஆகியவைகளெல்லாம் வியாதியே. ஆனால், இந்திரிய ஒழுக்கானது பலவகைப்படும். அவை பின்னர் எழுதப்படும் என்பதே.

ஆயுர்வேத பண்டிதர்களின் அபிப்பிராயமாவது:- பிரமிய ரோகம் பலவகைப்படும். இந்திரிய ஸ்கலிதமாகிக் கொண்டிருப்பதற்கு சுக்ல பிரமேகம் என்பதிற் சந்தேகமில்லை என்பதே. இவற்றின் விபரங்களும் பின்னர் எழுதப்படும்.

சிராவக ரோக காரணம்

ஆங்கிலேய வைத்திய சாஸ்திர முறைப்படி இது எட்டு வகையாம். (1) இந்திரிய விளைவு அதிகரித்தல், (2) இந்திரிய சுபாவம் விகற்பப் படுதல், (3) கோசத்தின் அக்கிரம சருமம் நீண்டிருத்தல், அல்லது, அதினுட்பக்கத்தில் அழுக்குப் படிந்திருத்தல், (4) மூத்திரத்தில் அல்லது மூத்திர ஸ்தானங்களில் வியாதி உண்டாதல், (5) மலச்சிக்கல், ஆசனத்தினவு, மூளை, மூளைக்கொடி, முள்ளந்தண்டு ஆகியவைகளில் தினவு முதலிய வேறு வியாதிகள் உண்டாதல், (6) இந்திரிய கமலங்கள், இந்திரியக் குழல்கள் ஆகியவைகள் தளர்ந்து போதல், (7) இந்திரிய விளைவை அதிகப்படுத்தும் விஷயங்களை அனுசரித்தல், (8) ஜெனன இந்திரியங்களில் கூர்மையான உணர்ச்சி உண்டாதல் ஆகியவைகளாம்.

இப்போது நாம் இந்திரிய சிராவக காரணங்களை ஒருவாறு சுருக்கமாய்ச் சொன்னோம். இனி அவற்றுள் ஒவ்வொன்றையும் விவரிப்போமாக.

1. ஏகாந்தியாயும், பலசாலியாயும் யாதொரு வியாதியின்றி சுகஸ்திதியிலுள்ளவர்கள் சத்துள்ளதும் சுத்தமானதும், இந்திரிய விளைவை அதிகப்படுத்துவதுமான ஆகாரங்களாகிய பால், மிட்டாய்கள், இறைச்சி, மீன்கள் முதலியவைகளை அதிகமாய்ப் புசித்து, யாதொருவித தேகப்பயிற்சி, மனப்பயிற்சி முதலியவையின்றி யிருந்தால், அத்தகையினர்களுக்குச் சொற்பன ஸ்கலிதமாகவாவது, வேறுவிதமாகவாவது சுக்கிலமானது சிந்தனையின்றித் தானே ஸ்கலிதமாகும்.

2. தாதுவில் எக்காரணத்தினாலேனும் சில சமயம் அதி தீக்ஷணியமான சூடுண்டாகி விடுவதுண்டு. அப்போது இது யாரிடமிருந்து வெளிப்படுகிறதோ அவர்களுக்கும், இது வெளிப்பட்ட க்ஷணமே யாரிடம் போய்ச் சேருகிறதோ அவர்களுக்கும் இதன் சூடு புலப்படும். இவ்வித வியாதியுள்ள பலரை நம் அநுபவத்திற் கண்டு வருகிறோம். மேலும் டாக்டர். சித்தின் ஷா சாயவும் இவ்வித வியாதியஸ்தர் பலரைக் கண்டிருப்பதாய்த் தம்முடைய கிரந்தத்தில் சாட்சி பகர்கின்றர். இவ்வித சூட்டினால் பெரும்பான்மையும் சுக்கிலம் நீர்த்துப்போய் ஒழுக்குண்டாகும்.

3. ஆண் ஜெனன இந்திரியக் கருவியின் நுனியிலுள்ள அக்கிரம சருமமானது அதிக சிறிதாயிருந்தாலும் அல்லது அதிகப் பெரியதாயிருந்தாலும் அதில் அழுக்குப் படிந்துவிட ஏதுவாகும். அதனிமித்தமாய் இந்திரியக் குழல்களில் ஒருவித உணர்ச்சியுண்டாகிக் கொண்டே யிருக்கும். அதனாலும் சுக்கில ஸ்கலிதம் உண்டாகும்.

4. மூத்திர உறுப்புக்களின் சில வியாதிகளும் இந்திரிய ஸ்கலிதத்திற்குக் காரணமாகும். அதுபின் வருகிற விதமாயிருக்கும். மூத்திரம் அதிகப்படுவதி னிமித்தமாயாவது, அல்லது, வேறெந்தக் காரணத்தினாலேயாவது நீரில் எரிவந்த முண்டாவதினால் சில சமயம் இந்திரியக் குழல்களில் அதன்வேகம் எட்டித்தாவி இயக்கமுண்டாகிக் கொண்டேயிருக்கும். அதனாலும் இந்திரிய ஸ்கலிதமுண்டாக ஏதுவாகும். நீர்க்குண்டிக் காய்களில் மணல்கள் ஜனித்து, நீருடன் வெளிப்படும்போது அவை இந்திரியக்குழல்களின் மீதும் உராசிக்கொண்டு செல்லுமாகையால் அதினிமித்தம் அவற்றில் இயக்கமுண்டாகி ஒருவித உணர்ச்சியுண்டாகிக் கொண்டேயிருக்கும். அதன் காரணமாகவும் இந்திரிய ஸ்கலிதமுண்டாகும்.

நீர்த்தாரை அதிகமாய்ச் சிறுத்திருப்பவர்கள், நீர்ப்பையின் வியாதியுள்ளவர்கள் ஆகிய இவர்கள் நீருக்கிருக்கும்போது வேகமாய் முக்க நேரிடும். இந்த வேகமானது இந்திரிய கமலங்கள், இந்திரியக்குழல்கள் ஆகியவைகளுக்கும் எட்டும், அதனாலும் இந்திரிய ஸ்கலித முண்டாக ஏதுவாகும். ஆயினும் இவ்விதம் அபூர்வமாய்க் காணுமென அறிந்திருத்தல் வேண்டும்.

5. ஜெனன இந்திரியங்களின் வியாதி சம்பந்தமின்றி இதர வியாதிகளின் சம்பந்தங்களினாலும் இந்திரிய ஒழுக்கிற்கிடமாகும். எப்படியெனில், மலபந்தமாய்

அல்லது மலச்சிக்கலா யிருக்கும்போது மலவிசர்க்கத்திற்காக சற்று மூச்சுப் பிடித்து முக்க நேரிடும். அந்த வேகமானது இந்திரியக் குழல்கள், இந்திரிய கமலங்கள் ஆகியவைகளில் தாக்கும். அதனால் இந்திரிய ஸ்கலிதமாக நேரிடும். ஆனால் மலபந்தம் அல்லது மலச்சிக்கல் நீங்கிவிட்டால் ஸ்கலிதமாவதும் தானே நீங்கிவிடும். ஆனால் இவ்விதம் எப்போதாயினும் ஒரு சமயா சமயங்களிற் காணுமாயின் வியாதியாகாது. ஆனால் சொற்ப மலபந்தம் அல்லது மலச்சிக்கல் நேரிட்ட போதெல்லாம் கூட சுக்கில ஸ்கலிதமுமாகிக் கொண்டிருப்பதும், அது நீங்கினவுடன் ஸ்கலிதம் நின்றுவிடுவதுமா இருந்தால் இந்திரியக் குழல்கள், இந்திரிய கமலங்கள் ஆகியவைகள் துர்ப்பலப்பட்டிருக்கின்றன என்பதைக் காட்டும் அறிகுறியென நிதானித்தல் வேண்டும்.

பீஜங்களில் அல்லது ஆசனத்தில் தினவு உண்டாவதினாலும், அப்பாகங்களில் இரணம் முதலியவைகளிருப்பதினாலும், மூல வியாதியினாலும் இந்திரிய ஸ்கலிதம் உண்டாகும். ஏனெனில் அப்பாகங்களுடன் இந்திரியக் கமலங்கள் நெருங்கி இருப்பதால், மேற்படி காரணங்களினால் அடிக்கடி அங்குக் கூச்சம் உண்டாக நேரிடும். இதனுடன் முக்கியமாய் அவை பலஹீனப் பட்டிருக்குமாயின் ஸ்கலிதம் உண்டாகத்தடையே இராதெனவும் அறிந்திருத்தல் வேண்டும்.

ஆசனத்தில் இரணமிருந்து அது ஆறினபின் ஆசனம் சிறுத்துப் போவதினாலும், ஆசனப்பிளப்பு ரோகத்தினாலும் இந்திரியஸ்கலிதமாக நேரிடும்.

டாக்டர் தூவாஸ்சிக் துரையவர்கள், விஷ சுரத்திற்குப் பின்னும் இந்த வியாதி உண்டாகிறதென்றும் டாக்டர் கிராஸ் துரையவர்கள், மூளை தினவு ரோகத்தினாலும் இந்த வியாதி உண்டாகிற தென்றும் அபிப்பிராயப்படுகிறார்கள்.

6. எக்காரணத்தினாலேனும் இந்திரிய கமலங்களின் பேசிச்சதைகளில் வாதரோகங் காண்பதினால், அந்த இந்திரிய கமலங்களின் ஏந்திக்கொள்ளும் சக்தியற்றுவிடும். இதனாலும் சிந்தனை இன்றி ஸ்கலிதம் உண்டாகும். மிதமிஞ்சின போகம், முஷ்டிப்பிரயோகச் சேஷ்டை, ஆசன சம்பந்தத் துர்ப்பழக்க முதலிய காரணங்களினால் இது பெரும்பாலும் நேரிடுகிறது.

நீர்த்தாரையில் ஸ்பரிச உணர்ச்சி அதிகரித்திருக்கும். ஏதேனும் லக்ஷணமும் காரணார்த்தமான கூச்சமும் இல்லையாயின், இந்திரிய கமலங்களின் தளர்ச்சியும் இந்திரிய ஒழுக்கிற்குக் காரணமாகும்.

7. சில விஷயங்களினால் பெரும்பாலும் இந்த வியாதியுண்டாக ஏதுவில்லை யெனினும் அவ்விஷயங்களால் அந்த வியாதி அவசியம் பலப்பட ஆதாரமாயிருக்கின்றன. அவையாவன:- தேயிலைபானம், காபி பானம், சாராயம் ஆகியவைகளையும் இவைபோன்றவைகளையும் அடிக்கடி அதிகமாய்

உபயோகப்படுத்தல், புகையிலை அதிகமா உபயோகித்தல், கவிழ்ந்து படுத்தல், அசுத்தமாயிருத்தல் முதலியவைகளாம். இவ்விஷயங்களால் அந்த வியாதி அவசியம் அதிகரிக்கும்.

மனப்பயிற்சிப் பழக்கமுள்ள மாணாக்கர்கள் தேகப் பயிற்சியின்றித் தங்கள் மனதை வாசிப்பிலேயே அதிகமாய்ச் செலுத்தி வருவதினால், அத்தகையினர்கள் மற்றவர்களைப் பார்க்கிலும், சீக்கிரமாகவும், அதிகமாகவும் இந்த வியாதிக்குட்பட ஆயத்தமானவர்கள்.

இந்திரிய ஒழுக்கினால் நரம்பைப்பற்றிய வியாதிகளாகிய காக்கைவலி, உன்மத்தம் முதலிய வியாதிகளுண்டாமெனினும் பரம்பரையாய் இவ்வியாதிகளுக்குட்பட்டவர்கள் மற்றவர்களைப் பார்க்கிலும் அதிகமாகவும் சீக்கிரமாகவும் இந்திரிய ஒழுக்கிற் சிக்கிக் கொள்ள ஏதுவானவர்கள்.

8. இந்திரிய ஒழுக்கின் எல்லாக் காரணங்களைப் பார்க்கிலும் அதி முக்கியமும் விசேஷமுமானது ஜெனன இந்திரியங்கள் ஒருவித கேவல தீவிர உணர்ச்சியடைந்து விடுவதே. இக்கேவல ஸ்திதியினால் இந்திரிய ஒழுக்குண்டாவதுந் தவிர, நாளாவிதத் துன்பங்களுக்கும் ஏதுவாகின்றது. ஜெனன இந்திரியங்களினால் இவ்வித ஈன உணர்ச்சி உண்டாக பலவகைக் காரணங்களுண்டு. அவையாவன:-

(1) அடிக்கடியுண்டாம் மிதமிஞ்சினபோகம், இதனால் எல்லாவுறுப்புகளும் முக்கியமாய் ஜெனன இந்திரியங்கள் துர்ப்பலப்பட்டு எளிய ஸ்திதியிலாகிவிடும். எப்படியெனில், சஞ்சாரஞ்செய்யும் ஒவ்வொரு தடவையும் வெளிப்படும் சுக்கிலத்தை பீஜங்கள் அடிக்கடி சித்தப்படுத்தவும், அதை இந்திரிய கமலங்கள் அப்போதைக்கப்போது வெளிப்படுத்தவும் நேரிடும். இவ்விதம் அடிக்கடியுண்டாம் வேலை மிகுதியினால் அவற்றின் தொழில் கெட்டு சுபாவமு மாறிவிடும். இதனால் மூளைக்கொடி, பேசி நரம்புகள் ஆகியவைகளுக்கும் சிரமம் நேரிட்டு அவற்றின் தொழிலும் சுபாவமும் கெடும். இவை இவ்வித அசுபாவ பழக்கத்திற்கு உள்ளாகி, தம் பூர்வ சுபாவத்தை இழந்து சொற்ப இயக்கத்தினாலும் தக்ஷணமே தத்தம் தொழிலைச் செய்யும்படியான ஒரு நூதனகேவல சுபாவத்தை அடைந்து விடுகின்றன. இக்கேவல சுபாவம் விர்த்தியடையும் அளவிற்கேற்றது போலவே அவற்றின் துர்ப்பலமும் விர்த்தியாகிக் கொண்டேயிருக்கும். முடிவில் முக்குதல், ஆசனத்தினவு, பேருக்காகிலும் காமச்சிந்தை ஆகியவைபோன்ற சொற்ப இயக்கங்களாகிய சிறு சல்லியங்களினாலும், இந்திரிய கமலங்களானவை சுக்கிலத்தை வெளிப்படுத்தும் படியாகிய நுண்ணிய உணர்ச்சியையும், ஈன ஸ்திதியையும் அடைந்து கெட்டுப்போகும்.

(2) முஷ்டிப்பிரயோகம்:- மிதமிஞ்சின போகத்தினால் மேல்விவரித்தபடி இந்திரிய ஒழுக்கு அடிக்கடி உண்டாகி அதனால் நேரிடும் கெடுதிகள் பல.

அவற்றுடன் துர்ப்பழக்கமும், அசுபாவமுமான இத்துட்டக் கிரியையினால் உண்டாகும் நஷ்டங்களும் அனேகம் இதன் விபரமெல்லாம் நமது 'யூநாநி வைத்திய தாருட்யவிர்த்தி போதினியில்' சொல்லப்பட்டிருக்கின்றன.

இன்னும் இத்தகா நடத்தையினால் ஆண் ஜனன கருவியின் நரம்பு முதலியவைகள் தளர்ந்து அதன் ஏற்பாடே குலைந்துபோம். இதுவன்றி, நீர்த்தாரைக்குள் அற்ப வீக்கம் காணும். அதன் வாய் சிவந்து அகன்றுபோகும். அடிக்கடி நீரிறங்க ஆரம்பிக்கும். இந்திரிய கமலங்களில் முன் சொன்ன நுண்ணிய உணர்ச்சி உண்டாகி விடும். இந்திரியமானது அடிக்கடி ஜனித்து அப்போதைக்கப்போது வெளிப்பட்டுப்போவதினால் அதன் சுபாவத்தன்மை மாறிவிடுமாகையால், இந்திரிய கமலத்தில் இது வந்தவுடனே அதை அன்னிய வஸ்துவென உடனே வெளிப்படுத்திவிடும். இவ்விதமும் இந்திரிய ஸ்கலிதம் உண்டாகும்.

டாக்டர் ஹன்டர் துரையவர்களின் அபிப்பிராயமாவது:- மிதமிஞ்சின போகத்தினால் இந்திரிய ஒழுக்குண்டாவதுபோல, முஷ்டிப் பிரயோகத்தினால் இந்திரிய ஒழுக்குண்டாக ஏதுவில்லை என்பதே. ஆனால், டாக்டர் மில்டன் துரையவர்கள், டாக்டர் ஸொண்டுயார் துரையவர்கள் ஆகிய இருவரும் மேற்படி டாக்டர் ஹன்டர் துரையவர்களின் அபிப்பிராயத்திற்கு விரோதமாய், மிதமிஞ்சின போகத்தைப் பார்க்கிலும் முஷ்டிப் பிரயோகமே இந்திரிய ஒழுக்கிற்கு அதிகமாய்க் காரணமாகுமெனச் சொல்லுகின்றார்கள்.

(3)ஆசனப் புணர்ச்சி:- முன் சொன்ன இவ்வகைப் பழக்கங்களினாலும் நேரிடுங் கெடுதிகளுடன் இத் தகாச்செய்கையினால் சம்பவிக்கும் துன்பங்களும் அநேகமே. இதன் எல்லா விபரமும் நமது 'யூநாநி வைத்திய தாருட்யவிர்த்தி போதினியிற்' சொல்லப்பட்டிருக்கின்றன. மேலும் ஆசனத்திற்குள் வெளிவஸ்துக்கள் பிரவேசிக்காதபடி தடுத்துக் கொள்ளப் பல பேசி நரம்புகள் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன. இந்த முயற்சியில் அப்பேசி நரம்புகளினால் லிங்கமணிக்கு வேதனைநேரிடும். நீர்த்தாரையின் வாயகன்றுபோம். அதன் ஏற்பாடு குலைந்துபோம். இதனால் ஜெனன இந்திரியக் கெடுதி, பலஹீனம் முதலியவைகள் நேரிடுகின்றன.

(4) சொப்பன ஸ்கலிதம்:- இது தேகசக்தி. தேகபலம், சுகஸ்திதி ஆகியவைகள் உள்ளவர்களுக்கு எப்போதாயினும் அபூர்வமாய்க் கண்டால் அதாவது மாதம் ஒரு தடவை அல்லது இரண்டு தடவைகள் கண்டால் பாதகமில்லை. ஆனால் அடிக்கடி இராப்பகலாய்க் காணுமாயின், ஜெனன இந்திரியங்கள் முன் சொன்னபடி நுண்ணிய உணர்ச்சியடைந்து ஸ்கலிதம் அதிகப்படும். பின்பு இவ்வியாதி மிகவும் அபாயகரமானதாகி விடும். ஏனெனில், அடிக்கடி ஸ்கலிதம் உண்டாவதினால், தேகபலங் குறைந்து வரும்: அதனால் ஜெனன இந்திரியங்கள் மெலியும்: அதனால் சொப்பனஸ்கலிதம் விர்த்தியாகும்.

இவ்விதம் தேகபலங்குறைந்து, ஜெனன இந்திரியங்கள் மெலிய, மெலிய, சொப்பன ஸ்கலிதம் அதிகரித்து வரும். சொப்பன ஸ்கலிதம் அதிகரிக்க, அதிகரிக்க தேகபலங்குறைந்து ஜெனன இந்திரியங்கள் மெலிந்துவரும். இவ்விதம் இரு விதத்தினாலும் ஒன்று மற்றொன்றின் உதவியாய், நோயாளி துர்ப்பாக்கிய ஸ்திதிக்குட்படுத்தப் படுவான். இதன் விபரமும் நமது 'யூநாநிவைத்திய தாருட்யவிர்த்தி போதினியில்' சொல்லப்பட்டிருக்கிறது. இந்த வியாதியானது முக்கியமாய் மிதமிஞ்சினபோகம், முஷ்டிப்பிரயோகம், ஆசனப் புணர்ச்சி முதலியவைகளினா லுண்டாமெனினும், பெரும்பான்மை விகாரச் சிந்தை அல்லது காமக் கவலையே முடிவான காரணமாம்.

(5) விகாரச் சிந்தை, அல்லது, காமக்கவலை:- இப்பெரும் விவகாரத்தினின்றும் தப்பித்துக் கொள்ளும் தற்கால வாலிபர்கள் மிகவும் சிலரே. எப்படியெனில் விவாகம் செய்து கொண்டவர்கள், தனவந்தர்கள், ஆகிய இவர்களுக்கு ஸ்திரீ சகவாச ஏதுவுண்டு. இன்னும் வேறு சிலர் சகவாச தோஷ துர்ப்பழக்க வழக்கத்தினால் முஷ்டிப்பிரயோக முதலிய தகா நடத்தைக்குட்பட்டுத் துன்புற்றுப் பின்பு, தம் மதக்கோட்பாட்டின் மூலமாகவோ அல்லது இதன் முடிவு கொடிதென விவேகம் உண்டாக்கியோ அச்சொல்லொணா வழக்கத்தை உடனே விட்டு நீங்கித் தப்பித்துக் கொள்ளுகின்றார்கள். சிறு பாலார் இப்படிச் செய்யினும் பெரும் பாலார் தங்கள் பாலியத்திலிருந்தே, சிற்றின்ப வேடிக்கைக் கதைகள், காமக் கீர்த்தனைகள், ஸ்திரீ அலங்கார லாவணிகள் முதலிய மோக விரகத்தை உண்டுப்பண்ணத் தக்கவைகளைக் கேட்கவும், வாசிக்கவும் பயிலுகிறபடியால், அவ்விகாரமானது அவர்கள் மனதில் சிலா சாதனம்போல பதிந்துவிடுகிறது.

இவ்விதம் விளையாட்டாய் வேரூன்றின விரகதாப விருக்ஷமானது, வயது வளர்ந்து யௌவனம் நெருங்கவும், அவ்வித புத்தகங்களை அடிக்கடி வாசிக்கவும் நேரிடுந் தன்மைக்கேற்ற அளவாய்க் கிரமேணுவாய் வளர்ந்து நிலைத்து வினையாய் முடிந்து விடுகின்றது. ஆகையால், இவ்விகாரச் சிந்தையானது இவர்கள் மனதை விட்டு ஒழியாமல் ஆயுள் முடிகிறவரையில் ஸ்தாபிதமாகிவிடும். ஏனெனில், பணச் செலவின்றி இருந்த இடத்திலேயே ஒரு வித இன்பம் அநுபவிக்க ஏதுவாயிருக்கிறதென்னும் வீணவாவே. ஆகையால், இவ்வழக்கத்தை உடையவர்களின் ஜெனன இந்திரியங்கள் அவர்கள் சிந்தனைக்கு அடிக்கடி உடன்பட நேரிடுகிறபடியால் அவற்றின் சுபாவத்தொழில் கெட்டு அற்ப ஜாடையினாலும் அச்சிந்தனைக்குட் படும்படியான கேவலமாகிய நுண்ணிய தீவிர சுபாவத்தை அடைந்து விடுகிறது. ஆகையால் இவர்களுக்கு இக்காம விரகம் உண்டாகும் போதெல்லாம் மேற்கண்ட விதமாக இந்திரிய ஸ்கலிதம் உண்டாகின்றது. இன்னும் இத்தகையினர்களின் சுபாவமானது: தங்கள் நாயகிகளைக் கண்ணினாற் காணல், அவர்கள் வஸ்திரம் தங்கள் மேற் படுதல் முதலிய சொற்ப இயக்கங்களினாலும் ஸ்கலிதம் உண்டாகும் படியான அவ்வளவு கேவல ஸ்திதியிலாகிவிடுகிறது. இவ்விதம் ஸ்கலிதம் அதிகரிப்பதினால் ஜெனன இந்திரியங்களும். மற்ற அவயவங்களும் எவ்விதம் துர்ப்பலப்படுகின்றன

வென்னும் விபரம் முன்னமே சொல்லப்பட்டிருக்கிறது. இவை போதாமல், இவர்கள் சதாகாலம் காமக் கவலைப் படுவதனால் இவர்கள் இருதயம், தலை, மூளை முதலிய இராஜ உறுப்புகளும் கெட்டு, தேகந்தளர்ந்து மெலிந்து துர்ப்பலமாகி விடுகிறது. இவ்விதம் இவர்கள் இருவகையாலும் இலகுவாகவும், வெகு சீக்கிரமாகவும் அபாயத்திற்குள்ளாக ஏதுவாகின்றது.

(5) மிதமிஞ்சின போகம், முஷ்டிப் பிரயோகம், ஆசனப் புணர்ச்சி, மிதமிஞ்சின சொப்பன ஸ்கலிதம், ஆகியவைகளினால் உண்டான தேக துர்ப்பலம், இந்திரிய ஒழுக்கிற்குக் காரணமாவது போலவே வேறு வியாதிகளினாலுண்டான தேக துர்ப்பலமும் இந்திரிய ஒழுக்கிற்குக் காரணமாம். எப்படியெனில், தேகத்தின் எல்லா அவயவங்களும் துர்ப்பலப்படும்போது இந்திரிய கமலங்கள் முதலியவைகளும் துர்ப்பலப் படவேண்டியது அவசியமாகையால் அவ்விதம் அவை துர்ப்பலப்பட்டவுடன் அவற்றின் சுபாவ லக்ஷணங்களும் மாறி, வேறு சுபாவத்தை அடைந்து முன்சொன்னபடி கேவல சக்தியை அடைந்து இந்திரிய ஒழுக்கிற்கிடமாகிறதே.

இந்திரிய சிராவக ரோக லட்சணம்.

இந்திரிய விளைவு அதிகரித்து, இந்திரிய ஒழுக்குண்டானால், மாதத்தில் இரண்டொரு தடவை சொப்பன ஸ்கலிதம் உண்டாகும்; அல்லது சல விசர்க்கத்தின் போது, அல்லது மல விசர்க்கத்தின்போது முக்கியமாய் மலடந்தப்பட்டிருக்கும்போது இரண்டு மூன்று துளி இந்திரியம் அல்லது கொஞ்சம் சுகநீர் வெளிப்படும். ஆயினும் இந்திரியத்தின் பக்குவ பாகத்தில் ஒருவித விகற்பமும் காணப்படாது. மேலும் சொப்பன ஸ்கலிதத்திற்குப் பின்னும் யாதொரு வித துர்ப்பலமும் காணப்படாது.

இவ்விதமே நீர்ப்பை முதலிய மூத்திர கருவிகளின் வியாதி காரணார்த்தமாகவாவது அல்லது தேக சம்பந்தமான இதர வியாதி காரணார்த்தமாகவாவது இந்திரிய ஒழுக்குண்டாகி, அது தேகத்தில் நிலைபெறாதிருந்தாலும் விபரீதமான லக்ஷணங்கள் தோற்றா. மேலும் இந்திரியத்தின் பக்குவ பாகத்திலும் ஒருவித விகற்பமும் உண்டாகாது. ஆதி காரணமான முன்கண்ட வியாதிகள் நிவர்த்திக்கப்பட்டால் அவற்றாலுண்டான இந்திரிய ஒழுக்குந் தானே பறந்துபோம்.

ஆனால் ஸ்திரீ சகவாசம், முஷ்டிப்பிரயோகம் ஆகியவைகளின் மிகுதியினால், ஆரம்பத்தில் நீர்த்தாரை; நீர்ப்பை ஆகியவற்றின் தொழில் விகற்பப்பட்டுப்போம், அதாவது சிலவேளை நீருக்கிருக்கும்போது எரிவந்தம், சிலவேளை யிதவான கூச்சம் ஆகியவை உண்டாகும். நீர் அடிக்கடி அளவில் அதிகமாயிறங்கும். நீர்த்தாரையின் வாய் சிவந்திருக்கும். சிலருக்கு ஆண் குறி, அதற்கடுத்த பாகங்கள் ஆகிய ஸ்தானங்களில் கனதியும் தினவும் உண்டாம்.

இந்த லக்ஷணங்கள் வெளிப்பட்ட போதாயினும், கவனத்துடன் தம் நிலைமையை நிதானித்து, இதற்குக் காரணமான ஸ்திரீ சகவாசம், முஷ்டிப் பிரயோகம் ஆகியவைகளை நீக்கிவிட்டால் உத்தமம். அப்படிச் செய்யாமல் முன் தான் பிடித்த வழியை விடாமல் தொடர்ந்து சென்றால், மேற்கண்ட லக்ஷணங்களுடன் சகவாச காலங்களிலுண்டாம் இன்பவுணர்ச்சி குறைய ஆரம்பமாம். இது மாத்திரமோ, பட்டும் படாததற்கு முன்னமேயே துரிதஸ்கலிதம் உண்டாகும். அனேகருக்கு அவமானம் உண்டாகத் தக்கவிதமாய் அவ்வளவு அதிக துரிதஸ்கலிதம் உண்டாகும். இன்னும் மல சல விசர்க்க காலங்களிலும், ஸ்திரீகளைத் தொடுங் காலங்களிலும், இந்திரியம், சுகநீர் ஆகியவைகளில் ஒன்று கொஞ்சமாயாவது அதிகமாயாவது வெளிப்படும். இதனால் தேகத்தில் அசதியும் ஆண் ஜெனன இந்திரியக் கிளர்ச்சிக் குறைவும் உண்டாம். ஏகாந்திகளாயின் இராப்பகலென்னும் பேதமின்றிப் பெரும்பாலும் சொப்பனஸ்கலிதம் உண்டாகும். இதன் விபரமெல்லாம் நமது 'யூநாநி வைத்திய தாருட்யவிர்த்தி போதினியில்' விபரமாய்ச் சொல்லப்பட்டிருக்கின்றன. மேற்கண்ட லக்ஷணங்களாகிய மூத்திர எரிவந்தம், இதமான சூச்சம் மூத்திரம் அடிக்கடி அளவில் அதிகமாயிறங்குதல், நீர்த்தாரையின் வாய் சிவந்துபோதல், ஆண்குறி, பீஜம் அவற்றிற்கடுத்த பாகங்கள் ஆகிய ஸ்தானங்களில் கனதி, தினவு இன்பக்குறைவு, துரிதஸ்கலிதம், மல, சல விசர்க்க காலங்களில் இந்திரியம் வெளிப்படுதல். தேகத்தில் அசதி, ஆண்குறிக் கிளர்ச்சிக் குறைவு, சொப்பன ஸ்கலிதம் ஆகிய இந்த லக்ஷணங்களுக்குப்பின் இந்திரிய சிராவகரோகமானது நிலைபெற்று ஸ்திரப்பட்டுப்போம். பின்பு ஆண்ஜெனன இந்திரியங்களின் உணர்ச்சியானது கேவல தீவிரப்பட்டு இந்திரியகமல முதலியவைகள் துர்ப்பலப்பட்டுப் போவதில் எவ்வித சந்தேகமேயில்லை. ஆகையால், இந்த ஸ்திதியில் இந்த ரோகி சலவிசர்க்கஞ் செய்யும்போது கொஞ்சம் முக்கினாலும் முக்காவிட்டாலும், இந்திரிய கமலங்கள் துர்ப்பலப்பட்டிருப்பதால் இந்திரியமானது நீருடன் கலந்தாவது கலக்காமலாவது நீருக்குமுன் அல்லது அதற்குப்பின் தனியாயாவது வெளிப்படும். இவ்விதமே விசர்க்கதின் போதும் முக்கியமாய் மலபந்தப் பட்டிருக்கும் போதும் இந்திரியம் வெளிப்பட ஆரம்பிக்கும். இவ்விதம் இந்த வியாதி விர்த்தியடைந்து விட்டால் மல சல விசர்க்கஞ்செய்யும் ஒவ்வொரு தடவையும் இந்திரியம் வெளிப்படும். இந்த ஸ்திதியில் வெளிப்படும் இந்திரியமானது சில சமயம் நீர்த்தும், அளவில் அதிகமாகவும் இருப்பதுமன்றி அது வெளிப்படும்போது எரிவந்தம் இராது, அது சில சமயம் அளவில் குறைவாய் எரிவந்தத்தோடு வெளிப்படும்.

இந்த ரோகியானவன் ஸ்திரீ சகவாசத்தை உத்தேசிக்கும் போது முன்னர் ஆண்குறி கிளர்ச்சியே யில்லாமையாகிவிடும். ஒருவேளை சொற்பக்கிளர்ச்சி யுண்டாயினும் சகவாசத்திற்கு முன்னமே ஸ்கலிதமாகிவிடும். மற்றொரு சமயம் பிரயத்தினத்திலேயே ஸ்கலிதமாகி விடும்.

முடிவாய்ச் சொல்லில் இந்தரோகி ஸ்திரீ இச்சை முதலியவைகளை ஒரு மூலையில் கட்டிவைக்க நேரிடும். ஏனெனில், ஆண் ஜெனன இந்திரியங்கள்

முற்றும் கெட்டு விடுகின்றன. இந்திரிய கமலங்கள், தம்மில் சொற்ப அளவான இந்திரியத்தையும் ஏந்திக்கொள்ள சக்தியற்றவைகளாய் நிர்பிரயோசன முள்ளதாய் விடுகின்றன. பீஜங்களில் உற்பத்தியாகும் இந்திரியமானது அழகிய ஸ்திரீயைப் பார்த்தல், ஸ்திரீ சகவாச முதலியவைகளைப் பற்றி பேசல் முதலிய அற்பக் காமச் சூட்டினாலும், இந்திரிய கமலங்களிலுள்ள விந்துவானது ஆண் குறியின் மீது தான் உடுத்தியிருக்கும் வஸ்திரம் படுதல், குதிரை சவாரி செய்யும்போது ஜேணத்தின் இயக்கம், மரம் வகையரா ஏறும் போதுண்டாம் ஸ்பரிசம் முதலிய சொற்ப இயக்கத்தினாலும் க்ஷணம் வெளிப்பட்டுப்போம்.

இன்னும் வேறு சிலருக்கு இராக்காலங்களில் படுக்கையில் மிருதுவான போர்வை கோசத்தின் மீதுபடுவதினால் கொஞ்சம் விம்மலுடனாவது முற்றும் விம்மலில்லாமலாவது சகவாச இன்பத்துடனாவது அது இல்லாமலாவது இந்திரியம் வெளிப்படுவதும் உண்டு.

டாக்டர் சித்தின்ஷா சாயபு அவர்கள் சொல்லுகிறார். 'நான் என் அனுபவத்தில் இந்த ரோகம் உள்ள ஒருவனைப் பார்த்தேன். அவன் நெற்றி, உதடு ஆகிய ஸ்தானங்களில் க்ஷவரஞ்செய்ய க்ஷவரகன் கத்திபட்ட தக்ஷணமேயும் இந்திரிய ஸ்கலிதம் உண்டாகும் படியாய் அவன் இந்திரிய கமலங்கள் அவ்வளவு கேவல தீவிர உணர்ச்சியை அடைந்திருந்தன'.

மேற்கண்ட நிலைமைகளில் வெளிப்படுவதானது சுகநீர், வெட்டைநீர், இந்திரியம் ஆகியவைகளில் ஒன்றாயிருக்க வேண்டியது ஆவசியகம். ஆகையால், மேற் கண்டபடி சொற்ப காரணத்தினால் சுகநீர், வெட்டை நீர் முதலிய எவ்வகை திரவம் அடிக்கடி அளவில் அதிகமாக வெளிப்பட்டாலும் இதை வியாதியென்றே தீர்மானிக்கவேண்டும். இவ்விதம் வெளிப்படும் இந்திரியமானது பெரும்பாலும் நீர்த்தே இருக்கும். சில சமயம் அதனுடன் கொஞ்சம் ரத்தமுங் கலந்திருப்பதுண்டு சில சமயம் அதில் இந்திரிய வாசனை, இந்திரியக் கிருமிகள் ஆகியவைகளிருப்பதில்லை. இந்த ரோகத்தில் இந்திரியம் நீர்த்திருப்பதே பிரதான குறியாம்.

இந்த ரோகத்தினால் மேற்சொன்ன ஜெனன இந்திரியங்களுக்குக் கெடுதிகள் நேரிடுவதுடன் நின்று விடாமல் மற்ற உறுப்புகளுக்கும் கெடுதி நேரிட்டுக் கொண்டே இருக்கும். இக்கெடுதியானது, இந்திரிய ஸ்கலிதம், ஜெனன இந்திரியக்கெடுதி, ஆகியவைகளுக்கு ஏற்ற அளவில் அதிகமாகவும், கொஞ்சமாகவும் இருக்கும். ஆரம்பத்தில் துர்ப்பலம், சோம்பல், அசதி, அவயச்சோர்வு ஆகியவைகளுண்டாம். பின்பு தேகக்களைப்பு, இளைப்பு முதலியவைகளுண்டாகிக் கிரமேணுவாய் க்ஷயரோகி மாதிரியாய் க்ஷீணதிசை அடைந்துவருவான். அதற்குப் பின் உண்டாம். லக்ஷணங்கள் (இந்திரிய சிராவகத்தின் முடிவு) என்னும் பிரிவில் சொல்லப்படும்.

இந்திரிய சிராவக காரணங்களும் லட்சணங்களும்.
(யூநாநி சாஸ்திர முறைப்படி)

இதன் விபரமெல்லாம் நமது 'யூநாநி வைத்திய தாருட்ய விர்த்தி போதினியிற்' சொல்லப்பட்டிருக்கினும் இந்நூலை வாசிப்போருக்கும் பிரயோசனம் உணடாகும்படி அவற்றையே இங்கு சங்கிரகமாய் எழுதுவோம்.

விந்தை அதிகப்படுத்தும் ஆகாரங்கள், அவுடதங்கள் ஆகியவைகளை அதிகமாய் உபயோகித்து வருவதினாலும், தேகத்தில் பலமிருந்து ஸ்திரீ சகவாசத்தை நீக்கி வைப்பதினாலும் இந்திரிய இழிவு உண்டாகும்.

லக்ஷணம்:- விந்துவானது சகவாசத்தில் வழக்கத்தைவிட அளவிற் கதிகமாய் வெளிப்படுதல்; அப்படி அதிகமாய் வெளிப்பட்டும் தேகத்தில் யாதொரு துர்ப்பலமும் நேரிடாதிருத்தல், விந்துவானது அதிகம் கெட்டியாயிராமலும் அதிகம் தெளிவாயிராமலும் மிதமாய்ப் பதமாயிருத்தல் ஆகியவைகளாம்.

சுரத தாதுவில் சூடதிகரித்து விடுவதினாலும் இந்திரிய இழிவு உண்டாகும்.

லக்ஷணம்:- விந்துவானது மஞ்சள் வருணமுள்ளதாயிருக்கும். அது வெளிப்படும்போது எரிவந்தமுண்டாயிருக்கும். சிலவேளை ஜல ஸ்பரிசத்தின் போது எரிச்சலுண்டாகும்.

விந்துக்குழல்களில் குளிர்ச்சியும், கொழுமையும் அதிகப்படுவதினால் அவை தளர்ச்சியடைந்து, அவற்றிற் குண்டாகிய விந்துவை ஏந்திக்கொள்ளுஞ் சக்தி குறைய, விந்து தானாய் வெளிப்படும்.

லக்ஷணம்:- விந்து தெளிந்திருக்கும், ஆண்குறியில் விம்மல் உண்டாகாது. விம்மலுண்டாகாமலே விந்து வெளிப்படும், விந்துக் குழல்களின் விந்துவை யேந்திக்கொண்டிருக்கும் சக்தி துர்ப்பலப் பட்டிருந்தால் சொற்ப இயக்கத்தினால் விந்து வெளிப்படும். அதிகமாய் துர்ப்பலப்பட்டிருந்தால் அதிக இயக்கத்தினால் விந்து வெளிப்படும். இவ்விதம் விந்துக் குழல்களின் விந்தை யேந்திக்கொண்டிருக்கும் சக்தியின் பலத்திற்குத் தக்க அளவாய்ச் சொற்ப இயக்கத்தினாலும் அதிக இயக்கத்தினாலும், விந்து வெளிப்படும்.

சிலவேளை ஆண்குறியில் பூரணமாய் விம்மல் உண்டானபின் விந்து வெளிப்படும். சிலவேளை ஆண்குறியில் எழுச்சியுண்டான க்ஷணமே அது வெளிப்பட்டுவிடும். சிலவேளை சேர்க்கைக்கு எத்தனித்துத் தேகத்தோடு தேகஞ் சேர்ந்ததென்று சொல்வதற்கு முன்னமே அது புறப்பட்டுப்போம். தேகம் நாளடைவில் இளைத்துக் கொண்டே வரும்.

இந்திரிய நரம்புகளில் வலிப்பு (Contraction of the nerve) உண்டாவதினால் இந்திரிய இழிவுண்டாகும்.

லக்ஷணம்:- விந்து அளவில் அதிகமாகவும் சீக்கிரமாகவும் வெளிப்படும். ஆண்குறி விம்மும்போது அது கடினமாயிருக்கும். சிலவேளை தேக நடுக்கமுண்டாகும்.

குண்டிக்காய்கள் துர்ப்பலப்பட்டு, அவற்றின் கொழுப்பானது காமத்தீயின் சூட்டினால் அல்லது அதிபோகத்திலுண்டான சூட்டினால் உருகி வெளிப்படும். இதையும் சிலர் இந்திரிய இழிவு என்கின்றார்கள். ஆனால், உண்மையில் இது விந்துவல்ல; குண்டிக்காய்களின் கொழுப்பானது உருகி இந்திரியத்தைப்போலப் புறப்படுவதே.

லக்ஷணம்:- போகத்தில் விந்துவானது அதிகமாய் வெளிப்படும். போகத்திற்குப்பின் சிறுநீருக்கிருந்தால் வெண்மையாய்க் கலங்கலான நீர் வெளிப்படும். போகத்தினால் இன்பம் உண்டாகாது. விந்துவானது குதித்து வெளிப்படாது.

சிற்றின்பக் கதைகளை வாசிக்கும் போதும், கேட்கும்போதும், போகத்தைப் பற்றிச் சிந்திக்கும்போதும், ஓர் ஸ்திரீயைப்பற்றிப் பேசும்போதும், சுகநீர், வெட்டைநீர், இந்திரியம் ஆகியவைகளின் ஒழுக்குண்டாகும்.

காரணம்:- சூடு அதிகப்படுவதினாலும், இந்திரியக்குழலின் விந்துவை ஏந்திக் கொள்ளுஞ் சக்தி துர்ப்பலப்பட்டுப் போவதினாலும், இது நேரிடும். சூடு மிகவும் அதிகப்பட்டால் விந்துவும், சூடு கொஞ்சம் அதிகப்பட்டால் சுகநீரும் வெளிப்படும்.

இந்திரிய சிராவக காரணங்களும் லட்சணங்களும் (ஆயுர்வேத முறைப்படி)

பிரமியரோகம் இருபத்தாறில் சுக்கிலம் வெளிப்படுவதற்குச் சுக்கிலப் பிரமியம் எனப் பெயர். இது பெரும்பாலும் மிதமிஞ்சின ஸ்திரீ சேர்க்கை, பகல் நித்திரை, பால், தயிர், இறைச்சி, சலஜீவிகள், கிழங்குகள், சர்க்கரை முதலியவை போன்றவைகளை அதிகமாய்ப் புசித்தல் ஆகிய இக்காரணங்களினால் வாதபித்த சிலேட்டுமமாகிய திரிதோஷங்கள் அதிகரித்து, அதனால் விந்துவானது நீர்த்துக்கரைந்து அல்லது அதன் பதத்தில் விகற்பப்பட்டு, நீரோடு சேர்ந்தாவது, அல்லது தனியாயாவது வெளிப்படும். வாத மதிகரித்துண்டானால் வாத இந்திரிய ஒழுக்கென்றும், பித்த மதிகரித்துண்டானால் பித்த இந்திரிய ஒழுக்கென்றும், சிலேட்டும மதிகரித்துண்டானாற் சிலேட்டும இந்திரிய ஒழுக்கென்றும் பெயராம். ஒன்றோடொன்று தொந்தித்துண்டாயின் முறையே அத்தொந்தின் பெயரிடப்படும்.

வாத இந்திரிய ஒழுக்கு.

லக்ஷணம்:- சிலருக்கு நீரில் ஈ மொய்க்கும், நீரின் சிறுதுளிகள் வெவ்வேறாய் விழாமல் ஒன்றோடொன்று சேர்ந்துவிழும். சிலருக்கு நீர் எண்ணெயைப்போலும்;

கொழுப்பை உருக்கினது போலும் இருக்கும். சிலருக்கு நீரானது எலும்புருக்கி யைப்போல் இறங்கல், சிலருக்கு நீர்தடித்து, பசையுள்ளதாயுமிருத்தல் ஆகியவைகளாம்.

பித்த இந்திரிய ஒழுக்கு

லக்ஷணம்:- சிலருக்கு நீர் உவர்ப்பாயும், சிலருக்கு நீர் கறுப்பாயும், சிலருக்கு நீர் குசும்பாப்பூ வருணமுள்ளதாயும், சிலருக்கு நீர் மஞ்சள் வருணமானதாயும், சிலருக்கு நீர் எண்ணெயைப் போன்றதாயும் இறங்கல். சிலருக்கு நீருடன் விந்துவானது வெளுத்து வெளிப்படுதல் ஆகியவைகளாம்.

சிலேட்டும இந்திரிய ஒழுக்கு

லக்ஷணம்:- சிலருக்கு நீர் கரும்பு ரசத்தைபோலும், சிலருக்கு நீர் கள்ளைப்போலும், சிலருக்கு நீர் வெண்மையாய்த் தெளிந்தும், சிலருக்கு நீர் வாய்நீரைப்போலும், சிலருக்கு நீருடன் விந்து கம்பி கம்பியாகவும், சிலருக்கு நீர் மாவைப்போல் உறைந்தும் இறங்குதல். சிலருக்கு நீருடன் மணல்களும் வெளிப்படுதல் ஆகியவையாம்.

இந்திரிய சிராவக ரோக முடிவு

எக்காரணத்திலேனும் இந்திரியம் அளவில் அதிகமாய் வெளிப்பட்டுக் கொண்டிருந்தாலும், அல்லது முன் சொன்னது போல் சிராவகரோகம் நிலையாகி நின்றாலும் தேகமிளைத்து, எலும்பு புறப்பட்டு, பழுவெலும்புகளை வெவ்வொன்றாய் எண்ணிக் கணக்கிடும்படியான அவ்வளவு கேவல ஸ்திதியாகிவிடும். இந்த வியாதியஸ்தர்கள் பார்வைக்கு க்ஷயரோகியைப்போலத் தோன்றுவார்கள். இவர்களுக்குக் காமச்சிந்தை, ஆண்குறி கிளர்ச்சி ஆகியவை மிகவும் குறைந்துபோம் அல்லது முற்றும் அற்றுப்போம். இத்தகையினர்களின் பீஜங்கள் ஜில்லிட்டுத் நளர்ந்து தொங்கிக் கொண்டிருக்கும். இவர்களுக்கு இடுப்பில் வேதனையுண்டாகி, அது கிரமேணுவாய் அதிகரித்து, சில சமயங்களில் எழுந்திருக்கவும் உட்காரவும் அதிகப் பிரயாசையாயிருக்கும். தலை மூளை, மூளைக்கொடி, நரம்புகள் ஆகியவைகளின் சுபாவமுந்தொழிலும் சொற்பமாயாவது அதிகமாயாவது விகற்பப்பட்டுக் கெட்டுப்போம். சிலருக்குக் கைகளிலும் கால்களிலும் வேதனையும் எரிவந்தமும் உண்டாகும். உள்ளங்கை, உள்ளங்கால் ஆகியவைகளிலும் எரிவந்தமுண்டாம். பெரும்பாலார்க்குத் தலைவலியும், தலைசுற்றலும் காணும். இவ்வகைத் துர்க்குணங்களோடு அவர்கள் சுபாவத்திலேயே மாறுதல்களுண்டாகி விடும். சிறு குழந்தைகள், வயது தளர்ந்த கிழவர்கள், கடும்பசியாயுள்ளவர்கள் ஆகிய இவர்கள் அற்ப விஷயத்திலும் முறையே அழுதும், கோபித்தும் பிடிவாதம் செய்வதுபோலவே இந்த ரோகியும் எந்த விஷயத்திலும் கோபமும் பிடிவாதமும் செய்வான். சில சமயம் தானே

அழுதுக்கொண்டு இருப்பான். மனப்பயிற்சி, தேகப்பயிற்சியாகிய எவ்வகை வேலைகளைச் செய்வதிலும் அசதியும், சோம்பலும் உண்டாகி நாளடைவில் எல்லாத் தொழில்களையும் வெறுத்து, கையைக் கட்டிக்கொண்டிருக்கும்படி நேரிடும். எவ்வகை வேலைகளிலும் மனஞ்செல்லாமல் மனதில் பயங் குடிகொண்டுபோம். ஆகையால் இராக் காலங்களில் ஏதேனும் அரவங்கேட்டாலும், பகலில், ஏதேனும் சற்று உரத்த சப்தங் கேட்டாலும் பயந்து விடவிடென நடுங்க நேரிடும். எப்போதும், எக்காரியத்திலும், எல்லாரிடத்திலும், சந்தோஷம், தன்னம்பிக்கை யென்பவை இல்லாமற் போய்விடும். இராப்பகலென்னும் பேதமின்றி எப்போதும், சுற்றத்தார்கள், மற்றவர்கள் என்னும் பேதமின்றி எல்லாரிடத்திலும் அவ நம்பிக்கையும், ஒரு வகை திகிலும் உண்டாகி இருப்பதால், அவர்கள் தன்னைத் துன்பப்படுத்த சித்தமாக இருக்கிறார்கள் என்னும் கெட்ட எண்ணமே தன் மனதை விட்டகலாமல் நிலையாய்க் குடி கொண்டிருக்கும். இக்கெட்ட எண்ணங்களினால் சிலசமயம் தற்கொலை செய்து கொள்ளவும் பிரயத்தனப் படுவான். எப்போதாயினும் சில சமயங்களில் அற்ப நித்திரை உண்டாகும். பெரும்பாலும் நித்திரை இல்லாமலே அரட்டல் புரட்டலாயிருக்கும். ஒரு விஷயத்தை ஆரம்பித்தால் அதை விட்டு விடாமல் வெகு நேரம் அதைப்பற்றியே பிதற்றிக் கொண்டிருப்பான். அடிக்கடி இதுவே சிந்தனையாயிருப்பான். மனிதர்களிடம் பேசவும் அதிக வெறுப்பாய், எப்போதும் பைத்திய ரோகியைப் போலத் தனித்திருக்கவே விரும்புவான். பந்துக்கள், சினேகிதர்கள் ஆகிய இவர்களிடமும் பேசப் பிரியப்படான். ஞாபக சக்தியும் கிரமேணுவாய்க் குறைந்து முடிவில் எந்த விஷயமும் தோணாமல் எல்லாவற்றையும் மறந்து விடுவான். இத்தனை துன்பங்களுடன், ரத்தக் குறைவுண்டாகிக் கண்ணின் பாவைகளும் விரிந்து அகன்று காணும். குரலோசை குறைந்து ஹீனதொனியாய் விடும். வார்த்தை குளறும். தாமதித்துத் தாமதித்துப் பேசவும் நேரிடும். காதில் பலவகை சப்தமும் இரைச்சலும் உண்டாம். கஷ்டத்துடன் மூச்சுவிடவும் நேரிடும். முதுகில் தண்ணீர் சொட்டுவதுபோலத் தோன்றும்; பெரும்பாலும் மலபந்தம், பொய்ப்பசி, அஜீரணரோகம், மனத்திடுக்கம், தலைவலி, தலைசுழற்றல், முதலியவைகளுண்டாகி, நபுஞ் சகத்துவமே பெருங்காரணமாய்ப் பேடிக்கொப்பாகி உன்மத்தம், காக்கைவலி, பக்கவாதம், கை, கால், நடுக்கல், க்ஷயரோகம் முதலிய மகாரோகங்களுள் ஒன்றில் அல்லது பலவற்றில் சிக்குண்டு, தீராக்கதியடைந்து உயிரோடு முடிவாகி விடுவான்.

டாக்டர் சித்தின்ஷா சாயபு அவர்கள் ஒரு ஆங்கிலேய வைத்திய சாஸ்திரப் பண்டிதரின் கருத்தின்படி சொல்லுகிறதாவது:- இந்த வியாதியானது மூளைக் கொடியிலிருந்து ஆரம்பமாகின்றது. ஆகையால் மித மிஞ்சின போகமுடையவர்களுக்கு ஆரம்பத்தில் தாப சுரம், பசிதீபனக்குறைவு முதலிய வியாதிகளுண்டாகா விட்டாலும் தினம் தினம் தேகம் இளைத்து வரும். பின்பு தேகத்தில் எறும்பூறுவதுபோலத் தோன்றும். அதன்பின்பு, மலசல விசர்க்கத்தின் போதும், குதிரை சவாரி செய்யும் போதும், சிலசமயம் நடக்கும்போதும் இந்திரிய ஸ்கலிதமாகும். ஸ்திரி சேர்க்கையில் இன்ப மிராது. நித்திரையில் சொப்பன

காட்சியின்றியே ஸ்கலிதமுண்டாகும். சிலசமயம் தனக்குத் தெரியாமலும் ஸ்கலிதம் உண்டாகும். (இது வஸ்திர முதலியவை நனைந்திருப்பதால் புலப்படும்.) முடிவில் பெருமூச்சு, துர்ப்பலம், தலைப்பாரம், காதிரைச்சல் ஆகியவைகளுண்டாகி தாபசுரங் காணும். ஆனால் இந்தச் சுரத்தில் கைகால்கள் ஜில்லிட்டிருக்கும். இதன் பின்பு மரணம் நேரிடும் என்பதே.

டாக்டர். கிராஸ் துரையவர்கள் அபிப்பிராயமாவது:- இந்த வியாதியினால் அவசியம் நபுஞ்சகத்துவம் உண்டாகும் என்பது நிச்சயம். ஒரு சமயாசமயம் அப்படி நேரிடாவிட்டாலும் ஜெனன இந்திரியங்கள் துர்பலப்பட்டு அவற்றின் தொழில்கள் கெட்டுப்போம் என்பதில் சந்தேகமே இல்லையென்பதே.

இந்திரிய சிராவக ரோகப் பரீட்சை.

இந்த வியாதியின் முக்கிய காரணம் மிதமிஞ்சின சம்போகம், முஷ்டிப் பிரயோகம் ஆகியவைகளென்பது பிரசித்தம். ஆகையால் இந்த ரோகி மேற்கண்ட விஷயங்களில் கைதேர்ந்தவராயின் அவர் நடத்தையே அவர் வியாதிக்குக் காரணமென்பது கரதலாமலகம் போல் நன்கு விளங்கும். இதுவன்றி முன் சொல்லப்பட்டிருக்கிற இந்த வியாதியின் லக்ஷணங்கள் ஒவ்வொன்றையும் நன்றாய் நிதானித்துக் கவனிப்பதினாலும் இந்த வியாதிதானென நிச்சயித்து விடலாம். ஆயினும் சிலவேளைகளில், மூத்திரத்துடன் வெண்மையான அல்லது வழவழப்பான ஏதேனும் ஒருவித திரவம் வெளிப்படுவதுண்டு. அநுபவசாலிகளாகிய பண்டிதர்களும் சில சமயம் இதை இந்திரிய ஒழுக்கென நம்பி மோசம்போக நேரிடுகிறதென்றால், மற்றவர்களாகிய நாம் எவ்விதம் மோசம் போவோமென்பதைக் கேட்கவும் வேண்டுமா? இவ்விதம் அநேகர் அநேகத் தடவைகளில் மேற்படி திரவம் வெளிப்பட்டதை இந்திரிய ஒழுக்கெனத் தப்பிதமாய் எண்ணி, பற்பல சிகிச்சைகள் செய்ய நேரிட்டு, யாதொரு வித பிரயோசனமடையாமல் வெறுப்புண்டாகி நஷ்டமடைந்திருக்கிறார்கள். ஆகையால் சிகிச்சைக்கு முன் இந்த வியாதியைப்பற்றித் தீரப் பரீட்சித்து அறிய வேண்டியது மிகவும் முக்கியம்.

மூத்திரத்துடன் வெளிப்படுகிற வஸ்துவானது வெட்டை நீரா? சுகநீரா? என முன்னர் நிதானிக்க வேண்டும்.

மூத்திரப் பரீக்ஷையைப்பற்றி விபரமாய் எழுத வேண்டுமாயின் அதுவே ஒரு பெருங் கிரந்தமாகுமாகையால் இங்கு முக்கியமாய் வேண்டிய விஷயங்களை மாத்திரம் சங்கிரகமாய்ச் சொல்லுவோம்.

சுக நீரானது பளிங்கு நிறமுள்ளதாக அல்லது மிகவும் இலேசான மஞ்சள் சாயல் நிறமுள்ளதாக இருக்கும். இது யாதொரு வியாதியன்னியில் சுகஸ்திதியிலிருக்கும் போதும் நீர்த்தாரையின் வாயில் காலா காலங்களில் கசிவது சுபாவம்.

வெட்டை நீரானது சற்று கெட்டிப் பதமுள்ளதாய் வழவழப் புள்ள திரவம், இதுவும் சுகஸ்திதியில் நீர்த்தாரையின் வாயில் சமயா சமயங்களில் வெளிப்படுவதும் சகஜம்.

ஆனால் மேற்கண்ட சுகநீரும் வெட்டைநீரும் மூத்திரம் பெய்யுமுன் அல்லது அதற்குப் பின் அல்லது மல விசர்க்கத்துடன் சொற்ப காம விகார இயக்கத்துடன் துளித் துளியாய் சொட்ட ஆரம்பிக்கும். இவ்விதம் சொட்டினதை யெல்லாம் ஒன்றாய்ச் சேர்த்து பார்க்கில் சுமார் விராகனெடை-1-1½. இருக்கில் வியாதியே.

சுபாவமான இந்திரிய ஸ்கலிதம் இவ்விதமென்பது முன்னமே சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது ஸ்திரீ சகவாச முதலிஃபவைகளில் ஆண்குறியின் கிளர்ச்சியோடு இந்திரியமானது குதித்து அல்லது வேகமாய் வெளிப்படுவதுடன் ஒரு வித இன்ப உணர்ச்சியுண்டாவதே. இதுவே சுபாவ ஸ்கலிதமாம். ஆனால், இதற்கு விரோதமாய் ஸ்கலிதமாவ தெல்லாம் வியாதியே. ஏனெனில் வியாதியில் ஆண்குறியின் கிளர்ச்சி இராது. சுக்கிலமும் வேகமாய் அல்லது குதித்து வெளிப்படாது ஆனால் வியாதியின் ஆரம்பத்தில், ஆண்குறியின் கிளர்ச்சி குதித்து வெளிப்படுதல் ஆகியவை அற்பமாயிருக்கும். வியாதியின் அந்தியத்தில் இவை முற்றும் அற்றுப்போம். சிலருக்குச் சில சமயங்களில் இவை உண்டாயினும் பேருக்குத்தானிருக்கும். இன்னும் சுபாவமான சுக்கிலத்தின் மணமானது அதற்குரிய ஒருவித வாசனையுள்ளதாகவும், உவர்ப்பான சுவையுள்ளதாகவும், வழவழப்புள்ளதாகவும், வெண்மையான நிறமுள்ளதாகவும், திரவ சாயலுள்ளதாகவும், வெளிப்பட்டவுடன் கெட்டிப் பதமுள்ளதாகவும் உலர்ந்தபின் பளபளப்புடன் மஞ்சள் சாயலுள்ளதாகவும், சற்று கடினமானதாகவும் இருக்கும். இவற்றிற்கு மாறாக வியாதியினால் வெளிப்படும் சுக்கிலமோ சலத்தைப்போல நீர்த்ததாகவும் சில சமயம் கொஞ்சம் ரத்தக் கலப்புள்ளதாகவும் இருக்கும். அதில் சுக்கிலத்திற்குரிய சொந்தமணம் இருப்பதில்லை. ஆனால் அந்த மூத்திரம் சற்று கலங்கலாகவும் வெள்ளை நிறத்தையுடையதாகவும் இருக்கும். அந்த மூத்திரத்தைச் சற்று அசையாமல் வைத்திருந்தால், விந்துக்கிருமிகள் அடியில் படிந்து நிற்கும். இந்திரிய சிராவக ரோகத்தில் வெளிப்படும் சுக்கிலத்தில் சிற்சில சமயங்களில் விந்துக் கிருமிகள் புலப்படா. ஆனால் பூதக் கண்ணாடியினால் பரிசோதித்தால் பெரும்பான்மையும் முழு உருவத்தோடுள்ள கிருமிகள் அல்லது அரை குறையான ரூபமுள்ள கிருமிகள் காணப்படும்.

சுகநீர், வெட்டைநீர், சுக்கிலம் ஆகியவைகளை அவ்வளவாய்ப் பரீட்சித்து அறிவது கஷ்டமாயிருந்தால் இலகுவாய் நாம் தெரிந்துகொள்ள வேண்டிய பொது விதியாவது - முன் மூன்றில் எதுவாயினும் சரியே சுபாவத்திற்கு விரோதமாய் அளவிற்கதிகமாய் அடிக்கடி வெளிப்படுமாயின் இந்திரிய சிராவக ரோகமெனத் தீர்மானித்துக் கொள்வதேயாம்.

ஆனால் நீர்ப்பையின் ஜவ்விலிருந்து வழவழப்புள்ள நீர், அல்லது, சீழ், அல்லது, கொழுப்பு, அல்லது வெண்மையான மணல் முதலியவை

வெளிப்பட்டால் அநுபவமுள்ள பண்டிதர்களின் மூலமாய் பரிசோதனை செய்வித்து அவர்களிடமே சிகிச்சை செய்து கொள்ள வேண்டும். ஏனெனில், வெண்மையான அல்லது வழவழப்பான அல்லது கலங்கலான மூத்திரத்தில், இந்திரியங் கலக்கப்பட்டிருப்பதும் கலக்கப்படாதிருப்பதும் தெரியாமையினால் மோசம் போக நேரிடும். இவ்வகை நீர்களைப் பூதக் கண்ணாடியினால் அல்லது இரசாயனவிதி முறையாய்ப் பரீட்சித்துக் கண்டு நிதானிக்க வேண்டும். இவ்வகை பரீக்ஷைகளைச் சாதாரணமாய் எல்லோரும் செய்வது சாத்தியமன்று. அநுபவசாலிகளே மேற்கண்ட விதிப்படி பரீட்சித்து நிதானித்தல் கூடுமாம்.

சில சமயங்களில், உன்மத்தம், பைத்தியம், வீண் சந்தேகம், வீண்கவலை, தேக துர்ப்பலம் ஆகிய வியாதிகளுக்கு எவ்வித சிகிச்சை செய்தும் ஒன்றும் பிரயோஜனமில்லாமற் போக நேரிடுகிறது. ஏனெனில், மேற்கண்ட வியாதிகளுக்கு யதார்த்தத்தில் இந்திரிய சிராவக ரோகங் காரணமாயிருக்க அதைக்கண்டு நிதானிக்காமல் மோசம் போனதே காரணமாம். ஆகையால் மேற்கண்ட வியாதிகளுக்கு இந்திரிய ஒழுக்குதான் மூலமென வெளிக்காரணங்களினால் கண்டு கொள்ளக் கூடாவிட்டாலும் அந்த வியாதியஸ்தரின் சிறுநீரைப் பூதக்கண்ணாடியினால் பரீட்சித்து, அதில் விந்துக்கிருமிகள் இருக்கின்றனவா? இல்லையா? வென, நிதானிக்க வேண்டும். விந்துக் கிருமிகளிருக்கின் அந்த ரோகங்களுக்கு இந்திரிய ஒழுக்கானது காரணமென இந்த சிகிச்சையே செய்ய வேண்டும். இந்திரிய ஒழுக்குள்ளவர்களென சந்தேகம் உடையவர்களின் சிறு நீரைப் பல தடவைகள் பரீட்சிக்க வேண்டும். ஏனெனில், அத்தகையினர்களின் மூத்திரத்தில் ஒவ்வொரு தடவையிலும் விந்துக் கிருமிகள் வெளிப்படுவது அரிது. மேலும் இந்த வியாதியின் அந்தியத்தில் இந்திரிய விளைவும் குறைந்து போவதால் இந்திரியமும் குறைவாய் வெளிப்படுமெனவும் தெரிந்திருத்தல் ஆவசியகம்.

மிதமிஞ்சின போகமுடையவர்கள், முஷ்டிப் பிரயோகத்தில் பயின்றவர்கள் ஆகிய இவர்கள், வேறு வியாதி சம்பந்தமாய்த் தங்கள் தேகந் துர்ப்பலப்பட்டால், தங்களுக்கு இத்துர்ப்பலம் இந்திரிய ஒழுக்கினால் நேரிட்டிருக்கிறதெனத் தப்பிதமாய் எண்ணி மோசம் போகவும் நேரிடும். ஆகையால் அத்தகையினர்களும் தங்கள் சிறு நீரைப் பூதக்கண்ணாடியினால் அல்லது இரசாயன முறைப்படியாய்ப் பரீட்சித்து அதில் சுக்கிலம், விந்துக் கிருமிகள் ஆகியவை இருப்பதையும் இல்லாததையும் கண்டு கொள்ள வேண்டும்.

இந்த வியாதியைத் தெரிந்து கொள்வதில் அவரவர்கள் நடந்த நடவடிக்கைகளும், தத்தமக்குக் கண்டிருந்த லக்ஷணங்களும் பெருஞ் சாட்சியாம். தாங்களனுபவித்த மிதமிஞ்சின போகம், முஷ்டிப் பிரயோகம், ஆகியவைகளும், தங்களுக்கு உண்டாயிருக்கிற லக்ஷணங்களாகிய சொப்பனஸ்கலிதம், இந்திரிய ஸ்கலிதம், ஆண்குறி கிளர்ச்சிக் குறைவு, அதன் சோர்வு ஆகியவைகளுமே தங்களுக்குண்டாயிருக்கிற வியாதி இந்திரிய சிராவக ரோகமெனத் தெரிந்து கொள்வதற்கும் போதுமான அத்தாட்சியாம்.

சுறுக்கிச் சொல்லில், இந்த வியாதியைப் பரீட்சித்தறிவதற்குச் சில பிரதான விதியாவது, சுக்கிலத்தின் இயற்கையையும், அது வெளிப்படும் விதத்தையும், தேக சுபாவத்தையும் தெரிந்து கொள்வதே. அதாவது அது நீர்த்திருக்கிறதா? நீர்க்காமல் பதமாயிருக்கிறதா? அதன் மணம், சுவை, வருணம் முதலியவைகள் விகற்பப்பட்டிருக்கின்றனவா? எனவும் ஆண்குறியின் பூரணக் கிளர்ச்சியுடன், அல்லது, அரைகுறையான கிளர்ச்சியுடன், அல்லது, கிளர்ச்சியின்றி இந்திரியம் வெளிப்படுகிறதா? எனவும், தேகத்தில் சுபாவமான சூடு, குளிர்ச்சி, கொழுமை, வறட்சி ஆகியவைகள் தோஷித்திருக்கின்றனவா எனவும் தெரிந்து கொள்வதே இதுவே எல்லாப் பண்டிதர்களுக்கும் சம்மதம்.

இந்திரிய ஒழுக்கின் சாத்தியா சாத்தியங்கள்.

இந்த வியாதி முன்னர் ஆரம்பமான காரணத்திற் கேற்றது போலவும், அது தொடர்ந்து நிலைத்து நின்ற கால அளவிற்குத் தகுந்தபடியும், இந்த வியாதியஸ்தன் தான் அனுஷ்டிக்கும் பத்தியம் பாவனைகளுக்குத் தகுந்தபடியும், இந்த வியாதி சாத்தியமாகவும் கஷ்ட சாத்தியமாகவும், அசாத்தியமாகவும் முடிவு பெறும்.

மலபந்தம், ஆசனத்தில் காயம், சொரி முதலியவைகளினாலுண்டான தினவு, சிறுநீரில் சூடு, இந்திரிய விளைவாதிக்கம், ஆண்குறியின் அக்கிரம சருமத்தில் அழுக்குப் படிந்திருத்தல் முதலிய இக்காரணங்கள் மூலமாயுண்டான இந்திரிய சிராவக ரோகமானது தக்க சிகிச்சையினால் சாத்தியமாய்ச் சீக்கிரந் தீர்ந்து விடும்.

சூடான வஸ்துக்களை உபயோகித்து அதனால் சுக்கிலத்தில் சூடதிகரித்து, அதில் விகற்பமுண்டாகி உண்டான இந்திரிய இழிவானது, அந்தக் காரணச் சூட்டைத் தணிக்கத் தகுந்த சாந்தமான பதார்த்தங்களைக் கையாடிவரின், அச்சூடு தணிந்து தாதுவின் சுபாவமும் சாந்தப்பட்டு வியாதியும் இலகுவாய்த் தீரும்.

தேயிலை பானம், காபி பானம், புகையிலைப் பிரயோகம், அதிக மனப்பயிற்சி முதலிய இவை இந்திரிய ஒழுக்கைப் பிரபலப்படுத்துங் காரணங்களாயினும், இவற்றால் சிலசமயம் அவ்வியாதி உண்டானால் அவ்விஷயங்களை நிறுத்திவிட்டால் வியாதியும் போய்விடு மென்பதிற் சந்தேகமில்லை.

அஸ்மரிரோகம், அதாவது மணல் முதலியவைகள் நீரில் உற்பத்தியாதல், நீர்த்தாரை சிறுத்துப் போதல் ஆகிய இவ்வியாதிகள் இந்திரிய ஒழுக்கிற்குக் காரணமானால், அவ்வியாதிகள் நீக்கப்பட்டால் இந்திரிய ஒழுக்குந் தானே போய்விடும்.

ஆனால், தீவிரகாரணங்களினால் இந்த வியாதியுண்டாகில், அல்லது, வியாதி கண்டவுடனே நீக்கப்படாமல் நாள்பட நிலைத்து நின்று, மேல்விவரித்தபடி

இந்திரிய கமலங்களில் கேவல தீவிர உணர்ச்சியுண்டாகி, ஆண்குறிக் கிளர்ச்சி இல்லாமலும், இயக்கம் இல்லாமலும் ஸ்கலிதமாக ஆரம்பமாகிவிட்டாலும், வியாதி தொந்தத்தினால் இடுப்பில் துர்ப்பலமுண்டாகி விட்டாலும், முன் விவரித்தபடி இந்திரிய ஒழுக்கிற்கு வேறு வியாதியும், அந்த வியாதிக்கு இந்திரிய ஒழுக்குமாக ஒன்றிற்கொன்று உதவியாயிருக்கப் பெற்றாலும், இந்திரிய ஒழுக்கிற்கே பல வியாதிகள் காரணமாக இருக்கப் பெற்றாலும், கஷ்ட சாத்தியம், இவ்வகை வியாதியானது தகுந்த சிகிச்சையினால், தாமதமாய்க் குணப்படும்.

மேற்கண்ட வியாதியானது தகுந்த சிகிச்சையினால் தாமதமாய்க் குணப்படுமென்றாலும், முறையாய்ப் பத்தியம் காக்கப்படா விட்டால் அசாத்தியமாகவே முடியும். இந்த ரோகத்திற்குப் பிரதான பத்தியமானது, ஸ்திரீ சகவாசம், காமச்சிந்தை, காம விகாரம் முதலியவைகளை அவசியம் நீக்க வேண்டியதே. ஏனெனில் அந்த வியாதிக்குக் காரணமான இந்த விஷயங்களை நீக்க வேண்டியதே முதல் முதல் கவனிக்க வேண்டிய கடமை. வியாதியுண்டான மூல காரணம் நீக்கப்படாவிட்டால் வியாதி விருத்தியாகிக் கொண்டே போகும் என்பதிற் சந்தேகமோ?

இவ்வாறே, வியாதியஸ்தன் சிகிச்சகன் மீது நம்பிக்கை வைக்காவிட்டால் சிகிச்சகனுக்கு அவசியமான உதவிக்கு இடமிராது. ஆகையால், தகுந்த விதமாய் சிகிச்சை செய்ய இயலாமையாகி விடும்.

இக் காரணங்களினால் இந்திரிய சிராவக ரோகச் சிகிச்சையில் வியாதியஸ்தன் சிகிச்சகன்மீது அதிகமாய் முழு நம்பிக்கையுடன் விதிப்படி பத்தியம் காக்கவேண்டியது ஆவசியகம். சிகிச்சகனுக்கு வியாதி உண்டான காரணத்தைக் கருத்தாய் நிச்சயித்தறிந்து அதற்குத்தகுந்த சிகிச்சை செய்ய வேண்டியது அவசியம். ஆகையால் மேற்கண்ட இருதரத்தாரும் ஒரு மனதாகி சிகிச்சை செய்யின், இந்த வியாதியானது பற்றறத் தீர்ந்து சுகுணமுண்டா மென்பதிற் சந்தேகமில்லை. இவ்விதம் இந்த வியாதி தீர்ந்து விட்டாலும் அதனாலுண்டான தேகத் துர்ப்பலம் முதலியவைக் கிரமேணுவாய் நாளடைவில் நீங்கி, அவை விருத்தியடைந்து பழைய சுபாவமுண்டாக நாட்செல்லு மெனவும் வீணாய் அவசரப்படுத்தினால் பிரயோசனமில்லை யெனவும் தெரிந்திருக்க வேண்டியது.

இந்திரிய சிராவக ரோகியை மரணத்திற்குப் பின் பரிசோதித்த லட்சணங்கள்.

இந்த வியாதியானது சாதாரண காரணங்களினால் உண்டானால் ஆரம்பத்தில் மரணாபாயத்திற் கேதுவில்லை. மேலும் ஜெனன இந்திரியங்களின் ஏற்பாட்டிலும் விகற்பங்கள் காணப் படுகிறதில்லை. இந்த வியாதியானது எந்தக் காரணத்தினா லுண்டானாலும் இது நிலைத்துப் பிரபலமாகி மரணம்

நேரிடுமென்பது நிச்சயம். அத்தகையினர்களைப் பரிசோதித்தால் முடிவில் எந்த வியாதியினால் மரணம் நேரிட்டதோ அந்த லக்ஷணங்களே காணப்படுகின்றன. ஆனால், டாக்டர் சித்தின்ஷா சாயபும், வேறு சில ஆங்கிலேய டாக்டர்களும் சொல்லுகிறதாவது. இந்த வியாதி பிரபலப்பட்டு இறந்தவர்களை அறுத்துப் பரிசோதித்ததில், அவர்கள் ஆண் குறியின் அடிப்பாகத்திலும், இந்திரியக் குழல்களின் முன் பாகத்திலும், இந்திரியக் கமலங்களிலும் வீக்கம் காணப்படுகின்றது. இந்த வீக்கமானது இந்திரிய ஒழுக்கினால் உண்டானதல்ல. ஆனால், இது பிரமேகத்தினால் முன்னமேயுண்டாகிப் பின்பு இந்திரிய ஒழுக்குண்டானதாக உத்தேசிக்கப் படுகிறதென்பதே.

இந்திரிய சிராவகப் பொதுச் சிகிச்சை

இயன்ற வரையில் முயற்சி செய்து வியாதியுண்டான காரணத்தை முன்னர் நீக்கவேண்டியது. இதுவன்றி, வியாதியை அதிகப்படுத்துகிற வஸ்துகள், விஷயங்கள் முதலியவைகளினின்றும் விலகிக்கொள்ள வேண்டும். நோயாளியானவன் சிகிச்சகன் மீதும், அவனாற் கொடுக்கப்படும் அவுடதாதிகளின் மீதும் பூரண நம்பிக்கை வைக்கவேண்டியது. இவ்விஷயம் எல்லா வியாதிகளுக்கும் பொதுவான விதியாயினும், இந்த வியாதியில் இது அதி ஆவசியகமானதென அறிந்திருக்க வேண்டியது. சிகிச்சகனும் நோயாளிக்குப் பல வகை தைரியம், தென்பு சொல்லி, மன ஆறுதலுண்டாகச் செய்து, அவனை உற்சாகப்படுத்த வேண்டியது. இந்த வியாதியில் இருதயம் அதிக சம்பந்தப் படுகிற படியினாலும், அதில் எவ்வித சொற்ப விகற்பமுண்டாயிருக்கினும் வியாதி அனுகூலப்பட அது தடையாகும். அன்னபானாதிகள், நித்திரை, நற்காற்று, முதலிய சுகாதாரத்திற்குறிய விதிகளை முற்றும் கவனித்து, அதன்படி நடந்து வரவேண்டுமென்பதும் ஆவசியகம். ஏனெனில், இவ்வகை வியாதிகளுக்கு இயல்பான சுகாதார ஏற்பாடும் உதவியாயின், அவை அதி துரிதமாயக் குணமாம் என்பதே; தேகம், முக்கியமாய் ஜெனன இந்திரியங்கள் முதலியவைகளை யெப்போதும் சுத்தமாய் வைத்திருக்கவேண்டும். மூளை, மூளைக்கொடி ஆகியவைகளுக்குச் சிரமத்தை உண்டாக்கும் விஷயங்களையும் அவசியம் நிறுத்தி வைக்கவேண்டியது. ஏனெனில், இந்த வியாதியில் இவை மற்ற அவயவங்களைப் பார்க்கிலும் அதிகம் நெருங்கிய சம்பந்தப் பட்டிருக்கின்றன என்பதே. தகா எண்ணம், மனக்கவலை ஆகியவைகளைத் தூரவிலக்கி வைக்கவேண்டும். விசனம், மலக்கிலேசம் ஆகியவைகளைச் சமீபத்திலும் நெருங்கவிடலாகாது, ஸ்திரீ சகவாசம், முஷ்டிப்பிரயோகக் கிரியை, காமவிகாரச்சிந்தனை ஆகியவைகளினின்றும் நெடுந்தூரம் விலகி இருக்கவேண்டும். இந்திரியக் கமலங்கள், புரஸ்தகோளம், அதற்குச் சமீபித்த ஸ்தானங்கள், மூளைக் கொடியின் அடிப்பாகம் ஆகிய இந்த ஸ்தானங்களில் இரத்தம் அதிகமாய்ச் செல்லும்படியான தேகப் பயிற்சி முதலிய விஷயங்களைச் செய்யலாகாது. இந்திரிய கோளங்கள், புரஸ்த கோளங்கள், முதலியவைகளின் கோழைப் பைகளில் சிறுமேடுகள், அல்லது, அற்ப வீக்கம் காண்பதுண்டு. அப்படிக் கண்டால் அது விருத்தியடைய விடாமல் உடனே

கண்டிக்கப் படவேண்டும். இந்திரியம் விகற்பப்பட்டு, அதில் சூடதிகரித்து விடுவதினால் இந்திரிய கமலங்கள் இந்திரியக் குழல்கள் பிரதானமாய் நீர்த்தாரை, புரஸ்தகோளம் ஆகியவைகளில் முன்கண்டவிதமாய்க் கேவல தீவிர உணர்ச்சியை உண்டாக்குங் காரணங்களை கட்டாயம் தடுக்க வேண்டும். இவையன்றி ஆண் குறியின் ஏற்பாட்டையும் பலாபலத்தையுங் கவனிக்க வேண்டியது அதற்குச் சுபாவமா உண்டாயிருக்கிற பலமுண்டா அல்லது, அதில் ஏதேனும் குறையுண்டா? என்றும் அதில் கோணல், தளர்தல், சிறுத்தல் முதலிய இழிகுணங்களுண்டா? என்றும் கவனிக்க வேண்டும். இந்த ரோகத்தினால் துர்க்குணங்களுண்டாக இடங்கொடாமல் கூடியவரையில் சாக்கிரதையா இருக்கவேண்டியது. அப்படி ஒருவேளை ஏதேனும் துர்க்குணங்கள் உண்டாயின் தக்ஷணமே அதைக் கண்டிக்கும்படியாய் அதற்கேற்ற சிகிச்சை செய்ய, அல்லது செய்விக்க வேண்டியது. இந்த ரோகமானது பல காரணங்களினால் உண்டாயிருந்தால், அவ்வொவ்வொரு காரணத்தையும் அனுசரித்தே சிகிச்சை செய்யவேண்டும். ஏதேனும் ஒரு பிரதான லக்ஷணத்தை நேரே நீக்கப்பிரயத்தனம் செய்வதைப் பார்க்கிலும், அதற்கு மூலமும், ஆதாரமுமான காரணத்தை முன்னர் நீக்க முயலவேண்டும். எப்படியெனில், ஆண்குறியின் கிளர்ச்சியின் சோர்வானது, இந்திரிய சிராவகத்தின் பிரதான லக்ஷணமாயினும், இந்திரிய சிராவகத்தை நிறுத்தினால் ஆண்குறிக் கிளர்ச்சியும் தானே உண்டாகிவிடும் என்பதாம். ஒரு வஸ்துவினால் ஒரு லக்ஷணத்திற்கு அநுகூலமும், மற்றொரு லக்ஷணத்திற்குப் பிரதி கூலமும் உண்டாக்கும் மருந்துகளை உபயோகிக்கலாகாது. எப்படியெனில், எட்டிக்கொட்டையின் யோகமுறை முதலிய உற்சாககாரிகள் கோசச் சோர்வை நீக்கிக் கிளர்ச்சியை உண்டாக்கும் என்றாலும், ஜெனன இந்திரியங்களையும் உற்சாகப்படுத்தும். இந்திரிய சிராவகமானது ஜெனன இந்திரியங்களின் கேவல தீவிர உணர்ச்சியினால் உண்டாயிருந்தால் மேற்கண்ட அவுடதத்தினா லுண்டான ஜெனன இந்திரிய உற்சாகமானது அந்த வியாதியைப் பிரபலப்படுத்தும். ஆகையினால் இத்தருணங்களில் அவ்வகை மருந்துகளை அவசியம் நீக்கவேண்டியது. ஆனால் ஜெனன இந்திரியங்களின் கேவல தீவிர உணர்ச்சியை முன்னர் நீக்கிப் பின்பு, கோசக்கிளர்ச்சியை உண்டாக்க முன் கண்ட உற்சாக காரிகளை உபயோகிக்கலாம். இப்படியே அந்த ஸ்தானங்களின் கேவல தீவிர உணர்ச்சி நீங்குகிற வரையில் அதிசூடான அவுடதங்களை உபயோகித்தல் கூடாது. ஏனெனில் அவ்வகை அவுடதங்களினால் வியாதி பிரபலப்பட ஏதுவா மென்பதே.

இந்திரிய சிராவக ரோகச் சிகிச்சை

இதுவரையில் நாம் இந்திரிய சிராவக ரோக காரணத்தையும், அதன் லக்ஷணங்களையும், இங்கிலீஷ், யூநாநி, இந்து ஆகிய மூவகை வைத்திய சாஸ்திர முறைப்படி விவரமாய்ச் சொன்னோம். இன்னும் அதன் சிகிச்சா விதியையும், சிகிச்சாக் கிரமத்தையும் ஒருவாறு பொதுவாய்த் தெரிந்து கொண்டோமாயினும். இனியிந்த வியாதியின் ஒவ்வொரு பிரதான காரணங்களையும், அதன் உபகாரணங்களையும், அவ்வவற்றிற்கு தகுந்த இங்கிலீஷ். யூநாநி, இந்து முதலிய

முறைகளையும், கூடின வரையில் விவரமாய் எழுதுவாம். இதனால் ஒவ்வொருவரும் ஏககாலத்தில் தங்களுக்குப் பிரியமான யோக முறையைச் செய்து கொள்ள ஏதுவாமென்பதே கருத்து.

இந்திரிய விர்த்தியினா லுண்டான சிராவகச் சிகிச்சை

1. இந்திரிய சிராவக காரணங்களில் முந்தினது இந்திரிய விர்த்தியென முன்னமே சொல்லப் பட்டிருக்கிறது. ஒருவருக்குத் தேகத்தில் இரத்த விர்த்தியும், இந்திரிய புஷ்டியுமிருந்து, தேகத்தில் எவ்வித வியாதியுமில்லாமல், தேகபலம், மனோபலம் ஆகியவைகளிருப்பதுடன், இந்திரிய விர்த்தியை உண்டாக்கும் பதார்த்தங்களாகிய பால், நெய், இறைச்சி, முட்டை முதலியவைகளை அதிகமாய்க் கையாடி வருவதினால் இந்திரிய சிராவக முண்டானால், மேற்சொன்ன இந்திரிய விர்த்தி பதார்த்தங்களான நெய், பால், முதலியவகைளை அறவே நீக்கி விடவேண்டும் அல்லது சமயோசிதமாய்க் குறைத்து விடவேண்டும். இந்திரிய விளைவைக் குறைக்கும் பதார்த்தங்களையும் உபயோகிக்கலாம். மரக்கரி பதார்த்தங்களைக் கையாடி வரலாம், இலகுவான ஆகாரத்தை உபயோகிக்கலாம் அல்லது நோன்பு, விரதம் முதலியவைகளை அடிக்கடி அனுஷ்டிக்கும்படிச் செய்யலாம். இந்திரிய விளைவிற் காதாரமாகிய ரத்தத்தைத் தேகத்தின் கீழ்ப்பாகத்தில் அதிகமாய்ச் செல்ல விடாமல் மேற்பாகத்திற் செல்லும்படியான தேக முயற்சிகளைச் செய்விக்கலாம். இலகுபேதி மருந்துகள், பேதி மருந்துகள் ஆகியவைகளையும் தேகத்திற்குத் தகுந்தபடி சமயோசிதமாய்க் கொடுக்கலாம்.

ஆனால், மேற்கண்டபடி இந்திரிய புஷ்டி இருக்கும்போது அயசம்பந்தப் பிரயோகங்கள், எட்டிக் கொட்டைப் பிரயோகங்கள், ஆகியவைகளை உபயோகப்படுத்தல் சிறிதுங் கூடாது. ஏனெனில் அவற்றால் நன்மைக்குப் பதிலாய்த் தீமையே சம்பவிக்கும்.

நல்ல வாலிப திசையில் ஏகாந்தியாயிருக்கும் போது மேற்கண்ட காரணங்களினால் இந்திரிய சிராவக ரோகங்கண்டால், வித்தியாப்பியாசம் முதலியவற்றுக்கு இடையூறு சம்பவிக்காதிருக்கும் பக்ஷத்தில் கல்யாணம் செய்து வைக்கலாம்.

இவ்விதம் தேகம், வயது, சுபாவம் முதலியவைகளை அநுசரித்து, வியாதி உண்டாகுங் காரணத்தை நிராகரித்தால் சிராவகமும் நின்று தேக சுகம் உண்டாம்.

மலபந்தம்

2. இந்திரிய சிராவக காரணங்களில் மலபந்தமும் ஒன்றென்பது முன்னமே சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால், மலபந்தமானது இந்திரிய சிராவகத்திற்கு காரணமாவது போலவே மலபந்தத்திற்கும் பலவித காரணங்களுண்டு அக்காரணங்களை நிதானித்து அதற்குத் தகுந்த வைத்தியம் செய்யாதவரையில்

அவ்வியாதியைச் செவ்வையாய் நிவிர்த்தித்தல் கூடாமையான படியாலும், மலபந்தமானது சாதாரணமாய் ஒரு சொற்ப வியாதியாய்த் தோற்றப்படினும் உண்மையில் அது மகா ரோகங்களுக்கு ஒரு வித்தானபடியாலும் அதன் லக்ஷணம் முதலியவைகளைப்பற்றி விபரமாய்த் தெரிந்துகொள்ள வேண்டியது மிகவும் ஆவசியகம். ஆகையால் அதன் லக்ஷணம், சிகிச்சை முதலியவைகளை இங்கிலீஷ், யூநாநி, தமிழ் ஆகிய மூவகை வைத்திய சாஸ்திர முறைகளை முறையே இங்கெழுதுவாம்.

மலபந்தம்.
(இங்கிலீஷ்-வைத்திய முறைப்படி)

காரணங்கள்:- துவர்ப்பான வஸ்துகளை அளவில் அதிகமாய்ப் புசித்தல், அவ்வகை பானங்களை அதிகமாய் பானஞ் செய்தல், மிதத்திற் கதிகமாய்த் தேகப்பயிற்சி செய்தல், பெரும்பாலும் நெடுந்தூரம் குதிரைமீது சவாரிசெய்தல், சீதள பதார்த்தங்கள், இளைப்பு பதார்த்தங்கள் முதலியவைகளை நெடுநாள் வரையில் துடர்ச்சியாய்ப் புசித்து வருதல். பித்தநீரானது எக்காரணத்தினாலேனும் சிறு குடற்களில் வழமைக்கு விரோதமாய் வரத்தடை நேரிடுதல், இதைப் பெரும்பாலும் மஞ்சள் காமாலை வியாதியிற் காணலாம். சிறு குடற்களில் சிறு கொப்புளங்கள், சிரங்கு கட்டிகள், இசிவுரோகம் முதலியவை உண்டாதல், இதரவியாதி சம்பந்தங்களுண்டாதல் முதலியவைகளாம்.

லக்ஷணம்:- மலபந்தத்தினால் சில சமயம் வாந்தியும், சில சமயம் வயிற்று நோயும் உண்டாம். பெரும்பான்மை சிறு குடல்கள் சம்பந்த நோய்களுண்டாமெனினும் பற்பலவகை நோய்களும் பிரபலப்படும்.

மலபந்தப்பட்டு வருவதால் வாயு விருத்தியும் அதிகமாகும். ஆகையால், குன்ம நோய் முதலிய பெருங்குடற்கள், சிறு குடற்கள் ஆகியவற்றின் வியாதிகள் அதிகரிக்கவும், அவற்றால் பலவகை கெடுதிகள் நேரிடவும் ஏதுவாம்.

சிகிச்சை:- மலபந்தம் வழமையாயிருக்கப் பெற்றவர்கள் வெள்ளரிக்காய், முலாம்பழம், சாரப்பருப்பு முதலியவைகள் போன்ற கொழுமையானதும், மலகாரியானதுமாகிய ஆகாரங்களைக் கையாடி வரவேண்டும். சுபாவமாய் மலபந்த முடையவர்களுக்குக் கடினபேதி மருந்துகளை ஒருபோதும் உபயோகித்தல் கூடாது. ஏனெனில், அப்படி உபயோகிப்பதினால் நன்மைக்குப் பதிலாய்த் தீமையே விளையும். திராக்ஷை, சாரப்பருப்பு, அவைக்கஞ்சி, வெண்ணெய், கரும்பு முதலியவைகளை உபயோகிக்கலாம். ஆட்டிறைச்சியில் சுரைக்காயை அல்லது பருப்புக்கீரையைச் சேர்த்துச் சமைத்துச் சாப்பிட்டு வருவது மிகவும் உத்தமம். மலபந்த ரோகமுள்ளவர்கள் கோதுமைத் தவிட்டு ரொட்டியை நீக்கி வைக்க வேண்டியது. ஏனெனில், அது மலபந்தத்தை விருத்திசெய்து பலவித கெடுதிகளுக் கேதுவாம். தேக உஷ்ணத்தை யெழுப்புகிற விஷயங்களாகிய தேகப்

பயிற்சி முதலியவைகளையும், வியர்வையையும் உட்காங்கையையும் எழுப்புகிற உடுப்புடுத்தல் முதலிய விஷயங்களையும் அதிகமாய் அநுசரித்தல் கூடாது. ஏனெனில் இவை மலபந்த ரோகத்தை விர்த்தி செய்யும். படுக்கையிலேயே அதிகநேரம் படுத்திருத்தலும் மலபந்தத்தை விர்த்திசெய்யும்.

ஒரு விஷயத்தைப்பற்றி நெடுநேரஞ் சிந்தித்தல், ஏதேனுஞ் சங்கதியைக் குறித்து அதிகநேரம் உட்கார்ந்திருத்தல் முதலியவைகள் இவ்வியாதியை விருத்தி செய்து தீமையை விளைவிக்கத தக்கவைகள்.

ஆகையால், மேற்கண்ட சிந்தனை, சஞ்சலம் முதலிய விஷயங்களை நீக்கி, தேக சுபாவத்திற்குத் தகுந்த விதமாய் மன ஆறுதலுடன் சந்தோஷமாயிருத்தல் வேண்டும். இந்த வியாதியஸ்தர்கள் எவ்விதமான மனவருத்தத்திற்கும் இடந்தரலாகாது. தினக்கிரமமாய் நடந்து திரிந்து உலாவி வரல் வேண்டும்.

இவற்றுடன் மேற்கண்டபடி மலகாரி ஆகாரங்கள், பானங்கள் ஆகியவைகளை உபயோகித்து வரல் வேண்டும். ஆனால் ஒருவித பதார்த்தத்தையே ஓரேயடியாய்க் கையாடி வருவதிலும் அக்குணமுள்ள பதார்த்தங்களை மாறி மாறியும், இடையில் விட்டு விட்டும் உபயோகித்து வருவது மிகவும் உசிதம், வழ வழப்பான பாயசம் முதலியவைகளும் இத்தகையினர்களுக்கு நன்மை செய்யும். காரமான வஸ்துகளையும் மதுபானாதிகளையும் அவசியம் நீக்க வேண்டும்.

மலபந்த ரோகத்தில் எல்லாவகைச் சிகிச்சைகளிலும் பிரதானமாவதும் உத்தமமானதும் யாதெனின்:- மலத்தையிளக்கத் தக்கினவைகளும், மலத்தைக் கட்டாதவைகளும், தத்தம் தேக சுபாவத்திற்குப் பொருந்தினவைகளுமான அன்னபானாதிகளைக் கையாடி வருதலேயாம். இவ்விதம் வியாதி வசப்படாவிட்டால், மருந்தை உபயோகிக்க முயற்சி செய்யவேண்டும். அப்போதும் அடிக்கடி பலமான மருந்தை உபயோகிப்பதும் உத்தமமாகாது. ஆகையால், வியாதி பலம், தேகபலம், கால பேதம் முதலியவைகளிற்குத் தகுந்தபடி இலகுவானவைகளை உபயோகித்துக் கிரமப்படுத்த முயலவேண்டும். இதற்காக றேவல் சீனி மிகவும் சிரேஷ்டமானது. வாரத்திற்கு இரண்டு தடவை றேவல் சீனியை அல்லது றேவல் சீனிப் பிரயோகத்தை உபயோகித்து வரலாம். போளம், ஜாலப் ஆகியவைகளினால் இரைப்பைக்குக் கெடுதி நேரிடுகிறது போல் றேவல் சீனியினால் கெடுதி நேரிடுகிறதில்லை.

அவர்கள் சமயோசிதமாய்த் தங்களுக்கிஷ்டமானவைகளைச் செய்து கொள்ளும்படி மலபந்த ரோகத்திற்காம் சில முறைகளை இங்கெழுதுவோம்.

1. குச்சு முதலிவைகள் நீக்கப்பட்ட சூரத்து நில ஆவாரையிலை விராகனெடை-3. மேனா விராகனெடை-2.

செய்பாகம்:- மேற்படி இலையை ஒரு ஆழாக்கு தண்ணீரில் போட்டு ஓரிரவு ஊறவைத்துக் காலையில் பிசைந்து வடிகட்டித் திப்பி நீக்கி, அந்த ஊறல் கியாழத்தில் மேனாவைக் கரைத்து மறுபடியும் வடிகட்டிப் பானஞ் செய்யவும்.

உபயோகம்:- இவ்விதம் வாரம் இரண்டு அல்லது மூன்று தடவைகள் செய்து வருவதினால் மலபந்தம் தீர்ந்து அது கிரமப்படும்.

2. அரையாழாக்கு அவைக்கஞ்சியில் 2-விராகன் எடை (Cream of Tartar) என்னும் திராக்ஷா உப்பைக் கரைத்துக் காலையில் பானஞ் செய்யவும். இவ்விதம் வாரம் இரண்டு மூன்று தடவைகள் செய்யின் மலபந்தந் தீரும்.

3. மஞ்சட் கடுக்காய்த் தோல் விராகனெடை-5, சிதைத்த சன்ன லவங்கப்பட்டை விராகனெடை-¾ பசும்பால் பலம்-4.

செய்முறை:- முன்னிரண்டு சரக்கையும் பாலிற் போட்டு-10-நிமிஷநேரம் காய்ச்சி இறக்கி ஆறவிட்டுப் பிசைந்து வடிகட்டிப் பானஞ் செய்ய வேண்டும். இவ்விதம் மேற்கண்டபடி செய்துவரின் மேற்கண்ட வியாதி தீரும்.

4. சுகாதார மலகாரி மாஜூன்:- குச்சு முதலியவை நீக்கி, இடித்து வஸ்திரகாயம் செய்த சூரத்து நில ஆவாரையிலைச் சூரணம் பலம்-6, இடித்து வஸ்திரகாயம் செய்த கொத்துமல்லி விதைச் சூரணம் பலம்-3, கொட்டை, கோது முதலியவை நீக்கின புளி பலம்-6, கொட்டை நீக்கின சீமை இலந்தைப்பழம் (French prunes) பலம்-6, சீனி சர்க்கரை பலம்-3.

செய்முறை:- புளியையும் இலந்தைப் பழத்தையும் அம்மியில் மைபோல அரைத்தெடுத்து, அதில் முன் சூரணங்களை மிஸ்ரமித்து வைத்துக் கொண்டு, சர்க்கரையில் கொஞ்சம் சலம் விட்டுக்காய்ச்சிப் பாகுபதத்தில் முன் சித்தப்படுத்தின கலவையைச் சிறுகச் சிறுகப் போட்டு மத்தினால் நன்றாய்க் கடைந்து, சூடாறினபின் பீங்கான் பாத்திரத்தில் பத்திரப்படுத்தவும்.

மாத்திரை:- பலம்-½, 1-ஒருவேளை அல்லது இரண்டு வேளையும் சாப்பிடலாம்.

உபயோகம்:- மலபந்தம், மலச்சிக்கல், மேகச்சூடு, அஸ்திச்சூடு, பித்தச்சூடு முதலியவைகள் நீங்கி மலம் கிரமப்படும். இது மிகவும் அநுபோகமானதும் சொகுசானதுமாம். சுகுமார தேகிகளுக்கு அதிகம் பிரயோசனப்படத் தக்கது.

5. Take of	Powdered Rhubarb	dr	1
"	Extract of Aloes	dr	1

Mix with water and divide into 40 pills, dose, 2 or 3 pills.

றேவல்சீனி	சூரணம்	திராம்-1
மூஷாம்பர	சத்து	திராம்-1

இவற்றைக் கொஞ்சம் ஜலம் வார்த்தரைத்து 40-மாத்திரைகளாய்ச் செய்து, வேளை யொன்றிற்கு 2-அல்லது 3-மாத்திரைகள் உட்கொள்க.

உபயோகம்:- மலபந்தம், மலச்சிக்கல், ஆகியவை தீரும்.

6. Take of Powdered Rhubarb	dr	1
" Powdered Ipecacuanha	grs	10
" Oil of Caraway	dr	15
" Mucilage of Gum Acacia	q.s.	

Make a mass and divide into 20 pills, of which 2 should be taken every night.

Dr. CHAPMAN.

றேவல்சீனி சூரணம்	திராம்	1
இபிகாகியு எனா சூரணம்	கிறேன்	10
கேக்விதை யெண்ணெய்	துளி	15
விளாம்பிசின் பாகு தேவையான	அளவு.	

இவற்றையெல்லாம் ஒன்றாய் மிஸ்ரமித்து, 20-மாத்திரைகள் செய்து இரவில் 2-மாத்திரைகள் உட்கொண்டு வர, மலபந்தந் தீரும்.

7. Take of Powdered Rhubarb	grs	15
" Powdered Myrrh	grs	15
" Extract of Aloes	grs	7
" Extract of Chamomile	grs	10
" Syrup of Ginger	q.s.	

Make a mass and divide into 20 pills of which 2 or 3 pills to be taken.

Mr. SAVORY.

றேவல்சீனி	சூரணம்	கிரேய்ன்-15
வாலேந்திர போளச்	சூரணம்	கிரேய்ன்-15
மூஷாம்பரசத்து		கிரேய்ன்-7
சீமைச் செவ்வந்திப்பூச் சத்து		கிரேய்ன்-10

[illegible], ஷ[illegible]த்து அல்லது [illegible]தா் தேவையான அளவு

இவையெல்லாவற்றையும் ஒன்றாய் மிஸ்ரமித்து 20-மாத்திரைகளாகச் செய்து வேளை-1-க்கு 2-அல்லது 3-மாத்திரைகள் சாப்பிட்டுவர, மலபந்தந் தீர்ந்து மந்தாக்கினிரோகம் குணப்படும்.

8. Take of	Confection of Senna	drs	4
"	Acid of Tartaric Potassium	dr	1

Mix let the patient take a tea spoonful occasionally.

Dr. TYLER SMITH.

நிலஆவாரை லேகியம்	அவுன்ஸ்-½
திராக்ஷா ரச புளிப்புப்பு	திராம்-1

இவற்றை மிஸ்ரமித்து வேளையொன்றிற்கு தேக்கரண்டி அளவு சமயோசிதமாய் இடைக்கிடை சாப்பிட்டுவர மலபந்தந் தீரும்.

9. Take of	Confection of Senna	ozs	2
"	Acid of Tartaric Potassium	drs	4
"	Carbonte of Iron	drs	2
"	Syrup of Ginger	q.s.	

Make electuary, to be taken dr.1 day and night.

Dr. GRAVES.

நிலஆவாரை லேகியம்	அவுன்ஸ்-2
திராக்ஷா ரச புளிப்புப்பு	அவுன்ஸ்-½
கார்போனெட் ஆப் ஐயன்	திராம்-2

இவற்றை மிஸ்ரமித்து லேகியமாய்ச் செய்து கொள்ளவும்.

மாத்திரை:- திராம்-1-காலை மாலை இரண்டு வேளையும் சாப்பிடவும்.

உபயோகம்:- சுபாவ மலபந்தந் தீரும்.

மலபந்தம்
(யூநாநி வைத்திய சாஸ்திர முறைப்படி)

மலமானது கிரமமாயிருத்தல் சுகாதாரத்திற்கு வித்தாயிருப்பது போலவே, அது அக்கிரமப்படுவது அனேக வியாதிகளுக்கு வித்தாயிருக்கின்றது. ஆகையால், சுகாதாரத்தை விரும்பும் ஒவ்வொருவரும் இதன் கிரமாக் கிரமத்தைப் பற்றியும்

நாள்தோறும் அவசியம் கவனித்து வரவேண்டும். மேலும் தேகத்தில் எந்த வியாதியின் சிகிச்சையிலும் மலக்கிரமாக் கிரமத்தைப் பற்றியும் முக்கியம் கவனிக்க வேண்டியதே. கிரமேணுவாய் அல்லது நெடுநாள்வரையில் மலச்சிக்கலாயிருப்பது அல்லது மலபந்தப்பட்டு வருவது இனி உண்டாகும் ஏதோ வொரு மகா ரோகத்தின் முன்னறிகுறியாம். ஆகையால், உடனே சிகிச்சைக்கு முயற்சித்து அதைப் பற்றறத் தீர்த்துக் கொள்ளவேண்டும்.

(தர்வீஹுல் அர்வாகு) என்னும் வைத்திய கிரந்த கர்த்தா சொல்லுகிறதாவது நெடுநாள் மல அக்கிரமப்பட்டிருப்பது அல்லது மலபந்தப்பட்டிருப்பது, நோயில்லா விட்டாலும் அது ஒருவித குன்மரோகம் என்பதே. ஆகையால், இதனை இலகுவானதென சாதாரணமாய் எண்ணப்படுவது போல அலட்சியமாய் விட்டு விடாமல் அப்போதைக் கப்போது கவனித்து, எந்தக் காரணத்தினால் உண்டானதோ அதற்குத் தகுந்த சிகிச்சைசெய்து கிரமப்படுத்திக் கொள்ள வேண்டியது ஒவ்வொருவருக்கும் விலக்கக் கூடா விதிமுறையாம்.

இது காரணார்த்த மலபந்தம், சுபாவ மலபந்தமெனப் பொதுவாக இருவகைப்படும். காரணார்த்த மலபந்தமானது பின் வருகிற வகைகளாம்.

காரணம்:- இதற்குப் பலவகைக் காரணங்களும் உண்டாமெனினும் அவற்றுள் முக்கியமானவைகளை மாத்திரம் இங்கெழுதுவாம்.

வாயு அதிகரிப்பதினால் மலபந்தப்படும் அல்லது அக் கிரமம் உண்டாகும்.

லக்ஷணம்:- தேகத்தில் எந்தப் பாகத்திலேனும் முக்கியம் வயிற்றுப் பாகத்தில் நோவுண்டாதல், ஊசியினால் குத்துகிறது போன்ற நோவு. அது முக்கியமாய் ஒருவிடத்திலிருந்து மறு விடத்திற்கு ஓடித்திரிதல், குடற்களில் இரைச்சலுண்டாதல் முதலியவைகளாம். இது வாயு பதார்த்தங்களை அதிகமாய்க் கையாடி வருவதினால் முக்கியம் உண்டாகும்.

அசுத்த பதார்த்தங்களை அதிகமாய்ப் புசித்து வருவதினால் உரத்த கப சத்துண்டாகி, சிறு குடற்களில் வியாபித்துச் சிக்கி மலபந்தம் உண்டாம்.

லக்ஷணம்:- எவ்வித பேதி மருந்திலும் மலம் வெளிப்படாத தன்மையாய் அவ்வளவு கடின மலபந்தம் உண்டாதல். கார்ப்பு, புளிப்பு வஸ்துக்களில் அதிகப் பிரியம், சில சமயங்களில் அரட்டல், புரட்டல் காணல், எந்தக் காரியத்திலும் திருப்தியில்லாத் தன்மை முதலியவைகளாம்.

குறிப்பு

இவ்வகை மலபந்தங்களில் கடின பேதி மருந்துகளை ஒருபோதும் உபயோகித்தல் கூடாது. ஆனால், ஆசனத்திரி முதலியவைகளே சிரேஷ்டமான சிகிச்சை யென அறிந்திருத்தல் வேண்டும்.

வரட்சியதிகரிப்பதினாலும் மலபந்தப்படும்

லக்ஷணம்:- மூக்குத்துவாரங்கள் வரண்டிருத்தல், நித்திரை பிடியாமை, வரட்சியான பதார்த்தங்களைச் சாப்பிடுவதினால் கெடுதியுண்டாதல், கொழுமையான பதார்த்தங்களினால் சுகுணந் தோற்றுதல், கொழுமையான எண்ணெய் இனங்களினால் சாந்தப்படுதல், கண்ணெரிச்சல் முதலியவைகளாம்.

சிறு குடற்களில் வீக்கமுண்டாவதினால் மலபந்தப்படும்.

லக்ஷணம்:- அடி வயிற்றில் நோவுண்டாதல், அந்த ஸ்தானத்தில் கையினால் அழுத்துவதினால் நோவு பிரபலப்படுதல் முதலியவைகளாம்.

சிறு குடற்களில் பழய மலங்கள் சேர்ந்துபோவதினால் மலபந்தப்படும்.

லக்ஷணம்:- பசிதீபனக் குறைவு, ஆகாரத்தில் வெறுப்பு, சில சமயம் வாந்தியுண்டாதல் ஆகியவைகளாம்.

சுபாவ மலபந்தமாவது எப்போதும் வழமையாய் மலபந்தப்பட்டிருப்பதாம். இது கஷ்டமான வியாதியாயினும் இதற்கும் சிகிச்சை யெழுதப்படும்.

குறிப்பு

மலபந்தத்தினால் பெரும்பாலும் உண்டாகிற இதர வியாதிகளாவன, வயிற்றுநோய், மூலரோகம், இந்திரிய சிராவக ரோகம், சுரங்கள், மாந்தாக்கினி ரோகம், பலவித வலிகள் முதலியவைகளே.

மலபந்தச் சிகிச்சை
(யூநாநி)

முன்சொன்னபடி நாள்தோறும் ஆகார பதார்த்தங்களினால் கிரமப்படுத்துவதே சிரேஷ்டமான சிகிச்சை. பின்பு, தனிச்சரக்குப் பிரயோகங்களினால் முயற்சி செய்து நிவர்த்திசெய்து கொள்ளவேண்டும். அதனாலும் சுகுணமுண்டாகாவிட்டால் அடியிற் காணும் பாகங்களில் தேக விகற்பத்திற் கேற்ற விதமாகவும், வியாதியுண்டான காரணத்திற் கேற்ற விதமாகவும் செய்து நிவர்த்திசெய்து கொள்ளவேண்டும்.

மலபந்த நிவாரண தனிச்சரக்குப் பிரயோகங்கள்.

இசுப கோல்விதை விராகனெடை-1½ இதனை நாள் தோறும் காலையில் மெல்லாமல் முழு விதைகளாய் அப்படியே உட்கொண்டுவர, மலம் கிரமப்படும்.

சீமையத்திப்பழம்-3, இவற்றை நாள்தோறும் காலையில் சாப்பிட்டுவர, கப சம்பந்த மலபந்தம் வரட்சிசம்பந்த மலபந்தம் ஆகியவை நீங்கி, மலம் கிரமப்படும்.

திராக்ஷைப் பழம் பலம்-½ -¾, இதனை நாள்தோறும் சயனிக்கப்போகும் சமயத்தில் மென்று உட்கொண்டுவர, கப சம்பந்த மலபந்தந்தீரும்.

பாதாம் பருப்பு 7-முதல் 11-இவற்றை நெய்யில் வறுத்து நாள்தோறும் காலையில் வெறும் வயிற்றில் சாப்பிட்டுவர, வரட்சி சம்பந்த மலபந்தந் தீரும். இதனால் சிலருக்கு, அசீரணம் உண்டாகும். ஆகையால் அத்தகையினர்கள் தங்கள் சுபாவத்திற்கேற்ற அளவாய்க் குறைத்துச் சாப்பிடலாம். பாதாம் பருப்புகளுடன் கற்கண்டைச் சேர்த்துஞ் சாப்பிடலாம்.

பனப்ஷா இலை, பூ, முதலிய சமூலத்தை இடித்து வஸ்திரகாயம் செய்த சூரணம் பங்கு-1, சீனி சர்க்கரை பங்கு-1; இவ்விரண்டையும் மிஸ்ரமித்து, அதில் விராகனெடை 3-4, சயனிக்கப் போகும் சமயத்தில் வெந்நீருடன் உட்கொள்ள வேண்டும். இவ்விதம் சில நாள் தொடர்ச்சியாய்ச் செய்துவர, வரட்சி சம்பந்த மலபந்தந் தீரும்.

சோம்பை இடித்து வஸ்திரகாயம் செய்த சூரணம் பங்கு-1, சீனி சர்க்கரை பங்கு-1, இவ்விரண்டையும் மிஸ்ரமித்து அதில் விராகனெடை 3-3½-வீதம் மேற்கண்டபடி உட்கொள்ள, வாயுசம்பந்த மலபந்தந்தீரும்.

றூமிமஸ்தகியைப் பொடித்து வஸ்திரகாயம், செய்த சூரணம் விராகனெடை-½, சீனி சர்க்கரை விராகனெடை-½, இவ்விரண்டையும் மிஸ்ரமித்து மேற்கண்டபடி உட்கொண்டுவர, மலம் கிரமப்பட்டு இரைப்பை-பலப்படும்.

10. கடுக்காய்ப் பிஞ்சுச் சூரணம், சோம்புச் சூரணம், கற்கண்டுத்தூள் இவை வகை-1-க்கு சமனெடை இவற்றை யொன்றாய் மிஸ்ரமித்துத் தேக சுபாவத்திற்குத் தக்கவிதமாய் விராகனெடை-2¼-3-காலையில் உட்கொண்டுவர, பழைய மலங்கள் வெளிப்பட்டு மலபந்தந் தீரும்.

11. உலர்ந்த சீமை அத்திப்பழம் விராகனெடை-2, சோம்பு, அதிமதுரம், மஞ்சட் கடுக்காய்த்தோல் இவை வகை1-க்கு விராகனெடை-1¼.

செய்முறை:- எல்லாவற்றையும்-1½ - ஆழாக்கு ஜலத்திலிட்டுக் காய்ச்சி, மூன்றிலொரு பாகமாய் சுண்டினபின் இறக்கிப் பிசைந்து வடிகட்டிச் சாப்பிடவும். இப்படி வேளைக்குவேளை புதிதாகச் செய்து கொள்ள வேண்டும்.

உபயோகம்:- மலபந்தம் நீங்கும். கபத்தைக்கண்டிக்கும். ரத்தவிருத்தி யுண்டாகும்

12. சுகுமார திரிபலாதி

மஞ்சட்கடுக்காய்த்தோல், சூரத்துக் கடுக்காய்த்தோல், பிஞ்சுக்கடுக்காய், நெல்லிமுள்ளி, தான்றிக்காய்த்தோல், இவைகளின் சூரணம் வகை-1-க்‌ரு

விராகனெடை-3, ரோஜாப்பூ, சூரத்து நில ஆவாரையிலை, சுத்தி செய்த சீமைச் சிவதைவேர், இவைகளின் சூரணம் வகை-1-க்கு விராகனெடை-1, மேல்தோல் சீவி இடித்த சுக்குத் தூள் விராகனெடை-½, தேன் அல்லது சீனி சர்க்கரை பலம்-2½.

செய்முறை:- சூரணங்களை ஒன்றாகச் சேர்த்துச் செல்லத்தக்க பாதாம் நெய் அல்லது நெய் விட்டு நன்றாகப் பிசறிப் பின்பு தேன் சேர்த்துக் கொள்ளவும். சர்க்கரையினால் பாகு செய்து, பாகு பதத்தில் இறக்கிச் சூரணத்தைக் கொட்டிக் கிளறிக் கொள்ளவும்.

மாத்திரை:- 2-விராகனெடை முதல் 5-விராகனெடை வரையில் காலையில் மாத்திரம் ஒரு வேளை சாப்பிடவேண்டியது.

உபயோகம்:- மலக்கட்டை நீக்கும்; மூளை, இரைப்பை இவைகளிலுள்ள அசுத்த மாசுகளை நீக்கும்; காது, கண், தலை, முதலியவைகளின் நோய்களுக்கும் பிரயோசனப்படும்.

13. குச்சி முதலியவை நீக்கி இடித்து வஸ்திரகாயஞ் செய்த சூரத்து நில ஆவாரையிலைச் சூரணம் துலா-3, சுத்திசெய்த மைசாட்சி அல்லது குக்கில் துலா-2½, கந்தனா விதைச் சூரணம் அல்லது தூதரிவிதைச் சூரணம் துலா-2, சூரத்துக் கடுக்காய்த்தோல் சூரணம் துலா-1½, சோம்புச்சூரணம் துலா-1, மஞ்சள் கடுக்காய்த்தோல் சூரணம், நெல்லி முள்ளிச்சூரணம், கர்கடக சிங்கிச் சூரணம், இவை வகை 1-க்கு விராகனெடை-2¼.

செய்முறை:- எல்லாவற்றையும் ஒன்றாக மிஸ்ரமித்து அரைத்துச் சூரணமாகவும் உபயோகிக்கலாம் அல்லது கொஞ்சம் சலம் வார்த்து மாத்திரைகளாகவும் செய்து உபயோகிக்கலாம்.

மாத்திரை:- துலா-¼-½, காலை மாலை 2-வேளையும் வெந்நீருடன் உட்கொள்ள வேண்டும்.

உபயோகம்:- மலபந்தம், மூலவாயு ஆகியவை தீரும்.

14. குச்சி முதலியவை நீக்கி இடித்து வஸ்திரகாயஞ் செய்த சூரத்து நில ஆவாரையிலைச் சூரணம், மஞ்சட் கடுக்காய்ச் சூரணம் இவை வகை-1-க்கு விராகனெடை-5, கருஞ்சீரகச் சூரணம், ரோஜாப்பூக் சூரணம், உலர்த்தி பொதினாச் சூரணம், றூமிமஸ்தகிச் சூரணம், இவை வகை-1-க்கு விராகனெடை-1½, மேல் தோல் போக்கியிடித்து வஸ்திரகாயஞ் செய்த சூரணம் விராகனெடை-½, இவை எல்லாவற்றையும் ஒன்றாக மிஸ்ரமித்துக் கொள்க.

மாத்திரை:- விராகனெடை-2, காலையில் வெந்நீருடன் உட்கொண்டு வர, மலபந்தம், மலச்சிக்கல் ஆகியவை தீர்ந்து, ஜீரண சக்தி அதிகப்படும்.

15. சீமை நறுவிலிப்பழம்-60, சீமை இலந்தைப் பழம்-20, பனப்ஷாப்பூ, ரோஜாப்பூ, இவை வகை-1-க்கு விராகனெடை-7, காவுஜுபான் விராகனெடை-5; இவற்றை ஒருபடி தண்ணீரிற் போட்டுக் காய்ச்சி, மூன்றிலொருபாகமாகச் சுண்டினபின்னிறக்கிப் பிசைந்து வடிகட்டித் திப்பி நீக்கிக் கொள்ளவும். இசுபகோல் விதை விராகனெடை-9, பேதானா விதை விராகனெடை-2, இவ்விரண்டையும் தனித் தனியாகவாவது, ஒன்றாகச் சேர்த்தாவது, ஒரு ஆழாக்கு சலத்தில் 6-மணி நேரம் ஊறவைத்துப் பிசைந்து வஸ்திரகாயஞ் செய்து கோழையெடுத்து முன் சித்தப்படுத்தின கியாழத்தில் சேர்த்துக்கொள்ளவும்; பின்பு 2, 3-பலம் சீனி சருக்கரையை அதில் கரைத்து அடுப்பேற்றிக் காய்ச்சி, ஷர்பத்துப் பதத்தில் இறக்கி ஆறவைத்து, சீஷாவில் பத்திரப்படுத்தவும்.

மாத்திரை:- துலா-1-2, ஷர்பத்துடன் அதற்குச் சமனெடை பாதாம் நெய் கலந்து, காலையில் ஒருவேளை அல்லது காலை மாலை இரண்டுவேளையும் சமயோசிதமாய்ச் சாப்பிடலாம்.

உபயோகம்:- சிறு குடற்களின் வரட்சியைக்கண்டித்து மலத்தை இளக்கும். இருமலைக் கண்டிக்கும் சுரத்திலும் உபயோகப்படுத்தலாம். இதைத் தொடர்ச்சியாய்ச் சாப்பிட்டு வர, வரட்சியினா லுண்டான மலபந்தம் நீங்கி, அது கிரமப்படும்.

16. உலர்த்தின சீமையத்திப் பழம், உலர்ந்த திராக்ஷைப்பழம் இவை வகை-1-க்குப் பலம்-23, மேல் தோல் நீக்கின பாதாம்பருப்பு, ரோஜாப்பூச் சூரணம், குச்சி முதலியவை நீக்கிப்பொடித்த சூரத்து நில ஆவாரையிலைச் சூரணம், மேல்தோல் நீக்கப்பட்ட குசும்பா விதைப்பருப்பு, இவை வகை-1-க்குப் பலம்-2, சோம்புச் சூரணம், மேல்தோல் நீக்கித்தூள் செய்த சுக்குச் சூரணம், இவை வகை-1-க்கு விராகனெடை 6½ , லவங்கப் பட்டைச் சூரணம், ஏலரிசிச்சூரணம், ஏலக்காய் விதைச் சூரணம், இவை வகை-1-க்கு விராகனெடை-3¼, சீனி சர்க்கரை பலம்-13.

செய்முறை:- சூரணங்களை ஒன்றாக மிஸ்ரமித்து, பருப்பினங்களை அரைத்து, அதில் கலந்து கொள்ள வேண்டும். அத்திப் பழத்தையும் திராக்ஷையையும் சலத்தில் போட்டுக் கழுவி, விதைகளை நீக்கி அம்மியில் மைபோலரைத்து, சர்க்கரையுடன் சேர்த்துக் கொஞ்சம் சலமும் வார்த்து அடுப்பேற்றிப் பாகுபதத்தில், முன் சித்தப்படுத்தின சூரணத்தையும் சிறுகச் சிறுகத் தூவி, மத்தினால் கடைந்து இறக்கி ஆறினபின் பீங்கான் பாத்திரத்தில் பத்திரப்படுத்தவும்.

மாத்திரை:- வேளை-1-க்கு விராகனெடை-5-6½-யாக இரண்டு வேளையும் உட்கொள்ளவும்.

உபயோகம்:- வயிற்றிலுள்ள வாயுகளைக்கண்டித்து மலபந்தம், மலச்சிக்கல் ஆகியவைகளைத் தீர்க்கும். ஜீரணசக்தி விர்த்தியாகி பசிதீபனம் உண்டாம்.

17. எலும்பு, கொழுப்பு ஆகியவை நீக்கப்பட்ட ஆட்டிறைச்சி பலம்-40, இதில் 5-படி சலம் வார்த்துக்காய்ச்சி, நாலிலொருபாகமாகச் சுண்டினபின்னிறக்கிப் பிசைந்து வடிகட்டித் திப்பி நீக்கிவிடவும். பசுவின் பால் ஆழாக்கு-3, பசுவின் நெய் ஆழாக்கு-2, நாட்டு சருக்கரை பலம்-5, வெற்றிலை-25, மேற்படி திரவங்களையும் சர்க்கரையையும் ஒன்றாகக்கலந்து அடுப்பேற்றி ஒருகொதி வந்தவுடன் வெற்றிலைகளைக் கையினால் பிய்த்துப்போட்டு; நீர்சுண்டினபின் இறக்கி ஆறவைத்துப் பீங்கான் பாத்திரத்தில் பத்திரப்படுத்தவும்.

மாத்திரை:- இந்த நெய்யில், தேக சக்திக்குத் தகுந்ததுபோலவும், வியாதிக்குத் தகுந்ததுபோலவும், வேளை-1-க்குப்பலம்-½ -¾ -1½ வரையில் உட்கொள்ளவும்

உபயோகம்:- மலபந்தத்தையும், மலச்சிக்கலையும் நீக்கி, அதைக்கிரமப்படுத்தி, தேகாரோக்கியத்தை உண்டுபண்ணும். இது சுகுமார தேகிகளுக்கும், ஸ்திரீகளுக்கும், பாலர்களுக்கும் மிகவும் நேர்த்தியான முறை.

18. றூமிமஸ்தகிச் சூரணம் விராகனெடை-¾. மூஷாம்பரச் சத்து அல்லது மூஷாம்பரம் விராகனெடை-½, இவற்றைச் சலம் வார்த்தரைத்து-25- மாத்திரைகளாகச் செய்து கொள்ளவும். மாலை போசனத்திற்கு முன்-1-மாத்திரை உட்கொண்டுவர, காலையில் ஒரு தடவை மலம் தாராளமாய்ப் போகும். பசி தீபனம் உண்டாம்.

மலபந்தம் சாதாரணமாய் இரண்டு விதமென முன்னமே சொல்லப் பட்டிருக்கிறது முன் கண்டபடி ஒரு காரணத்தின் நிமித்தமாயுண்டாவது காரணார்த்த மலபந்தமாம். யாதொரு காரணமின்றி நிர்நிமித்தமாய் அடிக்கடி உண்டாவது சுபாவ மலபந்தமாம். ஆகையால் மலபந்த சுபாவம் உடையவர்கள் காலையில் வெறும் வயிற்றில் ஒரு ஆழாக்குக் குளிர்ந்த தண்ணீரை பானஞ் செய்து வருவதினால் அந்த சுபாவம் மாறிவிடலாம். இச்சுபாவமுடையவர்கள் கொய்யாப்பழம், பேயன் வாழைப்பழம், சீமையத்திப்பழம், நாட்டு அத்திப்பழம், காஜர்க் கிழங்கு முதலியவைகளையும், அடிக்கடி சாப்பிட்டு வரலாம். அகத்திக்கீரை, பருப்புக்கீரை, காசினிக்கீரை, முதலிய மலத்தையிளக்கும் கீரையினங்களைத் தனியாகவும், மாமிச பக்ஷணிகளானால் இறைச்சியுடன் சேர்த்துச் சமைத்தும் சாப்பிடலாம். இன்னும் இத்தகையினர்கள், மலத்தை இளக்கும் வஸ்துகளில் தங்கள் தங்கள் தேக சுகத்திற்கு ஏற்றவைகளை அடிக்கடி உபயோகித்து வரலாம். இப்படிச் செய்வதினாலும் பிரயோசனப் படாவிட்டால், கீழ்க்காணும் முறைகளி லொன்றை உபயோகித்துக் கிரமப்படுத்திக் கொள்ள வேண்டும். கீழ்க்காணும் பிரயோகங்கள் சுபாவ மலபந்தத்தை முக்கியமாய் நீக்குமெனினும், காரணார்த்த மலபந்த சிகிச்சையிலும் அந்தக் காரணத்திற்குத் தக்கவினதைச் செய்யின், கடவுளினது கிருபையால் அவசியம் சுகுணம் உண்டாம் என்பதிற் சந்தேகமில்லை.

19. மஞ்சள் கடுக்காய்த்தோல் சூரணம், தான்றிக்காய்த்தோல் சூரணம், குச்சி முதலியவை நீக்கப்பட்ட சூரத்து நில ஆவாரையிலைச் சூரணம், குல்கந்து இவை வகை-1-க்கு விராகனெடை-5, பனப்ஷாப்பூ. மேல் தோலும் உள் நரம்புகளும் நீக்கப்பட்ட சீமைச் சிவதைவேர்ச் சூரணம், இவை வகை-1-க்கு விராகனெடை-2, லவங்கச் சூரணம், விராகனெடை-1, தேன் பலம்- 2½, சூரணங்களை ஒன்றாக மிஸ்ரமித்து, குல்கந்தை மைபோலரைத்து அதில் கலந்து கொள்ளவும், தேனைப்பாகு செய்து, பாகு பதத்தில், முன் சித்தப்படுத்தினதைச் சேர்த்து லேகியமாய்ச் செய்துகொள்ளவும்.

மாத்திரை:- துலா-2-3-வெந்நீருடன் உட்கொள்ளவும்; காலை மாலை இரண்டு வேளையும் உட்கொள்ளலாம்.

உபயோகம்:- சுபாவமான மலபந்தந்தீரும். குன்மரோகம், வயிற்றுவலி ஆகியவை குணப்படும். பேதி மருந்துகளைச் சாப்பிட்டு, அதன் குணம் காண்பிக்கப் படாததினால் உண்டாகும் துர்க்குணங்கள் நீங்கும். இது இன்னும் அனேக வியாதிகளுக்கு உபயோகப்படும்.

20. சோம்புச் சூரணம், அனிசூன் சூரணம், றூமிமஸ்தகிச் சூரணம், இந்துப்புத்தூள், இவை வகை-1-க்கு விராகனெடை-4, அதிமதுரப்பால் விராகனெடை-1½, சுத்தி செய்த மாமூதா சூரணம் விராகனெடை-12, பனப்ஷாச் சூரணம், மேல்த்தோல், உள் நரம்பு ஆகியவை நீக்கப்பட்ட சீமைச் சிவதைச்சூரணம், பசுவின் நெய், இவை வகை-1-க்குப் பலம்-3½, சரக்கொன்றைப்புளி பழம்-25, இதனை சலத்தில் கரைத்து வடிகட்டி வெயிலில் அல்லது ஜலயந்திரத்தில் நீர் சுண்ட வைத்துக் கொள்ள வேண்டும்; கற்கண்டுத்தூள், தேன், இவை வகை-1-க்குப் பலம்-8.

செய்முறை:- சூரணங்களை ஒன்றாக மிஸ்ரமித்துக் கொள்ளவும். அதிமதுரப் பாலில் கொஞ்சம் சலம் வார்த்து சற்றுநேரம் வைத்துக் கரைத்துச் சூரணத்திற் கலந்து விடவும். தேனையும், கற்கண்டையும் சேர்த்துப் பாகுசெய்து, பாகு பதத்தில் முன் சித்தப்படுத்தின சூரணத்தைத் தூவிக் கிளறிக் கீழிறக்கி சரக்கொன்றைப் புளியைச் சேர்த்து நன்றாய் மிஸ்ரமித்துப் பத்திரப்படுத்தவும்.

மாத்திரை:- துலா-1¼, 2½ வரையில் காலை மாலை இரண்டு வேளையும் அல்லது ஒரு வேளை மாத்திரம் சாப்பிடலாம்.

உபயோகம்:- சுபாவ மலபந்தந் தீரும். சூடுசம்பந்தமான குன்மரோகம், சிறு குடற்களின் வரட்சி முதலியவை தீரும்.

21. ஆரோக்கிய மாஜூன்

சுத்திசெய்த ஸகுமூனியா, மேல்தோல் நீக்கிச்சுத்தி செய்த பாதாம்பருப்பு, கழுவின எள், மேல்தோல் நீக்கின குசும்பாவிதைப் பருப்பு, இவை வகை

ஒன்றுக்கு விராகனெடை-3. வெள்ளைப் போளம் விராகனெடை-10, சீனி சர்க்கரை பலம்-2.

செய்முறை:- சீனி சர்க்கரை தவிர மற்றவைகளையெல்லாம் ஒன்றாக அரைத்துச் சேர்த்து, சீனி சர்க்கரைப் பாகு செய்து அதிற்போட்டு, லேகியம் செய்து கொள்ளவும்.

மாத்திரை:- வேளை ஒன்றுக்கு விராகனெடை-2, பன்னீர் பலம்-2-2½ யுடன் சாப்பிடவும்.

உபயோகம்:- சுபாவ மலபந்தத்தைக் கிரமப்படுத்தி, பித்தம், கபம் ஆகிய துர்நீர்களைக் கண்டித்து வெளிப்படுத்தும். பேதி ஔஷதம் சாப்பிட அருவருப்புள்ளவர்களுக்கும் இது உபயோகப்படத் தக்கது.

குறிப்பு

இந்த முறையில் வெள்ளைப் போளம் விராகனெடை-2, சேர்த்துச் செய்வதும் உண்டு.

22. மேக நிவாரண எண்ணெய்.

சிற்றாமணக்கெண்ணெய் படி-1, முலைப்பால் படி-½ செவ்விளநீர் படி-½ , சிறுகீரை ரசம் படி-¼, சோற்றுக்கற்றாழஞ்சோறு படி-¼, சீரகம் பலம்-5, கற்கண்டு பலம்-5, மாசிக்காய் பலம்-1, ஏலக்காய் பலம்-1, ஜாதிக்காய் பலம்-½, லவங்கம் துலா-¼, குங்குமப்பூ துலா அரைக்கால், ரஸ்தாளி வாழைப்பழம்-4.

செய்முறை:- சரக்குகளையெல்லாம் பன்னீர் விட்டரைத்து எண்ணெயிற் சேர்த்து மற்றவைகளையும் எண்ணெயிற் கலந்து சிறு தீயாலெரித்து, நீர்சுண்டின பதத்தில் இறக்கி வைத்துக் கொள்ளவும்.

மாத்திரை:- பலம்-¾ , 1, பன்னீர் ஷர்பத்தில் அல்லது காடி ஷர்பத்தில் அல்லது சந்தன ஷர்பத்தில் சாப்பிடவும்

உபயோகம்:- சுபாவ மலபந்தம், மலச்சிக்கல் முதலியவை தீரும். மேகவாயுகள், மேகப்படை, மேக சட்டைகள், பெருவியாதி, ஈரற்சூடு, நீர்ப்பையில் அழலை, மூத்திர வொழுக்கு முதலியவைகள் தீரும். இந்திரிய வொழுக்கும் தீர்ந்து, விந்துஸ்தம்பனம் உண்டாகும்.

23. தேகா ரோக்கிய எண்ணெய்

சிற்றாமணக்கெண்ணெய் பலம்-9, பாதாம் நெய் பலம்-3, பசுவின் பால்-3, மேனா பலம்-3, குங்குமப்பூ விராகனெடை-1, எலும்பில்லா ஆட்டிறைச்சி பலம்-48.

4

செய்முறை:- இறைச்சியை நன்றாகக் கொத்தி, இரண்டு பாகஞ்செய்து ஒருபாகத்தில் நான்கு படி ஜலம் வார்த்து வாலையிலிட்டு இரண்டுபடி திராவகமிறக்கி இதில் மற்றப்பாதி இறைச்சியைப் போட்டு வாலையிலிட்டு ஒருபடி திராவகமிறக்கிக் கொள்ளவும். இந்தத் திராவகத்தில் பாதாம் நெய், பசுவின்பால், எண்ணெய் இவைகளைவிட்டு, நீர் சுண்டினபிறகு, குங்குமப்பூவையும் மேனாவையும் அரைத்துப்போட்டு இறக்கிக் கொள்ளவும்.

மாத்திரை:- துலா-2-3, இரண்டு வேளையும் சாப்பிடலாம்.

உபயோகம்:- சுபாவ மலபந்தந் தீரும். தேக வரட்சி, தேக அழலை, மலச்சிக்கல் இவைகள் நீங்கி ரத்த சுத்தியுண்டாகி தேகம் வலுக்கும்.

குறிப்பு

மாம்ச பக்ஷணி அல்லாதவர்கள் சிவகரந்தையை மேற்கண்ட விதமாய்த் திராவகம் இறக்கிச் சேர்த்துக் கொள்ளவும்.

முன் சொல்லப்பட்ட சுகுமார திரிபலாதியும் சுபாவ மலபந்தத்திற்கு உபயோகப்படும்.

மலபந்தம்
(ஆயுர்வேத முறைப்படி)

காரணம்:- மிகவும் காரமான அல்லது இலைப்பான அல்லது குளிர்ச்சியான, அல்லது கைப்பான வஸ்துகளை மிதத்திற்கதிகமாய்ப் புசித்தல், அல்லது அவற்றை அடிக்கடி புசித்தல், மிதமிஞ்சின தேகப்பயிற்சி செய்தல், அன்னபானாதிகளை அவசியமான அளவிற்குக் குறைத்துப் புசித்தல், அல்லது சுத்தமாய் நீக்கி விடுதல், அதிகநேரம் இராக்காலங்களில் விழித்திருத்தல், மிதத்திற்கதிகமாய் நித்திரை செய்தல், அதிக வேகமாய் அடிக்கடி யோடித்திரிதல், அடிக்கடி கடுங்கோபங் கொள்ளல், அடிக்கடி அதி விசனம் நேரிடுதல், கடினமான ஆகாரங்களைச் சாப்பிட்டுத் தேக பயிற்சி செய்யாதிருத்தல், மிதமிஞ்சின சம்போகம் ஆகியவைகளாம்.

மேற்கண்ட காரணங்களினால் திரிதோஷங்களும் அக்கிரமப்பட்டு, அன்னரசம், ரத்தம், ஆகியவை செல்லும் நாடிகளிற்சென்று, அவற்றின் தொழிலைக்கெடுத்து தீபாக்கினி குறைந்து, மலத்தைக் கெடுக்க மலபந்தம் உண்டாம். இது வாத மலபந்தம், பித்த மலபந்தம், சிலேட்டும மலபந்தம், வாத பித்த மலபந்தம், வாதகப மலபந்தம், கப பித்த மலபந்தம், சன்னிபாத மலபந்தம், ஆம மலபந்தம் என எட்டு வகையாம்.

வாத மலபந்தமானது வயிற்றுப்பிசம், வயிற்றில் நோய், தேக நடுக்கம், தலைநோய், வெண் விழியில் கொஞ்சம் நீல வருணமாயிருத்தல், தேகாதியந்தமும் நொறுக்கினதுபோல் இருத்தல் ஆகிய இக்குணங்களையும் உடையதாம்.

பித்த மலபந்தமானது வயிற்றிலும் நெஞ்சிலும் எரிச்சல், வரட்சி, கண்களில் நோவு, அவை மஞ்சள் சாயலான வருணமாயிருத்தல், தாகம் அதிகமாயிருத்தல், மூத்திரங் குறைதல், அதன் வருணம் மஞ்சணித்திருத்தல், மனத்திடுக்கம், அரோசகம் ஆகிய குணங்களையுடையதாம். இதில் பித்தச்சூடு அதிகரித்து குடற்களில் வரட்சி உண்டாவதினால் மலபந்தப்படுகிறதென அறிந்திருத்தல் வேண்டும்.

கப மலபந்தமானது, வயிற்றில் நச்சுவலி, தேகம் வெளுத்து நனைந்தது போலிருத்தல், சிறுநீர், கண் ஆகியவை வெளுத்திருத்தல், வாயில் நீர் அதிகமாக ஊறல், கண்ணில் நீர்வடிதல் ஆகிய குணங்களை உடையதாம்.

வாதபித்த மலபந்தமானது தாகம், தேக கனம், தலைநோய், வாயிலும் தொண்டையிலும் வரட்சி, அரோசகம், எரிவந்தம், ஈரல் கனத்தல், அங்கு வலியிருப்பதுபோல் தோற்றல் ஆகிய குணங்களையுடையதாம்.

வாதகப மலபந்தத்தில், வயிற்றுப்பிசம், இருமல், மனத்திடுக்கம், தேகத்தின் மீது ஈர வஸ்திரத்தை வைத்தது போலிருத்தல், கண் கலங்கியிருத்தல், தலைப்பாரம், சோம்பல், அசதி, வயிற்றில் ஏதேனும் ஒரு வஸ்து ஊறுவது போலிருத்தல், கால் கெண்டைச் சதையில் நோவு, ஆகிய இக்குணங்களை உடையதாம்.

கபபித்த மலபந்தமானது, சில சமயங்களில் தேகத்தில் சூடுண்டாதல், சில சமயங்களில் தேகம் ஜில்லிடுதல், வாய் நீரூறல், வயிற்றிலெரிச்சல் ஆகிய இக்குணங்களை உடையதாம்.

சன்னி பாத மலபந்தம், ஆம மலபந்தம் ஆகிய இவைகள் மேற்கண்ட லக்ஷணங்கள் ஒன்றோடொன்று தொந்தித் திருப்பதேயாம். மேலும் அவை தனியாய்க் காணாமல் இதர வியாதி சம்பந்தமாகவே காணும்.

பின் காணும் சிகிச்சைகளில் அவரவர்களின் தேக சுபாவம், வயது, காலம் முதலியவைகளைக் கவனித்து, சமயோசிதமாய்த் தகுந்த விதமாய்ச் செய்து வியாதியைக் குணப்படுத்த வேண்டும்.

24. கர்க்கடக சிங்கிச் சூரணம் பங்கு-4, கிச்சிலிக் கிழங்குச் சூரணம், சோம்புச் சூரணம், இவை வகை-1-க்கும் பங்கு-2, பொரித்துப் பொடித்த வெண்காரத் தூள் பங்கு-1.

செய்பாகம்:- இவையெல்லாவற்றையும் ஒன்றாக மிஸ்ரமித்துக் கொஞ்சம் சலம் வார்த்தரைத்துக் கடலைப் பிரமாணம் மாத்திரைகளாகச் செய்து கொள்ளவும்.

மாத்திரை:- 3-4-மாத்திரைகள் வெந்நீருடன் உட்கொள்ளலாம். குழந்தைகளுக்கு ஒரு மாத்திரை கொடுக்கலாம்.

உபயோகம்:- இரைப்பையிலுள்ள வாயு, கபம், சீதளம் ஆகியவை தீரும். இது பாலர்களுக்குச் சஞ்சீவி.க் கொரப்பானது.

25. மேல்தோல் நீக்கியிடித்து வஸ்திரகாயம் செய்த சுக்குச்சூரணம், கர்க்கடக சிங்கிச் சூரணம், சீனி சர்க்கரை, குச்சு முதலியவை நீக்கி இடித்து வஸ்திர காயஞ் செய்த சூரத்து நில ஆவாரையிலைச் சூரணம் இவை வகை-1-க்குப் பங்கு-1, விதையில்லாத திராக்ஷைப்பழம் பங்கு-5. இவையெல்லாவற்றையும் ஒன்றாய்ச் சேர்த்துக் கல்லுரலிலிடித்து லேகியபதமாக எடுத்துப் பீங்கான் பாத்திரத்தில் பத்திரப்படுத்தவும். காலை மாலை இரண்டு வேளையும் அல்லது ஒருவேளை, விராகனெடை-4-6-சாப்பிடவும். இவ்விதம் 40-நாள் செய்யின் வழமையான மலபந்தந்தீர்ந்து, மந்தாக்கினி ரோகந்தீரும்.

26. அரிதகி லேகியம்

மஞ்சள் கடுக்காய்த்தோல் சூரணம் பலம்-10 மேற்புறணி, உள்நரம்பு, ஆகியவை நீக்கப்பட்ட சிவதை வேர்ச்சூரணம் பலம்-2, சூரத்து நில ஆவாரை இலைச் சூரணம் பலம்-2, கடுகு ரோகணி, இலவங்கம், சிறு நாகப்பூ, வாலுழுவை அரிசி, கர்க்கடக சிங்கி, கருஞ்சீரகம், மிளகு, தான்றிக்காய்த் தோல், கொத்தமல்லி, தாளிசப் பத்திரி, இவற்றைத் தனித் தனி இடித்த சூரணம், வகை-1-க்குப் பலம்-¼, கையாந்தகரை, வல்லாரை, புளியாரை, இவற்றை நிழலிலுலர்த்தி இடித்து வஸ்திரகாயம் செய்த சூரணம் வகை-1-க்குப் பலம்-2, சீனி சர்க்கரை பலம்-25, பூநீறு விராகெனடை-1.

செய்முறை:- எல்லாச் சூரணங்களையும் ஒன்றாக மிஸ்ரமித்து, சீனியைப் பாகு செய்து, பாகு பதத்தில், சூரணத்தைத் தூவிக் கிண்டிக் கீழிறக்கி, பூநீற்றைப் பொடித்துத் தூவிப் பத்திரப்படுத்தவும்.

மாத்திரை:- வேளை-1-க்கு விராகெனடை-1-1½ - காலை மாலை இரண்டு வேளையும் உட்கொள்க.

உபயோகம்:- மலக்கட்டு, சலக்கட்டு, கோழைக்கட்டு, உஷ்ணவாயு, மேக காந்தல், கைகாலெரிவந்தம், குடல் புரட்டல், குலையெரிதல், மூலாதாரச் சூடு, அழலை, இளைப்பு, இருமல், புகைச்சல், வரட்சி, சோகை முதலியவை தீரும். (சுபானுபவம்)

27. கடுக்காய்த் தித்திப்பு

விதை முத்தாமல் இளம்பதமான பச்சைக் கடுக்காய்ப்பிஞ்சு பலம்-32; ஈச்ச முட்களை, அல்லது கூர்மையாகச் சீவப்பட்ட மூங்கில் குச்சுகளை, நாலைந்தை

ஒன்றாகச் சேர்த்து ஒருகட்டாகக் கட்டிக்கொண்டு, மேற்படி காய்களை ஒவ்வொன்றாக முழுவதுங் குத்தி, புளித்த மோரிற் போட்டு ஒருநாள் ஊற வைத்து, மறுநாள் அதை இறுத்துத் தண்ணீர் விட்டுக் கழுவி எடுத்து, சீனி சர்க்கரை பலம்-40. இதனுடன் கொஞ்சம் சலம் சேர்த்துப் பாகு செய்து அதில் 8-பலம் மேல் தோல் நீக்கின இஞ்சியை இடித்து ரசம் பிழிந்துவிட்டு, மறுபடியும் காய்ச்சி இளம்பதத்தில் முன் சித்தப்படுத்தின கடுக்காய்களைப் போட்டு, தீ மெதுவா யெரித்து, பாகெல்லாம் சுண்டின பின்னிறக்கி, அதில் மூங்கிலுப்பு விராகனெடை-8, திராக்ஷ உப்பு விராகனெடை-12, இவ்விரண்டையுந் தூள் செய்து தூவி, கடுக்காய் உடைந்து போகாமல் சாக்கிரதையாய் மெதுவாய்க் கிளறி, ஜாடியில் பத்திரப்படுத்தவும்.

மாத்திரை:- காலையில் மேற்படி கடுக்காய் ஒன்றுடன் தங்கரேக்கு-1, சுற்றியும், மாலையில் அக்கடுக்காய் ஒன்றுடன் வெள்ளி ரேக்கு-1 சுற்றியும், உட்கொள்ளவேண்டும். இவ்விதம்-20-40 நாள் செய்யலாம்.

உபயோகம்:- மலபந்தம், மலச்சிக்கல், குன்மம், கிருமிகள், மூலம், மூலவாயு, மூலக்கடுப்பு, மூலச்சூடு, பித்தச்சூடு, அக்கினி மந்தம் ஆகியவைகளும் தீரும்.

குறிப்பு

தங்க ரேக்கிற்குச் சக்தியில்லாதவர்கள் வெள்ளி ரேக்காகிலும் இரண்டு வேளையும் உபயோகப்படுத்த வேண்டும். அதற்கும் வகையில்லாதவர்கள். தனியாகவும் உபயோகப்படுத்தலாம்.

28. பாவன கடுக்காய்

கடுசதங்கழிவு பிற்புனற்குளிடு கரிமதப்பகல் கழித்தறல், கக்கவைத் திவண முத்தரஞ் செயிருகண்ட மாக்குவிட நீக்குபின்; விடுதகும்படி கடைந்த மோரையதில் வேலையுப்பிடுமுன் னோதுகாய், வீறு நாலிலொரு கூறடுப்பினில்வை மெல்லலேயெரி வறண்ட பின்; படையடுஞ்சசிய மோதமுமரைப் பலமுதற் செவியம் வனிகணை, பாலெல்லாம் பொடிசெய் தூவுதூவு சம் பழரசம் பெய்பெய் குலுக்கற; எடுபினந்தநாளிஞ்சிநீர் பெய்யிதை எரியுலர்த் தசன முன்பினுண், இருமல் மந்தம் உதரத்தினோய்வமன மில்லை பத்தியமுமில்லையே.

(இதன் பொருள்) பருமனான நூறு கடுக்காய்களை (ஒரு மண் பாண்டத்திலிட்டு) அதில், அரிசியை இரண்டாந் தடவை கழுவின கழுநீரை மிதக்கவிட்டு, மூன்றிராப்பகல் வைத்து (நாலாம்நாள்) அந்த சலத்தை இறுத்து விடவும். இவ்விதம் மூன்று தடவைகள் செய்து அக்கடுக்காய்களை இரண்டிரண்டாகப் பிளந்து, உள்கொட்டைகளை நீக்கிவிட வேண்டும். பின்பு அதில் (பசுவின்) மோரை (மிதக்க) விட்டு, பிரதம கடுக்காய்களின் எடை யில்

காலெ:டை உப்பை, அதில் கஸ்ரைத்து, அடுப்பேற்றி, (சிறு தீயாக) எரித்து, அந்த மோரெல்லாம் சுண்டினபின் (மேல்தோல் நீக்கப்பட்ட) சுக்கு, கருப்புப்பு, இந்துப்பு, ஓமம், இவற்றின் சூரணம் வகை-1-க்குப் பலம்-½, செவியம், கொடிவேலிவேர்ப்பட்டை, திப்பிலி, இவற்றின் சூரணம் வகை-1-க்குப் பலம்-¼, இவ்விரண்டுவகைச் சூரணங்களையும் ஒன்றாய் மிஸ்ரமித்து முன் சித்தப்படுத்தின கடுக்காய்களில் தூவித் தூவி, (கடுக்காய்களுடைந்து போகாமல்) மெதுவாய்க் குலுக்கிக் குலுக்கி அல்லது கிளறிக்கிளறி, அதில் எலுமிச்சம் பழ ரசத்தைவிட்டு நன்றாய்க் குலுக்கி, அது சுண்டினபின், இஞ்சி ரசம் பிழிந்து, (அதன் சுண்ணாம்பை நீக்கி, முன் பழரச அளவே விட்டு) வெயிலில் (நீர் வற்ற) உலர்த்தி எடுத்துக் கொள்ளுவதே பாவன கடுக்காயாம். இதில்-½ -1-1½ - காய்களைப் போசனத்திற்கு முன்னும், அதன் பின்னும் உட்கொண்டு வந்தால், மலபந்தம், மலச்சிக்கல், குன்மரோகம், வமனரோகம், அரோசகரோகம் முதலிய பல நோய்கள், குடல்கள் சம்பந்த ரோகங்கள், இருமல், மூலம், பாண்டு, பீனிசரோகம் முதலிய ரோகங்கள் தீரும். இதற்கோ ஒரு பத்தியமுமில்லை.

குறிப்பு

இதில் பொதினாயிலை ரசத்தைச் சேர்த்துச் செய்வதும் உண்டு, நெல்லிக்காய்களை வேக வைத்துச் சேர்த்து உபயோகிப்பதும் உண்டு.

விண்ணப்பம்

இது வரையில் நாம் இந்திரிய சிராவகத்திற்குப் பிரதான காரணமான மலபந்தத்தை நீக்கப் பலவகைப் பிரயோகங்களைச் சொன்னோம். இவற்றுள் அவரவர்கள் தேக தத்துவ முதலியவைகளுக்குத் தகுந்ததைச் செய்து உபயோகித்து மலபந்தந் தீர்ந்து போனால் உடனே இந்திரிய சிராவகமும் தீர்ந்து, கிரமேணுவாய்த் தம்பன சக்தி உண்டாகி, தாது விர்த்தியுண்டாகும். அவ்விதம் மலபந்தம் நீங்கி அது கிரமப்பட்டும் இந்திரிய சிராவகம் நிற்காவிட்டால், பின்னர் சொல்லப்படும் இந்திரிய சிராவக நிவாரண முறைகளிலொன்றைச் செய்து உபயோகிக்கின் கடவுளினது கிருபையால் பூர்ண சுகம் உண்டாம்.

மூலரோகம்

இந்திரிய சிராவகத்திற்கு மூலரோகமும் காரணமாமென்பது முன்னமே சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் இது மகா ரோகங்களில் ஒன்றானபடியால், இதன் காரணம், லக்ஷணம், சிகிச்சை முதலியவைகளைக் குறித்தும் தனியே ஒரு கிரந்தம் இருக்கின் அநேகருக்குப் பிரயோசன முள்ளதாயிருக்கும். ஆனால் இந்த வியாதியைப் பற்றி இங்கு அதிக விவரமாய் எழுதுவதினாலும் இச்சிறு நூல் அதிக விரிவெய்திவிடும். அதைப்பற்றி எழுதாமல் விட்டு விடுவதும் யுக்தமாய்க் காணப்படவில்லை. ஆகையால் இவ்விரு வித சங்கட்டங்களைக் கடக்கும் பொருட்டு, அந்த வியாதியைப் பற்றின முக்கியாம்சங்களை மாத்திரம்

சுருக்கமாகவும், யாவரும் எளிதாய்த் தெரிந்து கொள்ளும் படியாகவும் மூன்று வகை வைத்திய முறைகளையும் சங்கிரகமாய் எழுதுவாம்.

மூலரோகம்
(இங்கிலீஷ்)

குதத்தின் வரம்பிலுள்ள நாளங்கள் பெருத்து அதில் காண்கிற முளைகளென்னும் சிறு கட்டிகளின் கூட்டத்திற்கு மூல ரோகமெனப் பெயர். இம்முளைகள் தனித்தவைகளாகவும், ஒன்றோடொன்று சேர்ந்தவைகளாகவும், வளையமாய் அல்லது பிதுக்கமாயிருப்பதுண்டு. ஆனால் சிலசமயம் இம்முளையானது தன்னைச் சுற்றிலும் வீக்கமான அல்லது அகலமான ஒரே வளையத்தை உடையதாயிருக்கிறது. இம்முளைகளிலிருந்து ரத்த முதலியவைகள் வடிவதுண்டு. முக்கியமாய் மல விசர்க்கத்தின்போது இது காணும். ரத்தம் வடிவதற்கு ரத்த மூலமென்று பெயர். சிலருக்கு ரத்த முதலியவைகள் ஒன்றும் வடிகிறதில்லை. அவ்வித வியாதிக்கு சுட்க மூலமெனப் பெயர். பரம்பரையை அடுத்துத் தாய்தந்தைகள் வழியாய் ஒட்டிவருகிற மூல ரோகமெனப் பெயர்.

காரணம்:- மலபந்தம், குதிரைமீது கடின சவாரி செய்தல், போளம் முதலிய கடின பேதி மருந்துகளை அடிக்கடி உபயோகித்தல், காரமான வஸ்துக்களை அதிகமாய்க் கையாடி வருதல், திராக்ஷா சாராயத்தை அதிகமாய்ப் பானஞ்செய்து வருதல், சகஜமாய்த் தேகத்தினின்று வெளிப்படும் மேன்மிச்ச வஸ்துக்களைத் தடுத்தல் அல்லது அடக்கல், ஆசனத்திற்குள் வர்த்தி முதலியவைகளை முறை பிசகாய் உபயோகித்தல், அதிகோபம், அதிக விசன முதலியவை அடிக்கடி உண்டாதல், சதாகாலம் உட்கார்ந்தே இருத்தல், முக்கியமாய் அசுத்தமான விடங்களிலிருத்தல், முதலியவைகளாம்.

லக்ஷணம்:- முதுகு, இடுப்பு, கீழ்வயிறு ஆகிய ஸ்தானங்களிற் பாரமாய்த் தோற்றல், சில சமயம் தலை நோய், தலை சுழற்றல், வாந்தி வயிற்றுப்பிசம், ஆகிய இவைகளுண்டாதல், மல விசர்க்கத்தின் போது ஆசனத்தில் கடுப்புண்டாவதுடன், அங்குள்ள முளைகள் வெளிக்காணல், அப்போது இம் முளைகளுடைந்து ரத்தஞ் சொட்டுதல், அதனால் வேதனையானது சற்று சாந்தப்பட்டது போலிருத்தல், மல விசர்க்கத்தின்போது கட்டிகளுடையாமல் இருத்தல், மலத்தைக் கழிக்கப் பிரயத்தனப்படும் ஒவ்வொரு தடவையும் அதிக எரிவந்தமும், கடுப்பும் உண்டாயிருத்தல், சில சமயம் கொஞ்சக் கடினமான ஆசனத்தின் மீதும் உட்கார்ந்திருக்கப் பொருந்தாமை, குதத்தில் மேற்படி கட்டிகள் ஏராளமாய் உண்டாகி விடுவதினால் அவை ஆசனத்தின் துவாரத்தின் மேற்புறத்தும் பரவியிருப்பதால், அந்த ஸ்தானங்களின் மேல் நீர்ப்பை படியுமாகையால் மூத்திரம் பெய்யும் போது எரிவந்தம் முதலியவைகளுண்டாதல் ஆகியவைகளாம்.

குறிப்பு

ஆசனத்திலிருந்து ரத்தம் வெளிப்படுவதை எல்லாம் வியாதியென்றே தீர்மானித்து, அதைப் பந்தப்படுத்த முயற்சி செய்யலாகாது. ஏனெனில் சில சமயங்களில் அப்படி ரத்தம் வெளிப்படுவதினால் சிற் சில வகை வியாதிகளில் மூக்கிலிருந்து ரத்தம் வடிவதினால் உண்டாம் நன்மைகளைப் பார்க்கிலும் அதிக நன்மையுண்டாம். இவ்விதம் ரத்தம் வடிவது சிற்சில வியாதிகள் உண்டாக ஏதுவில்லாமற் போம்; ஒரு வேளை அப்படியுண்டாயிருக்கினும் அவை பிரபலப்படுவதைத்தடுத்து, அவற்றை முற்றும் பற்றற நீக்கித் தேக ஆரோக்கியத்தை உண்டு பண்ணும். ஆசனத்திலிருந்து ரத்தம் வடிவதனால், கீல்வாதம், சுவாசகாசம், உதரத்தின் நோய்கள் ஆகிய வியாதிகள் அநுகூலப்படும். குடல் முறுக்குநோய் உடையவர்களுக்கும், விஷ சுரம் உடையவர்களுக்கும் நல்ல தருணத்தில் ஆசனத்தில் ரத்தம் வடிந்து, அவ்வியாதிகள் சவுக்கியப் பட்டிருக்கின்றன. ஆனால் வயது, தேகபலம் முதலியவைகளை நிதானித்து, ரத்தம் வடிவதினால் ஏதேனும் தேக சுபாவ விகற்பங்களுண்டாகிறதா என நிதானித்து, அப்படி உண்டாகும் காலங்களில் உடனே சிகிச்சை செய்ய வேண்டும். எவ்விதமெனில், ஆசனத்திலிருந்து ரத்தமானது நெடுநாளாய்த் தொடர்ச்சியாய் வடிந்து வருகிறதா? அப்படி வடிவதினால் தேகம் துர்ப்பலப்படுகிறதா? அல்லது பசிதீபனக் குறைவுண்டாகிறதா? அல்லது அன்னபானாதிகள் அதிகமாய் உட்கொண்டும், தேகம் வற்றியிளைத்து வருகிறதா? அல்லது தேகத்தில் வேறேதேனும் விகற்பங்கள் காணப்படுகிறனவா? என நிதானிக்க வேண்டும். அப்படி யொருவிகற்பமும் காணப்படா விட்டால், அதனால் சுகுணமே உண்டாகுமென நிச்சயித்து, அதைப் பந்தப்படுத்த ஒரு முயற்சியும் செய்யலாகாது. அவ்வித ரத்தம் வடிதல் தனக்குத் தானாய் நின்றுவிடும்.

மூலரோகப் பொதுச் சிகிச்சை

எல்லா வகை வியாதிகளின் சிகிச்சையிலும் முன்னர் அதது உண்டான காரணத்தை நீக்க முயற்சி செய்வது போலவே இந்த வியாதியின் சிகிச்சையிலும் முன்னர் இது உண்டான காரணத்தை நீக்க வேண்டியது. பின்பு குளிர்ச்சியானவைகளும், சத்துள்ளவைகளுமான ஆகார பதார்த்தங்களைக் கையாடி வரவேண்டியது. முக்கியமாய், ரொட்டி, பால், குளிர்ச்சியான மரக்கறி பதார்த்தங்கள் ஆகியவைகளை உபயோகிக்கலாம். இறைச்சி சாப்பிடுகிறதானால், அதில் குளிர்ச்சியான காய் கறி பதார்த்தங்களையும் கூடச்சேர்த்துச் சமைத்துச் சாப்பிடவேண்டும். கிச்சிலி ததிமஸ்து (Orange whey.) பானஞ்செய்வது அதிகப் பிரயோசனத்தைத் தரும்.

29. கிச்சிலி ததிமஸ்து

கிச்சிலிப்பழச் சுளை ரசம் அரை பையின்ட் அல்லது சுமார் ஆழாக்கு-6¼, பசும்பால் பையின்ட்-2, அல்லது சுமார் ஆழாக்கு- 6½ , இவ்விரண்டையும் கலந்து

அடுப்பேற்றிக் காய்ச்சவேண்டும். இது தயிராகி, உடைந்து இத்தயிர் வேறு, ஜலம் வேறாய்ப் பிரிந்த பின்னிறக்கி வடிகட்டித் திப்பி நீக்கி ஜலத்தை சீஷாவில் பத்திரப்படுத்த வேண்டும். இவ்விதம் சித்தப்படுத்தின ஜலமே கிச்சிலி ததிமஸ்தாம்.

இதில் வேளை-1-க்குப் பலம் 1-1½ -2, ஆக தினம் இரண்டு மூன்று வேளைகள் பானஞ் செய்யலாம்.

இரத்த ஓட்டத்தைக் கட்டத் தக்கதும், வழ வழப்புள்ளதுமான வஸ்துக்களைக் கியாழம் செய்து கொடுக்கலாம். இதற்காக துத்திவேர் முதலியவைகள் உபயோகப்படும்.

30. துத்திவேர்க் கியாழம்

உலர்ந்த துத்திவேர் (Marsh Mallow) அவுன்ஸ்-9, விதையில்லாத திராக்ஷாப்பழம் அவுன்ஸ்-1, இவற்றை மூன்று பையின்ட் சலத்திற் போட்டு, ஒரு பையின்டிற்குச் சுண்டக்காய்ச்சி, வடிகட்டி அசையாமல் வைத்தால் வண்டல் அடியில் படிந்துவிடும். பின்பு தெளிவா இறுத்துக்கொண்டு, உபயோகித்துக் கொள்ள வேண்டியது. துத்திவேரானது அதிகமா யுலர்ந்ததானால் அரைப்பாகமாகச் சுண்ட வைத்துக் கொள்ள வேண்டும். இவ்விதம் சித்தப்படுத்தின கியாழம் ஒரு தினத்திற்கு-1-2, பையின்ட் அளவிற்கும் பானஞ்செய்யலாம். இக்கியாழம் மதுரமாகவும் இருக்கும்.

இன்னும் ஒரு பலம் குல்கந்தை, அரையாழாக்குப் புதிதாய்க் கறந்த பசுவின் பாலில் கரைத்துப் பானம் செய்யலாம். இவ்விதம் தினம் ஒன்றுக்கு மூன்று நான்கு தடவைகள் செய்யலாம். இம்முறைகளெல்லாம் மிகவும் அநுபோகமானவைகள். ஆனால் எப்போதும் ஒரு விஷயத்தை மாத்திரம் ஞாபகத்தில் வைத்திருக்க வேண்டியது மிகவும் முக்கியமானது. அதாவது இந்த வியாதியஸ்தர்கள் அவரவர்கள் வியாதியின் பலத்திற்குத் தக்கபடி இம்முறைகளை விடாமல் தொடர்ச்சியாய்ச் சிலகாலம் செய்து வந்தால் மாத்திரம் குணம் உண்டாம். அப்படியில்லையாயின் அதிகப் பிரயோசனத்தை அடையார்களென்பதே மேற்கண்ட முறைகளும் பின்காணும் முறைகளும் பலதடவைகள் உபயோகித்து கைவல்லியமானவைகளேயாம். மேற்கண்டபடி குல்கந்து பானத்தைக் குடித்த ஒவ்வொரு மணிக்குப் பின்னும் பலம்-1-1½ , பன்னீரைப் பானம் செய்து வந்தால் அதிகப் பிரயோசனத்தைக் கொடுக்கும்.

இச்சமயத்தில் ஸின்கோனாப் பட்டைச் சூரணத்தைப் பிரயோகித்தால் அதிகப் பிரயோசனத்தைக் கொடுக்கும். ஏனெனில் இது பலத்தைக் கொடுக்கத் தக்கதும் இரத்தம் வடிதலைப் பந்தப்படுத்தத் தக்கதுவாம்.

31. 1½ -அவுன்ஸ் சிவந்த திராக்ஷா பானத்தில் அரை திராம் ஸின்கோனாப்பட்டைச் சூரணத்தைப் போட்டுக் கலக்கி, அதில் விளாவின

கெந்தக திராவகம்-4, 5, துளிகள் விட்டுப் பானஞ் செய்து வருவதினாலும், அதிகப் பிரயோசனமும் உண்டாகும்.

இரத்தமூல சம்பந்தம் உடையவர்களுக்குச் சிற்சில சமயங்களில் வரையறையான காலங்களில் மாதம் 2-9-தடவைகள் இரத்தம் வெளிப்படுவதுண்டு. இவ்விதம் இரத்தம் வெளிப்படுவதனால், இளைப்பு, களைப்பு முதலிய தேக விகற்பங்க லொன்றுமில்லையாயின், அதனால் சுகாதாரத்திற்கு ஏதுவாம். இவ்விதம் வழமையாய், வரையறையான காலங்களில் வெளிப்படும் ரத்தத்தைப் பந்தனப்படுத்தின அநேகர்களுக்குப் பலவித சுகக் கேடுகளுண்டானதை நம் அனுபோகத்தில் அநேகந் தடவைகள் கண்டிருக்கின்றோம்.

சுட்கமூல ரோகத்தில் ரத்தங் குத்தி வாங்குவது பொதுவாய்ச் சுகுணத்தைத் தரும். சுட்கமூல ரோகிகளுக்கு, ஆகாரமானது பரிசுத்தமானதாகவும், இளகலானதாகவும் இருக்க வேண்டும். குளிர்ச்சியான வஸ்துகளையே எப்போதும் அடிக்கடி உபயோகித்து வரவேண்டும். சுட்கமூல ரோகமுடையவர்கள். எக்காலத்திலும் மலந் தாராளமாயிருக்கும்படி கவனித்து வரவேண்டியது மிகவும் முக்கியமான கடமை. இதற்காக பதங்கித்த கெந்தகமும் (Flowers of Sulphur) முந்திரியுப்பும் (Cream of Tartar) அதிகம் உபயோகப்படத் தக்கவைகள்.

32. பதங்கித்த கெந்தகம் விராகனெடை-4, முந்திரியுப்பு விராகனெடை-4, இவ்விரண்டையும் மிஸ்ரமித்தரைத்து அதில், முக்கால் விராகனெடையாக தினம்-1-க்கு இரண்டு மூன்று தடவைகள், அவசியமானால் அதிகந் தடவைகள் உட்கொண்டுவர, மலம் தாராளமாய்ப் போகும்.

இந்த ரோகிகளுக்கு மலகாரி வர்த்திகளும் அதிகப் பிரயோசனத்தைக் கொடுக்கத் தக்கவைகள். ஆனால், ஆசன வாயிலானது சில சமயங்களில் வர்த்தி முதலியவைகள் செல்ல ஏதுவில்லா விதமாய் அவ்வளவு கடினமாய் நெருக்கப்பட்டிருக்கும். அந்தச் சமயங்களில் வாந்திக்குப் கொடுப்பதினால் பலவித பிரயோசனங்களுண்டானதைப் பல தடவைகளிலும் அனுபவமாய்க் கண்டு வரப்படுகிறது. ஆசனமானது வீங்கி அதிகவருத்தமுண்டாகி, அதிலிருந்து ஒருவித அசுத்த நீரும் வெளிப்படாதிருந்தால், அப்போது அந்த ஸ்தானத்தில் படும்படி வெந்நீர் ஆவி பிடிக்கலாம். ஆல்கோஹல் (Alcohol) சாராயத்தில் மெல்லிய சல்லாத் துண்டை நனைத்து மடித்து வைத்துக் கட்டலாம் அல்லது, பால் போல் டிஸ் செய்து வைத்துக் கட்டலாம் அல்லது நரி வெங்காயத்தை அரிந்து நெய்யில் வறுத்து வைத்தும் கட்டலாம்.

இவ்விதம் செய்தும் அசுத்தசத்து வெளிப்படாதிருந்தாலும், ஆசனம் வீங்கிப் பெருத்திருந்தாலும், கூடினவரையில் குதத்தின் வரம்பின் சமீபத்தில் அட்டைகளை

விட வேண்டும். அட்டைகள் தாமே குதத்தின் விளிம்பில் கடித்து, பிடித்துக் கொண்டால் மிகவும் நன்மையே. இப்படிச் செய்வதினால் சுகுண முண்டாகும்.

அந்த ஸ்தானங்களில் அட்டைகள் பிடிக்காவிட்டால், முளையைக் கத்தியினால் கொஞ்சங் கீறிவிட்டால் சுகுணம் உண்டாகும். இவ்விதம் கீறிவிடுவது பெருத்த காரியமுமன்று. அதனால் ஒருவித அபாயமும் நேரிடாது. ஆயினும் இச்சிகிச்சை தெரிந்தவர்கள் மூலமாகவே செய்வித்துக் கொள்ள வேண்டும்.

இந்த ரோகத்தில் உபயோகப்படுத்தப்படும் அநேகவித களிம்பு முறைகளிலிருந்தும், அவற்றுள் ஒன்றேனும் நன்னம்பிக்கை வைக்கத் தக்கதாய்க் காணப்படவில்லை. அவைகளெல்லாம் முக்கியமாய் ஆசனவாயைச் சுருங்கவிடாமற் செய்வதே அவற்றின் பிரதான குணமாயிருக்கிறது. இவ்விஷயமானது சாதாரணமான பற்று முதலியவைகளை உபயோகிப்பதினாலும் உண்டாகும். இவ்வகைகளில் கீழ்க்காணும் களிம்புகள் மிகவும் நம்பத் தகுந்தவைகளும், நிச்சயமாய்க் சூணந் தரத்தக்கவைகளுமாம்.

33. வேதனா சாந்தக் களிம்பு

தேங்காயெண்ணெய்	திரவ	அவுன்ஸ்	24
ஜய்தூன் எண்ணெய் (Olive Oil))	திரவ	அவுன்ஸ்	30
மஞ்சள் மெழுகு		அவுன்ஸ்	8
கர்ப்பூர திராவகம்	திரவ	அவுன்ஸ்	4

செய்முறை:- தேங்காயெண்ணெய், ஜய்தூன் எண்ணெய் ஆகிய இரண்டையும் கலந்து, மெழுகையதிற் போட்டு சிறு தீயாயெரித்து, மெழுகு உருகின பின் கர்ப்பூரத் தைலத்தைச் சேர்த்து வடிகட்டி வைத்துக் கொள்ளவும்.

உபயோகம்:- இதனை மேற்பூசிவர, வீக்கம், வேதனை முதலியவைகள் தீரும்.

மேற்படி வேதனாசாந்தக் களிம்பு திரவ அவுன்ஸ்-2, அபினி பாவனாத் திராவகம் (Tincture of opium) திரவ அவுன்ஸ்-½ , முட்டை மஞ்சட்கரு-1, இம்மூன்றையும் ஒன்றாகக் கலந்து நன்றாய் மர்த்திக்கக் களிம்பாம்.

இதனை வேதனையுள்ள இடத்தில் மேற் பூசிவர, வேதனை சாந்தப்பட்டுச் சுகுணம் உண்டாகும்.

இந்த வியாதியில் மலபந்தப்பட்டிருப்பது சகஜமாகையால் கண்டபேதி மருந்துகளை உபயோகிப்பது கூடாது. ஏனெனில் பேதி மருந்துகளில் பெரும்பான்மையும் போளஞ் சேர்ந்திருப்பதே காரணம். மலக்கட்டிற்காக அப்போதைக் கப்போது ஒரு கரண்டி ஆமணக்கெண்ணெயைக் குடித்து வந்தால் மலபந்தம் நீங்கிவிடும்.

ஆசனம் வீங்கியிருக்கும்போது வங்க உப்பு ஜலமும் (Solution of Sugar of lead) அபினி பாவன திராவகமும் கலந்து பூசி வருவதினால் அதிகப் பிரயோசனம் உண்டாகும். இந்த வியாதியில் உபயோகப்படுத்தும் களிம்பு முறைகளில் கீழ்க்காணும் முறையும் அதிகம் சிலாக்கியமானது.

மேற்படி வேதனாசாந்தக் களிம்பு	திராம்	3¼
சன்னமாகச் சூரணித்த மாசிக்காய்த்தூள்	திராம்	3½
கொழுப்பு	திராம்	3¼

இம்மூன்றையும் ஒன்றாக மிஸ்ரமித்துக் கொள்ளவும்.

உபயோகம்:- வேதனை, வீக்கம் முதலியவைகளுள்ள இடத்தில் பூசி வருவதினால், அவை தணிந்து சாந்தப்பட்டு சவுக்கியம் உண்டாம்.

ஆசனம் வீங்கி வேதனை அதிகப்பட்டு மேற்பூசும் மருந்துகளினால் வசப்படாவிட்டால், வாந்திக்குக் கொடுப்பது உத்தமம். அதனாலும் குணப்படாவிட்டால் தெரிந்தவர்களினால் ஆயுத சிகிச்சை செய்விப்பதே நன்மையாம்.

மூலரோகம்
(யூநாநி)

ஆசனத்தில் அல்லது அதன் விளிம்பில் புடைத்து வீங்கிக்காணும் மேண்மிச்சமான கட்டிக்கு அல்சரோகமெனப் பெயர்; இதற்கு மூல மூளையெனச் சொல்வது வழமை. இதில் துவாரம் அல்லது வாயுண்டாய், அதினின்றும் இரத்தம் அல்லது மஞ்சள் சாயலான நீர் முதலியவை வெளிப்படின், அதற்கு ரத்த மூலமென்றும், வாயில்லாமல் யாதொரு வித அசுத்த நீரும் வெளிப்படாவிட்டால் அதற்கு சுட்க மூலமென்றும், ஆசனத்தின் உட்புறத்தில் மூளை கண்டால் உள் மூலமென்றும், ஆசனத்தில் வெளிப்புறத்தில் அது கண்டால் வெளி மூலம் என்றும் பெயர் பெறும்.

இன்னும் (1) ஆசனத்தின் அடி வீங்கிப் பெருத்து, அதிலிருந்து ஏதேனும் அசுத்தநீர் வெளிப்பட்டால் அதற்கு அடி மூலமென்றும், (2) வேர்கள் கிளைகளுடையதாய்ப் பரவியிருக்கின் அதற்கு விருக்ஷ மூலம் அல்லது கொடி மூலமென்றும், (3) பச்சை முந்திரிகைப் பழத்தைப்போல் உருண்டு அகன்றிருக்கின் அதற்கு திராக்ஷா மூலமென்றும், (4) அத்திப் பழத்தைப் போலிருப்பதற்கு, உதும்பர மூலமென்றும், (5) கடலை, துவரை முதலியவைகளைப் போலிருப்பதற்கு மணி மூலமென்றும், (6) பேரீச்சங் காயைப்போல நீண்டு கடினமாய் இருப்பதற்குக் கர்ச்சூர மூலமென்றும், (7) கம்பிளிப் பூச்சிப் பழத்தைப்போல நீண்டு [illegible]வாய் இருப்பதுடன் அதன் முகமானது திரட்சியாய், சிறு வேர்களையுடையதாய் இருப்பதற்கு ஷால்மலி மூலமென்றும் பெயர்.

இவ்வேழு வகைகளில் ஒவ்வொன்றும் ரத்தம், சுட்கம், உள், வெளியென முறையே பெயர் பெறும் அப்படியெனில் அடி ரத்தமூலம், அடி சுட்கமூலம், அடியுள் மூலம், அடி வெளிமூலம் என்பதே. மற்றவைகளையும் இவ்விதமே காண்க. முகமாறி மூலமென ஒரு சாதியுமுண்டு. அதாவது அதன் முகமானது கீழ்ப்பாக்கமாகவாவது, பின்புறமாகவாவது மாறியிருப்பதேயாம். இம்முக மாறியினால் சில சமயம் நீர் தடைப்பட்டு வேதனை பிரபலப்படும்.

இவற்றுள் பொதுவாய் வெளியிற் காண்பதைப் பார்க்கிலும் உள்ளிற் காண்பது அதிக கஷ்டமானது. எல்லா வகைகளிலும் கொடி மூலம் அதிகம் கஷ்டமானது. அதற்கடுத்தது கர்ச்சூரம் அதற்கடுத்தது முகமறியாம்.

இவற்றுள், எரிவந்தம், சகிக்கக் கூடாத வேதனை முதலிய லக்ஷணங்களைப் பொருந்தியவைகள் பித்தநீர் சம்பந்தத்தினால் இரத்தம் கெட்டுண்டானவைகளெனவும், குத்தல், கனதி முதலிய லக்ஷணங்களை உடையவைகள் வண்டல் சம்பந்தத்தினால் ரத்தங் கெட்டுண்டானவைகளெனவும் தெரிந்து கொள்ளவேண்டும்.

பொதுச் சிகிச்சை

இரத்தாதிக்கமாயிருந்தால் ரத்தங் குத்தி வாங்கவேண்டியது. மலந் தாராளமாய் இருக்கும்படி செய்ய வேண்டியது. இதற்காக, கடுக்காய், காசினி ஆகிய இரண்டையுஞ் சேர்த்துக் கியாழம் செய்து உபயோகிக்கலாம் அல்லது இவற்றின் தனித்தனி யோக முறைகளையும் உபயோகிக்கலாம்.

இதனுடன் ஈரல், மண்ணீரல் ஆகியவைகளின் தொழிலின் கிரமாக் கிரமத்தையுங் கவனித்து, அவற்றைச் சீர்படுத்த முயலவேண்டும். நல்லரத்தத்தை உண்டாக்கும் ஆகாரங்களையே உட்கொள்ள வேண்டும். அசுத்தமான பதார்த்தங்களையும், உவர்ப்பான பதார்த்தங்களையும் நீக்கி வைக்கவேண்டும். மானிறைச்சி, கழுதைப்பால், கடல் மீன்கள், கத்திரிக்காய், பருப்பினங்கள், பழவர்க்கங்கள் ஆகியவைகளையும், இந்த வியாதியை அதிகப்படுத்தும் மருந்துகளையும் நீக்க முயற்சி செய்து வரவேண்டும். எப்போதும் மலம் கிரமமாயிருக்கும்படி அவசியம் கவனித்து வரவேண்டியது, இதற்காகக் கடுக்காய் முறப்பா, கடுக்காய் சேர்ந்த பாகங்கள், நெல்லிக்காய் முறப்பா, நெல்லிக்காய் சேர்ந்த பாகங்கள், சிறு திரிபலாதி, குக்குலாதித் திரிபலாதி முதலியவைகளையும் உபயோகிக்கலாம்.

சில சமயங்களில் இந்த ரோகிக்குப் பேதியாவதும் உண்டு; அப்போது அதைத் தகுந்த விதமாய்க் கட்ட வேண்டும்.

இந்த ரோக சிகிச்சையில், ஆரம்பத்தில் அசுத்த நீர்கள், பழையமலங்கள் ஆகியவைகளை நீக்கிப் பின்பு நிதானித்து, சமயத்திற்குத் தகுந்ததுபோல சமயோசிதமான சிகிச்சை செய்ய வேண்டும். அதன் விவரம் பின் வருகிற விதமாம்.

மூலத்தில் யாதொருவித வேதனையும் இல்லாதிருந்தால், அதைச் சுருங்கச் செய்து வெளிப்படுத்தும்படியான முறைகளைச் செய்ய வேண்டும்.

அதில் ரத்த முதலியவைகள் நிறைந்து நின்று வேதனையிருந்து அவை வெளிப்பட ஏதுவில்லாமலிருந்தால், அதையுடைத்து, ரத்த முதலியவைகளை வெளிப்படுத்தி வேதனையைச் சாந்தப்படுத்தும் முறைகளை உபயோகிக்க வேண்டும்.

அதிலிருந்து அதிக ரத்தம் வெளிப்பட்டு அந்த ரத்தமானது சுத்த சிவப்பாகவும், தெளிவாகவும், கலப்பற்றதாகவும் இருந்து, அதிக ரத்தம் வெளிப்படுவதினால் யாதேனும் ஒருவித களை, ஆயாசம், உண்டாயின், அந்த ரத்தத்தைப் பந்தப்படுத்தும் முறைகளை உடனே உபயோகிக்க வேண்டும்.

ஆனால் வெளிப்படும் ரத்தமானது கறுப்பாகவும், அதிக களை, சோர்வு உண்டாகாமலும் இருந்து குடதிகரித்திருந்தால், அவ்வித ரத்தத்தைப் பந்தப்படுத்த துரிதப்படலாகாது. ஏனெனில் இவ்வித ரத்தம் வெளிப்படுவது சில வியாதிகளுண்டாகாமல் தடுக்கும் அறிகுறியாம். அவ்வியாதிகளாவன பைத்திய ரோகம், இருதயத் துடிப்பு, தலை நோய், நரம்பு வாதம், நீர்க்குண்டிக்காய் நோவு, கருப்பாசய நோவு, ஆகியவைகளாம். ஆகையினால்தான் சில பண்டிதர்கள், இவ்வித இரத்தத்தை மாதாந்த இரத்தத்திற்கு ஒப்பிடுகின்றார்கள். அந்த ரத்தத்தினால் அனேக வியாதிகளுண்டாகா திருப்பன போலவே இந்த ரத்தத்தினாலும் பலவியாதிகள் உண்டாக ஏதுவில்லை. மேற்கண்ட முறைப்படி சிகிச்சைகளை எழுதுவாம்.

மூலத்தைச் சுருக்கி வெளிப்படுத்தும் முறைகள்

34. மைசாட்சி அல்லது குக்கில், போளம், உலர்த்தின ஆற்றுத் தும்மட்டிக்காய்ச் சதை, பாம்புச் சட்டை, உலர்த்தின கத்திரிக்காய்க் காம்புகள், உலர்ந்த சவுக்காங்காய், ஆஸ் இலை.

செய்முறை:- இவற்றுள் அகப்பட்ட தினுசுகளை ஒன்றாகச் சேர்த்து அல்லது தனியாகத் தூள் செய்து கொள்ளவேண்டும். ஒட்டைலத்தி, புளியம் புரணி, வெள்ளாட்டுப் புழுக்கை ஆகியவைகளில் ஒன்றை ஒரு சட்டியிலிட்டு நெருப்பாக்கி, ரோகியைத் துவாரமுள்ள நாற்காலியில் அல்லது முக்காலியிலிருக்கச்செய்து அதன் கீழ் நெருப்புச் சட்டியை வைத்து முன் சித்தமாய் வைத்திருக்கிற சரக்கைப்போட்டால் புகையும், அப்புகையானது எங்கும் பரவாமல் சாக்கிரதை செய்து ஆசனத்திற் படும்படி செய்விக்க வேண்டியது. வெகுநேரம் வரையில் இவ்விதம் புகை பிடிக்கவேண்டும். இவ்விதம் சிலநாள் செய்துவர, மூலமுளை முதலியவைகள் சுருங்கித் தானே அற்று விழுந்து விடும்.

35. மாதுளமரப்பட்டை, குந்திரிக்கம், உலர்ந்த சவுக்கங்காய், பூமாதுளைப்பூ, மாசக்காய் இவை வகை 1-க்குச் சமனெடை எடுத்திடித்து, பச்சை

திராக்ஷைப்பழ ரசம் மிதக்கவிட்டுக் காய்ச்சி நீர்சுண்டினபின் கல்வத்தில் வெண்ணெய்போல் அரைத்து பீங்கான் கிண்ணத்தில் வைத்துக்கொண்டு, காலை மாலை இரண்டு வேளையும் மூலத்தின்மீது பூசிவர, அது சுருங்கி உலர்ந்து போம்.

இந்த மருந்தை உபயோகிக்கும்போது கீழ்க்காணும் சரக்குகளின் தூபமும் மேற்கண்டதுபோல் கொடுத்து வர வேண்டும். அவையாவன:- மைசாட்சி அல்லது குக்கில், குந்திரிக்கம், சீமை மருதோன்றி விதை, கோவைவேர், ஆகியவைகளைச் சமனெடையாகச் சேர்த்து முன் கண்டதுபோல் தூபங் காட்டிவர, முன் சொன்னதுபோல குணமாம்.

முளையை உடைத்து அதினுள் உள்ள அசுத்தங்களை வெளிப்படுத்தும் முறைகள்

வெங்காய ரசம், ஆட்டின் அல்லது மாட்டின் பித்துப்பை சலம், உஷ்ணா, இவை சமனெடை எடுத்து நன்றாயரைத்து மெல்லிய சல்லாத்துணியிலூட்டி வைத்துக்கட்ட, மூலமுடைந்துபோம்.

புறா மலத்தையும் தேவதாரிப் பிசினையும் சமனெடை நிறுத்து அரைத்துக் களிம்யா யுபயோகிக்கினும் முன் குணமே. இவற்றைத் தூபமிடினும் இக்குணமேயாம்.

இவ்வித வீக்கங்களைக் கரைத்து உடைக்கும் மருந்துகளை உபயோகிக்குமுன் கூடுமானால் ரோகியை ஸ்நானஞ் செய்விக்கவேண்டும். முளையிலும் அதைச் சுற்றிலும் பாதாம் எண்ணெய், கொழுப்பினங்கள் ஆகியவைகளை உபயோகித்து மிருதுவாக்கி மேற்படி சோபாநாசகாரிகளை உபயோகிக்கின், வருத்தமில்லாமல் முளையுடைந்துபோம்,. அப்படிச் செய்யாவிட்டால் அதிக வேதனையும் வருத்தமும் உண்டாகித் துன்பப்பட நேரிடும். சில சமயங்களில் மேற்படி சோபாநாசகாரி மருந்துகளை உபயோகப்படுத்தாமலே மலகாரி பிரயோகங்களை உபயோகிப்பதினால் அது உடைந்து குணப்படுவதும் உண்டு. ஆகையால் முன்னர் அவ்வித மருந்துகளையும் உபயோகித்து நிதானித்தல் உத்தமம்.

சோபா நாசகாரி அவுடதங்களை உபயோகிப்பதில் சிலருக்கு, அந்தப் பாகம் வீங்கி, அது உடையாமல் தடையாய் விடும். ஆனால் வேதனை அதிகமாயிருக்கும். அப்போது கீழ்க்காணும் பிரயோகத்தை உபயோகிக்கின் முன் சொன்ன குணங்கள் நீங்கி அநுகூலமுண்டாம்.

36. அபின், துத்திவேர், குங்குமப்பூ, ஆளிவிதை, முட்டை மஞ்சட்கரு, கோழிக்கொழுப்பு, மைசாட்சி, வெங்காயம், சிலாரஸம், இவற்றுள் இடித்துச் சூரணம் செய்ய வேண்டியவைகளைச் சூரணித்தும், உருக்க வேண்டியவைகளை

யுருக்கியும், மற்றவைகளையும் ஒன்றாக சேர்த்து மெழுகு பதமாயரைத்துப் பற்றிட வேதனை கணிந்து மூல முடைந்துபோம்.

37. வங்க உப்பு, வெள்ளை மெழுக்கு, ரோஜாப்பூ எண்ணெய் இம் மூன்றையும் சமனெடை சேர்த்து, அரைக்க மெழுகாம். இதனை மூலத்தின் மீது பூசிவர நோவு தணியும்.

வேதனையைச் சாந்தப்படுத்த வெங்காயத்தை அரிந்து நெய்யில் வறுத்து வைத்துக் கட்டலாம். முட்டை மஞ்சள் கருவையும், ரோஜாப்பூ, எண்ணெயையும் சமனாகச் சேர்த்து மர்த்தித்துப் பூசிவரலாம்.

மூலத்தில் இரத்தம் போவதைப் பந்தப்படுத்தும் முறைகள்

38. மூலக் குடோரி

கர்க்கடக சிங்கி, சூரத்துக் கடுக்காய்த் தோல், சீமை நெல்லி முள்ளி இவைகளின் சூரணம் வகையொன்றுக்கு ஒரு பங்கு, சுத்தி செய்த மைசாட்சி இரண்டு பங்கு, சுத்திசெய்த அரபி போளச் சூரணம், சுத்தி செய்த சீமைச் சிவதை வேர்ச் சூரணம் வகையொன்றுக்கு ஒன்றரைப் பங்கு.

செய்முறை:- இவை எல்லாவற்றையும் ஒன்றாகக் கலந்தரைத்துத் தூள் செய்து பாதாம் நெய்ப்பசை உண்டாக்கி ஜலம் விட்டரைத்து மாத்திரைகள் செய்து உலர்த்திக் கொள்ளவும்.

மாத்திரை:- விராகனெடை - ¾-1, சாப்பிடவும்.

உபயோகம்:- மூல வியாதிகள், மூலக்கடுப்பு, மூலச்சூடு, மூலச் சூட்டினால் உண்டான மலபந்தம் முதலியவை தீரும்.

39. மஹா கோகிலாதி மாத்திரை

பாதாம் நெய்யில் வறுத்த மஞ்சட் கடுக்காய்த் தோல், கர்க்கடக சிங்கி, சீமை நெல்லி முள்ளி இவைகளின் சூரணம் வகை-1-க்கு விராகனெடை-2, பாகப்படுத்தின நற்பவழம், பாகப்படுத்தின கஹறுபா, பாகப்படுத்தின கடல்நுரை வகையொன்றுக்கு விராகனெடை-1, சுத்திசெய்த மைசாட்சி விராகனெடை-9.

செய்முறை:- மைசாட்சியை ஜலத்திற் கரைத்து வடிகட்டி, மற்ற சரக்குகளை ஒன்றாகக் கலந்து கல்வத்திற் போட்டுச் சிறுகச்சிறுக விட்டரைத்து மாத்திரைகள் செய்துலர்த்திக் கொள்ளவும்.

மாத்திரை:- விராகனெடை-2, சாப்பிடவும்.

உபயோகம்:- மூல சம்பந்தமான சீதபேதி, சீதக்கடுப்பு, ரத்தபேதி முதலியவைகள் நீங்கும்.

40. கஹறுரபா சூரணம்

ரோஜாப்பூ இதழ், பருப்புக்கீரை விதை, கொத்துமல்லி விதை, ஸுமாக் உமி, வறுத்த பாதாம் பிசின், வறுத்த கருவேலம் பிசின், பூமாதுளம்பூ இவற்றின் சூரணம் வகை ஒன்றுக்குப் பலம்-½, பாகப்படுத்தின கஹறுரபா, பாகப்படுத்தின நற்பவளம், பாகப்படுத்தின தொளையிடாத நன்முத்து, * பாகப்படுத்தின பலகறை அல்லது கவடி, வெள்ளாட்டுக் கொம்பு சுட்டகரிச் சூரணம், * பாகப்படுத்தின காந்தம் இவை வகை ஒன்றுக்கு விராகனெடை-3, மூங்கிலுப்புச் சூரணம், மாம்பிசின் அல்லது விளாம் பிசின் சூரணம் இவை வகைக்கு விராகனெடை-2.

செய்முறை:- இவை எல்லாவற்றையும் கல்வத்திலிட்டுச் சுக்கான் கீரை வேர்ச்சாறு அல்லது கொத்து மல்லிக்கீரைச் சாறுவிட்டு இரு சாமம் அரைத்து சிறு பில்லைகளாகச் செய்து வைத்துக்கொள்ள வேண்டும்.

மாத்திரை:- பில்லையைச் சூரணித்து விராகனெடை இரண்டு எடுத்து பேதானா ஷர்பத்தில் அல்லது கசகசா ஷர்பத்தில் அல்லது, துவர்ப்பான தக்க அநுபானத்தில் இழைத்துச் சாப்பிடவேண்டும்.

உபயோகம்:- பெரும்பாடு, ரத்தபேதி, ரத்தமூலம், ரத்த வாந்தி முதலியவை தீரும்.

41. ரத்தமூலக் குடாரம்

கர்க்கடக சிங்கி, தான்றிக்காய்த் தோல், நெல்லிக்காய்ச்சாறு, வகை ஒன்றுக்குப் பலம்-½ , சீனாக்காரம் விராகனெடை-1, சுத்திசெய்த மைசாட்சி விராகனெடை-2.

செய்முறை:- நெல்லிக்காய்ச் சாற்றில் மைசாட்சியைக் கரைத்து, மற்ற சரக்குகளை எல்லாம் சேர்த்தரைத்து, மாத்திரைகள் செய்துலர்த்திக் கொள்ளவும்.

---

*வேண்டிய அளவு கவடியை எலுமிச்சம் பழரசத்தில் ஒரு நாள் ஊறவிட்டு அகலில் வைத்து மேலகல் மூடி மண் சீலை செய்து, கொல்லுலையில் வைத்து அகலமுக ஊதி எடுத்தாறவிட்டு, கல்வத்திலிட்டுப் பொடித் தெடுத்துக் கொள்வதே கவடியின் பாகமாம்.

* காந்தத்தை ஒட்டிலிட்டு, கொல்லுலையில் வைத்துப் பழுக்கவூதி, கரிசலாங் கண்ணி இலைச் சாற்றில் தோய்த்து ஆறினபின் எடுத்து முன்போல் காய்ச்சி மறுபடியும் தோய்க்க வேண்டும். இவ்விதம் ஏழு தடவைக்குக் குறையாமல் செய்து எடுத்து நன்றாய்ப் பொடித்துக் கொள்வதே காந்தத்தின் பாகமாம்.

மாத்திரை:- விராகனெடை-2, சாப்பிடவும்

உபயோகம்:- மூலரத்தம் விழுவது நீங்கும்.

42. மகா சாட்சி பந்த மாத்திரை

கர்க்கடக சிங்கிச் சூரணம், காபுலி கடுக்காய்த்தோல் சூரணம், சீமை நெல்லி முள்ளிச் சூரணம், சுத்தி செய்த மைசாட்சி அல்லது குக்கில் வகை-1-க்கு விராகனெடை-2, பக்குவப்படுத்தின அல்லது பன்னீர் வார்த்தரைத் துலர்த்தின நற்பவளம், பக்குவப்படுத்தின அல்லது பன்னீர் வார்த்தரைத் துலர்த்தின நன்முத்து, முத்துச் சிப்பி பஸ்பம், இவை வகை-1-க்கு விராகனெடை-1.

செய்முறை:- மைசாட்சியைக் கொல்லுலை சலத்தினால் அல்லது இரும்பைக் காய்ச்சி நனைத்த சலத்தினால் மைபோலரைத்து, மற்ற சூரணங்களையும் அதிற் சேர்த்து அரைத்துச் சிறு மாத்திரைகளாகச் செய்து உலர்த்திக் கொள்ளவும்.

மாத்திரை:- விராகனெடை-1-2, இரண்டு வேளையும் உட்கொள்ளலாம்.

உபயோகம்:- மூல ரத்தம், ரத்தக்கடுப்பு, ரத்தபேதி முதலிய ரத்த சம்பந்த ரோகங்கள் தீர்ந்து இருதயம் முதலிய இராஜ கருவிகள் பலப்பட்டு தேக ஆரோக்கியம் உண்டாம்.

43. இலகு சாட்சி பந்த மாத்திரை

சூரத்துக் கடுக்காய்த் தோல் பலம்-2, இதனைப் பசுவின் நெய்யில் பொன் வருணமாக வறுத்துச் சூரணஞ் செய்து கொள்ள வேண்டும். பக்குவப் படுத்தின கஹறுபா பலம்-1, சுத்திசெய்த மைசாட்சி பலம்-4.

செய்முறை:- மைசாட்சியை வெங்காய ரசம் விட்டு மைபோலரைத்து, அதில் மற்ற சூரணங்களையும் சேர்த்து அரைத்து மாத்திரைகள் செய்துலர்த்திக் கொள்ள வேண்டும்.

மாத்திரை:- விராகனெடை-1-2, இரண்டு வேளையும் உட்கொள்ளலாம்.

உபயோகம்:- மேற்படி குணங்களுண்டாம்.

44. ஆசன பந்தன வர்த்தி

குந்திரிக்கம், பூமாதுளைப்பூ, மாசக்காய், அஞ்சனக்கல், வாதுமைப்பிசின், விளாம் பிசின், இவற்றைத் தனித்தனி பொடித்த சூரணம் சமனெடை

நிறுத்தெடுத்து திரியாகச் செய்து ஆசனத்திற் செலுத்தி வைப்பதினால் மூல ரத்தம், ரத்தபேதி, மூலக்கடுப்பு முதலியவைகள் தீரும்.

45. சிறு திரிபலாதி

சூரத்துக் கடுக்காய்த்தோல் சூரணம், மஞ்சள் கடுக்காய்த்தோல் சூரணம், கடுக்காய்ப் பிஞ்சுச் சூரணம், சீமை நெல்லி முள்ளிச் சூரணம் இவை வகை-1க்கு ஒரு பங்கு, தேன் அல்லது சர்க்கரை பங்கு-4.

செய்முறை:- எல்லாச் சூரணங்களையும் ஒன்றாக மிஸ்ரமித்து பாதம் நெய் அல்லது பசுவின் நெய் விட்டு நெய்ப் பசையாக்கி, தேனை அல்லது சர்க்கரையைப் பாகு செய்து பதத்தில் சூரணங்களைச் சேர்த்து லேகியமாய்ச் செய்து கொள்ளவும்.

மாத்திரை:- வேளை-1-க்கு விராகனெடை-2.

உபயோகம்:- இரைப்பைத் தளர்ச்சி, மூல ரோகம் ஆகியவை தீரும்.

46. குக்குலாதித் திரிபலாதி

சூரத்துக் கடுக்காய்த்தோல் சூரணம், தான்றிக்காய்த்தோல் சூரணம், சீமை நெல்லி முள்ளிச் சூரணம், இவை வகை-1-க்குப் பலம்-1 சுத்தி செய்த மைசாட்சி பலம்-6, தேன் பலம்-18.

செய்முறை:- சூரணங்களை ஒன்றாக மிஸ்ரமித்து, தேனைக் காய்ச்சிப் பதத்திற் சேர்த்து லேகியமாகச் செய்து கொள்ளவும்.

மாத்திரை:- வேளை-1-க்கு விராகனெடை-3.

உபயோகம்:- மலத்தை யிளக்கும் மூலரோகங்களைக் கண்டிப்பதில் இது மிகவும் பிரயோசனம் உள்ளது.

குறிப்பு

மூலத்தை அறுத்தெடுப்பதுதான் கைவல்லியமான சிகிச்சை. ஆனால் அதில் அபாயம் உண்டு. ஆகையால் அவசியம் நேரிடுகிற வரையில் வஸ்திர சிகிச்சைக்கு முயற்சி செய்யலாகாது. இவ்விதமே, பாஷாணம், தாளகம் முதலிய கார மருந்துகளை வைத்து வேக வைத்துச் சிகிச்சை செய்வதும் அபாயமே. இவ்விதமே சூடு போடுவதுமாம். இவ்வித சிகிச்சை செய்ய நேரிட்டால் ஏக காலத்தில் முளைகளை எல்லாம் அறுத்தெடுக்கலாகாது. அவ்விதமே எல்லா முளைகளிலும் காரமும் வைக்கலாகாது. ஆனால் பல முளைகளுண்டாயின் ஒன்றை அறுத்துவிட வேண்டும் அல்லது ஒன்றில் காரம் வைத்து நீக்கவேண்டும். இவ்விதம் செய்து

இந்த ரணம் ஆறினபின் வேறொன்றை அறுக்க வேண்டும். அல்லது காரம் வைத்து நீக்கவேண்டும். இவ்விதம் ஒன்றன்பின் ஒவ்வொன்றாய் அறுக்க அல்லது காரம் வைக்க வேண்டியது. ஆனால் தேக பலமுள்ளவர்களாகவும், இருதயம் சுகஸ்திதி உள்ளவர்களாகவும் இருந்தால் மாத்திரம் எல்லாவற்றையும் ஏக காலத்தில் மேற்கண்ட வகைகளாலும் நீக்கி விடலாம். அப்படி இல்லையாயின் ஒருபோதும் எல்லாவற்றையும் ஏக காலத்தில் நீக்க முயலலாகாது.

மூலவாயு

இது பெரும்பான்மையும் அசுத்தவாயுவினால் உண்டாகின்றது. இது அதிக கஷ்டத்தோடு சௌக்கியப்படுகிறது. இதனால் குடல் முறுக்கு நோயைப்போல் வலி காண்பதுண்டு. இது ஆரம்பத்தில் சிறு குடற்களிற் சனித்து, சில சமயம் முதுகிலும், சில சமயம் வயிற்றிலும், சில சமயம் பீஜங்களிலும், சில சமயம் ஆண்குறியிலும், சில சமயம் ஆசனத்தினருகிலுள்ள ஸ்தானங்களிலும் வந்து தங்கி நிற்கும். சில சமயம் வயிற்றில் ஒரு வித சப்தத்தையுண்டாக்கும். சில சமயம் ரத்த பேதியை உண்டாக்கும். சில சமயம் மலபந்தத்தையும் உண்டாக்கும். ஒரு வேளை கைகால் முதலிய அவயவங்களிலும் பரவுவதுண்டு. அப்போது கை, கால் ஆகியவைகள் சோர்ந்து தளர்ந்து போனது போலிருக்கும். இன்னும் இதனால், தொடைகளிலும், கணுக்களிலும், எழுந்திருக்கும் போதும், உட்காரும் போதும் நெட்டிவிழும்.

மூலவாயுச் சிகிச்சை

ஆரம்பத்தில் அப்திமூன் கியாழம், அப்தி மூன் மாத்திரைகள் ஆகியவைகளில் ஒன்றை உபயோகித்து வண்டலை நீக்கிச் சுத்திசெய்ய வேண்டியது. பின்பு வாயுவைக் கண்டிக்கும் முறைகளை உபயோகிக்க வேண்டும். அவற்றுடன் நீர் பேதி முறைகளை உபயோகிக்க வேண்டும். ஏனெனில் மருந்தின் வேகம் நீர்க்குண்டிக்காய்களிலும் செல்ல ஏதுவாம். பால், சில பழவர்க்கங்கள் முதலியவைகளைப் போன்ற வாயுவை உண்டாக்கும் எந்தப் பதார்த்தங்களையும் அறவே நீக்கிவிட வேண்டும்.

47. அப்திமூன் கியாழம்.

அப்திமூன், மஞ்சட் கடுக்காய்த்தோல், சூரத்துக் கடுக்காய்த்தோல், உஸ்து குதூஸ், விதை நீக்கின திராக்ஷைப்பழம் வகை-1-க்கு விராகனெடை-4, அப்திமூனைத் துணியில் முடிந்து கொள்ளவும், பஸ்பாயிஜ் விராகனெடை-6, சுத்தி செய்த சீமைச்சிவதை வேர் விராகனெடை-½, மேல்தோல் நீக்கின சுக்கு விராகனெடை-¼, காம்பு முதலியன நீக்கிச் சுத்தி செய்த சூரத்து நில ஆவாரை பலம்-½, சுத்த சலம் பலம்-26.

செய்முறை- அப்தி மூனைத்தவிர மற்ற சரக்குகளை எல்லாம் ஜலத்திற்போட்டு மூன்றில் ஒரு பங்காய்ச் சுண்டினபின், அப்திமூன் முடிச்சைப் போட்டு இரண்டு கொதி வந்தபின் கீழிறக்கி அந்த முடிச்சை நன்றாய்ப் பிழிந்து

அதன் சத்தெல்லாம் வெளிப்பட்ட பின் அதை எறிந்து விட்டுக் கியாழத்தை வடிகட்டி இளஞ் சூடாயிருக்கும் போது சாப்பிடவும்.

உபயோகம்:- இதனைத் தொடர்ச்சியாய்ச் சாப்பிட்டு வந்தால் மேற்கண்ட வாயு சம்பந்த ரோகங்கள், வீண் கவலை, பைத்தியம், புத்தி தடுமாற்றம், தேகமரத்தல் முதலியவை நீங்கும்.

48. அப்திமூன் மாத்திரை

அப்திமூன் பலம்-1. *காரிகியூன், பஸ்பாயிஜ், கர்க்கடக சிங்கி இவை வகை-1வீ TXm-½. *பரமௌஷதம் விராகனெடை-7, சீமைக்காவிக்கல் விராகனெடை-3½ , சுத்தி செய்த மகுமூதா விராகனெடை-1, பாதம் எண்ணெய் பலம்-½.

செய்முறை:- சூரணஞ் செய்யவேண்டியவற்றைச் சூரணஞ்செய்து மற்றவைகளையும் சேர்த்தரைத்து, பாதம் நெய் விட்டுப் புரட்டி, சுத்தஜலம் விட்டு நன்றாயரைத்து ஒவ்வொரு விராகனெடையுள்ள மாத்திரைகள் செய்து கொள்ளவும்.

மாத்திரை:- தேக சத்திக்குத் தக்கபடி-2-3, மாத்திரைகள் காலையிற் சாப்பிடவும்.

உபயோகம்:- தேகத்திலும் சிரசிலுமுள்ள வண்டலை நீக்கும்; எரிந்துபோன வண்டலை நீக்கி, அதனால் உண்டான பைத்திய ரோகத்தைத் தீர்க்கும்.

இம்முறைகளில் ஒன்றை உபயோகித்து வண்டலை நீக்கிச் சுத்திசெய்த பின், வாயுவைக் கண்டிக்கும் முறைகளைச் செய்ய வேண்டியது. அவையாவன:-

அசையாதி மாஜூன், அனிசூன் மாத்திரை, அனிசூன் மாஜூன், மகமுதா ஜவாரிஷ் முதலியவைகளாம். இவற்றின் செய்முறைகளெல்லாம் நமது 'யூநாநி வைத்திய தாதுவிர்த்தி போதினி 2-ம் பாகத்தில்' சொல்லப் பட்டிருக்கின்றன.

பின்பு கீழ்க்காணும் பாகங்களில் ஒன்றை உபயோகிக்கலாம்.

49. கிச்சிலிக்கிழங்கு, கர்க்கடகசிங்கி, மஞ்சட்கடுக்காய்த்தோல், சித்திரமூல வேர்ப்பட்டைத்தோல், அக்கிராகாரம், அரிசித்திப்பிலி, வெங்காயவிதை, இவற்றைத் தனித்தனி இடித்தது சூரணம் வகைக்குப் பங்கு-1, லவங்கச் சூரணம் பங்கு-2, சுத்திசெய்த மைசாட்சி பங்கு-1, நவச்சாரம் பங்கு அரைக்கால்.

---

* காரிகியூனை உபயோகிக்கும் முறையும்

* பரமௌஷத முறையும் நமது 'யூநாநி வைத்திய தாதுவிர்த்தி போதினியில் சொல்லப்பட்டிருக்கின்றன.

செய்முறை:- இவை எல்லாவற்றையும் ஒன்றாகக் கல்வத்திலிட்டு, திராக்ஷப்பழக் கியாழத்தால் இரண்டு சாமமும், வெங்காயச்சாற்றால் இரண்டு சாமமும் அரைத்து மாத்திரைகளாகச் செய்து நிழலிலுலர்த்தி வைத்துக் கொள்ளவும்.

உபயோகம்:- வேளை-1-க்கு விராகனெடை-¼-½ -1, தேக சத்திக்குத் தகுந்ததுபோல் உட்கொள்ளின் மூலவாயு முதலியவைகளைக் கண்டிக்கும்.

50. கோவைவேர் பங்கு-1, ஸாத்தர் பங்கு-½, இவ்விரண்டையும் வெங்காய ரசம் விட்டரைத்து மாத்திரைகளாகச் செய்து வேளை-1-க்கு விராகனெடை-½ -¾ -1, உட்கொள்ள மூலவாயு முதலியவை தீரும்.

மூலரோகம்
(ஆயுர்வேத முறைப்படி)

அன்னபானாதி விகற்பங்களினால் வாத பித்த முதலிய தோஷங்கள், ரசதாது. மாமிசதாது, மேதோதாது முதலிய தாதுக்களின் ரத்தத்தைக் கெடுத்து ஆசனத்திலுள்ள பிரவாகனி, ஸர்ஜனி, சங்கோசனி என்னும், ஆசன வளையங்களிற் சேர்ந்து கிழங்கு முளைபோலும், வேர்களைப்போலும், மாமிச முளைகளுண்டாம். இதற்கே மூலரோகம் அல்லது அரஷ ரோகமெனப் பெயர். இது பெரும்பாலார்கள் அபிப்பிராயப்படி ஆறு வகையாம். வாத, பித்த., சிலேட்டும மூலமென மூன்றும், தொந்தமூலம், இரத்தமூலம், சகஜ மூலம் என்பவைகளாம்.

வாதமூலம்

காரணம்:- இலைப்பான அல்லது கைப்பான அல்லது குளிர்ச்சியான வஸ்துகளை புசிப்பதினாலும், அளவில் அதிகங் குறைவாய் ஆகாரத்தைப் புசித்தல், பசி அடங்கினபின் சாப்பிடுதல், காரமான மதுபானஞ் செய்தல், மிதமிஞ்சின போகம், கொட்டாவியை அடக்குதல், விசனம், கோபம், ஆகியவை அதிகமாய் உண்டாதல், வெயிலில் அதிகமாய்த் திரிதல் ஆகியவைகளாம்.

லக்ஷணம்:- வாதம் அதிகரித்து ஆசனத்தில் உலர்ந்த திராக்ஷைப் பழத்தைப்போல் முளைகளுண்டாதல். அதில் ஊசியினால் குத்துகிறது போன்ற வேதனை, இன்னும் வாடியும், பரபரப்புடன் சிவந்தும், கறுத்தும் மேடு பள்ளமாகவும், அம்முளைகள் கோவைப் பழம், இலந்தைப் பழம், பேரீச்சங்காய், பருத்திக்காய், முதலியவைகளைப்போலும், சிரசு, விலாப்பக்கம், தோள், இடுப்பு, தொடை, கவுட்டி ஆகிய இவ்விடங்களில் அதிக வேதனை, தும்மல், ஏப்பம் ஆகியவை உண்டாதல், பேதி முதலியவைகள் உண்டாகாதிருத்தல், இருமல், இரைப்பு, பொய்ப்பசி முதலியவைகளுண்டாதல், அக்கினி விஷமித்தல்,

காதிரைச்சல், பிரமை, மனக்கிலேசம், ஆகியவை உண்டாதல், (தாமதித்துத் தாமதித்து) நுரைத்துப் பிசின் போன்ற மலம் விழுதல், சருமம், நகம், மலம், மூத்திரம், கண், முகம் ஆகியவை கறுத்துப்போதல் ஆகியவைகளாம்.

சிகிச்சை:- ஆரம்பத்தில் பேதிக்குக் கொடுத்துப் பின்பு அவுடதங் கொடுத்தால் சீக்கிரம் குணம் உண்டாகும். இந்த வியாதி நாள்பட்டுவிட்டால் சிகிச்சைக்கு வசப்படாது.

51. கருணைக் கிழங்கை அவித்துத் தோல் நீக்கினது பங்கு-1, இந்துப்பு பங்கு-1, எள்ளெண்ணெய் பங்கு-1, முன்னிரண்டு வஸ்துகளையும் அரைத்து எண்ணெயிற் கலக்கி வேளை-1-க்கு-½ -¾ -1, பலம் வீதம் இரண்டு வேளையும் உட்கொண்டு வர வாதமூலந் தீரும்.

இதற்கு பத்தியம்:- புளிப்பு வஸ்துக்கள், குளிர்ச்சியான வஸ்துக்கள் தாமதமாய்ச் சீரணமாகும் பதார்த்தங்கள் ஆகியவைகளை நீக்கவேண்டும்.

52. மேல்தோல் நீக்கின சுக்குச்சூரணம் துலா-4, கொடிவேலி வேர்ப்பட்டைச் சூரணம், மிளகுச் சூரணம், வளையலுப்பு, பிடாலவணம், இந்துப்பு, கறியுப்பு, சவ்வச்சரலவணம், கோரைக்கிழங்குச் சூரணம், ஏலரிசிச் சூரணம், நற்சீரகச் சூரணம், பெருஞ்சீரகச் சூரணம், காட்டுச் சீரகச் சூரணம், இவை வகை-1-க்கு துலா-1, லவங்கச் சூரணம் விராகனெடை-1½, சுத்தி செய்த நாபிச் சூரணம் விராகனெடை-½, மோரில் வேகவைத்துலர்த்தின காட்டுக் கருணைக்கிழங்குச் சூரணம் துலா-5.

இவை எல்லாவற்றையும் ஒன்றாக மிஸ்ரமித்து வேளை-1-க்கு விராகனெடை-¾ -1½ , தேக பலம், வியாதி பலம், வயது முதலியவைகளுக்குத் தகுந்த விதமாய் உட்கொள்ள, மேற்படி வாதமூலந் தீரும்.

53. சோம்பு, சூரத்துக் கடுக்காய்த் தோல், தான்றிக்காய்த்தோல்; நெல்லிமுள்ளி இவை வகை-1-க்கு விராகனெடை- 1¾ , சுத்தி செய்த மைசாட்சி, மரமஞ்சள் இவை வகை-1-க்கு விராகனெடை-3½ வெங்காய விதை விராகனெடை-1, சீமை அத்திப்பழம்-4,. இவை எல்லாவற்றையும் பசுவின் நெய்யில் சிவக்க வறுத்து, இவற்றினெடைக்கு இரண்டு பங்கு விதையில்லா திராக்ஷைப்பழம் நிறுத்து, இரண்டையும் கல்லுரலிலிட்டு மைபோலிடித்து, இலந்தைக்காய் பிரமாணம் மாத்திரைகள் செய்து, வேளை-1-க்கு 1-முதல்-3-மாத்திரைகள், தேகபலம், வயது, வியாதிபலம் முதலியவைகளுக்குத் தகுந்ததுபோல் கொடுக்க வேண்டும். பசும்பாலில், 1-முதல் 40-துளி எலுமிச்சம்பழ ரசம் விட்டுக் கலக்கி, மேற்படி மருந்தைச் சாப்பிட்டவுடன், பானஞ் செய்து வருவதினால் அதிசீக்கிரத்தில் மேற்படி வியாதி தீரும்.

54. நாரக்கரந்தையிலை ரசம் பலம்-24, இதனை எட்டிலொரு பாகமாகச் சுண்டவைத்து, அதனுடன் 24-மிளகைச் சேர்த்துக் கல்வத்தில் அரைத்துத்

திரள்பதத்தில் இலந்தைப் பழ பிரமாணம் மாத்திரைகள் செய்து நிழலுலர்த்திக் காலையில் ஒரு மாத்திரையும், மாலையில் ஒரு மாத்திரையுமாக உட்கொண்டு வந்தால் மேற்படி வியாதி தீரும்.

பித்த மூலம்

காரணம்:- கைப்பு, புளிப்பு, அதிக உவர்ப்பு, வஸ்துகளை அதிகமாய் உபயோகித்தல், அடிக்கடி நெருப்பு காய்தல், வெயிலில் அதிகமாய்த் திரிதல், அளவிற்கு அதிகமான தேகப் பயிற்சி செய்தல், அதிகமாய்க் கோபித்தல், விசேஷமான மதுபானஞ் செய்தல், அதிக மன வருத்தப்படுதல், எரிவந்தத்தை உண்டாக்கும் அவுடதங்களை அதிகமாக உட்கொள்ளல், அதிக சூடான மருந்துகளைச் சாப்பிடுதல் ஆகியவைகளாம்.

லக்ஷணம்:- முளைகளின் முகம், நீல வருணமாகவும், மஞ்சள் வருணமாகவும், சிவந்த வருணமாகவும், இருத்தல், அதிலிருந்து சிறு தாமரையாய் ரத்தம் கசிதல், ரத்தங்கெட்டு துர்வாசனையும் உண்டாதல், முளைகள், சிறியவைகளாகவும், மிருதுவானவைகளாகவும், அவற்றின் முகமானது கிளி மூக்கைப்போல அல்லது அட்டையைப் போலவும் இருத்தல், தேகத்தில் எரிவந்தம், ஆசனம் வெந்திருத்தல், சுரம், வியர்வை, தாகம், விசனம், அஜீரணம், ஆகியவை உண்டாதல், தேகத்தைப் பரிசித்தால் சூடாயிருத்தல், மலமானது, நீலவருணம், மஞ்சள் வருணம், சிவந்த வருணமாயிருத்தல், மலத்தில் சீதம் வெளிப்படுதல், மலமிறங்கும்போது ஆசனத்தில் எரிவந்தம் உண்டாதல், இந்த ரோகியின் நகம், கண், சருமம் முதலியவைகள் மஞ்சள் வருணம், அல்லது தாளக வருணம் போலிருத்தல் ஆகியவைகளாம்.

55. பித்த மூலச் சிகிச்சை

வேப்பங் கொட்டைப் பருப்பு, உதியன் பட்டைச் சூரணம், சுத்திசெய்த மைசாட்சி, மரமஞ்சள் சூரணம், மிளகுச் சூரணம், இவை வகை-1-க்குச் சமனெடை. இவை எல்லாவற்றையும் மர்வா இலைச்சாறுவிட்டு-5 நாளரைத்துச் சுண்டைக்காய்ப் பிரமாணம் மாத்திரைகள் செய்து நிழலிலுலர்த்திக் கொள்ளவும். வேளை-1-க்கு ஒரு மாத்திரையாக, காலை மாலை இரண்டு வேளையும் உட்கொள்ள பித்தமூலந் தீரும். வயது, தேகம், வியாதி ஆகியவைகளின் பலத்திற்குத் தகுந்ததுபோலக் குறைத்தும் அதிகப் படுத்தியும் உபயோகிக்க வேண்டும்.

56. மரமஞ்சள் சூரணம் விராகனெடை-6½, மாதுள மரப்பட்டைச் சூரணம் விராகனெடை-13, ஒன்பது வருஷத்துப் பழய பனைவெல்லம் விராகனெடை-26. இவை எல்லாவற்றையும் ஒன்றாகச் சேர்த்தரைத்து, சுண்டைக்காய்ப் பிரமாணம் மாத்திரைகள் செய்து வேளைக்கு-1-3-மாத்திரைகள் சாப்பிடலாம் மேற்படி ரோகந்திரும்.

57. மஞ்சட் கடுக்காய்த்தோல், தான்றிக்காய்த் தோல், நெல்லிமுள்ளி, இவற்றைத் தனித்தனி இடித்த சூரணம் வகை-1-க்கு விராகனெடை-19¼, சிப்பிச் சுண்ணம் விராகனெடை-1½ , ஓமச் சூரணம் விராகனெடை-4¾ , சுத்திசெய்த மைசாட்சி பலம்-5½ . இவை எல்லாவற்றையும் சேர்த்துக் கல்லுரலில் இடித்து, சுண்டைக்காய்ப் பிரமாணம் மாத்திரைகள் செய்து தேகம், வயது, வியாதி முதலியவைகளுக்குத் தகுந்தது போல, மாத்திரை-1-2-3-இருவேளையும் உட்கொள்ள, பித்தமூல ரோகந்தீரும்.

சிலேட்டும மூலரோகம்

காரணம்:- இனிப்பு, உவர்ப்பு, நைப்பு, புளிப்பு, குளிர்ச்சி, ஆகிய வஸ்துகளை அடிக்கடி அல்லது அதிகமாய்ப் புசித்தல், இரவில் விழித்திருத்தல், பகலிலுறங்குதல், கீழ்காற்றிற் கெதிரில் படுத்திருத்தல், தண்ணீரில் அடிக்கடி நீந்தி விளையாடுதல், குளிர்ச்சியான காலங்களில், அல்லது குளிர்ச்சியான தேசங்களில் தண்ணீரில் அதிக நேரமிருத்தல், கப வஸ்துகளை அதிகமாய்ப் புசித்தல் ஆகியவைகளாம்.

லக்ஷணம்:- இந்த முளையானது உலோகங்களைப் போல மினுமினுப் புள்ளதாகவும், கெட்டியாய் அசையாமையாகவும், பருமனாய் வெண்மையாகவும், வட்டமாய் எண்ணெய்க் கசிவாகவும், வழவழப்புள்ளதாகவும், உப்பலாகவும், ஒரே ஸ்தானத்தில் நிலைத்ததாகவும், நுரையோடு கலந்ததாகவும், சகிக்கக் கூடாத நமைச்சலுள்ளதாகவும், ஆசனத்தில் முட்போன்ற குத்தலை உடையதாகவும் மாட்டின் மடியின் முளைக் காம்புகளைப் போல கருத்த புள்ளியை உடையதாகவும் இருக்கும். இரண்டு கவுட்டிலும் உப்பல், குதஸ்தானம், அடிவயிறு, தொப்புள் ஆகிய ஸ்தானங்களில் நோவு, இருமல், இரைப்பு, அரோசகம், வாயில் அல்லது மூக்கில் நுரைத்தள்ளல், அல்லது நீர்வடிதல், பசிதீபனக் குறைவு, பீனிசம், இந்த வியாதி நீடித்துவிட்டால், இந்த லக்ஷணங்கள் பிரபலப்பட்டு பிரமியரோகம் தலைநோவு, நடுக்குசுரம், தாதுநஷ்டம், அக்கினி மந்தம், வாந்தி, சீதம் விழுதல், முளைகளில் ரத்தம் கசியாமை முதலியவைகளாம்.

சிகிச்சை:- கபத்தை அதிகப்படுத்தும் வஸ்துக்களை நீக்க வேண்டும். கபத்தைக் கண்டிக்கும் அவுடதங்களை உபயோகிக்க வேண்டும்.

58. சிலேட்டும மூலச் சிகிச்சை

அழிஞ்சில் வேர்ப்பட்டை, எருக்கன் வேர்ப்பட்டை, சூரத்து நில ஆவாரையிலை, மிளகு, இவற்றைத் தனித்தனி இடித்த சூரணம் வகை-1-க்குச் சமனெடை. இவற்றையெல்லாம் ஒன்றாக மிஸ்ரமித்து வயது தேகபலம் ஆகியவைகளுக்குத் தகுந்தபடி இரண்டு முதல் நான்கு குன்றிமணியெடை வரையில் இஞ்சி ரசத்தில் உட்கொள்ள மேற்படி வியாதி தீரும்.

• 59. அயசாரம், மண்டூரம், இவ்விரண்டும் வகை-1-க்குச் சமனெடை மிஸ்ரமித்து, இஞ்சி ரசம் விட்டு-4-சாமமரைத்து மிளகுப் பிரமாணம் மாத்திரைகள் செய்து நிழலிலுலர்த்தி வைத்துக் கொள்ளவும். தேக பலத்திற்குத் தகுந்தபடி-¼-முதல்-1-மாத்திரை முலாம்பழத்துடன் உட்கொள்ள வேண்டும். முலாம்பழத்தை அரிந்து ஓரிரவு வைத்துக் காலையில் எடுத்துக் கொள்ள வேண்டும். காலையிலரிந்து வைத்து மாலையில் உபயோகிக்க வேண்டும். ஒரு பழத்தில் கால்பங்கு போதுமானது. இப்படிச் செய்யின் மேற்படி ரோகந் தீர்ந்து தேகம் வச்சிரகாயமாம்.

60. அயசாரம்

இலாடத்தை இராவின அயத்தூள் தேவையானது. இதனை, நல்லெண்ணெய், மோர், கோமயம், காடி ஆகிய ஒவ்வொன்றிலும் முறையே எவ்வேழு தடவைகள் காய்ச்சித் துவைக்க சுத்தியாம். பின்பு சுத்தித்த தூளைக் கல்வத்திலிட்டு புரசம்பட்டைச் சாற்றினால்-4-சாமமரைத்துப் பில்லை செய்துலர்த்தி ஓட்டில் வைத்து ஓடுமூடி ஏழுசீலைமண் செய்துலர்த்தி கெஜபுடம் போட்டெடுத்துப் பின்பு, சோற்றுக் கற்றாழை ரசத்தினால்-4-சாமமரைத்து முன்போல்புடம் போடவும். மறுபடியும் சோற்றுக் கற்றாழைச்சாற்றில் முன்போல்-3-புடம் போட்டெடுத்து, எருக்கம்பால் விட்டரைத்து முன்போலவே-7-புடம் போடவும் இலைக்கள்ளிப்பாலில் அல்லது அதன் சாற்றில்-7-புடம் போடவும். கடுக்காய்த்தோல், தான்றிக்காய்த் தோல், நெல்லிமுள்ளி ஆகிய இம்மூன்றையும் கியாழம் செய்து, அதனால்-7-புடம் போடவும். ஆடா தொடையிலைச் சாற்றில்-7-புடம் போடவும். இந்தச் சாரமானது தண்ணீர் போட்டால் மிதக்கும். அதுவே பதம். இல்லாவிட்டால் முன்சொன்ன வகைகளில் ஒன்றில் இரண்டொரு தடவை புடம்போட முன்சொன்ன படி பதமாகிவிடும். இதைச் செய்து முடிப்பது அதிகப் பிரயாசையே. ஆனால் இதன் சிறந்த குணமோ மகா அற்புதமானது. இதில் தினம்-¼-½ -1, குன்றிமணியெடை உட்கொண்டு வந்தால் எல்லாவித வியாதிகளும் தீர்ந்து வச்சிரகாயமாய் மகா வீரியம் உண்டாகும்.

மண்டூரம்

வல்லத்துக் கிட்டம் அல்லது பலகெட் கிட்டம் தேவையானது. இதனைக் கொல்லுலையில் காய்ச்சிக் காய்ச்சி நன்றாய்ச் சிவந்தபின் கோமூத்திரத்தில் துவைக்கவேண்டும். இவ்விதம்-7-தடவைகள் செய்த பின் பொடித்துக் கொள்ளவும். மஞ்சட் கடுக்காய்த் தோல், தான்றிக்காய்த்தோல், கடுக்காய்த்தோல், நெல்லிமுள்ளி, இவற்றை வகை-1-க்குச் சமனெடையாய் எடுத்து, மொத்த எடைக்கு எட்டுப்பங்கு சலம் விட்டுக் காய்ச்சி, கால் கூறாய்ச் சுண்டினபின் இறக்கி வடிகட்டிக் கொள்ள வேண்டும். முன் சித்தப்படுத்தின கிட்டத் தூளை இரும்புப் பாத்திரத்திற்போட்டு, அதில் கிட்டத்தூள் எடைக்கு எட்டுப்பங்கு மேற்படி கியாழம் விட்டு, அடுப்பேற்றிக் காய்ச்சி, சுண்டின பின் இறக்கி, ஆறவிட்டு எடுத்துக் கல்வத்திற் பொடித்து, முன்போல இரும்புப் பாத்திரத்திற் போட்டு,

முன்போல எட்டுப்பங்கு திரிபலைக்கியாழம் விட்டுக் காய்ச்சவேண்டும். சுண்டினபின் அரைக்க வேண்டும். இவ்விதம்-7-தடவை செய்ததே மண்டூரமாம். இதுவும் அனேக வியாதிகளுக்கும் உபயோகப்படுகின்றது.

குறிப்பு

வல்லம் என்னும் ஊர் தஞ்சை நகரத்திற்குச் சமீபத்தில் அதன் மேற்புறத்திலிருக்கிறது. பலகெட் என்பது நாஸிக் ஜில்லாவிலிருக்கிறது. இவ்விரண்டிடங்களிலும் கிடைக்கும் கிட்டமானது அதிசிரேஷ்டமானது. அப்படியகப்படா விட்டால் சாதாரண கிட்டத்தை உபயோகித்துக் கொள்ளவேண்டும்.

61. இரச கர்ப்பூரத்தை, இரும்பைக் காய்ச்சித்து வைத்த சலத்திலிழைத்து, முளைகளின் மீது பூசிவர, அதிக குணம் உண்டாம்.

62. புகையிலையும், பனைவெல்லமும் சமனெடையாக நிறுத்துக் கல்லுரலில் மைபோலிடித்து, உக்காவில் வைத்துப் புகைப்பிடித்து வெண்மையான பின் எடுத்து அதில் ஒரு குன்றி மணி முதல் விராகனெடை-½-வரையில், பசும் பாலுடன் உட்கொண்டுவர எல்லா வகை மூலமுந்தீரும். இதை உக்காவில் வைக்காமலே அகலில் வைத்துச் சீலைமண் செய்து புடம்போட்டுக் கொள்ளலாம்.

ரத்தமூலப் பொது லக்ஷணம்

இந்த முளைகள், பித்தமூல முளைகளைப்போலும், பவள வருணத்தை உடையவைகளாகவும், லக்ஷணங்கள் பித்தமூல லக்ஷணங்களைப் போலும் இருக்கும். மலம் சிக்கலாய் வெளிப்படுவதால் முளைகளில் வேதனை; அதனால் முளைகளில் அடிபடுவதினால் அவையமுந்தி ரத்தம் ஒழுகும். இந்த ரத்தமானது கெட்டிருக்கும். இறங்கும்போது அதிக உஷ்ணமாகவும் இருக்கும். தேகத்தினின்றும் அதிக ரத்தம் போவதால் இந்த ரோகி தவளையைப்போல மஞ்சணித்திருப்பான். நாடிகள் கனத்துத் தாமதித்துத் தாமதித்து நடக்கும். புளிப்பானவும், குளிர்ச்சியானவும் வஸ்துக்களில் பிரியம். தேகபல மெல்லாங் குறைந்து போம். பஞ்சேந் திரியங்களில் பலமும் குன்றிப்போம். இதுவும் வாத, பித்த, சிலேட்டும், ரத்த மூலமென மூன்றுவகைகளாம்.

வாதரத்த மூலம்

லக்ஷணம்:- முளைகளில் நின்றும் நுரையோடு கூடின சிவந்தரத்தம் கொஞ்சம் வெளிப்படும். தலை, இடுப்பு, கண், ஆசனம் ஆகிய ஸ்தானங்களில் நோவு, இந்த ரோகி நாளுக்கு நாள் அதிக பலஹீனப் பட்டு வருதல், இலைப்பான வஸ்துகளைச் சாப்பிட்டால் வியாதி பிரபலப்படுதல் ஆகியவைகளாம்.

63. வாதரத்த மூலச் சிகிச்சை

ஒரு பெருந் தேங்கா யுரி மட்டை நாரைச் கொளுத்தி எரித்த பஸ்பம், தான்றிக்காய்த்தோலை எரித்த பஸ்பம், சீனி சர்க்கரை, இவை வகை-1-க்குச் சமனெடை, இம்மூன்றையும் மிஸ்ரமித்து, 3-பங்கு செய்து மூன்று வேளை, நெய்யில் மர்த்தித்துச் சாப்பிட, மேற்கண்ட ரோகந் தீரும்.

64. வேப்பங் கொட்டைப் பருப்பு, ஒதியன் பட்டைச் சூரணம், சீனி சர்க்கரை, இவை வகை-1-க்கு சமனெடை, இவற்றை ஒன்றாக மிஸ்ரமித்து வேளை-1-க்கு விராகனெடை 1½ ஆக தினத்திற்கு மூன்று தடவைகள்-½-¾, விராகனெடை சோற்றுக் கற்றாழைச் சாற்றில் மர்த்தித்து உட்கொள்ள மேற்படி வியாதி தீரும்.

65. வங்க பஸ்பம்

வெள்வங்கத் தகட்டைக் கத்தரித்த பொடி, கருவங்கத் தகட்டைக் கத்தரித்த பொடி, வகை-1-க்குப் பலம்-1. இவ்விரண்டையும் கல்வத்திலிட்டு, இஞ்சி ரசத்தினால்-5-நாளும், எருக்கிலைச் சாற்றினால் 7-நாளும், எலுமிச்சம்பழ ரசத்தினால்-15-நாளும் அரைத்து பில்லை செய்து, காய வைத்து அகலில் வைத்து மேல் அகல் மூடி, மண்சீலை செய்துலர்த்தி ஒரு பானையில் நாலங்குல மணலிட்டு, அதன்மேல் முன்சித்தப் படுத்தின மருந்தை வைத்து பானை நிறைய மணல் கொட்டி பானை வாயையும் மூடி மண்சீலை செய்து-8-சாமம் எரிக்க வேண்டும். ஆறவிட்டெடுத்து-14-நாள் பெருங்காயக் கியாழத்தினாலும், 3-நாள் சோற்றுக்கற்றாழைச் சாற்றினாலும் அரைத்து முன் போல் பில்லை செய்து முன்போல் மணலில் வைத்தெரிக்கவும். இவ்விதம்-5-6-12-தடவைகள் செய்யில் களங்கமற்ற திவ்விய பஸ்பமாம். பின்பெடுத்து அதற்கிரண்டு பங்கு லவங்கச் சூரணத்தைச் சேர்த்து அரைத்து சீஷாவில் பத்திரப்படுத்த வேண்டும். ஒரு அரிசியெடை முதல்-12-அரிசி யெடை வரையில் முன் சொன்னதுபோல் முலாம்பழத்துடன் கொடுக்க, எல்லாவித மூல ரோகங்களுந் தீர்ந்து, இந்திரிய சிராவகம், இந்திரிய நஷ்டம் ஆகியவை தீர்ந்து, தாது விர்த்தி உண்டாம்.

குறிப்பு

இவ்வருமையான பாகத்தைச் செய்வதில் தேகப் பிரயாசை இருக்கின்றபடியால் அனேகர் அலட்சியமாய்க் கடைக் கணிப்பார்கள். உபயோக மற்ற பல பாகங்களைச் செய்து ஒன்றும் பிரயோசனப்படாமல் ஏமாந்து போய் நிற்பதைப் பார்க்கிலும், அனுபவமாய்க் கையாளப்பட்ட முறைகளைச் சிரமத்திற்குப் பால்மாறாமல் செய்து முடித்தால், அதற்குத் தகுந்த பிரயோசனமும் உண்டாமென்பதிற் சந்தேகமில்லை.

பித்த ரத்த மூலம்

இதில் பித்த மூல லக்ஷணங்களே காணப்படும். இதன் சிகிச்சையும், பித்த மூல சிகிச்சையேயாம்.

கபரத்த மூலம்

மலமானது கெட்டியாகவும், வெண்மையாகவும், மஞ்சள் வருணமாகவும், நெய்ப்பசை உள்ளதாகவும், அதிகமாகவும், குளிர்ச்சியாகவும் இருக்கும். இந்த முளையில் நின்று வடியும் ரத்தமானது தடிப்பாகவும், குளிர்ச்சியாகவும், மஞ்சள் சாயலானதாகவும், நெய்ப்பசை உள்ளதாகவும், குங்குமப்பூ வருணமுள்ளதாகவும், இருக்கும். ஆசனம் எப்போதும் ஈரமுள்ளதாகவும், நைப்பாகவும், கனமாகவும் இருக்கும்.

சிகிச்சை:- கப மூலத்தின் சிகிச்சையே இதற்குமாம்.

சகஜ மூலம்

தாய், தந்தைகள் வழியாய்க் கண்டிருப்பதும், மூன்று வருஷத்திற்கு மேற்பட்டுத் தொடர்ந்து நிற்பதும் ஆசனத்தின் மூன்று வளையங்களிலும் கண்டிருப்பதும் சகஜ மூலமாம்.

சிகிச்சை:- நல்லெண்ணெய் துலா-1, மஞ்சள் மெழுக்கு துலா-1, மஞ்சள் தூள் விராகனெடை-½, மிருதார் சிங்கித்தூள் விராகனெடை-1½. எண்ணெயைக் காய்ச்சி, அதில் மெழுகைப்போட்டு, அது உருகினபின் மற்ற சரக்குகளையும் போட்டு, களிம்பாய்ச் செய்து முளைகளின் மீது பூசிவர, குணமாம்.

தினவு ரோகம்

இந்திரிய சிராவகத்தின் காரண ரோகங்களின் ஒன்றாகிய மூலரோகத்தின் சிகிச்சைகளைச் சொன்னோம். அவைகளில் தங்கள் தங்கள் இஷ்டப்படி சமயோசிதமாய்த் தகுந்த முறையைச் செய்து, அந்த மூலரோகத்தை நிவர்த்தி செய்து கொண்டால், இந்திரிய சிராவகமுந் தானே நீங்கிவிடும். ஒருவேளை அப்படி நீங்கா விட்டால் பின்னெழுதப்படும். இந்திரிய சிராவக நிவாரணப் பொது முறைகளில் ஒன்றைச் செய்து உபயோகிப்பதினால் அதி சீக்கிரம் சுகுணம் உண்டாகும் என்பதிற் சந்தேகமே இல்லை.

ஆசனத்தில் அல்லது கோசத்தில் தினவு அல்லது நமைச்சல் உண்டாவதினாலும் இந்திரிய சிராவகம் உண்டாகும் ஆகையால் அவற்றின் சிகிச்சைகளையும் எழுதுவாம்.

தினவுரோகச் சிகிச்சை
(இங்கிலீஷ்)

இந்த ரோகத்திற்காக இது வரையில் உபயோகிக்கப்பட்டு வருகின்ற பாகங்களில் கெந்தகமே அதிசிரேஷ்டமும், நம்பத்தக்கதும் எனத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. இதன் பிரயோகத்தை வியாதி பலத்திற்குத் தகுந்தபடி உள்ளுக்கும் வெளிக்கும் பிரயோகிக்கலாம். எந்தப் பாகத்தில் அரிப்பு அதிகமாய் இருக்கிறதோ அந்தப் பாகத்தில் கீழ்க்காணும் முறையை மேலிற்கு உபயோகிக்கலாம்.

66. Take of the	Flower of Sulphur	ozs	2
"	Powdered sal Ammoniac	drs	2
"	Hogs Lard or Butter	ozs	4
"	Essence of Lemon	drs	40

Mix and Make ointment.

பதங்கித்த கெந்தகம்	அவுன்ஸ்	2
தூள் செய்த நவச்சாரம்	திராம்	2
பன்றி நெய் அல்லது வெண்ணெய்	அவுன்ஸ்	4
ஜம்பீர எஸ்ஸென்ஸ்	துளி	40.

இவை எல்லாவற்றையும் ஒன்றாக மிஸ்ரமித்துக் களிம்பாகச் செய்து, நமைச்சலுள்ள ஸ்தானத்தில், இராக் காலங்களில் படுக்கைக்குப் போகும் போது பூசிக் கொள்ளவும். இவ்விதம் வாரத்தில் 2-3-தடவைகள் செய்ய, மேற்படி ரோகந்தீரும். இக்களிம்பில் கெந்தக வாசனையும் இருக்காது. நமைச்சலானது தேகத்தின் பல அவயவங்களிலும் இருந்தால் ஏக காலத்தில் எல்லா அவயவங்களிலும் பூசாமல் ஒன்றை விட்டொன்றின் மீது உபயோகிக்கவேண்டும். ஏனெனில் தேகத்தில் எல்லா ரோமக் கால்களையும் பந்தப்படுத்துவது நன்றன்று. இதனால் நமட்டுச்சொறி, நம்மட்டுச் சிரங்கு முதலியவைகளுந் தீரும்.

தேகத்தில் யாதேனும் துர்நீர்கள் சேர்ந்திருந்தால் மேற்படி களிம்பை உபயோகிக்குமுன் இரண்டொரு தடவை பேதிக்குக் கொடுப்பது அதிக குணத்தைக் கொடுக்கும்; இக்களிம்பை உபயோகிக்கும்போது கீழ்க்காணும் மருந்தையும் உள்ளுக்கு உபயோகிக்கலாம்.

67. Take of	Flower of Sulphur	ozs	2
"	Cream of Tartar	oz	1
"	Clarified Honey	f.dr	1
"	Syrup of Ginger	f.drs	4
"	do Saffron	f.drs	4

Triturate all in a mortar, until they arontimately mixed. Dose drs two to four to be taken early in the morning.

பதங்கித்த கெந்தகம்	அவுன்ஸ்	2
திராக்ஷா உப்பு	அவுன்ஸ்	1
சுத்திசெய்த தேன்	திரவதிராம்	1
சுக்குபாணிதம்	திரவதிராம்	1
குங்குமப்பூபாணிதம்	திரவதிராம்	4

இவை எல்லாவற்றையும் செவ்வையாக மிஸ்ரமிக்கிற வரையில் மைபோலரைத்துக் கொள்ளவும். அதிகாலையில் திராம் 2 முதல் 4 வரையில் உட்கொள்ள மலத்தை இளக்கும்.

இந்த ரோகி எப்போதும் ஒரே வஸ்திரத்தைத் தரித்திருக்கலாகாது. அடிக்கடி வஸ்திரங்களை மாற்றுகிறதும் தவிர, முன்களைந்த வஸ்திரத்தை வெள்ளாவியில் வைத்துத் துவைத்துவிட வேண்டும். மேலும் நமைச்சலுள்ள பாகத்தையும் அடிக்கடி கழுவி சுத்தி செய்யவும் வேண்டும். கெந்தகப் பிரயோகங்களை சில நாள் தொடர்ச்சியாய்ச் செய்து வந்தால் மாத்திரம் பிரயோசனம் உண்டாம்.

தினவு ரோகச் சிகிச்சை

(யூநாநி)

வறட்டுக் தினவானால், கொழுமையான வஸ்துகளை உபயோகித்து நைப்புண்டாக்க வேண்டும். இதற்காக, கடலைப்பருப்பு, ஊசித் தகரை விதை, தகரைவிதை ஆகியவைகளில் ஒன்றை சலம் வார்த்தரைத்து, அந்த ஸ்தானத்தின்மீது பூசிவைத்து வெந்நீரினால் கழுவி விடவேண்டும். பின்பு பேதிக்குக் கொடுத்து சம்பங்கியெண்ணெய், எலுமிச்சம்பழ ரசம் இவ்விரண்டையும் சமனாகச் சேர்த்துப் பூசி வர வேண்டும். இவ்விதம் நைப்புண்டாக்கினபின், சில தடவை வெந்நீரினால் கழுவிச்சுத்தி செய்து ரோஜாப்பூ எண்ணெய், காடி ஆகிய இவ்விரண்டையும் சமனாகச் சேர்த்து அந்த ஸ்தானத்தில் பூசி வர வேண்டும். இவ்விதமே எல்லா வகைத் தினவு ரோகத்திற்கும் சிகிச்சை செய்ய வேண்டும்.

வெந்தயம், ஆளிவிதை இவ்விரண்டையும் தேன் வார்த்து மைபோலரைத்துக் கொதிக்க வைத்துத் துணியில் நனைத்துச் சுருட்டி ஆசனத்திற்குள் செலுத்தி வைக்க ஆசனத் தினவு போம். இதைத் கோசத்தின் மீது சுற்றி வைக்கக் கோசத்தினவு போம்.

68. கெந்தி யெண்ணெய்

தேவையான கெந்தகத்தை, கல்வத்திலிட்டு, எருக்கம் பாலால், இரண்டு நாளரைத்து, சிறு பில்லைகளாகச் செய்து நிழலிலுலர்த்தி, ஒரு மண்பாத்திரத்தில் அது நிறைய சலம்விட்டு, மேற்படி பில்லைகளைப் போட்டு, மெதுவாய் நாலுசாமம் தீயெரித்து, நீர்மேல் மிதக்கும் எண்ணெயைக் கையினால் வழித்து அல்லது, இறகினால் எடுத்துச் சேர்த்துப் பத்திரப்படுத்தவும், இதை உள்ளுக்கும் வெளிக்கும் உபயோகிக்கலாம். எல்லாவித நமட்டுச்சொறி, தினவு, சொறி சிரங்குகள் முதலியவை தீரும்.

69. சுகிர்தாதி மாத்திரை

மஞ்சட் கடுக்காய்த்தோல், தான்றிக்காய்த்தோல், நெல்லிமுள்ளி, வாய்விளங்கம், இவற்றைத் தனித்தனி இடித்த சூரணம் வகை-1-க்குப் பங்கு-1. சுத்தி செய்த சீமைச் சிவதைவேர்ச் சூரணம் பங்கு-2. இவை எல்லாவற்றையும் தண்ணீர் விட்டரைத்து மாத்திரைகளாகச் செய்து நிழலிலுலர்த்தி வைத்துக் கொண்டு, வேளை-1-க்கு விராகனெடை-2-2¼, பசும்பாலுடன் உட்கொள்ள தேகத்தின் துர்நீர்கள் வெளிப்பட்டு எல்லாவ கை நமைச்சல்கள், சொறி சிரங்குகள் முதலியவை தீரும். பேதி, அதிகமாயாக வேண்டுமானால் துலா-1, உட்கொள்ள வேண்டும்.

70. கம்பி வெடியுப்பு பலம்-1, வேப்பெண்ணெய் பலம்-2. இவை இரண்டையும் சேர்த்தரைத்துப் பூசி வர நமைச்சல் தீரும். இதில் மெல்லிய வஸ்திரத்துண்டை நனைத்துச் சுருட்டி ஆசனத்திற்குள் செலுத்தி வைக்க ஆசனத்தினவு ரோகந் தீரும்.

71. அலரியிலை-20. இவற்றை 6-பலம் நல்லெண்ணெயிற் போட்டுக் காய்ச்சி இலைகள் வறுபட்டுக் கருகினபதத்தில் இறக்கி வைத்துக்கொண்டு பூசிவர நமைச்சல் முதலியவை தீரும்.

தினவு ரோகச் சிகிச்சை
(ஆயுர்வேத முறைப்படி)

ஆரம்பத்தில் பேதிக்கு அல்லது வாந்திக்குக் கொடுத்து துர்நீர்களை வெளிப்படுத்தின பின், கீழ்காணும் முறைகளிலொன்றை உபயோகிக்கவேண்டும்.

72. எலுமிச்சம் பழ ரசம் விராகனெடை-6½, சம்பங்கி யெண்ணெய் விராகனெடை-19¼. இவ்விரண்டையும் மிஸ்ரமித்து, 2-சாமம் கல்வத்திலரைத்து, நமைச்சலுள்ள ஸ்தானங்களில் பூசிவைத்து இலுப்பைப் பிண்ணாக்கைச் சுட்டு, அரைத்து அதனால் தேய்த்துக்கழுவ வேண்டும். அல்லது இஷ்ட முள்ளவர்கள்

சாணத்தினால் தேய்த்துக் கழுவியும் விடலாம். இப்படிச் செய்து வர நமட்டுச்சிரங்கு, நமட்டுச் சொறி, வறட்டுசொறி முதலியவைகளுந் தீரும்.

73. சூரத்துக் கடுக்காய்த்தோல், மஞ்சட்கடுக்காய்த்தோல், நெல்லிமுள்ளி, தான்றிக்காய்த் தோல்: பிஞ்சுக்கடுக்காய், கரந்தைக் கொட்டை இவற்றைத் தனித் தனி இடித்த சூரணம் வகை-1-க்கு துலா-2, துரா இலைச் சூரணம் துலா-10, பசுவின் நெய் துலா-9, சீனி சர்க்கரை பலம்-10.

செய்முறை:- முன்னர் கடுக்காய்ச் சூரணங்களை மிஸ்ரமித்துக் கொஞ்சம் நெய் தெளித்துப் பசையாக்கி மற்றச் சூரணங்களையும் அதனுடன் கலந்து வைத்துக் கொள்ளவும். சர்க்கரையைப் பாகுசெய்து பதத்தில் முன் சித்தப்படுத்தின சூரணங்களைக் கொட்டிக் கிளறியிறக்கி, மிகுதி நெய்யையும், விட்டுக் கிண்டி, பீங்கான் பாத்திரத்தில் பத்திரப்படுத்தவும்.

மாத்திரை:- துலா-1½ -2, சாப்பிடவும்.

உபயோகம்:- சொறி சிரங்கு, வறட்டுச் சொறி, தினவு, முதலியவைகள் தீரும்.

குறிப்பு

இந்தப் பாகத்தில் அபினி சேர்த்துச் செய்வதும் உண்டு.

74. கெந்தகம், கஸ்தூரி மஞ்சள், கார்போக அரிசி, இவை வகை-1-க்கு விராகனெடை-1½ , துரா இலை விராகனெடை-9¼ இவற்றை இடித்து மூன்றிலொரு பாகத்தில், அரை ஆழாக்குத் தண்ணீர் வார்த்து ஒரு இரவு ஊறவைத்துக் காலையில் இறுத்து வடிகட்டிப் பானம் செய்யவும். திப்பியை நன்றாய் அரைத்து ஆளிவிதை யெண்ணெய் அல்லது நல்லெண்ணெய் விட்டுக் கலக்கி அரிப்புள்ள ஸ்தானத்தில் பூசிவைத்து, சுட்ட அரைப்பு அல்லது இலுப்பைப் பிண்ணாக்கிட்டு வெந்நீரினால் கழுவிச் சுத்திசெய்யவும். இவ்விதம் சிலநாள் செய்ய மேற்படி வியாதிகள் தீரும்.

75. உலர்த்தின பிரமதண்டுப் பூண்டு துலா-5, உலர்த்தின கொட்டைக் கரந்தைப் பூண்டு துலா-2, இவ்விரண்டையும் காற்படி சலத்திற் போட்டுக் காய்ச்சி மூன்றிலொரு பாகமாகச் சுண்ட வைத்திறக்கி வடி கட்டின கியாழத்தில் கலப்பற்ற தேன் துலா-3, விட்டுப் பானஞ் செய்ய ஒன்றலல்து இரண்டு வேளையில் நமைச்சல் போய்விடும். 4-5-வேளைகளில் சிரங்கு முதலிய ரணங்கள் ஆறிப்போம்.

76. ஆற்றுத் தும்மட்டிக்காய் வேர் துலா-2, துரா இலை துலா-1, இவ்விரண்டிலும் கால்படி சலம் வார்த்து, அரைப்பாகமாகச் சுண்ட வைத்து வடிகட்டி பானம் செய்யவும். இவ்விதம் சிலநாள் செய்துவர, எவ்வித சொறிகளும் நமைச்சல்களும் தீரும்.

77. தாளகம் பங்கு-1, நல்லெண்ணெய் பங்கு-2, எண்ணெயை அடுப்பிலேற்றிக் காய்ச்சி சிவந்தவுடன் தாளகத்தைத் தூள்செய்து வைத்துக்கொண்டு சிறுகச் சிறுகத் தூவி மரக்கொம்பினால் துழாவி, தூளெல்லாம் தூவி முடிந்தபின்பு, எண்ணெய் நீல வருணமாகி எண்ணெய் பற்றி எரியும். உடனே அந்தப் பாத்திரத்தை வேறு பாத்திரத்தினால் மூடிவைக்கச் சுவாலை அடங்கி விடும். பின்பு அரைக்கால் பங்கு எருக்கு இலையைச் சுட்டெரித்த சாம்பலைத் தூவி மறுபடியும் மூடி இறக்கி, குளிர ஆறினபின் வடிகட்டிக் கொள்ளவும். இத் தைலத்தைப் பூசி வெந்நீரால் கழுவி வருவதினால் பேய்ச்சொறி, நமட்டுச்சிரங்கு முதலியவைகளெல்லாந் தீரும்.

78. குன்றிமணி, நெல்லிமுள்ளி, கர்க்கடக சிங்கித்தூள், மிளகுத்தூள், துருசுத்தூள் இவை வகை-1-க்குத் துலா-1. ஆளிவிதை எண்ணெய் அல்லது நல்லெண்ணெய் அல்லது ஜய்த்தூன் எண்ணெய் பலம்-7½ , வெள்ளைக் குங்கிலியத்தூள் விராகனெடை-¾ எண்ணெயை அடுப்பேற்றிக் காய்ச்சிச் சிவந்த பக்குவத்தில் குன்றிமணியைப்போட்டு அவை வெந்து கருகின பின்பு, கர்க்கடக சிங்கியைப் போட்டு அவை வெந்து கருகின் பின்பு, நெல்லி முள்ளியைப் போட்டு அது வெந்துக் கருகினவுடன், துருசுத் தூளைப்போட்டு, சற்று நேரம் காய்ச்சி இறக்கி வடிகட்டிக் கொள்ளவும். மறுபடியும் அந்த எண்ணெயை அடுப்பேற்றிக் காய்ச்சி, மிளகுத்தூளைத் தூவி அது வெந்து கருகினபின் குங்கிலியத்தூளைத் தூவி இறக்கி வைத்துக் கொள்ளவும். இதனை மேற்பூசி வைத்து, சாணமிட்டு வெந்நீரால் கழுவி வரவேண்டும். இவ்விதம் செய்யக் கூடாவிட்டால் மேற்பூசிக் கழுவாமல் விட்டுவிடலாம். மேற்கண்ட ரோகங்கள் தீரும்.

79. கெந்தகம் துலா-1, ரசம், வறுத்த துரிசு இவை வகை-1-க்கு விராகனெடை-1½, தண்ணீரினால்-30-தடவைகள் கழுவின வெண்ணெய் துலா-6 முன் சரக்குகளை ஒன்றாக அரைத்து மிஸ்ரமித்த பின் வெண்ணெயையும் கூடச் சேர்த்தரைத்து மேற்பூசி ஒரு மணிநேரம் தாமதித்துக் குளிர்ந்த சலம் விட்டுக் கழுவி விடவேண்டும். பத்தியம்:- உப்பு, புளி முதலியவைகளாகா. இவ்விதம் சில தடவைகள் செய்யின் மேற்கண்ட ரோகங்கள் தீரும்.

80. அசுவ கெந்திக் கிழங்கு துலா-8, உலர்த்தின வெள்ளறுகு, துலா-10, உலர்த்தின பிரமதண்டு துலா-10, உலர்த்தின கொட்டைக் கரந்தை அல்லது சிவகரந்தை துலா-10, உலர்த்தின துரா இலை துலா-12, நிலவேம்பு, துலா-12, கெந்தகம், ரசம், இவை வகை-1-க்கு துலா-3, கோவையிலை ரசம் துலா-1.

செய்முறை:- பின் மூன்றையும் ஒன்றாகச் சேர்த்தரைத்து இதனுடன் மற்றவைகளையும் இடித்துத் தூள்செய்து ஒன்றாக மிஸ்ரமித்து அதில்-4-படி சலம் வார்த்து, ஒருநாளூறவைத்து வாலையிலிட்டு திராவகம் இறங்குங்குழாயில் பெரிய சீஷா, அல்லது ஜாடி வைத்து ஆவி போகாமல் சீலை கெட்டியாகச் செய்து தீ மெதுவாயெரித்துப் பக்குவமாய்-2-படி திராவகம் இறக்கிக் கொள்ளவும். தீ அதிகமா எரித்தால் வருணம், ருசி, ஆகியவைகள் கெட்டுப்போம். மாத்திரை துலா-5.

உபயோகம்:- பலவகைச் சிரங்குகள், படைகள், பலவகைச் சொறிகள் முதலியவைகளும் தீரும். ரத்த சுத்தி உண்டாகி தாதுவிர்த்தி உண்டாம். (சுயானுபவம்.)

ஹஸ்மரி ரோகம்.

இந்த ரோகமும் இந்திரிய சிராவக ரோகத்திற்குக் காரணமாகின்ற படியால், இந்த ரோக சிகிச்சையும் அவசியம் தெரிந்திருக்க வேண்டியதே. ஆனால் வெகுநாள் அனுபவப்பட்டு கைவல்லியமுள்ள பண்டிதர்கள் மூலமாகச் சிகிச்சை செய்து கொள்வது ஆவசியகம். ஆயினும் இதைப்பற்றின முக்கியாம்சங்களைத் தெரிந்திருப்பது தக்க சமயங்களில் பேருதவியாய் இருக்கு மென்பதிற் சந்தேகமில்லை. ஆகையால் அதன் காரணம், லக்ஷணம், சிகிச்சை முதலியவைகளையும் சங்கிரகமாய் எழுதுவாம்.

சிறு பொடிகளாவது, மணலாவது நீர்க்குண்டிக்காய்களில் ஜனித்து, மூத்திரத்துடன் வெளிப்படுவதற்கு சர்க்கரா ஹஸ்மரி ரோகமெனப் பேர். இது நீர்ப்பையில் தங்கி நின்று விட்டால், தினேதினே அதனுடன் மஷ்டு நேர்வதால் அது பெருத்து, நீர்த்தாரை வழியாய்ப் புறப்பட ஏதுவில்லாமற் போய்விடுவதற்குக் கல்லடைப்பு என்று பேர்.

காரணம்:- அதிகமாய்ச் சிற்றின்பத்தில் அடிபடுதல், காரமான திராக்ஷா சாராயத்தைப் பானஞ் செய்தல், சதாகாலம் உட்கார்ந்தே இருத்தல், அதிக சூடானவும், அதிக மெதுவானவும் படுக்கையில் அடிக்கடி சயனித்தல், முக்கியமாய் மல்லாந்து சயனித்தல், மணல், தூசு முதலியவைகள் நிறைந்துள்ள சலத்தைப் பானஞ் செய்தல், வாயு பதார்த்தங்கள், மலபந்த பதார்த்தங்கள் ஆகியவைகளை அதிகமாய் அல்லது அடிக்கடி புசித்தல், முதலியவைகளாம்.

மேலும் இந்த ரோகமானது பெரும்பாலும் பரம்பரையை அநுசரித்துக் காண்பதும் உண்டு. கீல்வாதம், கணுக்கால் வாதம் ஆகிய வியாதி சுபாவம் உடையவர்களும் பெரும்பாலும் இந்த வியாதிகளுக்குள்ளாவார்கள்.

லக்ஷணம்:- சிறு பொடிகள் நீர்க்குண்டிக்காய்களில் ஜனித்து அங்கிருந்து புறப்படுகிற படியால், குண்டிக்காய், நீர்ப்பை, நீர்த்தாரை, ஆகிய ஸ்தானங்களில் வேதனை, எரிச்சல் முதலியவைகளுண்டு. மூத்திரப்பையில் இது இறங்கி விட்டால் முன் வேதனை தணிந்து போமாகையால் ரோகிக்கு அதிக சந்தோஷம் பிறக்கும். தேகங் கனதியாய் இருப்பதுபோல் தோற்றும், வாந்தி உண்டாகும். சில நேரங்களில் மூத்திரத்துடன் ரத்தம் வெளிப்படும். அது பெருத்து மூத்திரக் குழலில் தங்கி அடைத்துக் கொண்டால் வேதனை பிரபலப்படும். நோவானது நீர்ப்பை வரையில் பரவி நிற்கும். கல்லானது எப்பாகத்தில் சிக்கி நிற்கின்றதோ அப்பக்கத்துத் தொடை, கால் ஆகியவை மரத்திருக்கும். பீஜங்கள் மேலுக்கேறி இருக்கும். மூத்திரங் கட்டுப்படும்.

நீர்ப்பையில் மணல், அல்லது கல், ஜனித்தால் மூத்திரம் பெய்யும் முன்னும், மூத்திரம் பெய்யும்போதும் அதிக வேதனை உண்டாகும். அது துளித்துளியாய் இறங்கும். அது தாராளமாய்த் தாரையாய் வெளிப்படும்போது சட்டென நின்று விடும். தேக இயக்கத்தினால், முக்கியமாய் குதிரை சவாரி செய்யும் போதும், வண்டியில் ஏறிப் போகும் போதும் குலுங்குவதினால் நீர்ப்பையின் கழுத்து ஸ்தானத்தில் அதிக நோவுண்டாகும். மூத்திரத்துடன், மூக்கு சளியைப்போன்ற திரவம் வெளிப்படும். ஆண்குறி மலரில் தினவிருக்கும். மூத்திரம் பெய்யும் போது மல விசர்க்க ஸ்பரிசமுண்டாகும். ரோகியானவன் நின்று அல்லது உட்கார்ந்து மூத்திரம் பெய்வதைப் பார்க்கிலும் படுத்தபடியே சல விசர்க்கஞ் செய்வதினால் குணந் தோற்றும். சல விசர்க்க முடிவில் வலிப்புகாணும். சலாகையினால் பரீட்சித்தால் அடைத்திருப்பது நன்றாய்ப் புலப்படும்.

சிகிச்சை:- மணல் அல்லது கல் ஜனிக்கப் பெற்றவர்கள் வாயு பதார்த்தங்கள், சூடான பதார்த்தங்கள் ஆகியவைகளை விலக்கவேண்டும். உவர்ப்பானவைகள், புளிப்பானவைகள் ஆகியவைகளையும் நீக்கவேண்டும். இவர்கள் முக்கியமாய் மூத்திர வர்த்தன காரிகளையும் மலகாரிகளையும், கையாடி வரல் வேண்டும். காஹூக்கீரை, காசினிக் கீரை, சோயிக்கீரை, மஞ்சள் முள்ளங்கி, நாட்டு முள்ளங்கி, சிகப்பு முள்ளங்கி, வெங்காயம் ஆகியவைகள் ஆகாரத்திற்கு ஏற்றவைகள்.

தயிர், மோர், நீர்ப்பால், அவைக்கஞ்சி, துத்தி அல்லது அதிமதுரக்கியாழம், ஆகியவைகளும், ஆளிவிதை, எலுமிச்சன் மொட்டு; அல்லது இலை ஆகியவைகளின் ஊறல் கியாழம் ஆகியவைகளும் பானத்திற் கேற்றவைகள். மிதமாய் உலாவித் தேகப்பயிற்சி செய்வது மிகவும் நன்மை பயக்கும். ஆனால் கடினமான தேகப் பயிற்சியினால் நீரில் ரத்தம் விழும். குதிரைசவாரி, வண்டியேற்றம் ஆகியவைகளை நீக்கவேண்டியது. இந்தச் சுபாவமுடையவர்கள் சதா உட்கார்ந்திருக்கும் பழக்கத்தைவிட்டு, நடந்து உலாவும் பழக்கத்தை அனுசரிக்கவேண்டும். இந்த ரோகம் ஆரம்பித்தவுடன் மேற்கண்ட ஆகாரங்கள், பானங்கள் ஆகியவைகளைக் கையாடி மிதமான தேகப்பயிற்சியும் செய்துவரின் அஸ்மரி விளைவு தானே நின்றுவிடும். ஒரு வேளையப்படி நிற்காவிட்டாலும் அவை பெருக்க ஒருக்காலும் எதுவிராது. இவ்விதிகளை அநுசரிக்காவிட்டால் அவை பெருக்காதென எண்ணுவது மதியீனம்.

வலிப்பு கண்டு விட்டால் வியாதி பிரபலப்பட்ட அறிகுறியாம். வேதனையைத் தணிக்க முயற்சி செய்ய வேண்டும். வெந்நீரில் உட்கார வைத்து அர்த்தாங்க ஸ்நானம் செய்வித்து, 25-கிரேன் (Chloral) குளோரலை-6, அல்லது 8-மணிக்கொரு தடவை வேதனையானது மறுபடியும் வருகிறவரையில் கொடுக்க வேண்டும். மலபந்தம் இருந்தால் இலகு பேதி மருந்துகளைக் கொடுத்து மலபந்தத்தை நீக்க வேண்டும். பார்லி அரிசிக் கஞ்சியை அல்லது ஆளிவிதைக் கஞ்சியைத் தாராளமாய்க் குடிப்பாட்ட வேண்டும்.

குறிப்பு

இந்த ரோகத்தில், மூத்திரத்தைப் பரீட்சித்து, அஸ்மரியின் ஜாதியைக் கண்டறிந்து, அந்த ஜாதிக்குத் தகுந்தபடி சிகிச்சை செய்ய வேண்டியது ஆவசியகம். அவை எல்லாவற்றையும் அநுபவசாலிகளே செய்யக்கூடுமே ஒழிய சாமான்னியமான எல்லோரும் செய்வது அசாத்தியமென இம்மட்டும் நிறுத்தப்பட்டது.

அஸ்மரி ரோகம்
(யூநாநி)

நீர்க்குண்டிக் காய்களில் மணல், அல்லது கல், ஜனிக்கும்.

காரணம்:- இது அபக்குவமும் பசையுள்ளதுமான ஒருவித சத்தினால் உண்டாகிறது. அது அதிக தடிப்பாகவும், அதிக பசையுள்ளதாகவும் இருக்கில் கல்லாகி விடுகிறது. அவ்வளவு தடிப்பாயிராமல் சற்று இளகலாயிருந்தால் மணலாகி விடுகிறது. சீழ், ரத்தம் ஆகியவைகளினால் அபூர்வமாய் கல் ஜனிக்கும். இந்த ரோகம் பெரும்பான்மை பரம்பரையை அடுத்தது.

லக்ஷணம்:- சல விசர்க்க ஆரம்பத்தில் வண்டல் படிந்ததும் தடிப்பானதுமான மூத்திரம் வெளிப்பட்டு, பின்பு தெளிவான மூத்திரம் வெளிப்படுதல், புட்ட எலும்பில் பாரமும், இழுப்பது போன்றதுமான, உணர்ச்சியும் உண்டாதல், இதில் முக்கியமாய் முதுகில் ஒரு வஸ்து தொங்குகிறது போன்ற உணர்ச்சி, இதுவும் ரோகி குனியும்போது அதிகமாய்த் தோற்றுதல். சிறு குடற்களில் துர்மலம் நிறைந்து நின்றால் அப்போது நீர்க்குண்டிக்காய் நோவு பிரபலப்படுதல், மூத்திரமானது சிகப்பாய் அல்லது மஞ்சள் வருணமாயிருத்தல் அவ்விதமே அங்கு ஜனிக்கும் மணலும் சிவந்து அல்லது மஞ்சணித்திருத்தல், நீர்க்குண்டிக்காயின் வேதனையானது தனக்கு எதிரிலிருக்கும் பீஜம் வரையில் பரவிச் செல்லுதல், இன்னும் அப்பக்கத்துக் காலில் மரமரப்புடன் நோவுண்டாதல் ஆகியவைகளாம்.

குறிப்பு

குடல் முறுக்கு நோவும் நீர்க்குண்டிக் காயின் நோவும் பெரும்பாலும் ஒத்தேயிருக்கும் ஆகையால் இவ்விரண்டிற்கும் இடையிலுள்ள பேதத்தை நிதானிக்க வேண்டும். அவைபின் வருகிற விதமாம். குடல் முறுக்கி ரோகமானது முக்கியமாய்த் தாமதித்துத் தாமதித்துக் காணும். பால் கெடுதியினால் பாலர்களுக்குங் காணும். சிலருக்கு முறையாய்க் காணும். அதாவது, வாரம், மாதம், சிலசமயம் வருஷம் ஆகியவைகளுக்கொரு தடவை காணும். நீர்க்குண்டிக்காயின் நோயானது அடிக்கடியும் பிரபலமாகவும் காணும். இதனுடன் நீரில் மணல் முதலியவைகள் காணப்படும். இதுவே பிரதான பேதமாம்.

சிகிச்சை:- அசுத்தமாசுகளை நீக்கி, தேகத்தைச் சுத்தி செய்ய ஆரம்பத்தில் வாந்திக்குக் கொடுத்துப் பின்பு பேதிக்கும், நீர்பேதிக்கும் கொடுப்பது சர்வோத்தமம். ஆனால் இவை அதிக சூடானவைகளாய் இராமல் தேகசுபாவத்திற் கேற்றவைகளாய் இருக்க வேண்டியது. அஸ்மரியுண்டாகும் காரணங்களை நீக்கிவிட வேண்டும். இராக்காலங்களில் போசனம் செய்தல், அசுத்த பதார்த்தங்களைச் சாப்பிடுதல், பாலினங்கள், ஒட்டை முதலியவைவற்றின் இறைச்சி, சோள தினுசுகள், பாயசங்கள், பசையுள்ள ஹல்வாக்கள், ஆகியவைகளாகா. சீமை இலந்தைப்பழம் முதலியவை போன்ற தாமதமாய்ச் சீரணமாகும் கனி தினுசுகளையும், மிதமிஞ்சின சம்ஸர்க்கத்தையும் நீக்க வேண்டும் தேகத்திலுள்ள அசுத்த நீர்களை நீக்கினபின், நீர்க்குண்டிக் காய்களிலுள்ள தோஷத்தை நீக்கவேண்டும். மலத்தையிளக்க ஆசனத்திரியை உபயோகிக்கலாம். ஆனால் இத்திரியானது அதிகம் நீண்டதாய் இருக்கலாகாது. ஏனெனில், நோவு அதிகப்படும். பின்பு நீர்த்தாரைகளை மிருதுவாக்கி நோவைத் தணிக்கும் வஸ்துகளை உபயோகிக்க வேண்டும். இதற்காக, நெருஞ்சில், சீமை சாமந்திப்பூ, துத்தி, சோயி, சிதைத்தை வெந்தயம், கோவைவேர், இசுபகோல், பருப்புக்கீரை விதை, எள்ளிலை, பனப்ஷா, இவற்றில் தேவையானவைகளைக் கியாழம் செய்து, அதில் ரோகியை உட்கார வைக்க வேண்டும். ஜலம் இடுப்பு வரையில் மாத்திரம் இருக்க வேண்டும். இக்கியாழத்தின் திப்பியினால் ரோகியின் இடுப்பு, புட்டம், கவடு ஆகிய ஸ்தானங்களில் ஒற்றிடமிட வேண்டும். இவ்விதம் அர்த்தாங்க ஸ்நானம் செய்யும் காலத்தில் நீர்பேதி மருந்துகளைச் சாப்பிட்டால் அதி சீக்கிரம் குணம் உண்டாகும். அர்த்தாங்க ஸ்நானம் செய்வித்தவுடன் பனப்ஷா பூ எண்ணெய், சோயி எண்ணெய் முதலியவைகளை மிஸ்ரமித்து முதுகு, இடுப்பு, குண்டிக்காய் ஆகிய ஸ்தானங்களில் பூசவேண்டும். இந்தச் சிகிச்சையில் எப்போதும் சீதோஷ்ண விகற்பங்களைக் கவனித்து வரவேண்டியது மிகவும் ஆவசியகமானது. இந்த வியாதியில் பேதிக்குக் கொடுக்கத் தகுந்தவைகளாவன. சீமை நறுவிலிப் பழம், சீமை அத்திப்பழம், துத்தி, அதிமதுரம், இவற்றுள் இஷ்டமானவைகளைக் கியாழம் செய்து, அதில் சரக்கொன்றைப் புளியையும், தரஞ்சபீனையும் கரைத்துக் கொடுக்கவும். கல்லை உடைக்கத் தகுந்தவைகளான, பனப்ஷா, நெருஞ்சில், பொதினா, ஆளிவிதை, சதாபிலை, வெள்ளரி விதை, முதலியவைகளாம். இவற்றைத் தனித்தனி உபயோகிக்கினும் சரியே அல்லது இவற்றின் யோகமுறைகளைச்செய்து உபயோகிக்கினும் சரியே. கீழ்க் காணும் முறைகளையும் உபயோகிக்கலாம்.

கல்லடைப்பு நிவாரணி

காசினிவேர்த் தோல், சோம்புவேர்த் தோல், அல்லது சோம்பு, கருங்கொள்ளு இவை வகையொன்றுக்கு பலம்-1, காசினி விதைச்சூரணம், சோம்புச் சூரணம், சீமை வெள்ளரி விதை, நாட்டு வெள்ளரி விதை, கெக்கரி விதை, முலாம்பழ விதை ஆகிய இவ்வித்துக்களின் பருப்பு, இவை வகை ஒன்றுக்கு பலம்-¾, கரபஸ் ஓமம். மயிர்ச்சிக்கி இவற்றின் சூரணம் வகை ஒன்றுக்கு பலம்-¼, சீனி சர்க்கரை பலம்-25.

செய்முறை:- முன் மூன்று சரக்குகளையும் நையநறுக்கி முக்காற்படி ஜலம் வார்த்து மூன்றிலொரு பாகமாகக் காய்ச்சி இறக்கி நன்றாக வடிகட்டி, சீனி சருக்கரை சேர்த்துப் பாகுசெய்து, மேற்படி சூரணங்களைச் சேர்த்து நன்றாகக் கலந்து சீஷாவில் பத்திரப்படுத்திக் கொள்ள வேண்டும்.

மாத்திரை:- பலம்-¾ -1-1¼, சாப்பிடலாம்.

உபயோகம்:- நீரடைப்பு, கல்லடைப்பு, நீர்ப்பை வறட்சி, நீர்க்குண்டிக்காய் வறட்சி ஆகியவைகள் தீரும்.

ஹஸ்மரி ரோக நிவாரணி
சிறுநீரகக்கல் (கிட்னி ஸ்டோன்)

வெள்ளை மிளகுச் சூரணம் விராகனெடை-11, பெரு லவங்கப்பட்டைச் சூரணம் விராகனெடை-6, உலர்த்தின சதாபிலை, கோஷ்டம் இவற்றின் சூரணம் வகைக்கு விராகனெடை-5, சுத்தி செய்த நெல்லிக்காய்க் கெந்தகச் சூரணம், சுத்திசெய்த அறபிபோளச் சூரணம், குறாசானி ஓமச்சூரணம், கடுகுச் சூரணம், கெரியரிசிப் பால் இவை வகை ஒன்றுக்கு விராகனெடை-4, கெட்டித்தேன் பலம்-3.

செய்முறை:- தேனைக்காய்ச்சிப் பதத்திலிறக்கி எல்லாவற்றையும் ஒன்றாகக் கலந்து அதில் தூவி, நன்றாகக் கிண்டிக் கிளறிப் பத்திரப்படுத்தவேண்டும்.

மாத்திரை:- விராகனெடை-1-1¼, சாப்பிடலாம்.

உபயோகம்:- மூத்திரக் குண்டிக்காய்களில் விளையும் மணல், கல்லு ஆகியவற்றைப் போக்கிச் சுத்தப்படுத்தும்; நீர்க்கட்டு, கல்லடைப்பு, ஆகியவற்றைத் தீர்க்கும். கஷ்ட சுவாசம், கப இருமல், மார்பின் சீழ்க்கட்டி, பழஞ்சுரம், நடுக்கல், பாண்டுநோய், மண்ணீரல் வியாதி ஆகியவற்றைக் கண்டிக்கும். மருந்து விஷம், விரியன் பாம்பு விஷம் ஆகியவற்றையும் முறித்துக் குணப்படுத்தும்.

யூதாதி சூரணம்

*யூதக்கல்லுச் சூரணம் பலம்-5, உலர்த்தின கருமணித் தக்காளிப் பழச்சூரணம், சுரை விதைப் பருப்பு, வெள்ளரிவிதைப் பருப்பு, கெக்கரி விதைப் பருப்பு, முலாம்பழ விதைப் பருப்பு இவை வகை-1-க்குப் பலம்-½

---

* இதற்கு அரபுப் பாஷையில் 'ஹஜறுல்யகூது' என்று பேர். இது ஓர் விதக் கல்லு, சாதாரணமாய் யூநாநி மருந்துக் கடைகளில் இந் நாமத்தைக் குறித்துக் கேட்டால் கிடைக்கும்.

செய்முறை:- இவற்றில் பருப்பினங்களை அம்மியிலிட்டு வெண்ணெய்போல் அரைத்துச் சூரணங்களிற் கலந்து கொள்ள வேண்டும்.

மாத்திரை:- விராகனெடை-1-3, சாப்பிடலாம்.

உபயோகம்:- மூத்திரக் குண்டிக்காய்களில் விளையும் கற்களைத் தகர்த்துடைத்து வெளிப்படுத்தும், நீர்க்கட்டு, நீர்ச்சுருக்கு ஆகியவற்றை நாசப்படுத்தும்.

காஜர் மிட்டாய்

வேண்டிய திறமான மஞ்சள் முள்ளங்கியை மேல் தோல் நீக்கித் திருவுமணையில் அல்லது, தகரத்தினால் செய்யப்பட்டிருக்கிற திருவு யந்திரத்தில் திருவி உள்ளிருக்கிற நரம்பை நீக்கி விடவு; இப்படிச் செய்தெடுத்த திருவல் சேர்-2½, பன்னீர் பலம்-10, சுத்த ஜலம் பலம் 10, சீனி சர்க்கரை பலம் 20, சுத்தி செய்த தேன் பலம்-10, மேல்தோல் நீக்கி சுத்தி செய்து * பாகப்படுத்தின பாதாம் பருப்பு பலம்-5, மேல் தோல் நீக்கி சுத்திசெய்து பாகப்படுத்தின பிஸ்தாப்பருப்பு பலம்-5, கஸ்தூரி, அம்பர், இவை சக்திக்கேற்ற அளவு இவ்விரண்டையும் தனித்தனி கொஞ்சம் சருக்கரை சேர்த்து அரைத்துக் கொள்ளவும்.

செய்முறை:- பன்னீரையும் சலத்தையும் சேர்த்துக் காஜர் திருவலில் விட்டு ஒரு மண்பாத்திரத்திலிட்டு அடுப்பேற்றி தீ எரித்து அகப்பையினால் துழாவிக் கொண்டிருந்து நன்றாய் வெந்தபின் கீழிறக்கி வைத்துக் கொள்ளவும். சீனியையும் தேனையும் சேர்த்துப் பாகுசெய்து பாகத்தில் இறக்கி, முன் பாத்திரத்தில் விட்டு நன்றாய் மிஸ்ரமித்துக் கெட்டியாகுமளவாய்க் கீழ் மேலாகப் புரட்டி பருப்புகளைச் சிறுதுண்டுகளாய் அறுத்து இதில் சேர்த்துப் புரட்டி முன்னர் அரைத்து வைத்திருக்கும் கஸ்தூரி அம்பரையும் சேர்த்து, ஒரு ஈயம் பூசின தாம்பாளத்தில் அல்லது பீங்கானில் பரப்பிக் கத்தியினால் துண்டுகளாகச் செய்து, பீங்கான் பாத்திரத்தில் பத்திரப்படுத்தவும்.

மாத்திரை:- வேளை-1-க்கு பலம்-2-முதல்-3-வரையில் இருவேளையும் சாப்பிடலாம்.

உபயோகம்:- நீர்ப்பை, குண்டிக்காய் இவைகளிலுண்டாகும் கற்களை நீக்கும். தேகங் கொழுக்கும், இரத்தவிர்த்தி உண்டாகும். ஈரலின் வறட்சியை நீக்கும். நீரையுடைக்கும், சூட்டினாலுண்டான இருமல் தீரும்.

---

* பருப்பினங்களை பாகப்படுத்தல், ஓட்டில் அல்லது இரும்பு வாணலியில் தக்க அளவாய்க் கோதுமை மாவிட்டு அதில் பருப்பினங்களையும் இட்டு அடுப்பேற்றி, சிறுதீயாக எரித்து வறுத்துக் கொள்வதே.

ஆளி விதை ஷர்பத்

ஐந்து பலம் ஆளி விதையை, ஐந்து படி சுத்த ஜலத்திலிட்டுக் காய்ச்சி, அரைப்படியாகச் சுண்டினபின் பிசைந்து வடிகட்டிச் சக்கை போக்கி, அதில் ஒரு வீசை சீனி சர்க்கரை சேர்த்துக் காய்ச்சி, ஷர்பத்து பதத்தில் இறக்கிக் கொள்ள வேண்டும்.

இதை வேளை-1-க்குத் துலா-2-3-ஆக இருவேளையும் 7-9, நாள் சாப்பிட்டுவர, பிரமேக ரோகம், கல்லடைப்பு, நீர்க்கட்டு, நீரெரிச்சல் முதலியவை தீரும்.

81. விருச்சிகாதி மாஜூன்

காக்னஜ் சூரணம் விராகனெடை-5½, ஜூந்து விராகனெடை-4, தேள் பஸ்பம் விராகனெடை-3½, மிளகுச் சூரணம், அரிசித்திப்பிலிச் சூரணம், இவை, வகை-1-க்கு விராகனெடை-2. ஜன்தியானா சூரணம் விராகனெடை-1½, மேல்தோல் நீக்கின சுக்குச் சூரணம் விராகனெடை-1. இவை எல்லாவற்றையும் ஒன்றாக மிஸ்ரமித்துக் கொள்ளவும். 5-பலம் தேனைப்பாகு செய்து பாகு பதத்தில், மேற்படி சூரணத்தைத் தூவிக் கிண்டிக் கிளறி, பீங்கான் பாத்திரத்தில் பத்திரப்படுத்தவும்.

மாத்திரை:- குன்றிமணி யெடை-3-4, ஒரு வேளைக்குச் சாப்பிடலாம்.

உபயோகம்:- நீர்க்குண்டிக்காய், நீர்ப்பை ஆகிய ஸ்தானங்களில் விளையுங் கற்களை உடைத்துத் தகர்த்து வெளிப்படுத்தும்.

தேள் பஸ்பம்

கெட்டியான சீஷாவிற்கு-5, சீலைமண் செய்துலர்த்தி, அதில் தேளை ஒவ்வொன்றாகப் பிடித்துப்போட்டு எரியும் கணப்பில் ஒரு இரவு அல்லது கொஞ்சம் குறைவாய் வைத்துக் காலையில் எடுக்க பஸ்பமாம். அல்லது தேளை ஒரு இரும்புப் பாத்திரத்தில் போட்டு வாய் மூடிச் சீலைமண் செய்து, மிதமான கணப்பில்-6-மணி நேரம் வைத்தெடுக்கப் பஸ்பமாம்.

குறிப்பு

மருந்தில் தீராத ஆஷ்மரி ரோகத்தை, தெரிந்தவர்கள் மூலமாய் ஆயுத சிகிச்சை முதலியவைகளினால் நிவர்த்தி செய்து கொள்ள வேண்டும்.

ஆஷ்மரி ரோகம்
(சிறுநீரகக்கல் - கிட்னி ஸ்டோன்)
ஆயுர் வேதம்

கல்லுகளையுண்டு பண்ணுவது ஆஷ்மரி ரோகமாம். இது வாதாஷ்மரி, பித்தாஷ்மரி, சிலேஷ்மாஷ்மரி, சுக்கிலாஷ்மரி, சர்க்கராஷ்மரி, என ஐந்து வகைப்படும்.

ஆஷ்மரி ரோக பூர்வம்

எல்லாவகை ஆஷ்மரி ரோகங்களும் தனியாய் ஒரு தோஷத்தினால் உண்டாகிறதில்லை. ஆனால் அவை ஒவ்வொன்றும் பல தோஷங்களினால் உண்டாகும். நாபிஸ்தானத்தில் வீக்கம், அங்கு நோவு, ஆட்டு மூத்திரத்தைப் போன்ற துர்வாசனையுள்ள மூத்திரம் இறங்குதல், மூத்திரம் அடைப்பட்டிறங்குதல், சுரம், பசியில்லாமை ஆகியவைகளாம்.

ஆஷ்மரி ரோகப் பொது லக்ஷணம்

நாபிஸ்தான நரம்புகள், அடி வயிறு ஆகிய ஸ்தானங்களில் நோவு, மூத்திரக் குழலில் கல் அடைத்துக் கொள்வதினால் மூத்திரத் தாரையானது தடைபட்டு வருதல், மூத்திரக் குழலினின்றும் கல்லானது விலகி விட்டால் அது தாராளமாய் வெளிப்படுதல், கல் அங்கு சிக்கித் தங்கிக் கொள்வதினால் அந்த ஸ்தானத்தில் ரணமுண்டாகி விட்டால் மூத்திரத்துடன் ரத்தமும் வெளிப்படுதல். மூத்திரம் பெய்யும்போது வேகமாய் முக்கினால் வேதனை அதிகப்படுதல் ஆகியவைகளாம்.

வாதாஷ்மரி ரோக லக்ஷணம்

வாதாதிக்கத்தினால் உண்டான கற்களானால் ரோகிக்கு அதிக வேதனை உண்டாதல், இதனால் பல்லைக்கடித்தல், நாபியையும், ஆண் குறியையும், கையால் பிசைதல், வேதனை மிகுதியினால் இராப்பகல் அழுதல், மூத்திரம் பெய்யும்போது மூத்திரக் குழலில் கத்தியினால் அறுத்தல் போலிருத்தல், மூத்திரத்துடன் மலம் வெளிப்படுதல், மூத்திரம் துளித்துளியாய் இறங்குதல், இந்தக் கல்லானது நீல வருணமாய் இருத்தல் ஆகியவைகளாம்.

பித்தாஷ்மரி ரோக லக்ஷணம்

நாபிஸ்தானத்தில் எரிவந்தம், அங்கு முள்ளால் குத்துவதுபோலிருத்தல், அங்கு ஸ்பரிசித்தால் சூடாயிருத்தல், இக்கல்லானது சேராங் கொட்டையைப் போல் கறுப்பாய் அல்லது அது மஞ்சள் வருணமாய், அல்லது, சிகப்பு, வருணமாயிருத்தல் ஆகியவைகளாம்.

சிலேஷ்மாஷ்மரி ரோக லக்ஷணம்

நாபி ஸ்தானத்தில் பிடுங்குதல்போன்ற நோவு, அந்த ஸ்தானத்தில் குளிர்ந்திருத்தல், சில சமயம் இக்கல்லானது கோழிமுட்டைப் பருமனாயிருத்தல், அது மணல் வருணம் போலிருத்தல் ஆகியவைகளாம்.

சுக்கிலாஷ்மரி ரோக லக்ஷணம்

சம்வர்க்க காலங்களில் வேகத்துடன் வெளிப்படுகின்ற இந்திரியத்தைத் தடை செய்வதினாலும், தம்பனத்திற்கென, உபயோகிக்கப்பட்ட அபினி, கஞ்சா முதலியவை போன்ற உஷ்ண வீரிய அவுடதங்களினாலும், தனது ஸ்தானத்தை விட்டு நழுகின இந்திரியமானது தங்கி, அது அங்கேயுலர்ந்து சுண்டிக் கல்லாகி இந்த ரோகம் பிறக்கும். இந்த ரோகிக்கு பீஜத்தில் வீக்கம், லிங்கத்தில் வேதனை, கீழ்வயிற்றில் நோவு, மூத்திரமானது பொருத்துப் பொருத்து இறங்கல், முதலியவைகளாம்.

சர்க்கராஷ்மரி ரோகம்

மேற்படி சுக்கிலாஷ்மரியில் சொன்னது போல் தன்னிடத்தை விட்டு நழுகின சுக்கிலமானது உலர்ந்து அணுவணுவாய்ச் சிறு கட்டிகளாய் சிறுநீரோடு சேர்ந்து வெளிப்படும். இந்த ரோகிக்கு வாயு சரியான வழியில் நடந்து கொண்டிருந்தால் மூத்திரத்துடன் மேற்படி கல்லுகள் வெளிப்பட்டுக் கொண்டிருக்கும். அப்படி நடக்காவிட்டால் ஒரு துளி மூத்திரமும் வெளிப்படாத விதமாய் மூத்திரக் குழல்கள் அடைப்பட்டுப் பக்க நோவுண்டாகி மரணம் உண்டாகும். இந்த ரோகத்தில் துர்ப்பலம், தேகங் கனத்தல், தேகம் இளைத்தல், குதம், அரை ஆகிய இந்த ஸ்தானங்களில் நோவு, பசிதீபனக் குறைவு, பாண்டு ரோகம், தாகம், மார் நோவு, வாந்தி ஆகிய லக்ஷணங்கள் இதன் ஆரம்பத்திலேயே உண்டாகி விடும்.

ஆஷ்மரி ரோகச் சிகிச்சை
(ஆயுர்வேதம்)

82. சொண்டியாதிக் கியாழம்

மேல்தோல் நீக்கப்பட்ட சுக்கு, செங்கத்தாரிப்பட்டை, ஜென்ஷியன்வேர், யானை நெருஞ்சி, ஆமணக்கன் வேர்ப்பட்டை, சரக்கொன்றைப் புளி, இவை வகை-1-க்குப் பலம்-½. இவை எல்லாவற்றையும் ஒரு புதுமண் பாத்திரத்திலிட்டு-10-பலம் ஜலம் வார்த்து மூன்றிலொரு பாகமாய்ச் சுண்டவைத்து வடிகட்டிக் கொள்ளவும். பொரித்த பெருங்காயம், மரவுப்பு, (Carbonate of Potash), இந்துப்பு, இவை வகை-1-க்கு விராகனெடை-¼, இம்மூன்றையும் பொடித்து மேற்படி கியாழத்திற் கரைத்துப் பானஞ் செய்யவும். இவ்விதம் காலை மாலை இரண்டு வேளையும்-2-வாரம் செய்யக் கல்லடைப்பு, மூத்திரக் கிரிச்சரம், மூலரோகம் ஆகியவை நீங்கிப் பசிதீபனம் உண்டாம்.

83. ஏலாதிக் கியாழம்

ஏலம், திப்பிலி, உலர்ந்த இலுப்பைப் பூ, ஜென்தியானாவேர், புரசம்பட்டை, நெருஞ்சில், ஆடாதோடை வேர்ப்பட்டை, ஆமணக்கன் வேர்ப்பட்டை, இவை

வகை-1-க்குப் பலம்-¼, மேற்சொன்னதுபோல் கியாழம் செய்து அதில் சிலாசத்து பஸ்பம் விராகனெடை-¼-½, அல்லது நவச்சாரச் சுண்ணம் குன்றி மணியெடை-3-4, அதில் போட்டுக் கரைத்துப் பானஞ் செய்யவும். இவ்விதம் காலை மாலை இரண்டு வேளையும் 2-வாரம் செய்துவர, கல்லடைப்பு முதலிய வியாதிகள் தீரும்.

84. கூழ்ப்பாண்டச்சாறு படி அரைக்கால் இதில் பொரித்த பெருங்காயம், மரவுப்பு, இவை வகை-1-க்கு விராகனெடை-½, இவ்விரண்டையும் பொடித்துப் போட்டுக் கலக்கிப் பானஞ் செய்யவும். இவ்விதம் இரண்டு வேளையும்-3-வாரங்கள் செய்துவர, கல்லடைப்பு தீரும்.

85. நெருஞ்சிலை உலர்த்தி இடித்த சூரணம் பலம்-½, இதில் தேனைவிட்டு மத்தித்து செம்மறியாட்டுப் பாலில் கரைத்துப் பானஞ் செய்யவும். இவ்விதம் 20-நாள் செய்ய கல்லடைப்பு தீரும்.

86. மேல்தோல் நீக்கப்பட்ட இஞ்சி, மரவுப்பு, மஞ்சள் கடுக்காய்த்தோல், செஞ்சந்தனம், இவை சமனெடை, இவற்றைக் கியாழம்செய்து, அதில்-4-5-குன்றி மணியெடை நவச்சாரச் சுண்ணத்தைப் போட்டுப் பானம் செய்யவும். இவ்விதம்-20-நாள் செய்ய கல்லடைப்பு தீரும்

87. பீர்நாத மாத்திரை

மஞ்சிட்டி, பீர்க்கம் விதை, சீரகம், சோம்பு, நெல்லி முள்ளி, இலந்தைக் கொட்டை சீவல், சுத்திசெய்த நெல்லிக்காய் கெந்தகம், சுத்தி செய்த மனோசிலை, இவையெல்லாம் வகை-1-க்குச் சமனெடை. இவை எல்லாவற்றையும்-2, சாமமரைத்து, மைபோலான பின், முள்ளங்கிக் கிழங்குச் சாற்றினால்-4-சாம மரைத்துக் கடலைப் பிரமாணம் மாத்திரைகள் செய்து தினம்-2-வேளையும் தேனில் அல்லது தகுந்த அநுபானங்களில் உட்கொள்ளவும். இவ்விதம்-1-மண்டலம் செய்ய, எல்லா விதக் கல்லடைப்பும் தீரும். (பாவபிரகாசம்).

88. கறி மஞ்சள் சூரணம் பலம்-1, பனைவெல்லம் பலம்-1, இவ்விரண்டையும் சேர்த்திடித்து லேகிய பதத்தில் எடுத்து வைத்துக்கொண்டு, ஒரு விராகனெடை காடியில் கரைத்துப் பானம் செய்யவும். இவ்விதம்-1-மண்டலம் செய்ய கல்லடைப்புத் தீரும்.

89. ஒரு ரூபா யெடையுள்ள கொள்ளை, ஒரு ஆழாக்கு சலத்திலிட்டுக் காய்ச்சி மூன்றிலொரு பாகமாய்ச் சுண்டினபின் இறக்கி வடிகட்டி, அதில்-½, விராகனெடை இந்துப்புத் தூளும், ¾-விராகனெடை முக்கா வேளைச் சாறும் கலந்து-2-வேளையும் பானஞ் செய்ய கல்லடைப்புத் தீரும்.

இராஜமார்த்தாண்டம் என்னும் கிரந்தத்தில் பின் வரும் முறைகள் எழுதப்பட்டிருக்கின்றன.

90. ஆமணக்கன் வேர்ப்பட்டை விராகனெடை-2, இதனை ஒரு ஆழாக்கு சலத்தில் ஒரு இரவு ஊறவைத்துக் காலையில் இறுத்துப் பானம் செய்யவும். இவ்விதம்-7-நாட்கள் செய்யில் நீர்த்தாரை வழியாய்க் கற்கள் வெளிப்பட்டுப் போம்.

91. குல்தியாக் கிருதம்

கொள் படி-¼, கூழ்ப்பாண்ட விதை, மரவுப்பு, எள்ளுப்பு, வாய் விளங்கம், வகை-1-க்குப் பலம்-2, கற்கண்டு பலம்-5, முக்கா வேளைச்சாறு, கூழ்ப்பாண்டச்சாறு, நெருஞ்சிச்சாறு இவை வகை-1-க்கு படி-¼, முன்-5, சரக்குகளையும் 1¼-படி சலத்திலிட்டுக் காய்ச்சி ¼-படி கியாழமாயிறுத்து வடிகட்டிப்பின் மூன்று சாறுகளையும் அதனுடன் கலந்து, பசுவின் நெய் படி-1, சேர்த்துக் கற்கண்டுத் தூளையும் போட்டு நீர்ச் சுண்டக் காய்ச்சி இறக்கி வடிகட்டி அதில்-½, பலம் அயசாரத்தை, அல்லது, அயச் செந்தூரத்தைச் சேர்த்து நன்றாய் மிஸ்ரமித்து, பீங்கான் பாத்திரத்தில் பத்திரப்படுத்தவும்.

வேளை-1-க்கு ஒரு ரூபா யெடையாக, காலை மாலை இரண்டு வேளையும் உட்கொள்ள, எல்லாவித ஆஷ்மரிரோகங்களும், மூத்திரக் கிரிச்சரம் முதலியவைகளும் தீரும்.

பத்தியம்:- பச்சைப்பயிறு, கோதுமை, அவை அரிசி, பால், நெய், இந்துப்பு ஆகியவைகளாம். இந்த பத்தியமே எல்லா ஆஷ்மரி ரோகிகள் அநுசரிப்பது உத்தமம்.

92. சாரச் சுண்ணம்

ஒரு சிறுமண் புதுச்சட்டியில்-¼-படி கிளிஞ்சில் சுண்ணத்தைப் போட்டு, அதன் நடுவில், ஒரு பலம் சாரக்கட்டியை வைத்து, அதன் மேலும்-¼-படி மேற்படி சுண்ணத்தைப் போட்டு மேற்சட்டி மூடி ஏழு சீலைமண் செய்து, 40-பலம் விராட்டியில் புடமிட்டு ஆறினபின் மேல் சட்டியை நீக்கி, சுண்ணத்தை ஜாக்கிரதையாக எடுத்துக் கொள்ளவும். விராகனெடை ¼-½, தக்க அநுபானத்தில் அல்லது முன் கண்ட கியாழங்களில் உட்கொள்ளக் கல்லடைப்பு முதலியவை தீரும்.

93. சாரப் பஸ்பம்

ஐந்து பலம் சீனக்காரத்தைப் பொடித்து ஒரு புது ஓட்டில் வைத்து அதன்மேல் ஒரு பலமுள்ள சாரக்கட்டியை வைத்து அதன் மேலும்-5-பலம் சீனாக்காரத்தைப் பொடித்துப் போட்டமுத்தி அடுப்பேற்றி எரித்து சீனாக்காரம் நன்றாய் உருகினபின் எடுத்துக் கட்டியின் மேல் இருப்பதைக் கத்தியினாற் சீவி சுத்தி செய்து. கட்டியை ஒரு பீங்கான் பாத்திரத்திலிட்டுக் கட்டி முழுகும் படியாய் எருக்கம் பாலைக் கறந்துவிட்டு வெயிலில் வைத்துப் பாலெல்லாம் சுண்டினபின்

உத்தாமணிப் பாலால் அதன்மேல் கவசித்து, ஓட்டிலிட்டு மேலோடு மூடி ஏழு சீலைமண் செய்து, 6-விராட்டியில் புடமிட்டெடுக்க, பஸ்பமாம்.

அநுபான விசேஷங்களில், குன்றிமணியெடை-3-4 உட்கொள்ள மேற்கண்ட வியாதிகள் தீரும்.

புராதனப் பிரமேகம், நீர்ப்பை வியாதிகள்

மேற்கண்ட ரோகங்களில் ஒன்று இந்திரிய சிராவக ரோகத்திற்குக் காரணமாய் இருந்தால், அதற்குத் தகுந்த சிகிச்சை செய்ய வேண்டியதும் அவசியமே. ஆனால், இவற்றின் காரணம் லக்ஷணம் சிகிச்சை முதலியனவகளெல்லாம் நமது 'பிரமேக நிவாரண போதினியில்' தெளிவாய்ச் சொல்லப் பட்டிருப்பதால், அவற்றையே மறுபடியும் எழுதுவதினால் இச்சிறு நூல் அதிக விரிவாகிற தெனப் பயந்து நிறுத்தப்பட்டது.

விண்ணப்பம்

இதுவரையில் நாம், இந்திரிய சிராவகத்திற்குக் காரணமான மலபந்தம், மூலரோகம், ஆசனத் தினவு, கோசத்தினவு, நீர்க்குண்டிக்காய்கள், நீர்ப்பை ஆகிய ஸ்தானங்களிலிருந்து மணல், கல், முதலியவைகள் வெளிப்படுதல் ஆகியவைகளின் சிகிச்சைகளைத் தெரிந்து கொண்டோம். ஆகையால் எந்த வியாதி இந்திரிய சிராவகத்திற்குக் காரணமாயிருக்கிறதோ அதற்குத் தகுந்த சிகிச்சை செய்து அதை நிவர்த்தி செய்து கொண்டால் இந்திரிய சிராவக ரோகந் தானே ஓடி விடும்.

மூளைத் தினவு

இந்திரிய சிராவகத்திற்கு மூளைத்தினவு காரணமானால் டாக்டர் கிராஸ்துரை அவர்கள் அபிப்பிராயப்படி, பிடரியில் அட்டை விடுவதினாலும், மூளைத்தினவினால் அடிக்கடி உண்டாம் காம இச்சையைக் குறைக்கப் பின்காணும் முறையையும் உபயோகிக்கலாம்.

93. Take of	Bromide of Potassium	grs	10
"	Tincture of Aconite	drs	3
"	Camphor Water	f.drs	4

Mix Dose. The whole. Thrice a day.

புரோமைட் ஆப் பொடாஸ்ஸியம்	கிரேன்	10
ஆகொனைட் பாவனத்திரவம்	துளி	3
கர்ப்பூர ஜலம்	திரவ திராம்	4.

இவற்றை ஒன்றாய் மிஸ்ரமித்துப் பானம் செய்யவும். இவ்விதம் தினம்-1க்கு 3-தடவைகள் செய்யில் மூளைத் தினவினால் அடிக்கடியுண்டாம் காம இச்சை குறையும்.

தீக்ஷணிய மூத்திரம்

இந்திரிய சிராவகத்திற்கு தீக்ஷணிய மூத்திரங்காணமானால் (அதாவது சல விசர்க்கத்தின் போது நீர்த்தாரையில் எரிவந்தம் உண்டாதல்) பேதானா விதை, இசுப கோல்விதை, சப்ஜாவிதை ஆகிய இவற்றுள் ஒன்றின் கோழையை அல்லது அவைஅரிசிக் கஞ்சி, நெருஞ்சில் கியாழம் முதலிய குளிர்ச்சியான முறைகளை உபயோகிக்கின் தீக்ஷண்ய மூத்திரந் தீரும்.

சிறுநீர் சிவத்தல்

இது இந்திரிய சிராவகத்திற்குக் காரணமானால் மேற்படி தீக்ஷண்ய நீரிற்காம் மருந்துகளுடன்-2-3-குன்றிமணி யெடை, *சால்புர் நீலைச்சேர்த்து உபயோகிக்கின், சிறுநீர் சிவந்திருத்தல் தீரும்.

காரமான அல்லது உறைப்பான மூத்திரம்

சிறுநீரில் காரமான அல்லது உறைப்பான சத்து ஜனித்தல் இந்திரிய சிராவகத்திற்குக் காரணமானால் சால்புர்நீல், வெடியுப்பு, நவச்சாரம், மரவுப்பு, கறியுப்பு, ஆகியவைகளில் ஒன்றில், ½, 2-விராகனெடை எடுத்து-5-பலம் சலத்தில் கரைத்துப் பானஞ்செய்து வரத் தீரும்.

இவ்விதம் சிறு நீரில் எந்தச் சத்து அதிகரித்திருக்கிறதென பரீட்சித்தறிந்து, அதற்கான சிகிச்சையையும், நீரில் எந்த வியாதி உண்டாகி இருக்கிறதோ அதற்கான சிகிச்சையையும் செய்து அந்த வியாதி தீர்ந்து விட்டால் இந்திரிய சிராவகமுந் தீர்ந்துபோம்.

அக்கிரம சருமம் நீளல்

கோசத்தின் நுனியிலுள்ள அக்கிரம சருமமானது அதிகமாய் நீண்டிருப்பது இந்திரிய சிராவகத்திற்குக் காரணமானால், விருத்தசேதனஞ் செய்து விடவேண்டும். அதாவது அதைக் கத்தரித்து நீக்கி விடவேண்டும்.

அக்கிரம சரும அழுக்கு

கோசத்தின் அக்கிரம சருமத்தில் அழுக்கு படிந்திருப்பதனால், அல்லது, அழுக்குப் படிவதினால் இந்திரிய சிராவகம் உண்டானால், அதில் நல்லெண்ணெயை, அல்லது, தேங்கா யெண்ணெயைத் தடவி ஊறவைத்து,

சவுக்காரமிட்டுத் தேய்த்து வெந்நீர் விட்டுக் கழுவி, சுத்தி செய்து வரல்வேண்டும். இந்தச் சுபாவமுடையவர்கள் அந்தச் சருமத்தை அடிக்கடித் திருப்பி சவுக்காரந் தேய்ந்து வெந்நீரால் பிரதி தினமும் கழுவி சுத்தி செய்து வருவதுடன் ஸ்நாநமுஞ் செய்து வரல் வேண்டும்.

சுக்கிலச்சூடு

சுக்கிலத்தில் உஷ்ணம் அதிகரித்திருப்பது சிராவகத்திற்குக் காரணமானால், இந்திரியக் குழல்களில் கேவல உணர்ச்சியில்லாதிருக்கில், சூடானவும், உற்சாக காரியமான ஆகாரங்களை நீக்கி பேதானாவிதை, காஹு*விதை, பருப்புக்கீரை விதை, ஆகியவைகளிலொன்றின் கோழையை உட்கொண்டுவர, அது தீரும் அல்லது மேற்கண்டவைகளில் ஒன்றை யோகமுறையாய்ப் பாணிதமாக, அல்லது, ஹல்வர்வாகச் செய்து உபயோகிக்கின் சீக்கிரம் குணம் உண்டாம். இம்முறைகளெல்லாம் தமது 'யூநாநிவைத்திய தாருட்யவிர்த்தி போதினியிற்' சொல்லப்பட்டிருக்கின்றன. கீழ்க்காணும் முறையும் இதற்காம்.

94. புளியங் கொட்டையை வறுத்துக் குத்தியெடுத்த தோல் சூரணம் பலம்-1½, மூங்கிலுப்பு பலம்-1, கற்கண்டுத் தூள் பலம்-2½, இவற்றையெல்லாம் ஒன்றாய் மிஸ்ரமித்து அரைத்து வேளை-1-க்கு ஒரு ரூபாயெடை வீதம், காலை மாலை இரண்டு வேளையும் ஒருவாரம் உட்கொள்ள, சுக்கில உஷ்ணந் தணிந்து இந்திரிய சிராவகமுந் தீரும்.

இந்திரிய கமல நரம்பு மரத்தல்

இந்திரிய கமலங்களின் நரம்புகள் மரத்துத் தளர்தல் இந்திரிய சிராவகத்திற்குக் காரணமானால், கேவல உணர்ச்சியில்லாதிருக்கின், கீழ்க்காணும் முறையை உபயோகிக்கலாம்.

95. Take of	Tincture of Cantharides	f.dr.	1
"	Tincture of Steel	f.dr.	2
"	Peppermint Water	f.ozs.	6

Mix Dose. half an ounce, Thrice a day.

எரிவண்டு பாவனத் திராவகம்	திரவ திராம்	1
அயபாவனத் திராவகம்	திரவ திராம்	2
பெப்பர்மின்ட் தீநீர்	திரவ அவுன்ஸ்	6

* இதன் முறை 'நமது பிரமேக நிவாரண போதினியிற்' சொல்லப் பட்டிருக்கிறது.

இவற்றை ஒன்றாய் மிஸ்ரமித்து, வேளை-1-க்கு அறை, அவுன்ஸ் வீதம், தினம்-1-க்கு-3-வேளை பானஞ் செய்துவர, இந்திரிய கமலங்கள், அங்குள்ள நரம்புகள் ஆகியவைகள் மரத்துத் தளர்ந்திருப்பது நீங்கி அவை பலப்பட்டு இந்திரிய சிராவகந் தீர்ந்து போம்.

ரத்தக்ஷீணம்

தேகத்தில் எக்காரணத்தினாலேனும் ரத்தங் குறைதல் இந்திரிய சிராவகத்திற்குக் காரணமானால், தேகத்தில் சூடதிகம் இல்லாதிருக்கில், கீழ்க்காணும் மண்டூர ஹல்வாவையும் கொடுக்கலாம். ஹைட்ரே டெட் பெராக்ஸைட் ஆப் ஐயன் **(Hydrated Peroxide of Iron)** என்னும் அயச் செந்தூரத்தையும் கீழ்க்காணும் பால் பாகத்துடன் கொடுக்கலாம். எல்லாவித அயச் செந்தூரத்தையும் இந்தப் பாகத்துடன் கொடுக்கலாம்.

97. பால் பாகம்

இரண்டு ஆழாக்குப் பசுவின்பாலை, மண்பாத்திரத்தில் வார்த்து அடுப்பேற்றிச் சிறு தீயாயெரித்து, பால்சுண்டின பக்குவத்தில் ஒரு கோழிமுட்டையின் வெள்ளைக் கரு, மஞ்சள் கரு ஆகிய இரண்டையும் மேற்படி பாலில்விட்டு, சற்று தாமதித்து, வாசனைக்காக சாதிக்காய்த்தூள் விராகனெடை-½-1, கூடச்சேர்த்து , ஒரு பீங்கான் பாத்திரத்தில் விட்டு மூன்று மணிநேரஞ் சென்று, 5-6-குன்றிமணியெடை மேற்படி செந்தூரத்தைச் சேர்த்துச் சாப்பிடவும் அல்லது செந்தூரத்தைத் தேன், அல்லது, நெய்யில் மத்தித்து உட்கொண்டு, அதன் மேல் மேற்படி பால் பாகத்தை உட்கொள்ளலாம். இவ்விதம் தினம்-1-க்கு-1-2-வேளை செய்யலாம்.

மாமிச பக்ஷணி அல்லாதவர்கள், முட்டையை நீக்கிவிடலாம். பாலுடன் கோதுமை ரவா துலா 1-ம் கற்கண்டுத் தூள் துலா-2-ம் சேர்த்து ஹல்வாவாகச் செய்தும் சாப்பிடலாம். இது ஒருவித இன்பகரமான ஆகாரமாயிருக்கும்.

இவ்வளவு சிரமத்திற்குப் பால்மாறினவர்கள் பால் கவ்வா செய்து உபயோகிக்கலாம். அல்லது, மிட்டாய்க் கடையில் விற்கும் பால் கவ்வாவையும் உபயோகிக்கலாம்.

மேற்சொன்ன பால்பாகம், பால்ஹல்வா, பால் கவ்வா, ஆகியவைகளெல்லாம் அவரவர்கள் ஜீரண சக்தி ஏற்குமாறு சாப்பிடவேண்டும்.

98. மண்டூர ஹல்வா

பக்குவப்படுத்தின வல்லத்துக் கிட்டம் பலம்-10, கர்க்கடக சிங்கி, தான்றிக்காய்த்தோல், நெல்லிமுள்ளி, மிளகு, மேல்தோல் நீக்கப்பட்ட சுக்கு,

அரிசித்திப்பிலி, கோரைக்கிழங்கு, சித்திரமூல வேர்ப்பட்டை, சடாமாஞ்சில், இவற்றைத் தனித்தனி இடித்து வஸ்திர காயஞ் செய்த தூள் வகை-1-க்குப் பலம்-1, கந்தனாவிதை, கடுகு, இவ்வ வகை-1-க்கு விராகனெடை-4, கஸ்தூரி விராகனெடை-2, பாதாம் நெய், தேன், இவை தேவையான அளவு.

செய்முறை:- முன் சூரணங்களை ஒன்றாய் மிஸ்ரமித்து, பாதாம் நெய் தெளித்துப் பிசரி, நெய்ப்பசையுண்டாக்கி வைத்துக் கொள்ளவும். பின்பு, கந்தனா விதையையும், கடுகையும் அம்மியில் மைபோலரைத்தும், கஸ்தூரியுடன் கொஞ்சம் கற்கண்டு சேர்த்துத் தூள் செய்தும், மேற்படி சூரணத்திற் கலந்து, சிறுகச் சிறுகத் தேன் விட்டுக் கையினால் நன்றாய் மத்தித்து லேகிய பதமாய்ச்செய்து ஒரு பீங்கான் ஜாடியில் வைத்து, வாய்க்குக் காரக்கிட்டு, ஆறுமாதம் சென்றபின் உபயோகிக்க வேண்டும்.

மாத்திரை:- விராகனெடை-¼-½-இரண்டு வேளையும் உபயோகிக்க ரத்த விர்த்தியுண்டாகி, இந்திரிய சிராவகந் தீர்ந்து, தாதுபுஷ்டி உண்டாகும்.

99. அற்புதாயச் சிந்தூரம்

இங்கிலீஷ் மருந்துக் கடைகளில் விற்கும் அய பஸ்பம் (Oxide of Iron) அல்லது அயச் செந்தூரம் (Peroxide of Iron) பலம்-2, இதனைக் கையாந்தகரைச் சாற்றினால்-3-மணி நேரம் அரைத்து, 3-மணிநேரம் ஆறவிட்டு வில்லைசெய்து, வெயிலில் நன்றாயுலர்த்தி அகலிலிட்டு, மேலகல் மூடி-5-சீலைமண் செய்து-150-பலம் விராட்டியில் புடமிட்டெடுக்கவும். இவ்விதம்-3-5-7-9-11, தடவைகள் செய்துகொண்டால் வெகு நேர்த்தியான சிந்தூரமாம். இந்தச் சிந்தூரமானது தமிழ்முறை, இங்கிலீஷ் முறை இவ்விருவகை செந்தூரத்தைப் பார்க்கிலும் அதிக குணத்தைத் தருகிறது. இது சுலபமாகவும் அதிக கஷ்டமில்லாததாகவும் இருக்கிறது. நூறு புடமிட்ட அயச் செந்தூரமும் இதற்குச் சமமாகாது. இச்செந்தூரத்தை மேற்கண்ட பால் பாகத்துடன் உட்கொள்ள ஆச்சரியப்படும்படியான விதமாய் இரத்த விர்த்தி உண்டாகி அனேக வியாதிகள் தீரும். இந்தச் செந்தூரத்துடன் தங்கஞ் சேர்த்துச் செந்தூரிக்கும் முறையை (இரசவாத சிந்தாமணியில்) எழுதுவாம்.

ரத்தக்கட்டு, நரம்பு மந்தத்தொழில்

இந்திரிய கமலங்களைச் சார்ந்த ஸ்தானங்களில் ரத்தங் கட்டுப்பட்டிருப்பதினால் அல்லது இந்திரிய கமலங்களுடன் சம்பந்தபபட்ட, நரம்புகள் தமக்குரிய பூரணத் தொழிலற்று மந்தகதியா இருப்பதினால் இந்திரிய சிராவகம் உண்டானால், வேளை ஒன்றுக்கு, ¼-அல்லது, ½-குன்றிமணி யெடையாக அபினியை இரண்டு வேளையும் உபயோகித்து வருவதினால், இரத்தக் கட்டு, நரம்புகளின் மந்தத்தொழில் ஆகியவை தீர்ந்து, சிராவகமும்

நின்றுபோம். ஆனால் இந்த வியாதி தீர்ந்த பிறகு கிரமேணுவாய் அபினியின் அளவைக் குறைத்து இத் துர்ப்பழக்கத்தை நீக்கிவிட முயற்சி செய்ய வேண்டும். ஏனெனில், இதுவே வழமையாய்ப் பழக்கப்பட்டு விட்டால் அபினி சாதுவாக நேரிடும்.

டாக்டர் கேம்பர்லயின் துரையவர்கள் அபிப்பிராயமாவது, ஆண் ஜெனன இந்திரிய கமலங்கள் மந்தகதியடைந்திருந்தால், பெல்லடொனாவை உபயோகிப்பதினால் அவை சீர்ப்பட்டுப் போமென்பதே.

டாக்டர் சூவேஸ் துரையவர்கள் அபிப்பிராயமாவது, ஆண் ஜெனன இந்திரியங்கள் மந்தகதியடைந்து அவை அதிகந் தளர்ந்திருந்தால், 2-முதல் 4-கிரேன் துத்தத்தை, 8-அவுன்ஸ் தீநீரில் கரைத்து பீச்சிட்டுக் கொண்டு, ஸிட்ரேட் ஆப் ஐயன் ஆன்ட் அம்மோனிய (Çitrate of Iron and Ammonia) புளூயிட் எக்ஸ்டிராக்ட் ஆப் ஏர்கட் (Fluid Extract of Ergot) ஆகியவைகளில் ஒன்றை உள்ளுக்குப் பிரயோகஞ் செய்தால் மேற்படி வியாதி தீர்ந்து, இந்திரிய சிராவகம் நின்று போமென்பதே.

பெல்லடொனா, ஸிட்ரேட் ஆப் ஐயன் ஆன்ட் அம்மோனியா, புளூயிட் எக்ஸ்டிராக்ட் ஆப் எர்கட் ஆகியவைகளைத் தனித்தனியாகவும், யோகமுறையாகவும் உபயோகிக்கும் பாகங்கள் பின் வருபவைகளாம்.

100. Take of	Tincture of Belladonna	drops	30
"	Camphor Water	f.ozs	3

Mix Dose, oz 1, Thrice a day.

பெல்லடொனா பாவனத் திராவகம்	துளி	30.
கர்ப்பூர ஜலம்	திரவ அவுன்ஸ்	3

இவற்றை மிஸ்ரமித்து, வேளை-1-க்கு ஒரு அவுன்ஸாக தினம்-3-தடவைகள் பானஞ் செய்து வர, ஜெனன இந்திரியங்களின் தொழில் மந்தம் நீங்கி, சுறு சுறுப்புண்டாகி, இந்திரிய சிராவகந் தீரும்.

குறிப்பு

பெல்ல டொனாவானது விஷ தருமம் உடையதாகையால், அதை வெகு ஜாக்கிரதையாய் உபயோகிக்க வேண்டும். இதை உபயோகிக்கும்போது தொண்டை உலர்ந்து குறுகிப் போதல், மயக்கம், மந்தப்பார்வை, குமட்டல், கண்தாரை விரிதல், ஆகிய இத் துர்க் குணங்கள் கண்டால், உடனே மருந்தை நிறுத்திவிட வேண்டும்.

101. Take of	Tincture of Belladonna	drs.	30
"	Tincture of Nux Vomica	drs	15
"	Camphor Water	f.ozs.	3

Mix Dose oz.1. Thrice a day.

பெல்ல டொனா பாவனத் திராவகம்	துளி	30
எட்டிக்கொட்டை பாவனத் திராவகம்	துளி	15
கர்ப்பூர ஜலம்	திரவ அவுன்ஸ்	3.

இவை எல்லாவற்றையும் ஒன்றாய் மிஸ்ரமித்து வேளை-1-க்கு ஒரு அவுன்ஸ் வீதமாக, தினம்-3, வேளை பானஞ் செய்துவர, ஜெனன இந்திரியத் தொழில் மந்தம், சோர்வு, தளர்ச்சி முதலியவை நீங்கி இந்திரிய சிராவகந் தீரும்.

102. Take of	Citrate of Iron and Ammonia	grs	8
"	Carbonate of Ammonia	grs	2
"	Spirit of Chloroform	drs	15
"	Infusion of Quassia	f.oz.	1

Mix and make a draught.

ஹிட்ரேட் ஆப் ஐயன் ஆன்ட் அம்மோனியா	கிறேன்	8
கார்பொனேட் ஆப் அம்மோனியா	கிறேன்	2
குளோரபாரம் ஸ்பிரிட்	துளி	15
குவாட்சியா கியாழம்	திரவ அவுன்ஸ்	1.

இவை எல்லாவற்றையும் ஒன்றாய் மிஸ்ரமித்துப் பானஞ் செய்யவும், இவ்விதம் தினம்-2-3- வேளைகள் செய்துவர, ஜெனன இந்திரியங்களின் தொழில் கிரமப்பட்டு, தாதுபலம், தேகபலம் முதலியவைகளுண்டாம்.

முப்பது துளி நவச்சார மதுவை (Aromatic Spirit of Ammonia) கொஞ்சம் சலத்தில் விட்டுப் பானஞ் செய்யவும். இவ்விதம்-2-3-வேளைகள் செய்துவரின் ஜெனன இந்திரியங்களின் தொழில் கிரமப்படும்.

103. Take of	Liquid Extract of Ergot	f.dr	1
"	Common Syrup	f ozs	3
"	Orange Flower Water	f ozs	6

Mix Dose oz.1. Thrice a day.

எர்கட் திரவச்சத்து	திரவ திராம்	1
சாதா பாணிதம்	திரவ அவுன்ஸ்	3
கிச்சிலிப்பூத் தீநீர்	திரவ அவுன்ஸ்	6

இவை எல்லாவற்றையும் ஒன்றாய் மிஸ்ரமித்து வேளை-1-க்கு ஒரு அவுன்ஸ் வீதம் தினம்-3-வேளை பானஞ் செய்ய, ஜெனன இந்திரியங்கள் கிரமப்பட்டு, இந்திரிய சிராவகந் தீர்ந்து, தாதுபலம் உண்டாம்.

104. Take of	Liquid Extract of Ergot	drs	45
"	Liquor of Styrichnine	drs	5
"	Common Syrup	f. oz.	1
"	Orange Flower Water	f ozs.	2

Mix Dose. oz.1 Thrice a day.

எர்கட் திரவச் சத்து	துளி	45
எட்டிக்கொட்டை சத்து ஜெயநீர்	துளி	5
சாதா பாணிதம்	திரவ அவுன்ஸ்	1
கிச்சிலிப் பூத் தீநீர்	திரவ அவுன்ஸ்	2

இவை எல்லாவற்றையும் மிஸ்ரமித்து வேளை-1-க்கு ஒரு அவுன்ஸ் வீதம் தினம்-3-வேளை பானஞ் செய்ய, ஜெனன இந்திரியங்களின் தொழில் சீர்ப்பட்டு இந்திரிய சிராவகந் தீர்ந்து தாதுபலம் உண்டாம்.

கேவல தீவிர உணர்ச்சி

இந்திரிய சிராவகத்தின் காரணங்களிலெல்லாம் அதிக முக்கியமானதும், அசாத்தியமானதும் ஜெனன இந்திரியங்கள் முன்சொன்னபடி ஒருவித கேவல உணர்ச்சி சுபாவத்தை அடைந்து விடுவதே உண்மையில், இக்கேவல தீவிர உணர்ச்சியினாலேயே மற்றெல்லா காரணங்களும் நேரிடுகிற தென தீர்க்கமாய்ச் சொல்லலாம். மற்றெல்லா காரணங்களையும் குணப்படுத்துவதைப் பார்க்கிலும் அதிக கஷ்டமும், அதிகப் பிரயாசையும், அதிக நாளும், சிகிச்சகன், ரோகியாகிய இருவரின் பிரயத்தனமும் அவசியமாயிருப்பனவும் இந்த வியாதியிலே தான். ஆகையால் ஜெனன இந்திரியங்களைச் சீர்படுத்த முயலுமுன், கேவல தீவிர உணர்ச்சிக்கு முன் விவரித்த காரணங்களில் ஏதேனும் உண்டாயிருக்கில், அதைப் பிரதமத்தில் நீக்க முயல வேண்டியது மகா முக்கியமானது. ஏனெனில், அக்காரணத்தினால் இந்திரிய சிராவக மாத்திரம் உண்டாகிக் கொண்டிருக்காமல், ஜெனன இந்திரியங்கள் நாளுக்கு நாள் க்ஷீணதிசை அடைந்து அதிக துர்பலப்பட்டு, அக்கேவல உணர்ச்சி விர்த்தியாகிக் கொண்டேயிருக்கும்.

ஆகையால், இதனை நற்போதனை, நல்லோர் கூட்டுறவு, பயபக்தி முதலியவைகளினால் மனதில் வேரூன்றி நிலைத்துக் கிடக்கும் எண்ணத்தை.

சிறுகச் சிறுகப் பிரித்தெடுத்து அறவே நீக்க வேண்டியது. அப்படி அது நீக்கப்படா விட்டால் எவ்வித மருந்தும் பிரயோசனப் படாமல், அந்த வியாதியிலேயே சிக்குண்டு, தப்பிக் கரையேற யாதொரு மார்க்கமும் இல்லாமல், அங்ஙனமே மூழ்கி யாழ்ந்து முடிவில் அதற்கே பலியாகிவிடவேண்டும். இன்னும் பாலியத்திலிருந்தே இத்துர்ப்பழக்க வழக்கத்திற் குட்பட்டவர்களின் சிகிச்சை மிகவும் கடினமானது. ஆயினும் ஸ்திரீகளின் ரூபலாவண்ணியத்தைப் பற்றியும், அவர்களின் அலங்காரத்தைப் பற்றியும், காம விகாரத்தைப் பற்றியும் உள்ள நூற்கள், கதைகள், பாடல்கள், கீர்த்தனை முதலியவைகளை வாசிப்பதையும், கேட்பதையும் முற்றும் கட்டாயம் நீக்க வேண்டியது. சன்மார்க்க போத கிரந்தங்களையும், வேதாந்த நூற்களையும், தங்கள் தங்கள் மதாசாரப்படி வாசித்து அல்லது கேட்டு, அதன்படி நடந்துகொள்ள முயற்சி செய்ய வேண்டியது. துன்மார்க்க சகவாசத்தை விட்டு விலகி, சன்மார்க்க சகவாசத்தையே கடைப்பிடித்தல் வேண்டும். தக்க சன்மார்க்க சகவாசத்தினால் எவ்வித கெட்ட விகாரச்சிந்தனையையும் அவசியம் நீங்கி, சுபாவச் சிந்தையாகிய நற்சிந்தனை உண்டாகி, ஜெனன இந்திரியங்களிலுள்ள கேவல கவனம் பறந்துபோம். விபசாரம், அக்கிரம சம்வர்க்கம், முஷ்டிப் பிரயோகம் முதலியவைகள் எல்லாவிதத்தினாலும் நீக்கப்பட்டவைகளே ஆயினும், கிரம சம்வர்க்கத்தையும் இவர்கள் கட்டாயம் வெகு நாள் வரையில் நீக்கி வைக்க வேண்டியது. ஏனெனில் இது இவர்களுக்கு க்ஷணத்திற் கொல்லும் கொடிய விஷத்தைப் பார்க்கிலும் அதிகங் கொடியது.

இத்தியாதி விஷயங்களுடன், சத்துள்ளதும், சீக்கிரம் ஜீரணிக்கத் தக்கதுமான ஆகாரத்தைத் தம் சீரண சக்திக்கு ஏற்ற அளவாய், நாள் தோறும் குறித்த காலங்களில் முறையாய்ச் சாப்பிட்டு வரல் வேண்டும்.

காரமான வஸ்துகள், சாராய இனங்கள், முதலிய உற்சாக காரிகளையும், காபி பானம், தேயிலை பானம், முதலியவைகளையும் நீக்க வேண்டும், புகையிலைப் பழக்கம் உள்ளவர்கள் கூடியவரையில் முயற்சி செய்து கிரமேணுவாய்க் குறைத்தே வரல் வேண்டும். குளிர் காலங்களில் அரைக் கூறுகாய்ந்த வெந்நீரிலும், வெயிற் காலங்களில் குளிர்ந்த சலத்திலும் நாள்தோறும் ஸ்நாநம் செய்து வரல் வேண்டும். முக்கியமாய் ஆண்குறி, பீஜம், குதம், அக்கிரம சருமம் முதலிய ஜெனன இந்திரிய உறுப்புகளை, ஸ்நாநஞ் செய்யும் போது ஸ்பஞ்சினால் நன்றாய்த் தேய்த்துக் கழுவி, சுத்தி செய்ய வேண்டும். நாள் தோறும் நல்ல காற்றுள்ள இடத்தில் உலாவி வரவேண்டும் தேகத்திற்கு அதிக களைப்புண்டாகாமல் மிதமான தேகப் பயிற்சி செய்து வர வேண்டும். ஆனால், இத்தேகப் பயிற்சியினால் ரத்தமானது தேகத்தின் மேற்பாகத்தில் செல்லும் படியானதாக இருக்க வேண்டும். இதற்காக தண்டாயுதம், பாணா, முதலிய கனமான வஸ்துகளைக் கையில் எடுத்துச் சுத்தலாம். அதிகமாய் நடப்பதினாலும், குதிரை மீது சவாரி அதிகமாய்ச் செய்வதினாலும், ரத்தமானது தேகத்தின் கீழ்ப்பாகத்தில் செல்லும். அதனால் கெடுதியே சம்பவிக்கும் ஆகையால் அவ்வித தேகப் பயிற்சியையும் நீக்கிவிட வேண்டும். இவையன்றி சுகாதார விதிகளையும் பூரணமாய்க் கவனித்து, ஒழுங்காய் நடந்து கொள்ள வேண்டும்.

இத்தியாதி விஷயங்களையும் கைகொண்டு நடந்து அதன்பின் ஜெனன இந்திரியங்களில் எந்த ஸ்தானத்தில் கேவல உணர்ச்சி தங்கி நிற்கிறதெனவும், வியாதி நாட்பட்டு விட்டபடியால் இன்னின்ன தேகக் கெடுதிகள் உண்டாகி இருக்கின்றது எனவும் நிதானித்து, ஒவ்வொரு துர்க்குணத்தையும் கிரமமாய் ஒன்றன் பின் ஒன்றாய் முறையே நீக்க முயற்சி செய்ய வேண்டும்.

ஆண்குறி, நீர்ப்பைக் கழுத்து ஆகிய ஸ்தானங்களில் கேவல உணர்ச்சி தங்கி நின்றால், அதை நிவர்த்தி செய்யவும், மூத்திரம் பெய்யும்போது, அது துளித் துளியாய்ச் சொட்டினாலும், நீர்த்தாரையின் வாயில் நைப்புத் தட்டினாலும், கீழ்க்காணும் நெருஞ்சில் பிரயோகத்தை உபயோகிக்கலாம்.

105. நெருஞ்சிப் பிரயோகம்

இரண்டு பலம், பச்சை நெருஞ்சில் சமூலத்தை 5-பலம் தண்ணீரில் போட்டு 20-25-தடவைகள் நன்றாய் அலசி, அதன் கோழையை எடுத்து, அதில் கொஞ்சம் சீனி சருக்கரையை அல்லது கற்கண்டுத் தூளைப் போட்டுக் கலக்கிப் பானம் செய்யவும்.

உலர்ந்த நெருஞ்சிலானால், அதில் ஒரு ரூபா யெடை நிறுத்தெடுத்து, அரை யாழாக்கு ஜலத்தில் ஒரு இரவு ஊறவைத்துக் காலையில் நன்றாய்க் குலுக்கி வடிகட்டின ஊறல் கியாழத்தில் கொஞ்சங் கற்கண்டுத்தூளிட்டுக் கலக்கிப் பானஞ்செய்யவும்.

உலர்ந்த நெருஞ்சிலைப் பொடித்து வஸ்திரகாயஞ் செய்த சூரணம், கற்கண்டுத்தூள், இவை சமனெடை இவ்விரண்டையும் நன்றாயரைத்து வைத்துக் கொண்டு இந்தக் கலவையில் விராகனெடை-1-1¼, கொஞ்சம் சலத்தில் அல்லது பாலில் கரைத்துப் பானஞ் செய்ய வேண்டும்.

மேற்கண்ட மூவகை முறைகளில் ஏதேனும் ஒன்றை உபயோகிக்கலாம். இவ்விதம் காலை மாலை இரண்டு வேளையும்-1-2-வாரங்கள் செய்யில் ஆண்குறி கேவல உணர்ச்சி, நீர்ப்பைக் கழுத்து அசுபாவ உணர்ச்சி, சொட்டு மூத்திரம், நீர்த்தாரை நைப்பு ஆகியவை தீரும்.

குறிப்பு

நெருஞ்சி இரண்டு விதமாம். ஒன்று நாட்டு நெருஞ்சி அல்லது சிறு நெருஞ்சி, மற்றொன்று சீமை நெருஞ்சி, அல்லது, யானை நெருஞ்சி. முன்னது சிறிதாகவும், கூர்மையானதும், முள் முனைகளையுடைய தாகவுமிருக்கும். பின்னதோ பருமனாகவும் மழுங்கலான முள் முனைகளை உடையதாகவும் இருக்கும். சீமை நெருஞ்சியை சலத்தில் அலசுவதினால் அதிக கோழை உண்டாம். நாட்டு நெருஞ்சியில் அவ்வளவாய்க் கோழை இராது. சீமை நெருஞ்சியானது

அதிக சீதள குணம் உடையதாகையால், சீதள தேகிகளுக்கு, அதை அதிக சாக்கிரதையுடன் உபயோகிக்க வேண்டும். எந்தத் தேகிகளுக்கும் எந்த நெருஞ்சிலானாலும் 10-12-நாளைக்குள் குணங்காணாவிட்டால், இதை அதற்குமேல் உபயோகிக்கலாகாது. உடனே மருந்தை மாற்றி வேறொன்றை உபயோகிக்க வேண்டும்.

லிங்கமணி அசுபாவ உணர்ச்சி

லிங்கமணியில் மேற்படி கேவல உணர்ச்சி தங்கி நிற்கின், லிங்கமணியை SÔs ÚRÔßm, ¼-¾-1, மணி நேரம் வரையில் குளிர்ந்த சலத்தில் வைத்து வரவேண்டும். இவ்விதம் சில நாள் முறையாயும், துடர்ச்சியாயும் செய்து வரலாம்.

ஒரு பெரிய தொட்டியில் சலம் வார்த்து ரோகியை உட்காரச் செய்து, தொட்டியின் உட்பக்கத்தில் ஒரு பக்கம் சாய்ந்து கொண்டு இரண்டு காலையும் தூக்கித் தொட்டியின் மேல் போட்டு, கால்கள் வெளியில் தொங்கிக் கொண்டிருக்கும்படி செய்ய வேண்டியது, நாபி முதல் பெருந்துடை அடிவரையிலுள்ள ஸ்தானங்கள் சலத்திலமுந்தி இருக்க வேண்டியது. மற்றப் பாகங்களெல்லாம் தண்ணீருக்கு வெளியிலேயே இருக்க வேண்டும். இவ்விதம் அர்த்தாங்க ஸ்நாநம் துடர்ச்சியாயும், முறையாயும் செய்துவரின், மேற்படி ரோகந் தீருவது மன்றி இன்னும் ஜனன இந்திரிய அனேக வியாதிகளுந் தீரும்.

புரஸ்தகோள கேவல உணர்ச்சி

புரஸ்தகோளத்தில் கேவல உணர்ச்சி தங்கி நின்றால், வங்க முதலிய லோகத்தினாற் செய்யப்பட்ட சலாகையைப் பனிக்கட்டியில் வைத்துக் குளிர்ச்சி ஆக்கி வேளா வேளைகளில் நீர்த்தாரைக்குள் செலுத்தி வருவதினால், அல்லது, அதன்மேல் ஸ்மிரிதீரோதகாரிகளை (மர மரப்பை உண்டாக்கும் அவுடதங்களைத்) தடவி நீர்த்தாரையில் செலுத்தி வருவதினாலும் அந்த உணர்ச்சி நீங்கிப்போகும்.

இந்த வியாதியானது தொடுத்து நாட்பட்டு விட்டால், (Lunar Caustic) காடிக் காரத்தை யேதேனும் தகுந்த கருவியின் மூலமாய் நீர்த்தாரைக்குள் செலுத்தி, முக்கியமாய்ப் புரஸ்தகோள ஸ்தானத்தில் தடவிச் சூடு போடுவதினால் மேற்படி வியாதி தீரும். ஆனால் இச்சிகிச்சை கை தேர்ந்தவர்கள் மூலமாய்ச் செய்து கொள்ள வேண்டும்.

இப்படிச் செய்யக் கூடாத காலங்களில் காடிக் கார சலத்தை அல்லது சங்கோசன காரிகளாகிய துத்த சலம் முதலியவைகளைப் பீச்சிடலாம். பீச்சிடும் விதிகள் நமது 'பிரமேக நிவாரண போதினி' யில் தெளிவாய்ச் சொல்லப் பட்டிருக்கின்றன. கீழ்க்காணும் முறைகளையும் பீச்சிடலாம்.

106. Take of	Sulphate of Zinc	drs.	3 to 4
"	Rose Water	f.ozs.	8

Make injection.

Dr. ROBERT THOMAS. M.D.

பால் துத்தம்	திராம்	3-4.
பன்னீர்	திரவ அவுன்ஸ்	8.

இவற்றைக் கலந்து பீச்சு மருந்தாக செய்து கொள்க.

உபயோகம்:- மேற்படி வியாதி தீரும்.

107. Take of	Nitrate of Silver	gr.	¼ to 1
"	Distilled Water	f.oz.	1

Make injection.

Mr. CARMICHAEL

காடிக்காரம்	கிறேன் ¼-முதல்-1.
தீநீர்	அவுன்ஸ்-1.

இவற்றை மிஸ்ரமித்துப் பீச்சு மருந்தாக செய்து கொள்க.

உபயோகம்:- மேற்படி வியாதி தீரும்.

வேதனை விம்மல்

இராக் காலங்களில் நித்திரை செய்யும்போது கோச எழுச்சி உண்டாதல், கேவல உணர்ச்சிக்குக் காரணமானால், கீழ்க்காணும் மாத்திரையைப் படுக்கைக்குப் போகும்போது உட்கொண்டுவரத் தீரும். அம்மாத்திரையிது.

108. Take of	Opium	grains 8
"	Extract of Belladonna	grains 4
"	Tartar Emetic	grains 1

Mix, make a mass, and divide into 8 pills, one at bed time.

அபினி	கிறேன்	8
பெல்ல டொனா சத்து	கிறேன்	4
வாந்தியுப்பு	கிறேன்	1.

இவற்றை ஒன்றாகச் சேர்த்து-8-மாத்திரைகளாகச் செய்து படுக்கைக்குப் போகும் போது-1-மாத்திரையை உட்கொண்டு வர, கோசவிம்மல், வேதனை விம்மல் ஆகியவை தீரும்.

பீஜத்தளர்ச்சி, இந்திரிய நாளத் தளர்ச்சி

பீஜங்கள் தளர்ந்து தொங்கிக் கொண்டும், இந்திரியக் குழல்கள் தளர்ந்தும் இருப்பது கேவல உணர்ச்சிக்குக் காரணமானால், எப்போதும் லங்கோட்கட்டிக் கொண்டிருப்பதினால் அவற்றின் தளர்ச்சி நீங்கி, சுபாவ ஸ்திதியிலாகி கேவல உணர்ச்சி தீர்ந்து இந்திரிய சிராவகந் தீர்ந்துபோம்.

புரஸ்தகோள வகையரா ரத்தக்கட்டு

புரஸ்தகோளம், இந்திரிய கமலங்களின் பக்கங்கள், குதம் ஆகிய ஸ்தானங்களில் ரத்தங் கட்டுப்படுவதினாலும் கேவல உணர்ச்சி உண்டாகும்.

லக்ஷணம்:- அந்தப் பாகங்களில் கையை வைத்து அழுத்தினால் நோவுண்டாதலே.

சிகிச்சை:- இடுப்பில் கொம்பு வைத்தால் அந்த ஸ்தானங்களின் ரத்தக்கட்டு தீர்ந்து கேவல உணர்ச்சி, சிராவகம் முதலியவை தீரும்.

109. கொம்பு வைத்தல்

ஒரு கிளாஸில் அல்லது சிறுகலயத்தில், கொஞ்சம் நீர்ப்பஞ்சை அல்லது மெல்லிய சல்லாவை, பிராந்தியில், அல்லது, வொயின் ஸ்பிரிடில், அல்லது கொஞ்சம் நல்லெண்ணெயில் நனைத்துக் கொளுத்திப் போட்டுச் சற்றுத்தாமதித்து, வைக்கவேண்டிய ஸ்தானத்தில் மெதுவாய்க் கொஞ்சம் சாய்ந்துப் பிடிக்க, அது அங்கு கவ்விப் பிடித்துக் கொள்ளும், தேகத்தின் மீது நெருப்புப்படாமல் ஜாக்கிரதையாய் வைக்கவேண்டும். பின்பு அதை எடுக்கிறதானால், அந்தஸ்தானத்தில், கிளாஸின் உதட்டின் சமீபத்தில்; கைப் பெருவிரலினால் அழுத்தினால், அது விட்டு விடும். இது சாதாரணமாய் நமது பாட்டிமார்களுக்குத் தெரிந்தவித்தையே மூச்சுப் பிடிப்பிற்கு இதனை வைப்பது வீட்டு வழக்கம். இப்படி வைப்பதே கொம்பு வைத்தல் எனப் பெயர்.

புரஸ்தகோள வீக்கம்

புரஸ்தகோளத்தின் வீக்கமும் கேவல உணர்ச்சிக்குக் காரணமாம்.

லக்ஷணம்:- அங்கு, கடினமானதும், கரடு முரடானதுமான மேடுண்டாகி, நாட்பட நிலைத்திருத்தல், நீர்த்தாரைக்குள் சலாகையைச் செலுத்திப் பார்த்தால் அங்கு அதிக வேதனை உண்டாதல் ஆகியவைகளாம்.

சிகிச்சை:- அந்த ஸ்தானத்தைப் பரீட்சித்து வீக்கம் இருப்பது நிச்சயமென ஏற்பட்டால், ஆண்குறியின் தையலில் அந்த ஸ்தானத்தில் பிளிஸ்டர் செய்ய வேண்டும். இதுவும் தெரிந்த பண்டிதர்கள் மூலமாகவே செய்து கொள்ள வேண்டும்.

மூளைக்கொடி யிரத்தாதிக்கம்.

மூளைக்கொடியின் கீழ்ப்பாக ஸ்தானத்தில் ரத்தம் அதிகரித்திருப்பது கேவல உணர்ச்சிக்குக் காரணமாம்.

லக்ஷணம்:- இடுப்பில் நோவிருத்தல், புட்டம், தொடையாகிய ஸ்தானங்களில் எறும்பூறுவது போல் தோற்றல் ஆகியவைகளாம்.

சிகிச்சை:- ஒரு குழலைக்கொண்டு சலத்தைச் சிறு தாரையாய் இடுப்பில் விழும்படி செய்ய வேண்டும். இவ்விதம் தினம் இரண்டு தடவை செய்துவரின், மேற்படி ரோகந் தீரும். குளிர்ந்த சல ஒற்றிடமும் இடலாம். மேற்சொன்னது போலக் கொம்பும் வைக்கலாம்.

4-கிறேன் எர்கட் ஆப் ரை (Ergot of Rye) சூரணத்தைத் தேனிற் குழைத்து உட்கொள்ளலாம்.

அரை யிரத்தாதிக்கம்

ஆசனத்திற்கும் பீஜங்களுக்கும் மத்தியிலுள்ள ஸ்தானம், நீர்த்தாரை, புரஸ்தகோளம், மூளைக்கொடி முதலிய ஸ்தானங்களில் ரத்தம் அதிகப் படுவதினாலும் கேவல உணர்ச்சி உண்டாகும்.

லக்ஷணம்:- அந்த ஸ்தானத்தை மெதுவாய் அமுத்தினால் நோவுண்டாதல் முதலியவைகளாம்.

சிகிச்சை:- ரத்தத்தின் தீக்ஷண்யத்தைந் தணிக்க மேற்சொன்ன சிகிச்சைகளாகிய லிங்கமணியைத் தண்ணீரில் வைத்தல், சலாகையைச் செலுத்தல், புரஸ்தகோள ஸ்தானத்தைக் காடிக்காரம் வைத்துச் சூடு போடுதல், சங்கோசனகாரி பீச்சு முறைகளை உபயோகித்தல், ஆகிய இவ்வெளிக்ச் சிகிச்சையோடு, கீழ்க்காணும் மருந்துகளில் தமக்கிஷ்ட மானவைகளைத் தக்க அநுபானத்தில் உள்ளுக்குபயோகித்து வரலாம் அவையாவன:-

எக்ஸ்டிராக்ட் ஆப் பெல்லடொனா (Extract of Belladonna) வேளை 1-க்கு ¼-கிறேன் முதல்-1 கிறேன் வரையில்.

புறொமைட் ஆப் பொட்டாஸியம் 5-கிறேன் முதல் 30-கிறேன்
(Bromide of Pottassium)

குறாசானி யோமச் சத்து 5-முதல்-10-கிறேன்

அரை மிரத்த க்ஷீணம்

அரை ஸ்தானங்களில் ரத்தங் குறைந்து போதல், அல்லது, அங்கு ரத்தமில்லாதிருத்தல் ஆகியவை கேவல உணர்ச்சிக்குக் காரணமாம்.

லக்ஷணம்:- அந்த ஸ்தானங்களில் அழுத்தாமலே நோவிருத்தல், அழுத்தினாலும் நோவு அதிகரிக்காமை முதலியவைகளாம்.

சிகிச்சை:- ரத்த விர்த்தியுண்டாக அய சம்பந்த மருந்துகளையும், நரம்புகளையும் உற்சாகப்படுத்த எட்டிக் கொட்டை சம்பந்த முறைகளையும் உபயோகிக்கலாம். பின்காணும் முறைகளும் உபயோகப்படும்.

110. Take of	Strychnine	gr	1
"	Sulphate of Quinine	grs	50
"	Tincture of Steel	f.oz	1
"	Distilled Water	f.ozs	32

Mix Dose. oz. 1. Thrice a day, after meals.

எட்டிக்கொட்டைச் சத்து	கிறேன்	1
குவைனா	கிறேன்	50
அயபாவனத் திராவகம்	திரவ அவுன்ஸ்	1
தீநீர்	திரவ அவுன்ஸ்	32

இவை எல்லாவற்றையும் ஒன்றாய் மிஸ்ரமித்து வேளை-1-க்கு ஒரு அவுன்ஸாக தினம்-3-வேளை போஜனத்திற்குப் பின் பானம் செய்ய வேண்டும்.

ரத்த விர்த்தியுண்டாம் நரம்புகளுக்கு உற்சாகம் உண்டாம்.

111. Take of	Strychnine	gr	1
"	Sulphate of Quinine	grs.	30
"	Confection of Roses	dr.	1

Mix. make a mass and divide into 20 pills one pill per day.

எட்டிக்கொட்டைச் சத்து	கிறேன்	1
குவைனா	கிறேன்	30
குல்கந்து	திராம்	1

இவை எல்லாவற்றையும் ஒன்றாக அரைத்து, 20 மாத்திரைகளாகச் செய்து தினம்-1 மாத்திரை உட்கொள்ள, நரம்புகளுக்கு உற்சாகம் உண்டாகும்.

112. சுத்தி செய்த எட்டிக்கொட்டைச் சூரணம் மேல்தோல் நீக்கப்பட்ட சுக்குச் சூரணம், இவை வகை-1-க்கு விராகனெடை-½, லவங்கச் சூரணம் விராகனெடை-1, இவை எல்லாவற்றையும் கருவேலம் பிசின் கோழையை விட்டரைத்து 16-மாத்திரைகளாகச் செய்து, வேளை-1-க்கு ஒரு மாத்திரை வீதம், தினம் 2-வேளையும் உட்கொள்ள நரம்பு பலம் உண்டாகும். அவை உற்சாகப்படும்.

மேற்கண்ட சிகிச்சைகளினால் கேவல உணர்ச்சி நீங்கி விட்டால் இந்திரிய சிராவகமும் நின்றுவிடும். இந்திரிய சிராவகம் நின்று விட்டால் தேக பலமானது தனக்குத்தானே கிரமேணுவாய் அதிகரித்துப் பூரண திசை அடைந்து விம்மல், கிளர்ச்சி போகசக்தி, தாது பலம் முதலியவைகள் உண்டாகி விடும்.

ஒரு வேளை அவசியமானால் பலகாரி மருந்துகளையும் (இதன் முறை பின் எழுதப்படும்) உற்சாககாரி மருந்துகளையும் உபயோகிக்கலாம். ஆனால், கேவல உணர்ச்சி நீங்காத வரையில் இந்த மருந்துகளைக் கண்டிப்பாய் உபயோகித்தலே கூடாது.

டாக்டர் கேம்பர்லின் துரையவர்கள் அபிப்பிராயமாவது ரத்தக்கூறான தேகிகளுக்கு ரத்தம் அதிகரித்து இருக்கும்போது அயப் பிரயோகங்களை உபயோகிப்பதினால் அவசியம் தீமை விளையும் என்பதே.

இந்திரிய சிராவக ரோக ஆரம்பத்தில், நீர்ப்பை, நீர்த்தாரை ஆகியவைகளின் சுகஸ்திதி விகற்பப்படுவதினால் மூத்திரமானது அதிகமாயாவது கொஞ்சமாயாவது அடிக்கடி போய் அதிக பலஹீனப் பட்டால், பிரதமத்தில் வியாதி உண்டான காரணங்களை நீக்க வேண்டும். அவையாவன: ஸ்திரீ சங்கை, முஷ்டிப் பிரயோக முதலியவைகளாம். இப்பழக்கங்களை உடனே நீக்கவேண்டும். பின்பு முள்ளந் தண்டுக்கடியில் முக்கோண ரூபமாயிருக்கிற திரிகஸ்தான எலும்பு ஸ்தானத்தின் மேற்பக்கத்தில் பிளிஸ்டர் செய்ய வேண்டும். பின்பு பின்காணும் முறையை உபயோகிக்க வேண்டும்.

113. Take of	Tincture of Steel	drs	20 to 30
"	Spirit of Chloroform	drs	12 to 15
"	Distilled Water	f.ozs	3

Mix Dose oz.1, Thrice a day.

அயபாவனத் திராவகம்	துளி	20-30
குளோரபார ஜெயநீர்	துளி	12-15
தீநீர்	திரவ அவுன்ஸ்	3.

இவை எல்லாவற்றையும் ஒன்றாய் மிஸ்ரமித்து வேளை-1-க்கு ஒரு அவுன்ஸாக, தினம்-1-க்கு மூன்று வேளை பானஞ் செய்யவும்.

இம்மருந்தைச் சிலநாள் உபயோகித்துப் பின்பு பின்காணும் முறையையும் உபயோகிக்க வேண்டும்.

114. Take of	Tincture of Steel	f.drs	4
"	Diluted Phospheric Acid	f.drs	4
"	Strychnine	gr	1
"	Common Syrup	f.ozs	2
"	Distilled Water	f ozs	2

Mix. Dose. dr. 1 Thrice a day after meal.

அயபாவனத் திராவகம்	திரவ திராம்	4
விளாவின பாஸ்பர் திராவகம்	திரவ திராம்	4
எட்டிக்கொட்டைச் சத்து	கிறேன்	1
சாதா ஷர்பத்து	திரவ அவுன்ஸ்	2
தீநீர்	திரவ அவுன்ஸ்	2

இவை எல்லாவற்றையும் ஒன்றாய் மிஸ்ரமித்து, வேளை-1-க்கு ஒரு திராமாக தினம்-3-வேளை போஜனத்திற்குப் பின் பானம் செய்யவும்.

மேற்கண்ட முறைப்படி செய்யின் இந்திரிய சிராவகத்தினால் நீர்த்தாரை, நீர்ப்பை ஆகிய இவை துர்ப்பலப்பட்டிருப்பது தீர்ந்துபோம்.

இந்திரிய சிராவகத்தினாலும் முள்ளந் தண்டுக் கொடியின் நரம்புகள் துர்ப்பலப்படும்.

லக்ஷணம்:- மூளை சம்பந்தமான சொற்பமுயற்சியினாலும் சோர்வு உண்டாதல், வாசிப்பு முதலியவைகளில் வெறுப்பு, ஞாபகசக்திக் குறைவு, புத்தி தடுமாற்றம், நித்திரையில்லாமை, இடுப்பின் கீழ்ப்பாகத்தில் முக்கியமாய்த் தேகத்தில் அர்த்தாங்க பாகமாய் முதுகு, புஜங்கள், கால்கள் ஆகிய ஸ்தானங்களில் நரம்புகளில் நோவு முதலியவைகளாம்.

சிகிச்சை:- டாக்டர் கேம்ஜி துரையவர்கள் அபிப்பிராயமாவது அயமும் பாஸ்பரஸும் சம்பந்தமான முறைகள், மீன் எண்ணெய் முதலிய தாருட்டிய காரிகளை உபயோகித்து, தாருட்டியகாரி ஆகாரங்களைச் சாப்பிட வேண்டும் என்பதே.

ஆனால் சோஷணகாரி மருந்துகளினால் சீக்கிரம் குணமாம்; கீழ்க்காணும் முறையை மேலுக்குபயோகிக்கலாம்.

115. Take of	Mustard Oil	f.ozs	4
"	Aethereal Extract	-	
"	Mezereon	grains	40
"	Camphor	grains	120
"	Castor oil	f.drs	5
"	Spirit of Wine	f.ozs	4

Mix first Extract and Camphor in wine, then add both oils and make linimet, to be used externally.

கடுகு எண்ணெய்	திரவ அவுன்ஸ்	4
மெஜிரியன் எதிரியல்சத்து	கிறேன்	40
சூடன்	கிறேன்	120
ஆமணக்கெண்ணெய்	திரவ அவுன்ஸ்	5
ஸ்பிரிட் ஆப் ஒயின்	திரவ அவுன்ஸ்	4

முதலில் சத்தையும் சூடனையும் ஒயின் விட்டு நன்றாய் அரைத்து, எண்ணெய்களை மிஸ்ரமித்துக் கிலேதமாகச் செய்து கீழ்க்கண்டபடி உபயோகிக்கின் நரம்பு தளர்ச்சி, துர்ப்பலம் முதலியவை தீரும்.

நீர்ப்பஞ்சு, மிருதுவான கம்பிளி ஆகிய ஒன்றின் நான்கு அங்குல அகலமும் தேவையான நீளமுள்ள துண்டில் மேற்படி கிலேதத்தில் சில துளிகளைச் சொட்டி, அந்த வஸ்திரத்தை மடித்துத் தேய்க்க, அதுமுழுவதும் கிலேதம் சமமாய்ப் பரவிப்போம். பின்பு முதுகு எலும்பின் மத்தியில் கணக்காய்ப்பிசகாமல் கட்டி வைக்க வேண்டும். முதல் நாள்-4-5-நிமிஷங்கள் தாமதித்து எடுத்து விட வேண்டும். மறுநாள் 2-3 நிமிஷங்கள் அதிகப் படுத்த வேண்டும். இவ்விதம் நாள்தோறும் கிரமேணுவாய் அதிகப்படுத்த வேண்டும். ஆரம்பத்தில் 2-3, நாளும் எரிச்சல், நோவு முதலியவைகளினால் கொஞ்சம் வருத்தமாயிருக்கும். படிப்படியாய்ப் பழக்கப்படுத்துவதினால் மணிக் கணக்காய்க் கட்டி வைத்தாலும் ஒருவித வருத்தமும் தோணாது.

ஆரம்பத்தில் 2-3, துளி போதுமானவை; நாளடைவில் அதன் அளவை அதிகப்படுத்திக் கொள்ளலாம். ஆனால் ரோகி அதிக சீக்கிரம் குணமாகி விட வேண்டுமெனப் பேராசைப்பட்டுக் கிலேதத்தை அதிக அளவாய் உபயோகித்தால், 'நூற்றைக் கொடுத்தது குருணி' என மேல்தோல் சிவந்து வேதனை உண்டாகி, இதனால் அனேக நாள் வரையில் கிலேதத்தை உபயோகிக்க ஏதுவில்லாமற் போம். தேகத்தில் எரிவந்தம், சிறுகுப்பிளங்கள், முதலியவைகள் உண்டாகாத விதமாய் உபயோகிக்க வேண்டும். ரோகி சுகுமார தேகியானால், மேற்படி பாகத்திலுள்ள கடுகெண்ணெயைக் குறைத்து விடலாம்.

மேற்படி பாகத்தைச் செய்து கொள்ள இயலாதவர்கள் இங்கிலீஷ் மருந்து ஷாப்பில் விற்கும் கம்பவுண்ட் லினிமெண்ட் ஆப் மஸ்டர்ட் (Compound Liniment

of Mustard) கடுகுக் கலவைக் கிலேதத்தை வாங்கி மேற்கண்ட முறைப்படி உபயோகிக்கலாம். அங்கு எப்போதும் சித்தப்படுத்தியே விற்கப் படுகிறபடியால் வாங்கி உபயோகிப்பதே சுலபமார்க்கம்.

மேற்கண்ட முறைகளைத் தகுந்த விதமாய் உபயோகித்து இந்திரிய சிராவகத்தை அறவே முற்றும் நீக்கினபின் யாதொரு அவுடதமின்றி வழமையான ஆகார பதார்த்தங்களையும் தாருட்டிய காரிகளானவைகளையும் மாத்திரம் உபயோகித்து வருவதினால் தேக துர்ப்பலம், மறதி, மனக்கவலை, முதலிய ரோகங்கள் தானே தீர்ந்துபோம். அப்படித் தீரா விட்டால் மேற்படி மருந்துகளுடன் அல்லது இவற்றை உபயோகித்தபின் சமயோசிதமாய் சீமைத் தண்ணீர் விட்டான் கிழங்கு, சாலாமிஸ்ரி, பால் முதலியவைகளையும் இவற்றின் யோக முறைகளையும் உபயோகிக்கலாம்.

இரத்தங் குறைந்திருந்தால் அய பாஸ்பேட் ஷர்பத்தில் (Syrup of Phosphate of Iron) 15-20-துளிகளைக் கொஞ்சம் சலத்திற் கலந்து பானம் செய்யலாம். இவ்விதம் தினம்-1-க்கு-2-3, தடவை செய்யலாம். இந்த பாணிதமானது இங்கிலீஷ் மருந்து ஷாப்புகளில் சித்தப்படுத்தியே விற்கப்படுகிறபடியால் அங்கு வாங்கி உபயோகிப்பதே சுலபமார்க்கம்.

மனக்கவலை, மனக்கிலேசம், பாக்கியாயிருந்தால் சந்தன ஷர்பத்து, காவுஜ"பான் ஷர்பத்து ஆகிய இவற்றில் ஒன்றை உபயோகிக்கலாம். இப்பாகங்களெல்லாம் 'யூநாநி வைத்திய தாதுவிர்த்தி போதினியிற்' சொல்லப்பட்டிருக்கின்றன.

தேகந் துர்ப்பலப்பட்ட காரணத்தினால் இந்திரிய சிராவகங் கண்டால், டாக்டர் ஜீல் துரையவர்கள் அபிப்பிராயப்படி பின்காணும் மாத்திரைகளை உபயோகிக்கலாம். அவை யிவை.

116. Take of	Extract of Quassia	grs	40
"	Powdered Sulphate of Iron	grs	20
"	do Cinnamon	grs	10

Mix. make a mass, and divide into 20 pills to be taken one pill, Thrice a day.

குவாஷியா சத்து	கிறேன்-40
அன்னபேதித் தூள்	கிறேன்-20
சன்ன லவங்கப்பட்டைச் சூரணம்	கிறேன்-10

இவை எல்லாவற்றையும் அரைத்து ஒன்றாய் மிஸ்ரமித்து 20 மாத்திரைகளாகச் செய்து, வேளை-1-க்கு ஒரு மாத்திரையாக தினம்-1-க்கு 3-வேளை உட்கொள்ள, ரத்த விர்த்தி உண்டாகி இந்திரிய சிராவகந் தீரும்.

117. Take of	Diluted Phosphoric Acid	drs	30
"	Sulphate of Quinine	dr	1
"	Powdered Rhubarb	grs	30
"	Extract of Nux Vomica	grs	12
"	Extract of Cascarilla	q.s	

Mix make a mass and divide into 20 pills, to be taken one to two pills, Twice or Thrice a day.

விளாவின பாஸ்பர் திராவகம்	துளி	30
குவைனா	திராம்	1
ரேவல் சீனித்தூள்	கிறேன்	30
எட்டிக்கொட்டை சத்து	கிறேன்	12
காஸ்கரில்லாச் சத்து தேவையான	அளவு.	

இவை எல்லாவற்றையும் ஒன்றாய் மிஸ்ரமித்து-20. மாத்திரைகளாய்ச் செய்து, வேளை-1-க்கு மாத்திரை-1-2-ஆக, தினம்-1-க்கு இரண்டு அல்லது மூன்று வேளை உட்கொள்ள, ரத்த விர்த்தி உண்டாகி இந்திரிய சிராவகந் தீரும்.

குறிப்பு

இங்கிலீஷ் முறைகளை நிறுத்தி, யூநாநி முறை முதலியவைகளை எழுதத் துவங்குமுன், பல டாக்டர் மார்களின் அநுபவசித்தமாகிய சில முறைகளையும் நமது நண்பர்களுக்குப் பிரயோசனப்படும்படி எழுதாமலிருக்க, அவர்கள் மீதுள்ள நன் நம்பிக்கையும் நற்கோரிக்கையும் இடந்தர வில்லை. ஆகையால் கைகண்ட இம்முறைகளையும் மேற்படியார்களுக்காக எழுதுவாம். அவை பின் வருகிறவிதமாம்.

டாக்டர் டுயின்ட் துரையவர்கள் அநுபவமாவது :-

இந்திரிய சிராவகத்தினால், நேரிட்ட ஜனன இந்திரியங்களின் துர்ப்பலத்திற்குக் கீழ்க்காணும் சிகிச்சைகளே கைம் முறையானவை. அவை பின் வருகிற விதமாம்.

118. Take of	Sulphate of Quinine	dr	1
"	Powdered Rhubarb	grs	30
"	Extract of Nux Vomica	grs	30
"	Extract of Belladonna	grs	12

Mix make a mass and divide into 20 pills to be taken one pill, Thrice a day.

குவைனா	திராம்	1
ரேவல் சீனித் தூள்	கிறேன்	30
எட்டிக்கொட்டைச் சத்து	கிறேன்	30
பெல்லடொனாச் சத்து	கிறேன்	12

இவை எல்லாவற்றையும் ஒன்றாயரைத்து மிஸ்ரமித்து, 20-மாத்திரைகளாகச் செய்து வேளை-1-க்கு ஒரு மாத்திரையாக தினம்-1-க்கு இரண்டல்லது மூன்று வேளை உட்கொள்ள மேற்படி வியாதி தீரும்.

வியாதி ஆரம்பத்தில் மேற்படி மாத்திரைகளை உபயோகித்தால் மேற்படி வியாதி தீர்ந்துபோம். ஆனால் அப்படி ஒருவேளை தீராமல் இந்திரிய சிராவகம் நாள்தோறும் உண்டாகி, பலஹீனம், மலபந்தம், அஜீரணம் முதலியவைகள் உண்டாயிருந்தால் கீழ்க்காணும் மாத்திரையை உபயோகிக்கலாம்.

119. Take of	Extract of Senna	f.ozs	6
"	Tincture of Nux Vomica	f.drs	18
"	Tincture of Belladonna	f.drs	5
"	Tincture of Aconite	f.dr.	3
"	Diluted Hydrocyanic Acid	f.dr	3

Mix. Dose, a small Tea spoonful to be taken 4 times a day.

சூரத்து நிலவாரை திரவச்சத்து	திரவ அவுன்ஸ்-6
எட்டிக்கொட்டைப் பாவனதிராவகம்	திரவ திராம்-18
பெல்ல டொனா பாவன திராவகம்	திரவ திராம்-5
அகோனைட் பாவன திராவகம்	திரவ திராம்-3
விளாவின ஹைட்ரோஸியானிக் ஆஸிட்	திரவ திராம்-3.

இவை எல்லாவற்றையும் ஒன்றாய் மிஸ்ரமித்து வேளை-1-க்கு ஒரு சிறு தேக்கரண்டி அளவாக, தினம்-1-க்கு நாலு தடவை உட்கொள்ள மேற்படி வியாதி தீரும்.

ஆண்குறியில் தினவு அதிகமாய் இருப்பதுடன் ரோகி பலசாலியாய் இருந்தால் கீழ்க்காணும் பிரயோகத்தை உபயோகிக்கலாம்.

120. Take of	Bromide of Potassium	drs.	5
"	Fluid Extract of Senna	f.oz.	3
"	Tincture of Belladonna	f.drs.	2½
"	Tincture of Aconite	f.dr.	1½
"	Diluted Hydrocyanic Acid	f.dr.	1½
"	Simple Syrup	f.ozs	2½

Mix. Dose a Tea Spoonful, 4 Times a day.

புரோமைட் ஆப் பொடாஸியம்	திராம்	5
சூரத்து நிலஆவாரைத் திரவச்சத்து	திரவ அவுன்ஸ்	3
பெல்ல டோனா பாவகதிராவகம்	திரவ திராம்	2½
அகோனைட் பாவன திராவகம்	மேற்படி	1½
விளாவின ஹைட்ரோஸியானிக் ஆஸிட்	மேற்படி	1½
சாதாஷர்பத்து	திரவ அவுன்ஸ்	2½

இவை எல்லாவற்றையும் ஒன்றாய் மிஸ்ரமித்து, வேளை-1-க்கு ஒரு தேக்கரண்டி வீதம் தினம்-1-க்கு நாலு தடவை உட்கொண்டு வர மேற்படி வியாதி தீரும்.

டாக்டர் மால்ஜ் துரையவர்கள் அபிப்பிராயமாவது:- இந்திரிய சிராவக ரோகத்தில், அந்த ஸ்தானத்தில் காஸ்டிக் முதலியவைகளை உபயோகப் படுத்து முன்னமே கீழ்க்காணும் முறையை உபயோகிக்கவேண்டும் என்பதே.

121. Take of	Bromide of Potassium	oz.	1
"	Syrup of Tolu	f.oz.	1
"	Water	f.ozs.	9

Mix Dose, a Desert spoonful. Thrice a day.

புரோமைட் ஆப் பொடாஸியம்	அவுன்ஸ்	1
டோலு ஷர்பத்து	திரவ அவுன்ஸ்	1
தண்ணீர்	திரவ அவுன்ஸ்	9

இவை எல்லாவற்றையும் மிஸ்ரமித்து வேளை-1-க்கு ஒரு டெஸர்ட் ஸ்பூன் அல்லது இரண்டு திரவ திராம் அளவாக, தினம்-3-தடவை உட்கொள்ள வேண்டும். இந்த மருந்தை இரண்டு மாதம் வரையில் உபயோகித்தாலும் தேகத்திற்கு யாதொரு வித கெடுதியும் நேரிடாது.

டாக்டர் பிளீக்துரையவர்கள் அநுபவமாவது, (பேர்குளோரைட் ஆப் ஐயன்) பாவன திராவகத்தில் (Tincture of Perchloride of Iron) 30-துளிகளை, இரண்டொரு அவுன்ஸ் சலத்தில் விட்டுப் பானஞ் செய்யவும். இவ்விதம் தினம்-2-தடவை செய்து கொண்டு பின்காணும் மாத்திரைகளில் தினம் ஒன்று உட்கொள்ளின், மேற்படி வியாதி தீருமென்பதே.

122. Take of	Powdered Camphor	grs 18
"	Opium Powder	grs 12
"	Extract of Henbane	q.s.

Mix. make a mass and divide into 12 pills to be taken one pill, once a day.

சூடன் தூள்	கிறேன்	18
அபினிச் சூரணம்	கிறேன்	12.

குரோசானி யோமச் சத்து தேவையான அளவு

இவை எல்லாவற்றையும் ஒன்றாய் அரைத்து மிஸ்ரமித்து-12-மாத்திரைகளாய்ச் செய்து, வேளை-1-க்கு ஒரு மாத்திரை வீதம், தினம் ஒரு வேளை உட்கொள்ளவும்.

டாக்டர் கஸீகாயின் துரையவர்கள், இந்திரிய சிராவகரோகத்தில் பின்காணும் மாத்திரையை அதிக நம்பிக்கையோடு உபயோகிக்கலா மென்கிறார். அது இது.

123. Take of	Powdered Camphor	grs.40
"	Opium Powder	grs.10
"	Powdered Aloes	grs.20 to 60

Mix. make a mass and divide into 20 pills one or two pills at bed time.

சூடன் தூள்	கிறேன்	40
அபினிச் சூரணம்	கிறேன்	10
மூஷாம் பரத்தூள்	கிறேன்	20-முதல் 90

இவை எல்லாவற்றையும் அரைத்துத் திரட்டி 20-மாத்திரைகளாகச் செய்து, படுக்கைக்குப் போகும்போது 1-2-மாத்திரைகள் சாப்பிடவும், இந்திரிய சிராவகம் குணமாம்.

டாக்டர் எக்நூ துரையவர்கள் அபிப்பிராயமாவது:- இலகுவானதும் போஷாப்பைத் தரத்தக்கதுமான ஆகாரத்தைச் சாப்பிட்டுக் கொண்டு ஆசனத்தினவை நீக்கவும். நீர்ப்பையிலுள்ள அசுத்தங்களை நீக்கவும் கீழ்காணும் மாத்திரையை உபயோகிக்கலாமென்பதே. அந்த மாத்திரையிது.

124. Take of	Sulphate of Strychnine	grs	2
"	Phosphorus	gr	1
"	Confection of Roses	drs.	2

Mix make a mass and divide into 50 pills, Dose one pill, Thrice a day.

எட்டிக்கொட்டை சத்தின் சல்பேட்	கிறேன்	2
பாஸ்பரஸ்	கிறேன்	1
குல்கந்து	திராம்	2

இவை எல்லாவற்றையும் ஒன்றாய் அரைத்து மிஸ்ரமித்து 50-மாத்திரைகளாகச் செய்து வேளை 1-க்கு ஒரு மாத்திரை வீதம், தினம் மூன்று தடவை உட்கொள்ள மேற்படி வியாதி தீரும்.

டாக்டர் நாம்பர் துரையவர்கள் சொல்லுகிறார். 'ஸொலியூஷன் ஆவ் குளோரைட் ஆப் பேரியம் (Solution of Chloride of Barium) 5-அல்லது 7-துளிகளை இரண்டொரு அவுன்ஸ் சலத்தில் கலந்து போஜனத்திற்குப் பின் பானஞ் செய்வதினால் இந்திரிய சிராவகம் குணப்படலாம்' இது நஞ்சு தருமமுடைய தாகையால் அதிக சாக்கிரதையுடன் உபயோகிக்க வேண்டும்.

விண்ணப்பம்.

இது வரையில் நாம் இந்திரிய சிராவகத்தின் பற்பல வித நிலைமைகள், காரணங்கள் முதலியவைகளுக்கு தகுந்தவைகளான நானாவித இங்கிலீஷ் முறைகளை எழுதினோம். புத்திமான்கள், தங்களுக்கு அல்லது தங்கள் சிநேகிதர் முதலிய மற்றவர்களுக்கு ஏதேனும் வியாதியிருக்கின் அதைக் கவனித்துத் தகுந்த விதமாய்ச் செய்து கொள்ள இவ்வளவு பாகங்கள் போதுமானவைகள் அறிவாளிகள் சமேயோசிதமாகவும் நிதானமாகவும் செய்து திருப்தி அடைவார்கள் என்பதில் சந்தேகமில்லை. இங்கிலீஷ் மருந்துகளுள் சில அதிக வேகமுடையவைகள் ஆகையால் அவசரப்பட்டாலும், மெதுவாயும், அதிக வேகமான மருந்துகளானால் சிகிச்சையின் ஆரம்பத்தில் அதற்குரிய அளவில் குறைந்ததை உபயோகித்து படிப்படியாய் அதிகப்படுத்தி, பாகத்தில் சொல்லப் பட்டிருக்கிற அதன் அளவு வரையில் உபயோகிப்பது உத்தமம். ஏனெனில், அதுவரையில் தேக சுபாவமும், மருந்தின் தன்மையும் தெரிந்துபோம். இதற்குப் பத்தியங்கள் சொல்லப்படா விட்டாலும் வியாதியை விர்த்தி செய்யும் பதார்த்தங்கள், விஷயங்கள், உபயோகிக்கும் மருந்தினுடைய சத்துரு பதார்த்தங்கள் ஆகியவைகளை அவசியம் கவனித்து நீக்க வேண்டியது. இனி கடவுளினது கிருபையால் யூநாநி முறைகளையும் எழுதுவாம்.

இந்திரிய சிராவகச் சிகிச்சை
(யூநாநி)

இந்திரிய சிராவகத்தின் காரணங்களும் லக்ஷணங்களும் முன்னமே சொல்லப்பட்டிருக்கின்ற படியால் அவற்றிற்குத் தகுந்த தனிச் சிகிச்சைகளை எழுதிப் பின்பு அவற்றிற்கான பொதுச் சிகிச்சைகளையும் எழுதுவாம்.

1. விந்தை அதிகப்படுத்தும் ஆகாரங்கள் முதலியவைகளினால் உண்டான இந்திரிய சிராவகத்திற்கு,

சிகிச்சை:- வலுவுள்ள தேகமாயிருந்தால், ஆகாரத்தைக் குறைப்பதுமன்றி, விந்து விளைவை அதிகப் படுத்தும் அவுடதங்களையும் குறைக்க வேண்டும்

அல்லது முற்றிலும் நீக்க வேண்டும்; மிதமாக போகப்பயிற்சியும் செய்ய வேண்டியது. விந்துவைக் குறைக்கும் அவுடதங்களையும் உபயோகித்து நிவர்த்திசெய்து கொள்ள வேண்டியது.

2. சுரத தாதுவில் சூடதிகரித் துண்டான இந்திரிய சிராவகத்திற்கு

சிகிச்சை:- நீலோர்ப்பல ஷர்பத்து, சீமை இலந்தம்பழ ஷர்பத்து, பனப்ஷா ஷர்பத்து, ஆகியவைகளில் ஒன்றை வேளை-1-க்குப் பலம்-¼, அல்லது-½, வீதம் சாப்பிடுவதினாலும், மாதுளம்பூ, காஹு விதை, பருப்புக்கீரை விதை, இசுபகோல் விதை, காசினி விதை, நீலோர்ப்பல புஷ்பம், கொத்துமல்லி விதை முதலியவைகளில் ஒன்றை, அல்லது இரண்டு மூன்று வகைகளைச் சேர்த்துச் செய்த கியாழம், சூரணம் முதலியவைகளில் தேகத்திற் கேற்றதை அளவாய் உபயோகிப்பதிலும் நிவர்த்தியாகும்.

3. விந்துக் குழல்கள் குளிர்ச்சி, கொழுமை முதலியவைகளினால் விகற்பப்பட்டுண்டானதற்கு.

சிகிச்சை:- பொதினா, கோரைக்கிழங்கு, மாதுளம்பூ, சதாப் விதை, முதலான சூடாகிய பதார்த்தங்களின் கியாழம், லேகிய முதலியவைகளினாலும், சீரக மாஜூனாலும், இவை போன்ற அவுடதங்களினாலும் நிவர்த்தி செய்து கொள்ள வேண்டியது.

4. இந்திரிய நரம்புகளின் வலிப்பினால் உண்டாவதற்கு

சிகிச்சை:- வலிப்பை நீக்கும்படியாய், ஆண்குறியிலும் பீஜங்களிலும் தைல முதலியவைகளைத் தேய்த்து நிவர்த்தி செய்ய வேண்டியது. இவ்வகை அவுடதங்களை நமது 'யூநாநி வைத்திய தாருட்ய விர்த்திபோதினியிற்' காண்க.

5. குண்டிக்காய்களின் துர்ப்பல முதலியவைகளில் உண்டானதற்கு

சிகிச்சை:- குண்டிக்காய்களுக்குப் பலத்தைக் கொடுக்கும் மாஜூன்கள், லேகியங்கள், லுபூப்கள், ஷர்பத்து முதலியவைகளினாலும் வசப்படுத்த வேண்டியது. இந்த வியாதிக்கு உடனே சிகிச்சை செய்ய வேண்டியது; அப்படிச் செய்யாமல் தாமதித்தால், தேகம் அதிசீக்கிரத்தில் இளைத்துத் துர்ப்பலப்பட்டுச் சிகிச்சைக்கு வசப்படாது. ஆகையால், சற்றும் அலட்சியம் செய்யலாகாது.

6. சிற்றின்ப முதலிய காமவிகாரச் சிந்தையினால் உண்டானதற்கு

சிகிச்சை:- சிற்றின்பக் கதை முதலியவைகளை கேட்பதையும், வாசிப்பதையும், அதைப்பற்றிச் சிந்திப்பதையும் தவிர்க்க வேண்டியது. போக விருப்பத்தை மாற்றி, மனதை வேறு காரியங்களிற் செலுத்த வேண்டியது. விவாகமில்லாதவர்களாய் இருந்தால் விவாகம் செய்துக் கொள்ள வேண்டியது. விவாகம் செய்து கொண்டும் வேறு யாதொரு தொந்தரவில்லாமல் விந்து அதிகமாய் வெளிப்பட்டால் அதிகப் புணர்ச்சி செய்ய வேண்டியது. விந்துவைக் குறைக்க கூடிய வஸ்துவை உபயோகிக்க வேண்டியது; விந்துக்குழலின் விந்துவை யேந்திக்கொள்ளுஞ் சக்தி துர்ப்பலப்பட்டிருந்தால் அதைப் பலபடுத்தும் படியாகிய அவுடதங்களை உபயோகிக்க வேண்டியது ஆண்குறி, பீஜம் முதலிய இடங்களில், யூநாநி வைத்திய தாருட்ய விர்த்தி போதினியிற் சொல்லியிருக்கும் மருந்துகளில் தேகத்திற்குத் தக்கவைகளைப் பூசிவர வேண்டியது பனப்ஷாபூ எண்ணெயைப் பூசிவருவதினாலும் சுகுணம் உண்டாகும். விந்துவில் தீக்ஷணியம் உண்டாயிருந்தால், அதைத் தணித்துக் குளிர்ச்சி ஆகும்படி செய்ய வேண்டியது.

இந்திரிய சிராவகத்திற்காம் பொது யோக முறைகள் பாயசங்கள்

125. மேல்தோல் போக்கின தித்திப்பு வாதுமைப் பருப்பு-11, மேல்தோல் போக்கின பிஸ்தாபருப்பு, மேல்தோல் போக்கின சில்கோஜா பருப்பு, மேல்தோல் போக்கின தேங்காய், இவை வகை-1-க்குத் துலா-1, ஏலரிசி, சன்ன லவங்கப்பட்டை, மேல்தோல் போக்கின சுக்கு, இவை வகை-1-க்கு விராகனெடை-¾, கோழி முட்டை மஞ்சட் கரு-5, பசுவின் பால் பலம்-6, நிஷாஸ்தா துலா-1, பசுவின் நெய் பலம்-1, சீனி சர்க்கரை பலம்-1½.

செய்முறை:- இவற்றில், முன்னைய ஏழு வஸ்துக்களையும் அரைத்து, கொஞ்சம் ஜலத்திற் கரைத்து வடிகட்டிச் சக்கைபோக்கி, சத்தை எடுத்துக் கொள்ள வேண்டும். நிஷாஸ்தாவைப் பசுவின் பாலிற் கரைத்து, அதில் கோழி முட்டைக் கருவைப்போட்டு நன்றாய் மத்தித்து, முன் சித்தப்படுத்தின சத்தையும் சேர்த்து, அடுப்பேற்றிச் சற்று நேரங்காய்ச்சி, நெய் வார்த்துத் துழாவி, சீனி சர்க்கரையையும் கலந்து, பாயசப்பதத்தில் கீழிறக்கிப் பத்திரப் படுத்த வேண்டும்.

மாத்திரை:- இதை ஜீரண சக்திக்கு ஏற்றவிதம் ஒரே தடவையில் அல்லது இரண்டு தடவையில் சிற்றுண்டியாக உட்கொள்ள வேண்டும். இதை அன்றன்று புதிதாயும் செய்து கொள்ள வேண்டும்.

உபயோகம்:- மிதமிஞ்சின போகத்தால் நேரிட்ட தேகச் சோர்வு தீர்ந்து, பலம் அதிகரிக்கும், இந்திரிய ஒழுக்கும் நின்று விந்து ஸ்தம்பனம் உண்டாம்.

முஷ்டிப் பிரயோகத்தால் உண்டாம் கோசச் சோர்வு முதலியவை தீர்ந்து, போகத்திற்கு இணக்கமாய் இருக்கும் தேகம் பூ ிக்கும்.

126. மேல்தோல் போக்கின தித்திப்பு வாதுமைப்பருப்பு, மேல்தோல் போக்கின பிஸ்தாப்பருப்பு, மேல் தோல் போக்கின தேங்காய், மேல்தோல் போக்கின சில்கோஜா பருப்பு, கசகசா, நிஷாஸ்தா, இவை வகை-1-க்கு துலா-1, லவங்கப்பட்டை, சன்னராஷ்டம், அக்ராகாரம், ஏலரிசி, இவைவகை-1-க்கு வராகனெடை-½, அடைக்கலாங் குருவி முட்டைக் கருக்கள்-10, கோழி முட்டைக் கருக்கள்-4, மயில் முட்டைக் கருக்கள்-2, எருமைப்பால், பசுவின்பால், இவை வகை-1-க்குப் பலம்-6, பசுவின் நெய், கற்கண்டுத்தூள் இவை வகைக்குப் பலம்-3.

செய்முறை:- இதனை, முன் பாகப்படி செய்து கொள்ள வேண்டும்.

மாத்திரை:- பலம்-5-6, ஜீரண சக்திக்கு ஏற்றபடி, குறைத்தும் கூட்டியும் சாப்பிட்டு வரவேண்டும்.

உபயோகம்:- முன் சொல்லப்பட்ட குணங்களுடன், மூளையைப் பலப்படுத்தி, ஞாபகசக்தி முதலியவற்றை உண்டாக்கும்.

சூரணங்கள்

127. நிழலிலுலர்த்தின கருவேலங் கொழுந்து, நிழலிலுலர்த்தின இலந்தைக் கொழுந்து, நிழலிலுலர்த்தின முள்ளிலவம்பட்டை, பறங்கிச் சாம்பிராணி, அமிமஸ்தகி, பூமாதுளம்பூ, கஞ்சாவிதை, இவற்றின் சூரணம் வகை ஒன்றுக்குப் பலம்-1.

செய்முறை:- இவை எல்லாவற்றையும் ஒன்றாகக் கலந்து கொள்ள வேண்டும்.

மாத்திரை:- துலா-1, சாப்பிட்டு அதன்மேல் காய்ச்சின பசுவின்பாலில் கற்கண்டிட்டுக் குடிக்கவேண்டும்.

உபயோகம்:- துரிதஸ்கலிதம், இந்திரிய வொழுக்கு முதலியவை தீர்ந்து, தாதுவிர்த்தி, போகசக்தி ஆகியவை உண்டாம்.

128. நிழலிலுலர்த்தி இடித்த அத்திப்பட்டைச் சூரணம், நிழலிலுலர்த்தி இடித்த ஒதியம்பட்டைச் சூரணம், நிழலிலுலர்த்தி இடித்த அரசம்பட்டைச் சூரணம், புரசம் பிசின் சூரணம், நிழலிலுலர்த்தி இடித்த இலந்தைப்பட்டைச் சூரணம், இவை வகை ஒன்றுக்கு பலம்-1, பாகப்படுத்தின சிலாசத்து பலம்-ணீ, சீனாகற்கண்டுச் சூரணம் பலம்-3.

செய்முறை:- இவை எல்லாவற்றையும் ஒன்றாய்க் கலந்து கொள்ள வேண்டும்.

மாத்திரை:- பலம்-1, 1½, சாப்பிட்டு, அதன் மேல் காய்ச்சின பசுவின் பாலிற் கற்கண்டிட்டுக் குடிக்க வேண்டும்.

உபயோகம்:- துரிதஸ்கலிதம், இந்திரிய வொழுக்கு, பிரமேகம், சொட்டு மூத்திரம் முதலியவை தீர்ந்து தாதுவிர்த்தி உண்டாம்.

129. *பாகப் படுத்தின பறங்கிப் பட்டைச் சூரணம் பலம்-5, உலர்த்தின ஆலம் விழுதுச் சூரணம் சீமைத் தண்ணீர் விட்டான் கிழங்குச் சூரணம், வகை-1க்குப் பலம்-5, சீனி சர்க்கரைப் பலம்-20.

செய்முறை:- இவை எல்லாவற்றையும் ஒன்றாகக் கலந்து கொள்ள வேண்டும்.

மாத்திரை:- விராகனெடை- 2,3, காலை, மாலை இருவேளையும்-40 நாள் உட்கொள்ள வேண்டும்.

உபயோகம்:- மேக சம்பந்தமான இந்திரிய இழிவு, துரிதஸ்கலிதம் முதலியவை தீரும். தாதுவிர்த்தியும் போகசக்தியும் உண்டாம்.

மாஜூன்கள்

130. விளாம்பிசின் சூரணம் விராகனெடை-5, பூமாதுளம்பூச் சூரணம் விராகனெடை-3, வெண்சந்தனம், செஞ்சந்தனம், நிலவேம்பு, சுக்கான் கீரை விதை, கருவேலம்பிசின், மூங்கிலுப்பு, இவற்றின் சூரணம், வகை ஒன்றுக்கு விராகனெடை-2. குந்திரிக்கச் சூரணம் விராகனெடை-1. சீனி சர்க்கரை பலம்-6 ½.

செய்முறை:- சீனி சர்க்கரையைப் பாகு செய்து பதத்தில் சூரணங்களை ஒன்றாகக் கலந்து தூவி நன்றாகக் கிண்டிக்கிளறி மாஜூன் பாகப்படி செய்து கொள்ள வேண்டும்.

மாத்திரை:- பலம்-½, சாப்பிடலாம்.

உபயோகம்:- இந்திரிய வொழுக்கு, நீரொழுக்கு ஆகியவற்றைத் தீர்க்கும். இது சூடான தேகிகளுக்கு மிகவும் ஏற்றது.

131. கொட்டை நீக்கி உலர்த்தி இடித்த சீமை நறுவிலிப்பழச் சூரணம், வெண்மையான கருவேலம் பிசின், பசுவின் நெய், இவை வகை ஒன்றுக்கு பலம்-6, கொட்டை நீக்கி உலர்த்தி இடித்த பேரிச்சங்காய்ச் சூரணம் பலம்-3, பூனைக்காலிவிதைப் பருப்புச் சூரணம் பலம்-½, சீமை நீர்முள்ளிச் சூரணம், முள்ளிலவம் பிசின் சூரணம், பெருலவங்கப்பட்டைச் சூரணம், மேல்தோல் போக்கின பெருலவங்கப்பட்டைச் சூரணம், மேல்தோல் போக்கின தேங்காய்,

---

* பத்துப்பலம் பறங்கிப் பட்டையைச் சன்னத் துண்டுகளாக நறுக்கி, ஒருபடி பசுவின் பாலிற்போட்டுக் காய்ச்சிப்பால் சுண்டித் திரண்டு இறுகியபின் எடுத்துக் கழுவாமல் அப்படியே நிழலிலுலர்த்தி இடித்து வஸ்திரகாயம் செய்து கொள்வதே அதன் பாகமாம்.

மேல்தோல் போக்கின சில்கூஜா பருப்பு, மேல்தோல் போக்கின தித்திப்பு வாதுமைப்பருப்பு, காரலில்லாத சாரப்பருப்பு இவை வகை ஒன்றுக்கு பலம்-10, கெட்டித்தேன் வீசை-1¼.

செய்முறை:- இவற்றில், நெய்யில் கருவேலம் பிசினை வறுத்துச் சூரணித்து, அதனுடன் மற்றச் சூரணங்களையும் ஒன்றாகக் கலந்து, பருப்பினங்களையும் அரைத்து அதிற்புரட்டி மிஸ்ரமித்து, தேனைக்காய்ச்சிப் பாகு பதத்தில், மேற்படி கலவையைத் தூவிக் கிண்டிக் கிளறி, மாஜூன் பாகப்படி செய்து கொள்ள வேண்டும்.

மாத்திரை:- துலா-1½-2-சாப்பிடலாம்.

உபயோகம்:- துரிதஸ்கலிதம், இந்திரிய இழிவு ஆகியவற்றை நீக்கி, தாதுவிர்த்தி, போகசக்தி ஆகியவைகளை உண்டாக்குவதில் இது மிகவும் சிறந்தது.

132. கசகசா பலம்- ½, மருத்துவெள்ளை, வெண் சந்தனம், பூங்காவி, காண்டா மிருகத்தின் ரத்தம், தூதரி ஸுறுக், இவற்றின் சூரணம் விராகனெடை-2¼, பன்னீர்விட்டு நாலுசாமம் அரைத்து உலர்த்தின நற்பவழம், சோம்பு, பாகப்படுத்தின கோராப்பட்டு, பிளப்புச் சீரகம், மேல்தோல் போக்கின சுக்கு, கருவேலம்பிசின், திருநீற்றுப் பச்சைவிதை, கொத்துமல்லிவிதை, இவற்றின் சூரணம் வகை-1-க்கு விராகனெடை-1, துரிஞ்சி நாரத்தம்பழத்தோல் சூரணம் விராகனெடை-¾, காய்ச்சி நுரைபோக்கிச் சுத்திசெய்த கெட்டித்தேன் பலம்-10.

செய்முறை:- இவற்றில் தேனைக் காய்ச்சி பதத்தில் சூரணங்களை ஒன்றாய்க் கலந்து தூவிக் கிண்டி கிளறி மாஜூன் பாகப்படி செய்து கொள்ள வேண்டும்.

மாத்திரை:- துலா-1, 1¼, சாப்பிடலாம்.

உபயோகம்:- இந்திரிய வொழுக்கு, துரிதஸ்கலிதம், சொட்டு மூத்திரம், சுக நீரொழுக்கு ஆகியவை தீரும்.

133. வெண்மையான கருவேலம்பிசின், உலர்த்தின நெய்தற் கிழங்கு, விதை நீக்கி, உலர்த்தி இடித்த பேரீச்சங்காய்ச் சூரணம், இவை வகை-1-க்குப் பலம் 9. மேல்தோல் போக்கின பிஸ்தாப் பருப்பு, மேல்தோல் போக்கின தித்திப்பு வாதுமைப் பருப்பு, சாரப்பருப்பு, இவை வகை-1-க்குத் துலா-5, சீமைத் தண்ணீர் விட்டான் கிழங்குச் சூரணம் துலா-2, லவங்கம், தூதரிஸுபேத், தூதரிஸுறுக், பஹமனேஸுபேத், பஹமனேஸுறுக், இவற்றின் சூரணம் வகை-1-க்கு விராகனெடை ஒன்றரை, ஏலரிசிச் சூரணம் விராகனெடை-1¼ லவங்கப்பட்டை, மேல்தோல் போக்கின சுக்கு, இவற்றின் சூரணம் வகைக்கு விராகனெடை-1, அரிசித்திப்பிலிச் சூரணம் விராகனெடை-¼, சீனி சர்க்கரை பலம்-24, பசுவின் நெய் பலம்-6.

செய்முறை:- இவற்றில், நெய்யில் கருவேலம்பிசினையும், நெய்தற் கிழங்கையும், தனித்தனி வறுத்துத் தூள்செய்து, சீனி சர்க்கரையையும் பாகுசெய்து

பதத்தில் சூரணங்களை ஒன்றாய்க் கலந்து தூவிக் கிண்டிக்கிளறி மாஜூன் பாகப்படி செய்துக் கொள்ள வேண்டும்.

மாத்திரை:- துலா-1-2-சாப்பிடலாம்.

உபயோகம்:- இந்திரிய வொழுக்கு, துரிதஸ்கலிதம் ஆகியவை தீர்ந்து, இந்திரிய புஷ்டியை உண்டாக்கி, போக சக்தியை விர்த்தியாக்கும்.

134. விளாம்பிசின் சூரணம் விராகனெடை-5¼ பூ மாதுளம்பூச் சூரணம் விராகனெடை-3. வெண் சந்தனம், செஞ்சந்தனம், நிலவேம்பு, சுக்கான்கீரை விதை, கருவேலம் பிசின், மூங்கிலுப்பு, இவற்றின் சூரணம் வகை ஒன்றுக்கு விராகனெடை-2, குந்திரிக்கச் சூரணம் விராகனெடை-1, சீனி சர்க்கரை பலம்-6½.

செய்முறை:- சீனிசர்க்கரையைப் பாகுசெய்து, பதத்தில் சூரணங்களை ஒன்றாய்க் கலந்து தூவி நன்றாய்க் கிண்டிக் கிளறி மாஜூன் பாகப்படிச் செய்து கொள்ள வேண்டும்.

மாத்திரை:- பலம் அரை, சாப்பிடலாம்.

உபயோகம்:- இந்திரிய வொழுக்கு, நீரொழுக்கு ஆகிய்வற்றைத் தீர்க்கும். இது சூடான தேகிகளுக்கு மிகவும் ஏற்றது.

ஹல்வாக்கள்

135. நாலு ஆழாக்கு உளுந்தின் பருப்பை அரைப்படி பசுவின் பாலிற்போட்டு நிழலிலுலர்த்தி அரைத்தமாவு, சீமைத் தண்ணீர் விட்டான் கிழங்குச் சூரணம், உலர்த்தின நெய்தற் கிழங்குச் சூரணம், வறுத்து மேல்தோல் போக்கின புளியங்கொட்டைப் பருப்புச் சூரணம், இவை வகை ஒன்றுக்குப் பலம்-5, சீனி சர்க்கரைப் பலம்-20 நெய் பலம்-20.

செய்முறை:- இவற்றில் சூரணங்களை ஒன்றாய்க் கலந்தும், மற்றிரண்டைத் தனித்தனியாகவும் வைத்துக் கொள்ள வேண்டும். ஒருபலம் நெய்யைக் காய்ச்சி அதில் ஒருபலம் சீனி சர்க்கரையைப் போட்டு அது கரைந்தவுடன் மேற்படி சூரணக் கலவையில் ஒருபலம் எடுத்துப் போட்டுக் கிண்டிக் கிளற ஹல்வாவாகும். அந்த ஹல்வா அவ்வளவையும் சாப்பிட வேண்டும். அவ்விதம் அன்றன்று காலையில் புதிதாகச் செய்து சாப்பிடவேண்டும். ஜீரண சக்திக்கு ஏற்ற அளவாய்க் குறைத்தும் அதிகப்படுத்தியும் சாப்பிடலாம்.

உபயோகம்:- இந்திரிய இழிவு, துரிதஸ்கலிதம் ஆகியவை தீர்ந்து, உடைந்துபோன விந்து கட்டிமணியாம்.

136. வறுத்துக் தோலுடன் இடித்த புளியங்கொட்டைச் சூரணம், முள்முருக்கம் பிசின் சூரணம், நிஷாஸ்தா, இவை வகை-1-க்குப் பலம்-1. நாட்டுச்சர்க்கரை பலம்-3, பசுவின் நெய் பலம்-4.

செய்முறை:- நெய்யைக் காய்ச்சி அதில் நிஷாஸ்தாவைக் தூள்செய்து பொட்டுச் சிவக்க வறுத்து, மற்றிரண்டு சூரணத்தையும் கலந்து அதில் கொட்டி, சர்க்கரையில் கொஞ்சம் ஜலம் வார்த்துக் கரைத்து வடிகட்டிச் சக்கைபோக்கிச் சேர்த்து நன்றாய்க் கிண்டிக் கிளறி ஹல்வா பதத்திலிறக்கிப் பத்திரப்படுத்த வேண்டும்.

மாத்திரை:- பலம்-1, சாப்பிடலாம்.

உபயோகம்:- மோர்போலான இந்திரியம் இயற்கை ஸ்திதியை அடைந்து. நுங்கு போலக் கெட்டியாம்; தளர்ந்த நீர்க்குண்டிக்காய்களை ஸ்திரப்படுத்தி. அவற்றின் நோய்களைக் கண்டிக்கும். இடுப்பிற்கு வலுவைத் தரும்.

137. இலவங்கப்பட்டை, மேல்தோல் நீக்கின-சுக்கு, நாயுருவி விதை, இவைகளின் தூள் துலா-1, கசகசா பலம்-½ அரைத்துப் பாலெடுத்துக் கொள்ளவேண்டியது. கடலை மாவு பலம்-6, கொஞ்சம் வார்த்து வறுத்துக கொள்ள வேண்டியது. சீனிசர்க்கரை பலம்-10, நெய் பலம்-6.

செய்முறை:- சீனியில் கசகசாப் பால் சேர்த்துக் காய்ச்சிப் பாகு செய்து, கடலைமா, முன் சூரணம் எல்லாம் அதிலிட்டுக் கிண்டி நெய்யையும் சேர்த்துக் கொள்ளவும்.

மாத்திரை:- வேளை-1-க்கு விராகனெடை-2, 2½, வரையில் சாப்பிடவும்.

உபயோகம்:- தேகபுஷ்டி, ரத்த விருத்தி, தாது விருத்தி முதலியன உண்டாகும்.

மாத்திரைகள்

138. *பக்குவப்படுத்தின கற்பூர சிலாசத்து, வெள்ளரி விதைப்பருப்பு, ஏலக்காய்ச் சூரணம், மூங்கிலுப்பு, ஜென்ஷன்வேர்ச் (Gention root) சூரணம், சீனி சர்க்கரை இவை வகை-1-க்கு விராகனெடை-1¼, தேன் தேவையான அளவு.

செய்முறை:- இவை எல்லாவற்றையும் கல்வத்திற் போட்டுத் தேன் வார்த்து நாலு சாமம் அரைத்து-½, விராகனெடையுள்ள மாத்திரைகளாகச் செய்து கொள்ள வேண்டும்.

மாத்திரை:- 1 சாப்பிடலாம்.

உபயோகம்:- இந்திரிய இழிவைத் தீர்த்து, விந்துவை இறுக்கி மணியாக்கும். விந்து ஸ்தம்பனத்தை உண்டாக்கி, போக சக்தியை விர்த்தி செய்யும் பிரமேக வியாதியைக் குணப்படுத்தும்.

---

* வெண்மையான கற்பூர சிலாசத்து பலம்-1, ஆழாக்கு இளநீரில் மூன்றுநாள் ஊறவிட்டுக் கழுவி எடுத்துப் பசுவின் பால் படி காலிற் போட்டுக் காய்ச்சி நன்றாய்க் கழுவி சிறு நெருஞ்சிச் சாறு விட்டு இரண்டு சாமம் அரைத்து பில்லை தட்டிக் காயவைத்து ஓட்டிலிட்டு ஓடு மூடி, மூன்று சீலைமண் செய்து காயவைத்து-150, பலம் வறட்டியில் புடமிட்டெடுத்துக் கொள்வதே சிலாசத்தின் பக்குவமாம்.

139. *பக்குவப்படுத்தின ஊமத்தை விதை, பருத்தி விதைப் பருப்பு, நற்சீரகம், கொத்துமல்லி விதை இவற்றின் சூரணம் வகை-1-க்குப் பலம்-½.

செய்முறை:- இவை எல்லாவற்றையும் ஒன்றாகக் கலந்து கல்வத்திற்போட்டு, மஞ்சள் கடுக்காய்த் தோல், தான்றிக்காய்த்தோல், சீமை நெல்லி முள்ளி இவை வகை ஒன்றுக்குப் பலம்-½ இம்மூன்றையும் சிதைத்து ஒரு ஆழாக்கு ஜலத்திலிட்டு ஒருநாள் ஊறவிட்டு மறுநாள் எடுத்து நன்றாய்ப் பிசைந்து சக்கைபோக்கி வடிகட்டின கஷாயம் வார்த்து இரண்டு சாமம் அரைத்துக் கடலைப் பிரமாணம் மாத்திரைகள் செய்து நிழலிலுலர்த்திச் சீஷாவிற் பத்திரப்படுத்த வேண்டும்.

மாத்திரை:- படுக்கைக்குப் போகும்போது ஒரு மாத்திரை சாப்பிட்டுப் படுக்க வேண்டும்.

உபயோகம்:- இந்திரிய வொழுக்கு, துரிதஸ்கலிதம், இருமல், தீராப் பீனிசம் முதலியவை தீரும்.

குறிப்பு

ஊமத்தை விதைப் பிரயோகம் ஆக்ஷேபணைக் கிடமாயினும், அதன் துற்குணங்களை முறிக்கும் மாற்றாகிய பருத்தி விதைப் பருப்புச் சேர்வதனாலும், மாத்திரையில் மிகவும் குறைந்த அளவாய் உபயோகப்படுவதனாலும் எவ்வித ஆக்ஷேபணையும் இன்றி, நிர்ப்பயமாய்ப் பிரயோகிக்கலாம்.

140. புளியங்கொட்டை மேல்தோல் சூரணம் பலம்-1, கொத்துமல்லி விதைச் சூரணம் விராகனெடை-6, காஹூ விதைச் சூரணம் விராகனெடை-2¼, சீமை நீர்முள்ளி விதை, உலர்த்தின கருவேலங் கொழுந்து, உலர்த்தின கருவேலம் பூ, பூனைக்காலி விதை, உலர்த்தின பாக்குப்பூ, நிலப்பனைக் கிழங்கு, பருப்புக்கீரை விதை, குச்சி, காம்பு நீக்கின ஜரிஷ்க், ஆற்றுச் சவுக்கங்காய் என்னும் வன்னிக்காய் அல்லது மாசிக்காய் ஆகியவற்றின் சூரணம் வகை-1-க்கு விராகனெடை-1½. சீனி சர்க்கரை பலம்-½, ஆலம்பால் செல்லத்தக்க அளவு.

செய்முறை:-[1] காஹூ, வன்னிக்காய், கொத்து மல்லிவிதை, சீனி சருக்கரை ஆகிய இந் நான்கைத்தவிர, மற்றவைகளைப் பீங்கான் பாத்திரத்திற்போட்டு நன்றாய் நனையத் தக்க அளவு ஆலம்பால் வார்த்து நிழலிலுலர்த்தி நன்றாய்

---

* இரண்டரைப் பலம் போஸ்துக்காயை அரைப்படி சுத்த ஜலத்திற் போட்டுக் காய்ச்சி, மூன்றிலொரு பாகமாகச் சுண்டினபின் இறக்கிப் பிசைந்து வடிகட்டிச் சீஷாவில் பத்திரப்படுத்திக் கொள்ள வேண்டும். ஊமத்தை விதை பலம் ஒன்றை ஒரு பீங்கான் பாத்திரத்திற் போட்டு நன்றாய் நனையத்தக்க அளவு மேற்படி கியாழம் வார்த்து வெய்யிலில் வைத்து நீர் சுவறி நன்றாய் உலர்ந்தபின், முன்போலக் கியாழம் வார்த்து வெய்யிலில் வைத்துலர்த்த வேண்டும். இவ்விதம் ஏழு தடவை செய்து உலர்த்தினபின், மேற்படி கியாழத்தில் அரை ஆழாக்கு அந்த விதையில் வார்த்து அடுப்பேற்றி நீர் சுண்டக்காய்ச்சி எடுத்துக் கொள்வதே ஊமத்தை விதையின் பக்குவமாம்.

உலர்ந்தபின், அவற்றுடன் முன் சொன்ன நான்கு சரக்குகளையும் சேர்த்துக் கல்வத்திலிட்டு ஆலம் பால் வார்த்து இரண்டு சாமம் கைவிடாமல் அரைத்துச் சுண்டைக்காய், பிரமாண மாத்திரை செய்து நிழலிலுலர்த்திக் கொள்ள வேண்டும்.

மாத்திரை:- 1, காலை வேளையில் வெறும் வயிற்றிற் சாப்பிட்டு அதன் மேல் புதிதாய்க் கறந்த பசுவின் பாலைக் காய்ச்சி, அதில் கொஞ்சம் கற்கண்டைப் பொடித்துப் போட்டுக் குடிக்க வேண்டும்.

உபயோகம்:- இந்திரிய இழிவைத் தீர்க்கும். நீர்த்திருக்கும் விந்துவை இறுக்கி மணியாகத் திரட்டும்.

141. பவள பஸ்பம், வெள்ளரி விதைப்பருப்பு, கெக்கரி விதைப் பருப்பு, பன்னீர்விட்டு நாலு சாமம் அரைத்துலர்த்தின கஹறுபா, பருப்புக்கீரை விதைச் சூரணம், சிறு நெருஞ்சி முள் சூரணம், உலர்த்தின நெய்தற் கிழங்குச் சூரணம் இவை வகை-1-க்கு விராகனெடை-3¼, மூங்கிலுப்பு, வாதுமைப் பிசின், குச்சி காம்பு நீக்கின ஜரிஷ்க், பேதானா விதை, கொத்துமல்லி விதை, புளிச்சங் கீரை விதை, பூங்காவி, வெண் சந்தனம், பூமாதுளம் பூ, கருவேலம் பிசின், இவற்றின் சூரணம் வகை-1-க்கு விராகனெடை-1½.

செய்முறை:- இவற்றில் 1½, பலம் இசுபகோல் விதையை ஓர் ஆழாக்குச் சுத்த ஜலத்தில் ஆறுமணி பரியந்தம் ஊறவிட்டு வடிகட்டிச் சக்கை போக்கிக் கோழை நீர் எடுத்துக் கொள்ள வேண்டும். முன் எல்லாச் சரக்குகளையும் கல்வத்திற் போட்டு மேற்படி கோழை நீர் வார்த்து இரண்டு சாமம் கைவிடாமலரைத்து ஓர் விராகனெடையுள்ள மாத்திரைகளாகச் செய்து, நிழலிலுலர்த்திக் கொள்ளவும்.

மாத்திரை:- 1, வீதம் சாப்பிடலாம்.

உபயோகம்:- துரித ஸ்கலிதத்தால் உண்டான தாது நஷ்டம் தீர்ந்து, போக சக்தியும், தாது புஷ்டியும் உண்டாம். சொட்டு மூத்திரம், இந்திரிய வொழுக்கு, சிறு நீரில் இரத்தம் விழுதல் ஆகியவை தீரும்.

பஸ்பங்கள்

142. அடை காத்த முட்டை ஓடு பலம் 5, கிளிஞ்சிற் சுண்ணாம்பு நீறு படி-1ல், 1½, படி சலம் வார்த்து நன்றாய்க் கரைத்து ஒருநாள் வைத்திருந்து மறுநாள் அதன் தெளிவில் ½-படி ¾-படி இறுத்தெடுத்து அதில் மேற்படி முட்டை ஓடுகளைப்போட்டு நாலு மணி நேரம் வரைக்கும் மூடி ஊறவைக்க வேண்டும் பின்பு ஓட்டுக்குள் இருக்கும் சவ்வை நீக்கி மெல்லிய வஸ்திரத்தால் துடைத்து-2-பலம் நிறுத்தெடுத்து ஒரு பீங்கான் பாத்திரத்தில் அவற்றைப் போட்டு, 4-பலம் எலுமிச்சம் பழரசம் அதில் வார்த்து வாய்மூடி மண்சீலை செய்து, வெயிலில் வைக்கவேண்டும். இது சுமார் ஒரு வாரத்திற்குள் ரசமெல்லாம் சுண்டிப்போம். பின்பு பிரித்துப் பார்க்கையில் ரசம் சுண்டியிருந்தால்

மறுபடியும் முன்னளவு எலுமிச்சம் பழரசம் வார்த்து வாய் மூடி முன் போல மண்சீலை செய்து வைக்க வேண்டும். பழரசம் சுண்டாமலிருந்தால் அதிலிருக்கும் ரச வெடைபோக பாக்கிவிட்டு முன்போலச் செய்ய வேண்டும். இவ்விதம் 3-தடவை செய்ய வேண்டும். பின்பு அதை எடுத்து ஒரு மண்கலயத்திற் போட்டுச் சில்லிட்டு மண் சீலை செய்து காயவைத்து, ஒரு முழ அகலம் ஒரு முழ நீளம் உள்ள குழிதோண்டி, அதில் அரைவாசி எருவடுக்கி மேலே கலயத்தை வைத்து அதன் மேலும் எருவடுக்கித் தீ மூட்டி எறிந் தாறினபின் எடுத்து, வேறொரு கலயத்திற் போட்டு அதில் எலுமிச்சம் பழரசம்-5-பலம் வார்த்து சில்லிட்டுச் சீலை மண் செய்து முன்போல புடமிட்டு ஆறினபின் எடுத்து இன்னொரு தடவையும் அப்படியே செய்ய வேண்டும். அப்புறம் எடுத்துப் பார்த்தால் தும்பைப் பூப்போல வெளுத்திருக்கும். அதனைக் கல்வத்திலிட்டுப் பொடித்து சீஷாவிற் பத்திரப் படுத்திக்கொள்ள வேண்டும்.

மாத்திரை:- குன்றிமணியெடை-2. சாப்பிட்டு அதன் மேல் ஜீரணசக்திக்கு ஏற்றபடி காய்ச்சின பசுவின்பாலில் கற்கண்டிட்டுக் குடிக்க வேண்டும்.

உபயோகம்:- இந்திரிய இழிவு, மேகவெட்டை, மேகச் சூடு, நீர்ச்சுருக்கு, ஆகியவை தீர்ந்து, போகசக்தியும் தாதுவிர்த்தியும் உண்டாம்.

143. காற்படி முலைப்பாலில் இரண்டு பலம் நற்பவளத்தைப் போட்டு நிழலிலுலர்த்திக் கொள்ள வேண்டும். சோற்றுக் கற்றாழஞ்சோறு படி-1.

செய்முறை:- ஒருபடி கொள்ளத்தக்க ஒரு மண் பாண்டத்தில் மேற்படி சோற்றில் அரைப்பாகத்தைப் போட்டு அதன்மேல் முன்பு பாகப்படுத்தின பவளத்தை வைத்து, அதன் மேல் மற்றொரு பாதிச் சோற்றைப் போட்டு, வாய்க்குச் சில்லிட்டு, ஏழு மண்சீலை செய்துலர்த்தி, ஒரு கஜம் அகலம் ஒரு கஜம் ஆழமுள்ள சதுரமான ஒரு குழி தோண்டி, அதில் அரைவாசி வறட்டி அடுக்கி, முன் மண்சீலை செய்த பாத்திரத்தை வைத்து மேலே வறட்டி அடுக்கிச் குழி நிறைந்த பின் தீ முட்ட வேண்டும். ஒரு நாள் முழுவதும் தீ ஆறாது. தீ நன்றாய் ஆறினபின் புடத்தைப் பிரித்துப் பாத்திரத்தை எடுத்து, அதிலிருக்கும் பவளத்தை நன்றாய்ப் பொடி செய்து சீஷாவிற் பத்திரப்படுத்தி வைத்துக் கொள்ளவேண்டும்.

மாத்திரை:- வேளை ஒன்றிற்கு நந்நான்கு குன்றிமணி எடையாகக் காலை மாலை இரண்டு வேளையும் அரை - ஒன்று ஆழாக்குப் பசுவின் பாலுடன் முதல் வாரம் சாப்பிட வேண்டும். மறுவாரம் அவ்விதமாகவே அவ்வாறு குன்றிமணி எடை சாப்பிடவேண்டும். அடுத்த மூன்று வாரத்தில் எவ்வெட்டுக் குன்றி மணி எடையாகச் சாப்பிட வேண்டும்.

உபயோகம்:- இந்திரிய வொழுக்கு, துரிதஸ்கலிதம், எலும்புருக்கி நோய், அஸ்தி வெட்டை, பித்தச்சூடு, கப வியாதிகள் ஆகியவைகள் தீர்ந்து, தாது விர்த்தி உண்டாகும். இதனுடன் முன் சொல்லப்பட்டிருக்கிற ஔஷதங்களில், தேக சுபாவத்திற் கிசைந்த வொன்றைச் சேர்த்து உபயோகப்படுத்த அதிகக் குணமுண்டாவதாகக் காணப்பட்டது.

திராவகம்

144. பிரமதண்டு சமூலம் உலர்த்தினது ஒரு வீசை. வெள்ளறுகு, உலர்த்தினது ஒரு வீசை, வல்லாரை சமூலம் உலர்த்தினது வீசை அரை, ஆற்று ஜலம் படி ஏழரை.

செய்முறை:- ஒரு பாத்திரலிட்டு-4-அல்லது-5-சீஷா திராவகம் இறக்கிக் கொள்ளவும்.

மாத்திரை:- இந்த திராவகம் தேக சக்திக்கு ஏற்றபடி பலம்-1-ஒன்றரை-2-எடுத்து, பாதாம் நெய் அல்லது எள்ளெண்ணெய் பலம் அரை, சேர்த்து நன்றாய்க் கலக்கி அதில் மருத்து வெள்ளைச் சூரணம் விராகனெடை-1, போட்டுச் சாப்பிடவும். இவ்விதம் தேகசக்தி, வியாதிபலம் ஆகியவைகளுக்கேற்றபடி காலை மாலை இரண்டு வேளையும் சாப்பிடலாம். தேக பலமுள்ளவர்களுக்குப் பத்தியமும் வைக்கலாம்.

உபயோகம்:- சீழ்மேகம், தந்திமேகம், ரத்த மேகம், நீர்ப்பையின் அழலை, இந்திரிய ஒழுக்கு ஆகியவைகள் நாட்பட்டிருந்தாலும் தீரும்.

எண்ணெய்

145. சிற்றாமணக்கெண்ணெய் படி-1, முலைப்பால் படி அரை, செவ்விளநீர் படி அரை, சிறுகீரை ரசம் படி-¼, சோற்றுக் கற்றாழஞ் சோறு படி-¼, சீரகம் பலம்-5, கற்கண்டு பலம்-5, மாசிக்காய் பலம்-1, ஏலக்காய் பலம்-1, ஜாதிக்காய் பலம் அரை, லவங்கம் துலா-¼, குங்குமப்பூ துலா அரைக்கால், ரஸ்தாளி வாழைப்பழம்-4.

செய்முறை:- சரக்குகளை எல்லாம் பன்னீர் விட்டரைத்து எண்ணெயிற் சேர்த்து மற்றவைகளையும் எண்ணெயிற் சேர்த்துச் சிறுதீயாக எரித்து நீர் சுண்டின பதத்தில் இறக்கி வைத்துக் கொள்ளவும்.

மாத்திரை:- பலம்-¾ , 1, பன்னீர் ஷர்பத்தில் அல்லது காடி ஷர்பத்தில் அல்லது சந்தன ஷர்பத்தில் சாப்பிடவும்.

உபயோகம்:- மேக வாயுகள், மேகப்படை, மேகச்சட்டைகள், பெருவியாதி, ஈரற்சூடு, நீர்ப்பையின் அழலை, மூத்திர வொழுக்கு முதலியவைகள் தீரும். இந்திரிய வொழுக்கும் தீர்ந்து, விந்துஸ்தம்பனம் உண்டாகும்.

இராஜ ராமேஸ்வரத்தீநீர், காயசித்தி மாத்திரை, தீவிராபிவிர்த்தி அமிர்தாதி லூபூப் முதலிய பாகங்களும் மேற்படி வியாதிக்காம். மேற்பூச்சுப் பிரயோகங்களும் இன்னும் நானாவிதப் பிரயோகங்களும் ஆகிய இம்முறைகளை நமது யூநாநி வைத்திய தாதுவிர்த்தி போதினியிற் காணலாம்.

முற்றிற்று.

✡✡✡✡✡

தாமரை

நூலகம்